சான்றோர் கண்ட திருவள்ளுவர்

முனைவர் க.த.திருநாவுக்கரசு
M.A., (Tamil), M.A., (History), M.Litt., Dip.Ing., Phd.,

வெளியீடு
மணியகம்
3/30 , இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த்தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை 600085.
9444453737

சான்றோர் கண்ட திருவள்ளுவர்

முனைவர்
க. த. திருநாவுக்கரசு

வெளியீடு
மணியகம்
3/30, இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை–600 085
9444453737

நூல் விவர அட்டவணை

தலைப்பு	:	சான்றோர் கண்ட திருவள்ளுவர்
பொருள்	:	கட்டுரைகள்
ஆசிரியர்	:	முனைவர் க.த.திருநாவுக்கரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு –அக்டோபர் 2024 முதற்பதிப்பு – டிசம்பர் 1979
நூலின் அளவு	:	1/8 டெமி
பக்கங்கள்	:	x + 278 = 288
தாள்	:	80 GSM Maplitho
எழுத்துரு	:	Tau–Marutham–Pt.11
அச்சிட்டோர்	:	அரசு ஆர்ட்ஸ் 78, சீனிவாசபெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை –600 014 044 – 28351101, 28588056 E–mail : arasuarts@gmail.com www.arasuarts.com
வெளியீடு	:	மணியகம் பதிப்பகம், 3/30, இரண்டாவது பிரதான சாலை, கோட்டூர் தோட்டம், கோட்டூர்புரம் சென்னை – 600 085 9444453737, tambalavanan@gmail.com
உரிமை	:	பதிப்பகத்திற்கே
விலை	:	இலவச வெளியீடு
எண்ணிக்கை	:	25 புத்தகங்கள்
ISBN	:	978–93–48345–07–3

அன்பு மலர்

அறிவுக்கண் கொடுத்து என்னையும்
'மனிதனா'க்கி மறைந்த
என் தாய் மாமன்
ஆர்க்காடு சூ. முத்துக்கிருஷ்ண முதலியார்
அவர்களுக்கு
இந்நூலினை அன்பு மலராகப் படைக்கின்றேன்

முதல் பதிப்பின் பதிப்புரை

எமது ஐந்தாவது வெளியீடான 'சான்றோர் கண்ட திருவள்ளுவர்' எனும் நூலினைத் திருவள்ளுவர் திருநாளான இன்று (16–1–1980), தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்கும் வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி செலுத்துகின்றோம்.

வள்ளுவரின் கருத்துகளை வையகம் எங்கும் பரப்புவதற்கு இந்நூல் பயன்படும். மூன்று வகையான முறைகளில், திருக்குறளின் சீரையும் சிறப்பையும் உலகிற்கு உணர்த்த இந்நூலாசிரியர் முயன்றுள்ளார். இந்நூலினுள் முதலில் இடம் பெறுவது ஒப்பியல் ஆய்வுக் கட்டுரைகளாகும். இந்திய, கிரேக்க அறிஞர்களின் மெய்ப்பொருள் இயல் கருத்துகளோடு, திருவள்ளுவரின் எழுச்சிமிகு எண்ணங்களை ஒப்பிட்டு, ஆசிரியர் மூன்று ஆய்வுரைகளைப் படைத்துள்ளார், இந்தியப் பெருமக்களும் மேற்கு நாட்டு அறிஞர்களும் திருக்குறளை எவ்வாறு புரிந்துகொண்டுள்ளனர் என்பதை, நான்கு கட்டுரைகளில் விளக்கியுள்ளார். எஞ்சிய எழுத்துரைகளில், இன்றைய வாழ்க்கைக்குத் திருவள்ளுவரின் சிந்தனை பயன்படும் பாங்கினை, ஆசிரியர் கோடி காட்டியுள்ளார். இம்மூவகை அணுகல் முறைகளும், திருக்குறளைப் புதிய கண்ணோட்டத்தில் காண உறுதுணையாகுமென நம்புகின்றோம்.

எமது முந்தைய வெளியீடுகளை ஏற்றுப்போற்றிய அன்பர்களை, இச்சிறப்புமிகு நூலையும் ஆர்வத்துடன் வரவேற்று, ஆதரவு அளிக்குமாறு வேண்டுகின்றோம்.

2, தை மீ
தி. ஆ. 2011

பதிப்பகத்தார்

முதல் பதிப்பின் முகவுரை

தமிழ் மக்களுடைய சிந்தனையின் கொடுமுடியாகத் திருவள்ளுவர் விளக்குகிறார். அவருடைய கொள்கைகளின் ஆழத்தையும் அகலத்தையும், நோக்கையும் போக்கையும் இன்றைய உலகம் போற்றத் தொடங்கியுள்ளதைக் காணுகின்றோம். வள்ளுவரை உலகம் அறியுமாறு செய்த சான்றோர்கள் பலராவர், அவர்களுள் முக்கியமான அறிஞர்களும், மெய்யுணர்வாளர்களும் திருவள்ளுவரைக் கண்டறிந்த முறைகளைச் 'சான்றோர் கண்ட திருவள்ளுவர் எனும் கட்டுரை புலப்படுத்துகிறது. இவ்வாய்வுரையின் முதன்மைச் சிறப்பைக் கருத்தில் கொண்டு, இந்நூலிற்குச் 'சான்றோர் கண்ட திருவள்ளுவர்' எனும் பெயர் இடம் பெற்றுள்ளது.

திருவள்ளுவரின் வரலாற்றைத் தெளிவாக அறிய இயலவில்லை. பல்வேறு கதைகள் 'புராணப்' போக்கு உடையனவாக வழங்கி வருகின்றன. அவற்றிடையே மறைந்துள்ள உண்மைகளைக் கண்டறிய, அறிஞர்கள் முயன்று வருகின்றனர். அம்முயற்சிகளின் விளைவாகத் 'தமிழ்த்தாயின் தவமகனே திருவள்ளுவர்' எனும் உண்மை புலனாவதை முதல் கட்டுரையில் காணலாம்.

இலக்கிய ஒப்பாய்வினால், குறிப்பிட்ட ஓர் இலக்கியத்தின் தனிச்சிறப்புகளை எளிதில் உணரவும், உணர்த்தவும் இயலும், இந்த நோக்கில், கிரேக்கப் பேரறிஞர்களான சாக்ரடிசின் எண்ணப் போக்கையும் (2), அரிஸ்டாட்டிலின் சிந்தனைத் திறத்தையும்(14) திருவள்ளுவரின் அறவியல், அரசியல்,

வாழ்வியல் கொள்கைகளோடு ஒப்பிட்டுப் பார்த்ததன் பயனாகப் பல புதிய உண்மைகள் இக்கட்டுரைகளில் வெளிப்படுகின்றன.

திருவள்ளுவரைத் தமிழ் மக்கள் போற்றிப் பாராட்டுவதைப் போலவே, கன்னட மக்கள் சர்வஞ்ஞர் எனும் ஞானியைப் போற்றி வருகின்றனர். இவ்விருவருடைய கருத்துகள், 'திருவள்ளுவரும் சர்வஞ்ஞரும்' எனும் எழுத்துரையில் விரித்து உரைக்கப்பட்டுள்ளன .

உலகம் போற்றும் தால்ஸ்தாய், நம் அண்ணல் காந்தியைப் பெரிதும் கவர்ந்த சான்றோராவார். திருவள்ளுவரிடம் அவர் பேரீடுபாடு கொண்டு இருந்தார். நம் தெய்வப் புலவரை, அவர் எவ்வாறு புரிந்து கொண்டு, போற்றியுள்ளார் என்பதைத் 'தால்ஸ்தாய் கண்ட திருவள்ளுவர்' எனும் கட்டுரையில் காணலாம்.

தமிழ்க் கடல் மறைமலையடிகளும், தந்தை பெரியாரும் திருவள்ளுவரைக் கண்ட முறைகள், இருவேறு கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளன. 'திருக்குறளின் மொழி இயல்பு' எனும் ஆய்வுரை, திருக்குறளின் மொழி அமைப்பினை மொழியியல் கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ள உதவுமென நம்புகின்றேன்.

எஞ்சியுள்ள எழுத்துரைகள், இன்றைய வாழ்க்கைக்கு வள்ளுவம் வழிகாட்டியாக விளங்குந் திறத்தினைச் சுட்டிக் காட்டுகின்றன. இவை யாவும், கடந்த பதினைந்து ஆண்டுகளில் பல மலர்களிலும், இதழ்களிலும் வெளிவந்தவை யாகும். இதனால், சில கருத்துகள் 'கூறியது கூறல்' போல் தோன்றும். இந்தக் குறையை இயன்ற வரையில் குறைக்க முயன்றுள்ளேன்.

குறுகிய காலத்தில், இந்நூலினை நன்கு அச்சிட்டுதவிய ஏ.ஜி.ஜி. பிரிண்டர்ஸ் நிருவாகத்தினருக்கு நன்றி.

ஆசிரியன்

உள்ளடக்கம்

		பக்கங்கள்
1.	தமிழ்த் தாயின் தவமகன்	1
2.	திருவள்ளுவரும் சாக்சரடிசும்	18
3.	திருவள்ளுவரும் சர்வஞ்ஞரும்	50
4.	தாஸ்தாய் கண்ட திருவள்ளுவர்	61
5.	மறைமலையடிகள் கண்ட திருவள்ளுவர்	70
6.	தந்தை பெரியார் கண்ட திருவள்ளுவர்	77
7.	மன நலம்	87
8.	மயக்கும் மோகினி	93
9.	மழையே நீ வாழ்க!	102
10.	தலைவரும் தொண்டரும்	111
11.	பொய்தீர் ஒழுக்கநெறி	120
12.	ஒப்புரவு	126
13.	திருக்குறளின் மொழி இயல்பு	136
14.	திருவள்ளுவரும் அரிஸ்டாட்டிலும்	146
15.	சான்றோர் கண்ட திருவள்ளுவர்	235
16.	நூலாசிரியரின் நூல்கள்	253
17.	தமிழில் வெளியிட்ட கட்டுரைகள்	257
18.	வாழ்க்கைக் குறிப்பு	274

தமிழ்த் தாயின் தவமகன்

பண்டைத் தமிழ்ப் புலவர்களுள், திருவள்ளுவர் உலகப் பெருஞ்சான்றோராகப் போற்றப்படுகிறார். அவருக்கு இணையான தமிழ்ப் பேரறிஞர் இன்றுவரை தமிழகத்தில் தோன்றவில்லை! வரலாற்றுக்காலம் நெடுக அவரைப் போற்றாத புலவர்கள் இல்லை! பாராட்டாத பாவலர் இல்லை! 'அனைத்துலக மனிதனைப் பாடிய பாவலர்' (The Bard of the Universal Man) என்று அவரை டாக்டர் ஜி. யூ. போப்புப் பாராட்டியுள்ளார். இதை உண்மையென இன்றைய உலகம் உணரத் தொடங்கியுள்ளது.

மக்கள் இனம் பல்வேறு இனங்களாகவும், சாதிகளாகவும், குழுக்களாகவும் சிதறுண்டு கிடக்கிறது. வாழும் இடத்தாலும், பேசும் மொழியாலும், பின்பற்றும் சமயத்தாலும் தம்மிடையே பல்குழுவையும் பாழ் செய்யும் உட்பகையையும் மனிதர்கள் வளர்த்து வருகின்றனர். இதனால், போரும் பூசலும் உண்டாகின்றன. இவை அனைத்தையும் கடந்த நிலையில், மனிதகுலம் முழுமைக்கும் எவ்விடத்தும், எக்காலத்தும் பயன்படத்தக்க வகையில், தம் வான்மறையை வள்ளுவர் இயற்றி யுள்ளார்.

திருவள்ளுவர் தமிழ்நாட்டில் பிறந்தவர்; தமிழ்நாட்டில் வாழ்ந்தவர்; தமிழ்மொழியைப் பேசியவர்; தமிழிலே தம்முடைய அரும்பெரும் நூலினை உலகிற்கு வழங்கியவர். ஆனால், அவர் படைத்த நூலில் "தமிழ், தமிழர், தமிழ்நாடு" என்னும்

சொற்களோ, அவற்றைப் பற்றிய குறிப்புகளோ இடம் பெறவில்லை. காலத்தால் கறைபடாத கருத்துகளையும், இடத்தால் ஏற்றங்குறையாத எண்ணங்களையும் மனிதன் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு, வழிகாட்டும் வகையில் அவர் எடுத்துரைத்துள்ளார்.

இதனை, அலக்சாண்டர் பியாதிகோர்ஸ்கி எனும் சோவியத்து நாட்டு அறிஞர்,

> அது (திருக்குறள்) ஒருங்கிசைவும் செம்மை நலமும் வாய்ந்த கலைப் பெட்டகம். அதனுடைய ஆசிரியர் (திருவள்ளுவர்) அரசனையோ, குடிமகனையோ, மதகுருவையோ விளித்து அதை இயற்றவில்லை! மனிதனுக்காக, மனிதனுடைய நலமிக்க வாழ்க்கைக்காக – மனிதனை முன்னிறுத்தித் தம் மாண்புமிக்க நூலினை அவர் இயற்றியுள்ளார்! மனிதனைப் பாடுகின்றபொழுது சட்டத்தை வகுத்தளிக்கும் சட்ட வல்லுநராகவோ, வழிகாட்டும் தீர்க்கதரிசியாகவோ அவர், தம்மைக் கருதவில்லை ! ஆனால், மனிதனுடைய நலனை நாடுவோராகவும், நண்பராகவும், ஆசிரியராகவும் அவர் அன்போடும் பண்போடும் தம் கருத்துகளைத் தெரிவிக்கின்றார் என்று அறிவுறுத்தியுள்ளமை, இங்குக் கருதத்தக்கதாகும்.

நோக்கம்

திருக்குறளை வள்ளுவர் இயற்றியதன் முதன்மையான நோக்கம், தமிழ்ச் சமுதாயத்தின் நலிவினைப் போக்குவதற்கு வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்துரைப்பதாகும். ஆனால், அதே சமயத்தில் மனித இனம் முழுமைக்கும் பேரளவிற்குப் பயன் படத்தக்க வகையில் திருக்குறளை இயற்றியுள்ளமை, அவருடைய வீறுமிக்க சிந்தனைத் திறனின் சிறப்பினை அறிவிக்கிறது.

வரலாறு யாது?

இத்தகைய சிறப்புமிகு சான்றோரின் வாழ்க்கை வரலாறு பற்றி ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. தமிழ் மக்கள் வாழ்வில் வளம்பல பெற்று வாழ்வாங்கு வாழ்ந்த காலத்தில், தமிழருடைய நாகரிகமும் பண்பாடும் பழுத்துக்கனிந்த காலத்தில், அலைகடலில் அஞ்சா நெஞ்சுடன், ஆண்மைமிகு தமிழ் மக்கள் மரக்கலம் பல செலுத்திக் கடல் வாணிகத்தைப் போற்றி வளர்த்த காலத்தில் வள்ளுவர் வாழ்ந்தவர் என்பதைத் திருக்குறளால் நாம் தெளிகின்றோம். ஆயினும், அவரைப் பற்றி நம்பிக்கைக்குரிய செய்திகள் ஒன்றும் கிடைக்கவில்லை.

மரபுவழிச் செய்திகள்

காலப்போக்கில், அவரைப் பற்றிய கற்பனைக் கதைகளும், நாட்டுப்புற மக்களின் உள்ளத்தைக் கவரும் புனைகதைகளும், புராணக் கதைகளும் தோன்றி வளர்ந்துள்ளன. திருவள்ளுவர் என்பது அவருடைய இயற்பெயரா? அல்லது குடிப் பெயரா? அல்லது அவர் செய்தத் தொழிலின் பெயரா? என்பதிலேயே ஐயப்பாடு இருந்து வருகிறது. 'திரு' எனும் அடைமொழி புனிதமான, தெய்விகத் தன்மையுடைய' எனும் பொருளை உணர்த்துவதாகும். வள்ளுவர் எனும் பெயர், அரிசனமக்களின் மதகுருவைக் குறிக்கும் பெயராகச் சென்ற சில நூற்றாண்டுகளாக வழங்கி வருகிறது. இதனை ஆதாரமாகக் கொண்டு, வள்ளுவர் 'தாழ்த்தப்பட்ட மக்கள் குடியில் தோன்றி, மாபெரும் ஞானியாக மாட்சியுற்றவர்' எனக் கூறுவர் சிலர்.

அரசனுடைய ஆணைகளை, யானையின் மீது அமர்ந்து தலைநகரின் பலபகுதிகளில் முரசறைந்து அறிவிக்கும் அரசனுடைய உள்படு கருமத் தலைவனே (நேர்முக அலுவலர்), வள்ளுவன் எனப்படும் அதிகாரியாவான் என்பதைப் பழந்தமிழ் நூல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய அதிகாரியாக இருந்த ஒருவரின் இயற்பெயர் மறைந்து, அவருடைய தொழிலால்

பெற்ற சிறப்புப் பெயரே செல்வாக்குப் பெற்றது; அவ்வதிகாரி புலமை மிக்கவராக விளங்கினார். அப்புலவரே திருக்குறளை இயற்றினார் என்பது மற்றொரு சாராரின் கருத்து. ஆனால், பண்டை உரையாசிரியர்கள் 'வள்ளுவர்' எனும் பெயரை இயற்பெயராகவே கருதியுள்ளனர் என்பதும் இங்கு நினைவுகூர்தற்கு உரியதாகும்.

இன்றைய சென்னை நகரின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூரே, திருவள்ளுவரின் பிறப்பிடம் என்பார் சிலர். மதுரை மாநகரமே அவர் பிறந்தும், வாழ்ந்தும் சிறந்தத் திருநகரம் என்பர் மற்றும் சிலர். அவர் 'வாசுகி' எனும் மங்கை நல்லாளை மணந்து வாழ்ந்ததாக ஒரு கதை வழங்குகிறது. அவ்வம்மையின் கற்பொழுக்கத்தின் மாட்சியை உணர்த்தும் கதைகள் பல தோன்றியுள்ளன. சிங்கள நாட்டினைக் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த, தமிழ் அரசனான ஏலேல சிங்கனைத் திருவள்ளுவரின் சீடனாகக் காட்டுகிறது ஒரு கதை.

அரங்கேற்றம்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில், தம்முடைய திருமறையைத் திருவள்ளுவர் அரங்கேற்ற முயன்றார். அப்பொழுது புலமைக் காய்ச்சலும் அழுக்காறும் கொண்ட சங்கப் புலவர்கள், திருக்குறளைச் சிறந்த நூலாக ஏற்றுப் போற்ற மறுத்தனர். பின்னர்ஔவையின்உதவியால்திருவள்ளுவர்,தம்நூலினைச் சங்கப் புலவர்களின் முன்னிலையில் அரங்கேற்றம் செய்தார். அப்பொழுது சங்கப் புலவர்களும் நாமகளும் பிறதெய்வங்களும் திருவள்ளுவரைப் புகழ்ந்து ஒவ்வொரு வெண்பாவைப் பாடினர். அவையாவும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டதே 'திருவள்ளுவமாலை' எனும் புகழ்மாலையாகும் என்பது சுவை மிக்க மற்றொரு மரபுவழிச் செய்தியாகும்.

அவர் திருமயிலையில் நெசவுத் தொழில் செய்தார் என்றும், நிலக்கிழாராக விளங்கினார் என்றும், நெடுமாறன்

வள்ளுவனார் எனும் பெயருடைய குறுநில மன்னனாகத் திகழ்ந்தார் என்றும்[1] பலவாறு கூறுவர்.

இவ்வாறு வரலாற்றுக் காலம் நெடுக, வள்ளுவரின் வரலாறு கற்பனைக் கதைகளில் கரைந்தும், கலந்தும் உருமாறிப் போயிருப்பதைக் காணுகின்றோம்.

சமயம்

இதைப் போன்றே, திருவள்ளுவரின் சமயம் யாது என்பதைத் தெளிவாக வரையறுத்துக் கூற இயலவில்லை திருக்குறளிலிருந்து உலகைப் படைத்து, அளித்துக் காக்கும் கடவுள் ஒருவர் உண்டு என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை அவர் கொண்டிருந்தார் என்பது புலனாகின்றது. ஆனால், குறிப்பிட்ட எந்தச் சமயத்தையும் சேர்ந்தவராகத் தம்மைக் காட்டிக் கொள்ளவில்லை. அவருடைய காலத்தல் சிறப்புற்று விளங்கிய சமயங்கள் பலவற்றின் சிறந்த கொள்கைகளை வடித்தெடுத்து, அவற்றில் 'மனித நலம்' எனும் உணர்வைக் குழைத்து, ' வள்ளுவர்' எனும் புதிய 'வாழ்க்கை நெறியை' – சமயத்தைப் படைத்த பெருமை திருவள்ளுவருக்கு உரியதாகும்.இதனால்தான், உலகச் சமயங்கள் அனைத்தும் அவரைத் தத்தம் சமயத்தைச் சேர்ந்தவர் என உரிமை கொண்டாடி வருகின்றன.

காலம்

திருவள்ளுவர் சங்க காலத்தில் (கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை) வாழ்ந்தவர் என்பது பொதுவாக அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். இந்நூற்றாண்டின் முற்பகுதியில் திருவள்ளுவரின் அருமை பெருமைகளை நினைவூட்டும் வகையில், 'திருவள்ளுவர் ஆண்டு' எனும் சகாப்தத்தினைத் தமிழறிஞர் சிலர் நடைமுறைக்குக் கொண்டு

---

1 திருவள்ளுவ மாலை, 50

வந்தனர். கி.மு. 31–ல் அவர் விண்ணுலகு அடைந்தார் எனும் மரபு வழிச் செய்தியின் அடிப்படையில், அவ்வாண்டினை முதலாகக் கொண்டு "திருவள்ளுவர் ஆண்டு"க் கணக்கிடப் பட்டு வருகிறது.

ஆளுமை

வான்புகழ் வள்ளுவரின் பண்புநலனையும் ஆளுமையையும் அறிவதற்கு, நமக்கு உறுதுணையாக இருப்பது அவருடைய திருக்குறளேயாகும். திருக்குறள் காட்டும் திருவள்ளுவர் எளிய தோற்றம் உடையவர்; கூர்த்த மதியுடையவர்; நாட்டு மக்களுள் ஒருவராக, எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்; உண்மையில் ஊற்றமும், நேர்மையில் நாட்டமும், தன்நம்பிக்கையில் தகைசால் பெருமிதமும் வாய்ந்தவர்; பிறர் உள்ளம் புண்படாத வகையில் நகைச்சுவையைக் கையாள்பவர்; அசைக்க முடியாத கடவுள் நம்பிக்கைக் கொண்டவர்; உழைப்பாளிகளைப் போல், எளிமையான அன்பு நிறைந்த இல்வாழ்க்கை வாழ்ந்தவர்; மழலைச் செல்வங்களின் 'மதிமயக்கும் இன்பத்தில்' மூழ்கியவர்.

அன்பும், வாய்மையும், நேர்மையும், இன்னாசெய்யாமையும். கொல்லாமையுமே அவர் போற்றிய சிறந்த அறங்களாகும். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பில் அறவோர் அவர்! போலித் துறவிகளைக் கண்டு மனம் கொதிப்புற்றவர் அவர்! சோம்பேறிகளையும், வெளிவேடக்காரர்களையும் அவர் அறவே வெறுத்தார்! அவர் கற்றோரிடையும், மற்றோரிடையும் நன்கு கலந்து பழகினார்; அவர்களுடைய இன்ப துன்பங்களில் பங்குகொண்டார்; 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி' வாழ்ந்தார்; மனிதப் பண்புகள் நிறைந்த மனிதனாக, மாண்புமிகு பண்புகள் பலவற்றின் வளர்ப்புப் பண்ணையாக, ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோனாக அவர் வாழ்ந்தார்!

உலகம் போற்றும் முதல் தமிழர்

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, மேற்கு நாட்டவரின் உள்ளத்தைத் திருவள்ளுவர் கவர்ந்து விட்டார். இத்தாலிய நாட்டுக் கிறித்துவ சமயத் தொண்ட ரான வீரமாமுனிவர், கி. பி. 1780 இல் திருக்குறளின் இலத் தீன் மொழிபெயர்ப்பை வெளியிட்டார். அதுமுதல் பல்வேறு மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. டாக்டர் ஜி.யூ. போப்பு எனும் ஆங்கிலேயக் கிறித்துவ சமயத் தொண்டர், சென்ற நூற்றாண்டில் மிக விரிவான முறையில் திருக்குறளை ஆங்கில மொழியில், மொழிபெயர்த்துள்ளார். திருவள்ளுவருக்குப் பாமாலை வடிவில் அவர் சூட்டியுள்ள புகழ்மாலை பொன்றாச் சிறப்புடையதாகும்.

நம்தேசத்தந்தைஅண்ணல்காந்தியடிகள்திருவள்ளுவரை நன்கு அறிந்தவராவர்; ரஷிய நாட்டு அறிஞர் தால்ஸ்தாயின் வாயிலாகத் திருக்குறளைப், பற்றி அவர் தெரிந்து கொண்டார்; பின்னர், திருவள்ளுவரின் கொள்கைகளைப் பெரிதும் போற்றிக் கடைப்பிடிக்கலானார். திருவள்ளுவர் ஒரு தமிழ் முனிவர் ; கி. பி. முதல் நூற்றாண்டில் அவர் வாழ்ந்த வராவார்; புனிதமான வாய்மொழிகளைத் திருக்குறள் வடிவிலே அவர் உலகிற்கு உதவியுள்ளார்; திருக்குறளைத் 'தமிழ் வேதம்' எனத் தமிழ் மக்கள் போற்றுகின்றனர்; ஏரியல் (Ariel) அதனை 'மனித இனத்தின் சிந்தனையில் தோன்றிய செம்மை நலமும், தூய்மைப் பொலிவுமிக்க இலக்கியப் பெட்டகம் என்று பாராட்டியுள்ளார்" என்பது அண்ணலின் அமுத மொழிகளாகும். திருவள்ளுவரால் நம் தாயகம் உலகப் புகழ் பெறலாயிற்று!

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு!

என்பது உண்மை! வெறும் புகழ்ச்சி இல்லை!

முப்பால்

திருவள்ளுவர் தந்த வான்மறையே திருக்குறள்! குறள் வெண்பாக்களால் இயற்றப்பட்ட நூலாதலின், இதனைக் 'குறள்' எனப் போற்றலாயினர், 'திரு' எனும் அடை அழகிய, 'தெய்வத் தன்மையுடைய' எனும் பொருள் பயப்பதாகும். எனவே, 'அழகிய குறள் வெண்பாக்களால் ஆகிய தெய்வத் தன்மையுடைய நூல்' என இதற்குப் பொருள் கொள்ளலாம். வள்ளுவர் இந்நூலிற்கு 'முப்பால்' எனும் பெயரையே வழங்கியிருக்கவேண்டும் என்பர். 'முப்பால்' என்பதற்கு "மூன்று பிரிவுகளையுடைய நூல்' என்பது பொருளாகும். அறம், பொருள். இன்பம் ஆகிய முப்பெரும் பேறுகளை விரித்துரைப்பதால் இப்பெயர் பெற்றது இந்நூல்.

சிறப்பியல்புகள்

தமிழ்ப் பண்பாட்டுச் சோலையில் பூத்த, என்றும் வாடா நறுமலரே திருக்குறள். தமிழரிடையே பெரிதும் செல்வாக்குப்பெற்று விளங்கும் சிறந்த தமிழிலக்கியம் திருக்குறள் மற்றும், தமிழகத்திற்குவெளியே உள்ளவர்களுக்கு நன்கு அறி முகமான தமிழ் நூலாக விளங்குவதும் திருக்குறளே யாகும்– இந்திய மொழிகள் பலவற்றிலும், உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ள பெருமைக்குரியது திருக்குறள். நோக்காலும் போக்காலும், நூல் அமைப்பாலும் திருக்குறள் பிற சங்கத்தொகை நூல்களிலிருந்து வேறுபட்டதாகும். பல்வேறு புலவர்களால் இயற்றப்பட்ட பாடல்கள் பலவற்றை ஒன்றாகத் தொகுத்தால் அதைத் 'தொகைநூல்' என்போம். திருக்குறள் அத்தயை தொகை நூல் அன்று! தனிமனிதர் ஒருவரின் சிந்தனையில் முகிழ்த்த திருநூலே திருக்குறள்! அத்தனிமனிதர் சங்க காலத்தின் இடைப் பகுதியில் சிறப்புமிக்க சான் றோராகவும், மெய்ப்பொருள் கண்ட மெய்யுணர்வாளராகவும், நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த பெரும்புலவராகவும் விளங்கிய ஞானியாவார்.

'உலகப் பொதுமறை' எனத் திருக்குறள் நெடுங்காலமாகப் போற்றப்பட்டு வருகிறது. அதனுடைய ஆசிரியரான திருவள்ளுவரை 'அனைத்துலக நோக்கு உடைய புலவர்' என்று அறிஞர்கள் பாராட்டியுள்ளனர். பன்னெடுங்காலமாகத் திருக்குறள், தமிழ் மக்களின் மனத்தினைப் பக்குவப்படுத்தும் பணியினைச் செய்து வந்துள்ளது. தமிழில் உள்ள நீதி இலக்கியங்களுள் தலைசிறந்த படைப்பாகத் திருக்குறள் விளங்குகிறது.

திருக்குறளின் ஒப்புயர்வற்ற மாட்சிக்கு, அதனுடைய இரு வகைப் பண்புகளே காரணமாகும். மனித வாழ்க்கையில் இடர்ப்பாடுமிக்க, சிக்கல் வாய்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், ஆழ்ந்த சிந்தனைக் கருவூலமாக அது விளங்குகிறது! மற்றும், ஒரு சில சொற்களைக் கொண்டு செம்மை நலங்கனிந்த நடையில் எளிய முறையில் கருத்துகளை விளக்குகிறது! யூனஸ்கோ (UNESCO)வினால் உலகப்பேர் இலக்கியங்களுள் ஒன்றாகத் திருக்குறள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. உலகப் பேர் இலக்கியங்களுள் இத்தகைய மாண்பு பொலிவுறவில்லை" என்பது டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சரின் துணிவாகும்.

அமைப்பு முறை

அறமே, திருக்குறளின் உயிர் நாடியாகும். அதை மையமாகக்கொண்டேமற்றக்கருத்துகள்எல்லாம்சுற்றிச்சுழலு கின்றன. மனித வாழ்க்கையின் முப்பெரும் பேறுகளைத் திருக் குறள் தெளிவுறுத்துகிறது. அறத்தின் மாட்சியை விளக்குவது அறத்துப்பால். அதில் அறவியல் பயன்மதிப்புகள் நன்கு விளக்கப்படுகின்றன. பொருளின் சிறப்பையும் அதை ஈட்டிக் காத்து, வகுத்து வழங்கும் முறைகளையும் இரண்டாம் பகுதி யாகியப் பொருட்பால் எடுத்துரைக்கிறது. அதில் சமூகவியல் சார்ந்த அரசியல் நெறிமுறைகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்ட இன்ப

வாழ்க்கையை விளக்குவது மூன்றாவது பகுதியான காமத்துப் பால்! மனித வாழ்க்கையின் உளவியல் பயன் மதிப்புகளை அது தெளிவுறுத்துகிறது. நான்காவதாகிய வீடுபேற்றைத் திருவள்ளுவர் தனியே எடுத்துரைக்கவில்லை. அதைப்பற்றி அறிஞர்கள் இன்றும் ஆராய்ந்து வருகின்றனர். முப்பாலிலேயே நாற்பாலினையும் அடக்கியுள்ளதாகக் கூறுவர்.

அறவியல் பற்றிய விரிவான நூல் இதைத் தவிரத் தமிழில் வேறொன்றும் இல்லை. 1330 அருங் குறட் பாக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இந்நூல் 133 அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துக் குறட்பாக்கள் உள்ளன. குடும்ப வாழ்க்கையாயினும், துறவு வாழ்க்கையாயினும் நல்ல முறையில் வாழ்க்கையை நடத்துவதற்குரிய வழிவகைகளை 35 அதிகாரங்களில் அறத்துப்பால் வகுத்துக் கூறுகிறது. ஆட்சிக் கலையையும் பொருளாதாரப் பயன் மதிப்புகளையும் 70 அதிகாரங்களில் பொருட்பால் விரித்துரைக்கிறது. மூன்றாவது பகுதியான காமத்துப்பால் 25 அதிகாரங்களில், காதல் வாழ்க்கையின் பல்வேறு இயல்புகளையும் புலன் நுகர் இன்பத்தின் பெற்றியையும் எடுத்துரைக்கிறது. இம்மூவகைப் பேறுகளையும் ஒருங்கிணைத்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர், வீடுபேற்றை அடைய இயலும் என்பதைத் திருக்குறள் அறிவுறுத்துகிறது. இவ்வகையில் அது வாழ்க்கைக்கு இலக்கணங்கூறும் வாழ்வியல் நூலாக விளங்குகிறது. வள்ளுவர் வகுத்துள்ள வாழ்க்கைத் தத்துவம் செயல்முறைக்கு உகந்ததாய், நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்றதாய் அமைந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

வடிவம்

நூல் முழுவதிலும் குறள் வெண்பா எனும் செய்யுள் பயன்படுத்தப்பட்டுள்ளது. சொற்சுருக்கத்திற்கும் பொருட் செறிவிற்கும் பெயர்போனது அது. வெண்பா யாப்பு நீதி

நூல்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும். எளிமையாக நினைவில் இருத்தவும், அடிக்கடி மேற்கோளாக எடுத்துக் கையாளவும் குறள் வெண்பாவினைப் போல் பயன்படும் வேறு சிறிய வடிவுடைய பாக்கள் தமிழில் இல்லை!

காலச் சூழல்

பண்டைத் தமிழகம், நாகரிகத்தில் நனிசிறந்து விளங்கிய காலத்தில் வள்ளுவர் திருக்குறள் இயற்றினார் என்பதற்கு, அந்நூலில் பல அகச்சான்றுகள் உள்ளன. திருக்குறள் காட்டும் வாழ்க்கை முறையும் பண்பாடும் சங்க காலத் தமிழகத்தில் நிலவியதைப் பிற சான்றுகளால் அறிகிறோம். கி. மு.மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப் பட்டது சங்க காலம். இக்காலத்தின் பிற்பகுதியில் திருக்குறள் இயற்றப்பட்டிருத்தல் கூடும்!

பலபெயர் பெற்ற பனுவல்

திருக்குறள் வழிகாட்டும் ஒளிவிளக்காக நம் மக்களுக்கு உதவிபுரிந்து வருகிறது. அதனிடத்துத் தாங்கள் கொண்ட ஈடுபாட்டை உணர்த்தும் வகையில் பல்வேறு பெயர்களால் வள்ளுவர் வாய்மொழியைப் புலவர்கள் போற்றி வருகின்றனர். திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்களுள் முக்கியமான வற்றை இங்குக் காண்போம். (1) முப்பால், (2) பொய்யா மொழி, (3) வாயுறை வாழ்த்து, (4) உத்தர (பின்தோன்றிய) வேதம், (5) தெய்வநூல், (6) திருவள்ளுவர், (7) தமிழ்மறை, (8) பொதுமறை, (9) திருவள்ளுவப் பயன் (10) பொருளுரை, (11) முதுமொழி, (12) அறம் என்னும் பெயர்கள் திருக்குறளின் சிறப்பியல்புகளையும், தமிழ் மக்கள் அதனிடத்துக் கொண்டுள்ள மதிப்பையும் புலப்படுத்துகின்றன.

உரை விளக்கம்

இடைக் காலத் தமிழ்க் கல்வி முறையில், திருக்குறள் முதலிடம் பெற்றிருந்தது. அதனுடைய உட்பொருளைக்

கற்றோரும் மற்றோரும் உணருமாறு செய்யும் அரும்பணியில் அறிஞர் பலர் ஈடுபட்டனர். அதன் பயனாகப் பத்துக்கு மேற்பட்ட அறிஞர்கள், திருக்குறளுக்கு உரைவிளக்கம் வரைந்துள்ளனர். அவற்றுள் பரிமேலழகர் உரை சிறப்புமிக்கது. இந்நூற்றாண்டில் நூற்றுக்கு மேற்பட்ட புலவர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் காலத்திற்கேற்ற எளிய, இனிய தெளிவுரைகள் முதற்கொண்டு, விரிவான பெரிய ஆராய்ச்சி விளக்கவுரைகளையும் வரைந்துள்ளனர்.

உணர்த்தும் முறை

திருக்குறள் உலகிற்கு உணர்த்தும் நற்செய்திகள் சிறப்பு மிக்கன; சிந்திக்கத் தூண்டுவன; ஆழ்ந்த அனுபவத்தை எதிரொளிப்பன; மனிதனை மனிதனாக வாழுமாறு வழிகாட்டுவன; தனி வாழ்விலும், பொது வாழ்விலும் அறத்தின் ஆட்சியை அறிவுறுத்துவன; வித்தகம் பேசாது பணிசெய அழைப்பன.

திருக்குறள் மனித இயல்புகளின் அடிப்படைப் பண்புகளைத் தெளிவுறுத்துகிறது. நாட்டையும், மொழியையும், காலத்தையும், இடத்தையும் கடந்து எக்காலத்திய மக்களுக்கும், எந்நாட்டு மக்களுக்கும், எம்மொழிபேசும் மக்களுக்கும், எந்நிலையில் வாழும் மக்களுக்கும் பயன்படத்தக்க அரிய உண்மைகளை நயமாக எடுத்துரைக்குந் திறன் திருக்குறளின் தனிச்சிறப்பாகும்.

கோனாட்சி நடைபெற்ற காலத்தில் இயற்றப்பட்ட திருக்குறள், இன்றைய குடியாட்சி காலத்திற்கும் பொருந்துவதாக உள்ளமை அதனுடைய மற்றொரு சிறப்பியல்பாகும். இதனால்தான், "உலகப் பொதுமறை" என அறிஞர் இதனைப் போற்றுகின்றனர். திருவள்ளுவரின் மிகவுயர்ந்த உள்ளவுணர்வுகளையும் தூய அறவுள்ளத்தையும் இது படம்பிடித்துக் காட்டுகிறது. கருத்து வளமும் கற்பனைச் செறிவும் வாய்ந்தது வள்ளுவர் வாய்மொழி. இதில் அனைத்துலகப் பண்போடு புத்துலகச் சிந்தனையும் பாவும்

ஊடுமாக இணைந்தும், இழைந்தும் உள்ளன. எளிமை மிகு புதுமைப் பண்புகளைப் புகுத்தியும், உயிர்த்துடிப்பு வாய்ந்த கருத்தோவியங்களைப் படைத்தும் பண்டை இலக்கிய மரபுகளின் கட்டுப்பாட்டைப் புலவர் பெருமான் தகர்த்து எறிந்துள்ளார். இவ்வாறு திருக்குறளில் வள்ளுவர் செய்துள்ள புரட்சிகள் பல.

புதுமைக் கருத்துகள்

மனிதன், "வாழ்க்கையில் அடையவேண்டிய குறிக்கோள் தான் பெரிது. ஆனால், அதை அடைவதற்குரிய வழிகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டா" என்னும் பொதுவான கருத்து உலகில் ஆற்றல் வாய்ந்ததாக இருந்து வருகிறது. ஆனால், திருக்குறள் 'வழியும் பயனும் தூய்மையாக இருக்கவேண்டும் என்னும் கருத்தை அறிவுறுத்துகிறது. 'பெற்ற தாய், பசியால் வாடினாலும், சான்றோர் பழிக்கும் செயலை ஒருவன் செய்யக் கூடாது' (656) என்பது வள்ளுவர் வாய்மொழி. இத்தகைய அறத்தினை உலகில் வேறெந்த நாட்டு அறநூல் அறிஞர்களோ, ஆட்சிக்கலையை வகுத்த அரசியல் விரகர்களோ, புலனுகர் இன்பத்தின் ஏற்றத்தை எடுத்துரைத்த இன்ப நூலாரோ எடுத் துரைக்கவில்லை!திருவள்ளுவருடைய கருத்தினைக் காந்தி அடிகள் ஒருவரே, தமது தனிவாழ்விலும், பொது வாழ்விலும் இக்காலத்தில் பொன்னேபோல் போற்றி வாழ்ந்த பெரியார் ஆவார்.

'ஒழுக்கமே உயிரினும் சிறந்தது' என்பதை வள்ளுவர் பல வகையாக எடுத்துரைத்துள்ளார். அறத்தின் வழிப்பட்ட வாழ்க்கையே தலைசிறந்தது என்பதை 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' என்றும், அறநெறியில் வாழ்வதன் மூலம் பெறும் இன்பமே உண்மையான இன்பம் என்பதை 'அறத்தான் வருவதே இன்பம்' என்றும் அவர் தெளிவுறுத்தியுள்ளார்.

ஒருத்தி ஒருவனைத்தான் மணந்து வாழவேண்டும் என்பதும், ஒருவன் எத்தனைப்பெண்களை வேண்டுமானாலும்

மணந்து வாழலாம் என்பதும் அண்மைக் காலம் வரையில், உலகில் பெருவழக்கமாக இருந்து வந்தது. ஆனால், திருவள்ளுவர் 'ஒருவனுக்கு ஒருத்தி' எனும் புத்துலகக் கோட்பாட்டை, அக் காலத்திலேயே அறிவுறுத்தியுள்ளார். இதனால், பெண்ணிற்கு மட்டும் அல்லாமல், ஆணிற்கும் கற்பொழுக்கம் இன்றியமையாதத் தேவை என்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்.

சமுதாயச் சீர்கேட்டிற்குக் காரணமாக உள்ள கள்ளுண் ணலையும் சூதாட்டத்தையும் திருக்குறள் கடிந்துரைக்கிறது. மற்றும் சமுதாயத் தீமைகளுக்கு மூலப் பிறப்பிடமான 'பொது மகளிரை' – பரத்தையரைச் சமுதாயத்திலிருந்து அறவே நீக்குவதற்கும், பொது மகளிரே இல்லாதப் புதியதொரு சமுதாயத்தைப் படைப்பதற்கும் திருக்குறள் வழிகாட்டுகிறது.

'வாழ்வாவது மாயம்; மண்ணாவது திண்ணம்' என்னும் மனப்பான்மையை வளர்த்து, மனிதனை முயற்சியற்ற சோற்றுப பிண்டமாக வாழச்செய்யும் விதிபற்றிய கொள்கையைத் தகர்த்து, ஊழையும் தோற்றோடச் செய்யும் ஊக்கத்தை ஊட்டுகிறது குறள். நிலை பேறற்ற உலகில் நிலையான செயல்களைச் செய்வதற்கு எழுக! விரைந்து செயலாற்றுக! எனப் புத்துணர்ச்சியை ஊட்டுகிறது வள்ளுவர் வாய்மொழி. *உலக வாழ்க்கையை மாயை என மறுத்து ஒதுக்கி விடாது அன்போடும் ஆர்வத்தோடும், பயன் கருதாது பற்றின்றிப் பணிபுரிந்தால் வாழ்வு வளம் பெறும்; நாடு நலம் பெறும்!" என்பது திருக்குறன் வழங்கும் செய்தியாகும். சுருங்கச் சொல்லுவதானால், உலகம் இன்ப மயமானது, அவ்வின்பத்தை அனுபவிக்க, தன்னம்பிக்கையுடன் அயராது பாடுபடுக! என்பதே குறள் காட்டும் அற நெறி. "பணிபுரிவதில் இன்பத்தைக் காணல் பற்றிய குறட்பாக்கள் சிறம்புமிக்கன. இத்தகைய கருத்துகளை இந்தியருடைய இதழ்களிலிருந்து எதிர்பார்க்கவே இயலாது! திருவள்ளுவர் இக்கொள்கையைப் போதிப்பது வியப்பூட்டுகிறது. திருக்குறளில் உலகப்பற்றும்

வாழ்க்கைப்பற்றும் மறுக்கப்படாத ஒரு வாழ்வியல் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளதற்கு இது ஒரு சிறந்த சான்றாக அமைந்துள்ளது, அன்பின் அடிப்படையில் மனித குலத்திற்குத் தொண்டாற்றும் தூய நெறி திருவள்ளுவரால் வகுத்தளிக்கப் பட்டுள்ளமை இந்தியச் சிந்தனையாளர்களுள் அவருக்குச் சிறப்புமிக்கதோர் இடத்தைத் தேடிக் கொடுத்துள்ளது" எனும் டாக்டர் சுவைட்சரின் கருத்து, திருக்குறளிற்கேயுரிய தனிப் பெருஞ் சிறப்பினை உலகிற்குப் பறை சாற்றுகிறது!

'அடிக்கு அடி, உதைக்கு உவத" என்பது உலக இயற்கை இதனை 'ஒறுக்கும் நெறி' என்பர். பிறர் தனக்குச் செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுவதே நல்லது. பழிக்குப் பழி வாங்குவதால் பெறும் இன்பம் ஒரு நாளைக்குத் தான் நிலைக்கும்."ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்; பொறுத் தார்க்குப் பொன்றுந்துணையும் (இறக்கும் வரையிலும் புகழைத் தரும்" என்பர் வள்ளுவர். இதனைப் 'பொறுக்கும் நெறி' என்பர். இயேசுநாதர் ஒருவன் வலக்கன்னத்தில் அறைந்தால் இடக்கன்னத்தைக் காட்டு' என்று அறிவுறுத்தியதும் இப்பொறுக்கும் நெறியைப் போற்றுவதாகும். இதற்கு ஒருபடி மேலே சென்று. ஒருவன் செய்த தீமையை மறந்து, அவனே தான் செய்த கொடுமைக்கு நாணம் அடையுமாறு, அவனுக்கு நன்மை செய்வதே சாலச் சிறந்தது. அப்பொழுது பகையுணச்சிக்கு உள்ளத்தில் இடமில்லாமல் போய்விடும்' என்ற புதியதொரு வழியினை உள்ளுவர் காட்டுகிறார்.

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று (152)

'இதனை 'மறக்கும் நெறி' எனலாம். இக்கருத்தினை உலகில் வேறெந்த நூல்களிலும் நாம் காண இயலவில்லை.

பண்டைக்கால உலகில் 'அரசன் தெய்விகப் பிறப்புரிமை அற்றவன்' எனும் கொள்கைப் புரட்சிகரமானது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னர், இக்கருத்தை மேற்கு நாடுகளில் எண்ணிப் பார்த்தவரே கிடையாது! ஆனால், திருக்குறளில் இக்கருத்து

முதன்மையிடம் (355) பெற்றிருக்கிறது. பெரிய பேரரசுகள் எல்லாம், குடிமக்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழுது வடிக்கும் கண்ணீரால் அழிந்தொழிந்துவிடும் என்பதை அன்றைக்கே திருக்குறள் (555) அறிவுறுத்தியுள்ளமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது!

"காதலர் இருவர் உள்ளத்தால் ஒன்றுபட்ட நிலையில் கண்களே பேசுவதற்குப் போதுமானவை; வாய்ச் சொற்கள் தேவை இல்லை" எனும் கருத்தமைந்த

கண்ணொடு கண்ணிணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல (1100)

எனும் குறட்பா, என்றைக்கும் காதலின் மாட்சியைப் படம் பிடித்துக் காட்டுவதாகும்.

'மலரினும் மெல்லிது காதல்; சிலரே அதன் பண்பு அறிந்து பயன் நுகர்வர்' (1289) எனும் குறட்பா, காதலர் இடையே மனமுறிவும், மணமுறிவும் உண்டாவதற்குரிய காரணத்தைச் சுட்டி, எச்சரிக்கைச் செய்கிறது! அமெரிக்க நாட்டு உளவியல் நிபுணரான லிண்ட்சே, அரும்பாடுபட்டு ஆராய்ந்து இந் நூற்றாண்டில் கண்டறிந்த உண்மையை, ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்பே, திருக்குறள் கவிதைச் சுவை நனி சொட்டச் சொட்ட எடுத்தியம்பியுள்ளதைக் காணுகின்றோம்.

இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்டது திருக்குறள் இதனை அறியும் வாய்ப்பினைப் பெற்ற உலக அறிஞர் யாவரும் இதன் மாட்சியை வியந்து போற்றுவதில் வியப்பு இல்லை! இவ் வரும் பெரும் நூலினை இயற்றிய வள்ளுவர் தமிழ்த் தாயின் தவமகனாவார்! தலைமகனாவார்!

தமிழன் திருக்குலந்தில் தமிழ்த்தாய் திருவயிற்றில்
தமிழ்த்திரு வள்ளுவனார்– கிளியே
தமிழாய்ப் பிறந்தா ரடி![2]

---

2 திருவள்ளுவர் கிளிக்கண்ணி, 1.

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்! – நன்றென
எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி

– கல்லாடர்

வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி?

– சுந்தரம் பிள்ளை

தமிழென்றால் நீயே! தவமேயுன் வாழ்க்கை!
அமிழ்தென்றால் முப்பாலே ஆகும் எமக்கினிய
நன்னெறியும் உன்னெறியே நாடி உலகுவக்கும்
நன்னூலும் உன்னூலும் நன்கு!

– மு.வரதராசனார்

திருவள்ளுவரும் சாக்ரடிசும்

உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரை, 23 நாகரிகங்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் மலர்ந்து, மணம்பரப்பியுள்ளதாக வரலாற்றுப் பேரறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். அவற்றுள் இருபத்தொரு நாகரிகங்கள் வாடி வதங்கி, உலர்ந்து, உதிர்ந்துவிட்டன. அவை, இன்று இருக்கும் இடம் தெரியா மல், 'பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டன. சீன நாகரிகமும் இந்திய நாகரிகமுமே இன்றும் அழிந்தொழியாமல் நின்று நிலவி வருகின்றன.

தமிழகத்தின் தனிப்பெரும் சிந்தனையாளர்

இந்திய நாட்டில், தொன்மைச் சிறப்போடு விளங்கிவருவது, இந்திய தீபகற்பத்தின் தென் கோடியில் உள்ள தமிழகமாகும். இங்குள்ள மக்களின் பண்பாடு, தொன்றுதொட்டு இன்றுவரை உயிர்த்துடிப்போடு இருந்து வருகிறது. இப்பண்பாட்டினை வளர்த்த சான்றோர்கள், நெறிப்படுத்திய அறவோர்கள் பலராவர். அவர்களுள் முதன்மையிடம் பெறுபவர் திருவள்ளுவர். வள்ளுவர் தந்த வான்மறை தமிழ் இலக்கியத்துள் தலைசிறந்த படைப்பாக விளங்குகிறது; தமிழ் இனத்தின் சிந்தனை முதிர்ச்சி திருக்குறளாக வெளிப்பட்டுள்ளது.

திருக்குறளை இயற்றிய தெய்வப் புலவர், மானிடம் பாட வந்த மன்பதைப் பாவலர். அவர் எழுப்பியுள்ள வினாக்கள் உலகை நோக்கிய வினாக்கள். அவர் தந்துள்ள விடைகள்

உலகைத் தழுவிய விடைகள். அவருடைய எண்ணங்கள் யாவும் உலகளாவிய எண்ணங்கள்; அவருடைய அறவுரைகள் அனைத்துலகையும் வாழ்விக்க வழிகாட்டும் வான்பொருள்கள். அவர் மனிதரிடத்துக் கொண்ட பரிவு வையகப் பரிவு. அவருடைய நோக்கு உலகை ஒரு குலமாகக் கருதும் நோக்கு.

திருவள்ளுவரின் நூல் அவருடைய தெளிந்த காட்சியையும் பரந்த அனுபவத்தையும், ஆழ்ந்த புலமையையும், எதையும் நுட்பமாகக் கூர்ந்து நோக்கும் ஆராய்ச்சித் திறனையும், இனிய சொல்லாற்றலையும், எதையும் நடுவுநிலையில் இருந்த வாறு கண்டு, அவற்றில் பொதிந்துகிடக்கும் உண்மைகளை வெளியிடும் தூய்மை குன்றாத் திறத்தையும் விளக்கும்.

அறிவுமுதல் வாதி

தமிழகத்தில் எத்தனையோ அறிஞர்கள், சான்றோர்கள், அருளாளர்கள் தோன்றியுள்ளனர். அவர்களுள் தலைசிறந்த பகுத்தறிவு வாதியாக வள்ளுவர் விளங்குகிறார். மிகமிகக் குறைந்த அளவிலேயே, அவரிடம் மூடநம்பிக்கைகள் காணப்படுகின்றன. 'உலகத்தோடு ஒட்ட ஒழுக வேண்டும்' எனும் கொள்கையுடையவராக அவர் வாழ்ந்தார். அதனால், அவருடைய காலத்துச் சமுதாயத்தின் சிறப்புமிகு நம்பிக்கைகள் சிலவற்றைத் தம் நூலில் அவர் பதிவு செய்துள்ளார்.

'பகுத்தறிவு வாதிக்கு கடவுள் நம்பிக்கை உண்டா?" எனும் ஐயம் எழலாம். கி. பி. பதினேழாம் நூற்றாண்டு வரையில், உலகில் சிறந்து விளங்கிய பகுத்தறிவுவாதிகள் அனைவருமே, கடவுள் நம்பிக்கையுடையவர்களாக இருந்ததாக வரலாறு கூறுகிறது. அவர்கள் 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று மிலா'ப் பரம்பொருளைப் போற்றினர். ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருவள்ளுவர்,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (1)

என்று அனைத்துலக மக்களும் போற்றி வழிபடத் தக்க நிலையில் உள்ளத்தால், உரையால், செயலால் அளவிட்டுரைக்க இயலாத எல்லையற்ற பரம்பொருளையே வணங்கிப் போற்றியுள்ளார். இதை உணர்வார், வள்ளுவரின் – பண்டைத் தமிழரின் – கடவுட் கொள்கையைப் போற்றாமல் இரார்.

அறிவு ஆற்றல் வாய்ந்தது. 'நல்லதன் நலத்தையும் தீய தன் தீமையையும்' பகுத்தறிந்து, நன்னெறியில் மனிதனை வாழத்தூண்டுவது அறிவு. அறிவு துன்பம் உண்டாகின்ற பொழுது, அத்துன்பத்திலிருந்து காத்துக் கொள்ள உதவும் கருவியாகும். மற்றும், உள்ளே புகுந்து, பகைவரால் அழிக்க இயலாத உள் அரணுமாகும். மனம் சென்ற வழியெல்லாம் ஒருவனைச் செல்லவிடாது, தீமையிலிருந்து விலக்கி, அவனை நல்லவழியில் செலுத்துவது அறிவாகும். பிறகு நிகழஇருப்பதை முன்னதாகவே எண்ணி, அறிந்து கொள்பவரே அறிவுடையவராவர். உலகத்தின் போக்கை உணர்ந்து, அதற்கேற்ப வாழ முயலுவதே அறிவுடைமை. எத்தகைய செய்தியாக இருந்தாலும், அதனை யார் சொல்லக் கேட்டாலும் (அதை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் அல்லது இகழ்ந்து தள்ளாமல்,) அதன் உண்மையை ஆராய்தலே அறிவுடைமைக்கு அழகாகும்.[1] எந்தப் பொருள் எத்தன்மையதாகத் தோன்றினாலும். அந்தப் பொருளின் உண்மையான தன்மையினை அறிந்து கொள்ளுவதே அறிவுடைமையாகும்.[2] "அறிவு உடையார் எல்லாம் உடையார்[3] என்பன திருவள்ளுவருடைய அறிவு முதல் வாதத்தின் (Rationalism) அடிப்படையாகும்.

சமுதாய நோக்கு

பண்டைக் காலத்தில் வாழ்ந்த அறிஞர்களும், புலவர்களும் உலகெங்கும் மேட்டுக்குடி மக்களின் ஆளவந்தார்களின்

---

1 குறள் 421, 422, 423, 426, 427

2 ஷ 355

3 ஷ 430

ஆதரவாளர்களாக அடிவருடிகளாகவே இருந்துள்ளனர். தனி மனிதரின் மேன்மையை – முன்னேற்றத்தையே அவர்கள் பெரிதாக நினைத்தனர். அவர்களிடத்து சமுதாய உணர்வு (Social Consciousness) இருந்ததாகத் தெரியவில்லை.

ஆனால், இதற்கு விதிவிலக்காக அத்தி பூத்தாற்போல பண்டை உலகிலும், இடைக்கால உலகிலும் சில கவிஞர்களும் அறிஞர்களும் தோன்றியுள்ளனர். அவர்களுள் நம் திருவள்ளுவருக்குத் தனிச்சிறப்பு உண்டு. அவர் மனிதனைப் பாடினார்; அனைத்துலக மனிதனைப் பாடினார்: மனித சமுதாயம் மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிகாட்டினார். அவர் பாடிய மனிதன் தனிமனிதன் அன்று! இந்திய மனிதன் அன்று! இன்று வாழும் மனிதன் அன்று! நேற்று வாழ்ந்த மனிதனையும் இன்று வாழும் மனிதனையும், நாளை வரப்போகும் மனிதனையும் கருத்தில் கொண்டு, உலகளாவிய மனிதகுலத்தை – மனித சமுதாயத்தையே திருவள்ளுவர் உருவாக்குவதற்குத் திருக்குறளை இயற்றியுள்ளார். அவர் காணவிரும்பிய இலட்சிய சமுதாயம் 'உலகம் ஒருகுலம்' எனும் சமுதாயமாகும். அந்தச் சமுதாயத்தில் இல்லறத்தாரும் துறவறத்தாரும், அரசனும் ஆண்டியும் தொழிலாளியும் முதலாளியும், செல்வரும் வறியவரும். அறிஞரும் அறிவிலியும், ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமானவர்களாக அறத்தின் வழி ஒழுக – வாழப் போகிறர்களாகவே காட்சி தருகின்றனர். 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்பதைப் போன்று, அறத்தின் முன்னர் அவர்கள் அனைவரும் சமமானவர்களாகத் தோன்றுகின்றனர். இத்தகைய சாதி, சமய, இன, இட, மொழி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்குரிய நெறி முறைகளையே, திருவள்ளுவர் தெளிவுறுத்தியுள்ளார். இவ்வகையில், சிறப்புமிகு சமுதாயச் சிந்தனையாளராகத் திருவள்ளுவர் விளங்குகிறார்.

அறத்தின் முதன்மை

மக்கள் வாழ்க்கை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை ஆராயத் தொடங்கிக் குறிக்கோளை விளக்குவது, மக்கள்

வாழ்க்கை உயர்வதற்கு வழிகாட்டும் அறநூல்களின் இயல்பாகும். 'அறம், பொருள், இன்பம்' ஆகிய 'முப்பால்' எனப்படும் மூன்றும் மனித வாழ்க்கையில் மூவேறு நிலைகளாகும். அவை ஒன்றோடொன்று பிணைந்தும் இணைந்தும் இயங்குவன. வாழ்க்கை நெறியின் உடலாகப் பொருளையும், உயிராக அறத்தையும் உணர்வாக இன்பத்தையும் வள்ளுவர் கொண்டுள்ளார். அவற்றைத் தனித் தனியே பிரித்துவிட்டால். வாழ்க்கை நெறி சிதைந்துவிடும். அவை மூன்றும் இணைந்தும் இழைந்தும் இருக்கவேண்டும். அவற்றிற்கு அறமே அடிப்படையாக அமைய வேண்டும். பிறநாட்டு நல்லறிஞர்கள் அறத்திற்குக் கொடுக்காத முதன்மை இடத்தைத் திருவள்ளுவர் அறத்திற்குக் கொடுத்துள்ளார்.

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல (புறம். 81)

என்பது பண்டைத் தமிழரின் கோட்பாடாகும். அக்கொள் கையை அடிப்படையாகக் கொண்டு, புதிய உலகைப் படைக்க வள்ளுவர் வழிகாட்டியுள்ளார்.

சமய நடுநிலையாளர்

''எல்லாச் சமயத்தவரும், இது எம் நூல்! இது எம் நூல்! என்று கூறுகிற, கூற விரும்புகிற நூல் உலகில் வேறு இல்லை! திருக்குறள் ஒன்றே இத்தகைய சிறப்பு வாய்ந்தது! இது மட்டும் அன்று 'கடவுள் உண்டு! என்பவர் மட்டும் அல்லாமல், "கடவுள் இல்லை?' என்பாரும் கூட உவந்து ஏற்கும் அருமை சான்ற பெருந்திரு நூலாக இது அமைகின்றது" என்பர்.

இதனை,
சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருள் இது என்ற வள்ளுவன்

என்று கல்லாடனார் (கல். 14) பாராட்டியுள்ளமையால் அறிய லாம். இதே கருத்தை ஜெர்மானிய நாட்டு அறிஞரான விண்ட்டர் நீட்சு "அவர் (திருவள்ளுவர்) இனம், சாதி, சமயம், வகுப்பு

எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர். அவர் அறிவுறுத்துவன மனித இனத்திற்குப் பொதுவான ஒழுக்கமும் அறிவுமாகும்" என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும்.

அறம் பாட வந்த அறவோர்

'மனத்துக்கண் மாசிலனாக வாழ்தலே அறமாகும்' என்று அறத்திற்கு எளிமையான முறையில், சிறந்ததொரு விளக்கத்தைத் திருவள்ளுவர் கொடுத்துள்ளார். இந்த மனத்தூய்மை, வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில், துறைகளில் கெடாமல் போற்றிக் காக்கப்பட வேண்டும் என்பது வள்ளுவரின் துணிவாகும். "தனிமனிதனுடைய வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும், இல்லறத்திலும் துறவறத்திலும், அரசியலிலும் ஆன்மிகவியலிலும், காதல் வாழ்விலும் பொதுவாழ்விலும் அறமே, போற்றிக் காக்கப்படவேண்டும்; வழிகாட்டும் ஒளிவிளக்காகப் பின்பற்றப்பட போற்றப்பட வேண்டும்" என்பது அறம்பாட வந்த அறவோராகிய திருவள்ளுவரின் தலையாய கோட்பாடாகும்.

அறநெறிக் கொள்கையின் வளர்ச்சியில் மூன்று படி நிலைகள் உள்ளன. அச்சத்தின் அடிப்படையில் ஒழுக்கத்தோடு வாழ்வது வாழத் தூண்டுவது முதல் நிலை. பழக்கவழக்கங்களைப் போற்றிப் பின்பற்றுவது இரண்டாவது நிலை. இதனை 'வழக்காற்று ஒழுக்க நெறி' என்பர். 'தூயமனமே அறத்தின் நிலைக் களம்' எனப் போற்றுவது மூன்றாவது நிலை! சிறந்த நிலை! உயர்ந்த நிலை! சிந்தனைச் சிறப்பு வாய்ந்த மக்கள் எல்லாரும் போற்றுவதுமாகும்! திருவள்ளுவர் இத்தகைய அறத்தையே, தம் நூலின் மூலம் உலகிற்கு உணர்த்தியுள்ளார்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன் (34)
மனந் தூயார்க்கு எச்சம் நன்றாகும் (456)
மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் (457)
மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி (453)

என்பன போன்ற குறட்பாக்கள், திருவள்ளுவரின் அறக்கோட்பாட்டை அறிவுறுத்துகின்றன.

திருவள்ளுவருடைய காலத்தில், இத்தகைய அறக்கொள்கையை வேறுயாரும் தமிழகத்தில் எடுத்துரைக்கவில்லை! வட இந்தியாவில் போதிமாதவரான புத்தர் பெருமானே, இதைப் போன்ற கருத்துகளை எடுத்தியம்பியுள்ளார். உலக அரங்கில் கிரேக்க நாட்டு நல்லறிஞன் சாக்ரடிசே, இத்தகைய அறக்கொள்கையைத் திருவள்ளுவருடைய காலத்திற்கு முன்னரே கிரேக்க மக்களுக்குப் போதித்துள்ளார்.

தூய்மை நெறியாளர்

"மனிதன் வாழ்க்கையில் அடையவேண்டிய குறிக்கோள் தான் பெரிது, அதை அடைவதற்குரிய வழியைப் பற்றிக் கவலை இல்லை" என்பதே அறவியல், பொருளியல் நூலாரின் கொள்கையாகும். மனிதன் ஒவ்வொருவனும் அடைய வேண்டிய குறிக்கோள் மட்டும் தன்மைப் பயப்பதாக இருந்தால் போதாது; அதை அடைவதற்கு அவன் மேற்கொள்ளும் செயல் முறைகளும் தூய்மையானவையாகவும் சிறந்தனவாகவும் இருத்தல் வேண்டும்" என்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்தி யுள்ளார். 'ஒருவன் செய்யும் செயல்கள் தூய்மையாக இருக்க வேண்டும்; அப்பொழுதுதான் அச்செயலால் அவன் அடையும் பயன். புகழ் பயப்பதாக அமையும்' என்னும் கருத்தினை 'வினைத்தூய்மை' எனும் அதிகாரத்தில் அவர் எடுத்துரைத் துள்ளார்.

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (656)

என்னும் குறட்பா, அவருடைய இலட்சிய நோக்கினை நன்கு தெரிவிக்கிறது. அண்ணல் காந்தி அடிகள் ஒருவரே, இக்காலத்தில் தமது தனிவாழ்விலும் பொது வாழ்விலும் இவ்வறத்தைப் பொன்னேபோல போற்றிய சான்றோராவார்.

அரசனும் ஒரு மனிதனே

பண்டைக் கால உலகில் பல்வேறு நாடுகளிலும், அரசன் தெய்விகத் தன்மையுடையவன்' என்றும், 'மண்ணுலகத்தில் தெய்வத்தின் திருவுருவமாக அரசன் திகழுகிறான்' என்றும் போற்றப்பட்டான். திருவள்ளுவர் இக்கருத்தை உடன்பட வில்லை. 'ஓர் எளிய குடிமகனைப் போன்று, அரசனும் அறநெறிக் கொள்கைகளுக்கு இணங்க ஆட்சிபுரிய வேண்டும்; அறநெறியிலிருந்து சிறிது அளவு தவறினாலும், மன்னவன் தாழ்ந்த நிலையினை அடைந்து, தானே அழிந்து போவான்" என்பது வள்ளுவர் கருத்தாகும். ஓரிடத்தில் 'நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், மக்களுக்கு இறைஎன்று சிறப்பாகப் போற்றப்படுவான்' என்று அவர் குறிப்பிடுகிறார்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (785)

இக்குறட்பாவில், திருவள்ளுவர் அரசனை, 'இறைவன்' என்று சொல்லவில்லை! 'இறைவனைப் போன்று மதிக்கப்படுவான்' என்றே சொல்லுகிறார். இதனால், அரசனுக்குத் தெய்விகப் பிறப்புரிமை (Divine Right) இருப்பதாகத் திருவள்ளுவர் கருதவில்லை என்பது புலனாகின்றது.

மறக்கும் நெறி

பிறர், தனக்குச் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளுவது சிறந்த பண்பாடாகும். அதைவிட ' ஒருவன் செய்த தீமையை மறந்து, தான் செய்த தவற்றிற்கு அவனே நாணுமாறு அவனுக்கு நன்மை செய்வதே சாலச் சிறந்தது. அப்பொழுது உள்ளத்தில் வெறுப்புணர்ச்சிக்குப் பழிவாங்கும் கொடியவுணர்ச்சிக்கு இடமில்லாமல் போய்விடும்' என்பது வள்ளுவர் காட்டும் புதிய அறவழியாகும்.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ் (155)

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று (152)

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (312)

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு (98)

இவ்வாறு மனிதனுடைய மனவியல்பினை அறிந்து, 'மறக்கும் நெறியைப் போதிக்கும் அறவோர் உலகில் வேறு யாரும் இருந்ததாகத் தெரியவில்லை.

மாண்புமிகு கிரேக்கத்தின் மங்காதப் பெருநிலவு

தமிழரும் கிரேக்கரும்

தமிழருடைய நாகரிகமும் கிரேக்க நாகரிகமும் மூவாயிரம் ஆண்டிற்கு முற்பட்ட தொன்மைச்சிறப்பு வாய்ந்தனவாகும். தமிழும் கிரேக்கமும் உலகத்தின் 'உயர்தனிச் செம்மொழி" களாகும் (Classical Languages). கிரேக்கரும், தமிழரும் பன்னெடுங் காலத்திற்கு முன்பே 'கடலோடிகளாக' வாழ்ந்து உலகப் புகழ் பெற்றனர். இவ்விரு நாட்டவரும் அழகியல் உணர்வுமிக்க கலைஞர்களாகச் சிறப்புற்றனர். மற்றும் இவ்விரு வகை நாகரிக மக்களும், 'வாழ்க்கை வாழ்வதற்கே!' எனும் கோட்பாடு உடையவர்களாக வாழ்ந்ததோடு, நல்லதொரு வாழ்வியல் தத்துவத்தை உலகிற்கு வழங்கியும் உள்ளனர்; மண்ணக வாழ்க்கையில் விண்ணக வாழ்க்கை இன்பத்தைக் காண அவர்கள் முயன்றனர்.

அறநெறியில் வாழ்வதே சிறந்தது' எனும் கொள்கையை வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் தமிழரும் கிரேக்கரும்

பின்பற்றி வாழ்ந்தனர். அறவழிப்பட்ட மனித நலக்கோட்பாட்டின் (Humanism) அடிப்படையில் மெய்ப்பொருளியலை இவ்விருவரும் வளர்த்துள்ளனர். எதிலும் இரு எல்லைகளுக்குப் போகாமல், மிதமான நடுவுநிலையான வாழ்க்கை வாழ்வதில் இவர்கள் பேரீடுபாடு கொண்டிருந்தனர். பொதுவாக இவ்வுலகில், மனிதனை மனிதனாக வாழவைப்பதற்குரிய நெறிமுறைகளே தமிழருக்கும் கிரேக்கருக்கும் உடன்பாடான வாழ்வியல் தத்துவமாகும்.

சாக்ரடிசின் காலச் சூழல்

சாக்ரடிசு வாழ்ந்த கிரேக்கத்தில், குடியாட்சி சிறப்புற்று விளங்கியது ;இலக்கிய உலகில், 'பாணர் – பாடினியர் காலம்' மறைந்து 'கவிஞர்கள் காலம்' செல்வாக்குக் குன்றிய நிலையில் தத்துவ ஞானிகள் சிறப்பு மிக்கவர்களாக விளங்கத் தொடங்கினர். இத்தகைய கட்டத்தில் சாக்ரடிசு வாழ்ந்தார். இலக்கிய மணமும் மெய்ப்பொருள் ஆய்வுச் சிந்தனையும் இணைந்தும் இழைந்தும், கலந்தும் குழைந்தும் உறவாடிய காலம் அது ! திருவள்ளுவரும் அத்தகைய கால கட்டம் ஒன்றில் தான் – சங்க காலத்தின் கடைப்பகுதியில், அறிவு ஆராய்ச்சிப் பெருகத் தொடங்கிய காலத்தில்தான் – தமிழகத்தில் தோன்றினார்.

தம் காலத்தில் கிரேக்கத்தில் நிலவிய சனநாயக ஆட்சியைச் சாக்ரடிசு ஓயாமல் சாடி வந்தார். அதனால் ஆட்சியாளர்களுக்கு, அவர்மீது வெறுப்பும் அருவருப்பும் உண்டாயிற்று. தக்க வாய்ப்பு கிடைத்தவுடன், அவர்கள் சாக்ரடிசிற்கு நஞ்சு கொடுத்து, இறக்குமாறு செய்தனர். உண்மையை உலகிற்கு உணர்த்தியதற்காகவும், மனிதனைச் சிந்திக்குமாறு தூண்டியதற்காகவும் அவருக்குக் கிடைத்த பரிசு நஞ்சு! உலக வரலாற்றில் முதன்முதல் " அறிவு உலகத் தியாகியாக' சாக்ரடிசு உயிர் நீத்தார். இந்தத் தவறை முடியாட்சியில் சிறந்து விளங்கிய தமிழகம் செய்யவில்லை!

தமிழர் கண்ட சாக்ரடிசு

திருவள்ளுவர் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் சாக்ரடிசு. அவர், நஞ்சு கொடுக்கப்பட்டு இறந்த வரலாற்றைத் தமிழர் அறிந்திருந்தனர். இதனை

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும்
உண்பர் நனிநாகரிகர் (நற்றிணை 355)

என்று பெயர் அறியப்படாத சங்க காலப்புலவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு விளக்கம் தரும் வகையில்,

பெயக்கண்டு நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் (580)

என்னும் குறட்பாவில் திருவள்ளுவர், சாக்ரடிசை 'நயத்தகு நாகரிகர்' என்று பாராட்டியுள்ளார்.

சாக்ரடிசும் மாணவர்களும்

சாக்ரடிசின் போதனைகளை, அவர் நூலாக எழுதவில்லை. ஆனால் திருவள்ளுவரோ, திட்டமிட்டு நல்லதோர் அறநூலை இயற்றிச் சென்றார். எனினும், சாக்ரடிசின் மாணவரான பிளேட்டோவும் பிறரும் அவருடைய சிந்தனைகளைப் போற்றிப் பதிவு செய்துள்ளனர். மற்றும் சாக்ரடிசின் எண்ணப்போக்கு உடைய மரபுவழி – வழிமுறை – (பாரம்பரியம்) ஒன்றை அவருடைய மாணவர்கள் உருவாக்கியுள்ளனர். 'செனோபன்' எனும் மாணவன் அவருடைய வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளை "நினைவுக் குறிப்பாக'க் குறித்து எதிர்கால உலகிற்குப் பயன்படுமாறு செய்துள்ளான்.

நம் திருவள்ளுவருக்கோ இத்தகைய மாணவர்கள் யாரும் இருந்ததாகவோ, அவருடைய கொள்கைகளைத் தொடர்ந்து போற்றிப் பரப்பும் இயக்கம் ஒன்றைத் தொடங்கியதாகவோ தெரியவில்லை.

இதற்கு மாறாக, உலகப் பெருஞ்சிந்தனையாளரான திருவள்ளுவரை, 'இலக்கியமெனும் இருட்டறைக்குள்' அடைத்து, அவருடைய உண்மைப் புகழொளி உலகெங்கும் வீசவொட்டாமல் பண்டைத்தமிழர் செய்துவிட்டனர்! சென்ற நூற்றாண்டில்தான் முதன் முதலாகப் பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளையவர்கள், திருவள்ளுவருக்குத் தொண்டர் குழாத்தை– பின்பற்றும் எண்ணப்போக்குடைய மாணவர் குழுவினைத் தொடங்கி வைத்தார்.

சிந்தனையாளர் சாக்ரடிசு

சாக்ரடிசு கி.மு. 469 முதல் கி.மு. 399 வரை வாழ்ந்தவராவர், திருவள்ளுவரைப் போன்று அறிவு முதல் வாதியாக அவர் விளங்கினார். அவருடைய கட்டற்ற சிந்தனை, கிரேக்கத்தின் செருக்குமிகு கல்விமான்களை, தன்நலக்காரர்களை, சுரண்டல்வாதிகளைக் கதிகலங்கச் செய்தது. இளமையில் சிற்பியாகவும், போர் வீரராகவும் நாட்டுக்கும் கலைக்கும் தொண்டாற்றியவர் சாக்ரடிசு. முதுமையில் அறிவுத்தொண்டை மேற்கொண்டதனால், அடுத்தவேளை சோற்றுக்கு வழியில்லா தவராக வாழ்ந்தார். அவருடைய மனைவி மக்கள் வறுமையிலே வாடினர்.

அவருக்கு நண்பர் பலர் இருந்தனர். அவர்கள் அவ்வப் போது உதவி புரிந்தனர். சாக்ரடிசு மது அருந்துவார். திரு வள்ளுவர் 'கள்ளுண்ணுதலை' மிகவும் வன்மையாகக் கண்டித்தவர் என்பதை நாம் நன்கு அறிவோம். சாக்ரடிசுக்கு அழகுணர்ச்சி மிகுதி. அழகான பொருள்களைக் காண்பதிலும் இனிய இசையைக் கேட்டு மகிழ்வதிலும் அவர் பேரீடுபாடு கொண்டிருந்தார். இவ்வகையில் திருவள்ளுவரும் அவரோடு ஒத்த இயல்புடையவராகக் காணப்படுகிறார். குழலிசையிலும் யாழிசையிலும் தோய்ந்து[4] இன்பம் கண்டவர் வள்ளுவர்! 'பண்

4 குறள் 66

என்னாம் பாடற்கு இயைபு இன்றேல்?[5] என்று வள்ளுவர் வினவுவதால், அவருக்கு இசைத்தமிழில் இருந்த ஈடுபாடு புலனாகின்றது. காமத்துப்பாலில் உள்ள பாடல்கள் பல அவருடைய அழகுணர்ச்சிக்கும் சான்று பகருகின்றன.

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம் இம்மூன்றும் உடைத்து (1035)

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு (1113)

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய் (1227)

என்பன வள்ளுவரின் கலையுணர்விற்கும் அழகுணர்விற்கும் போதிய சான்றுகளாகும்.

சாக்ரடிசு நாட்டின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு ஒழுகியவர். அதனால்தான் தமக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட பிறகு, நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு ஓடிவிடலாம் என்று அன்பர்கள் வேண்டியபோது, அவர் மறுத்துவிட்டார்.

தம் நாட்டுச் சமயப் பழக்க வழக்கங்களை அவர் மதித்துப் போற்றினார். அவருடைய வாழ்க்கைப் போக்கில் ஒரு புதுமையை அவருடைய நண்பர்கள் கண்டனர். அவர் அடிக்கடி தியானத்தில் ஈடுபட்டு விடுவார். போர்க்களத்திலும் நடுத்தெருவிலும் மெய்மறந்த நிலையில், பல மணி நேரங்கள் அவர் தியானத்திலும் யோகத்திலும் திளைத்துவிடுவார். இந்த ஆன்மிகக் கலையை அனுபூதிக் கலையை அவருடைய காலத்துக் கிரேக்கர்கள் அறிந்திருக்கவில்லை. இதனால், அவருடைய போக்குப் புதுமையாகவும் வியப்பாகவும் அவர்களுக்குத் தோன்றியது.

இதைப் போன்றே, சாக்ரடிசு அடிக்கடி 'என் மனச் சான்று (அந்தராத்மா) பேசுகிறது' என்று கூறி வந்ததைக்

5 குறள். 573

கிரேக்கத்தின் பொதுமக்களால் புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று. இதனால், ஆட்சியில் இருந்தவர்கள் முதற்கொண்டு அறிஞர்கள் வரையில், அவருக்கு 'யாதோ மனக் கோளாறு' என்று தவறாகக் கருதினர். திருக்குறளில் உள்ள 'மெய்யுணர்வு' 'தவம்' எனும் அதிகாரங்களைப் படிப்போமானால், திருவள்ளுவர் யோகத்திலும் தியானத்திலும் நன்கு தேர்ச்சிப் பெற்றவர் என்பதை உணரலாம்.

தத்துவத்தை – மெய்ப்பொருள் ஆராய்ச்சியை விண்ணகத்திலிருந்து மண்ணுலகத்திற்குக் கொண்டுவந்த பெருமைக் குரியவர் கிரேக்கத்தின் மாபெருஞ் சிந்தனையாளரான சாக்ரடிசு ஆவார்.

கொள்கையும் கோட்பாடும்

அறவியல் கொள்கை

சாக்ரடிசு இப்பேரண்டத்தின் அமைப்பையும் இயக்கத்தையும் ஆராய்ந்தார். அதில் இடையறாது இடம் பெற்றுள்ள ஓர் ஒழுங்குமுறையைக் கண்டார்; மனிதனுடைய வாழ்க்கையை அதனோடு இணைத்து ஆராய்ந்தார்.

உன்னை நீ அறிக!

'மனிதனே ! உன்னை நீ அறிவாயாக ! ' என்று அவர் மனிதனைச் சிந்திக்குமாறு வேண்டினார். ' உன்னை நீ அறிவாயானால், உனக்கொரு கேடுமில்லை ! ' என்பது நம்முடைய ஆன்றோர் வாக்கு. தன்னுடைய குறைகளை உணர்ந்து, அவற்றை நீக்கி வாழ முயலுவதே அறநெறிப்பட்ட வாழ்க்கை என்பது சாக்ரடிசின் கருத்தாகும்.

ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை வாழ, மனிதன் கற்க வேண்டும் என்பது சாக்ரடிசின் பெருவிருப்பமாகும். கிரேக்க மொழியில் 'அரத்தே' (Arete) எனும் சொல் 'ஒழுக்கத்தைச் சுட்டுவதாகும்; 'அகத்தன்' (Agathon) எனும் சொல் நன்மையைக்

குறிக்கும் யூடேமோனியா (Eudaimonia) எனும் சொல் மனநலத்தை (Happiness) உணர்த்துவதாகும். இந்த மூன்று சொற்களும் இணைந்த நிலையில் நம்முடைய 'அறம்' எனும் சொல் உணர்த்தும் சீரிய பொருளை அவை தருகின்றன. சாக்ரடிசு இம்மூன்று சொற்களையும் இணைத்துப் புதியதோர் அறக்கொள்கையை உருவாக்கியுள்ளார்.'

மனிதன் மன நலத்தோடு வாழ வேண்டும். அதற்கு என்ன வழி? அவன் 'நன்மை என்பது யாது?" என்பதை அறிய வேண்டும் என்பர் சாக்ரடிசு. இவ்வினாவிற்கு, அவர் 'பயன் தருவன அனைத்தும் நன்மையானவை' என்று விளக்கம் தந்துள்ளார். இதை அடுத்து, 'இன்பம் என்பது யாது?" எனும் வினாவினை எழுப்பி, 'மனத்தின் நிறைவே இன்பம்' என்று அவர் விடை பகன்றுள்ளார்.

இம்மூவகைக் கருத்தும் 'அறம், பொருள், இன்பம்' எனும் திருக்குறளின் மூன்று பால்களில் இழையோடிச் செல்லுகின்றன. 'அறம் என்பது யாது?' என்பதை.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (34)

அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல்நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (35)

எனும் குறட்பாக்கள் உணர்த்துகின்றன.

அறம் நன்மை பயக்கும் என்பதை,

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு (31)
செயற்பாலது ஒரும் அறனே (40)
அறத்தான் வருவதே இன்பம் (39)
அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை (49)

என்பன போன்ற குறட்பாக்கள் எடுத்துரைக்கின்றன.

பிறகுக்கு நன்மை செய்தலே அறம் என்பதை,

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு? (211)

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு (215)

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின் (216)

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின் (217)

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி (226)

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் (225)

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்து இழக்கும் வன்கணவர் (228)

எனும் குறட்பாக்களால் வள்ளுவர் அறிவுறுத்துகிறார் சாக்ரடிசு 'தன்மை என்பது என்ன?' என்பதைத்தான் விளக்கியுள்ளாரே ஒழிய, 'பிறருக்கு நன்மை செய்வதைப்' பற்றிய எண்ணம் அவருக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

நன்மை செய்வதால் வரும் பயன் இன்பம் என்பதையும் மேற்கண்ட குறட்பாவால் அறியலாம். 'மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம் தரும்' என்பதை முன்னரே கண்டோம்.

பயன்வழிக் கோட்பாடு

சாக்ரடிசு பயன்வழிக் கோட்பாட்டாளராக (Utilitarian)க் காட்சி தருகிறார். எப்பொருளையும் அதன் பயன்பாட்டைக் கொண்டுதான் நல்லதா? தீயதா?" என முடிவு செய்ய வேண்டும் என்கிறார். நன்மை தருவது அழகாக இருக்கும் என்றும் அவர் கருதுகிறார்.

ஆனால், உலகியலில் இவ்வாறு இருப்பதாகத் தெரிய வில்லை. ஒரு மனிதனுக்கு நன்மை தருவது, மற்றொருவனுக்குத் தீமையாக முடிவதைக் காணுகின்றோம். இதனால்தான் திருவள்ளுவர்

நன்றாற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை (469)

என்று அறிவுறுத்தியுள்ளார்.

'அழகான பொருள் பயன் தரும்; பயன் தரும் பொருள் நன்மைப் பயக்கும்' என்பதையும் நாம் உடன்பட இயலவில்லை. ஏனெனில் "அம்பு பார்ப்பதற்கு அழகாகத் தோன்றுகிறது; ஆனால், அது கொடுமையான செயலைச் செய்கிறது. எனவே "அழகான அம்பு' நன்மைப் பயப்பது எனக் கூறுவது பொருந்துமா? யாழினது கொம்பு வளைந்தும், அழகற்றும் காணப்படுகிறது. ஆனால், அதில் கட்டப்பட்டுள்ள நரம்புகளை மீட்டி னால், எழும் 'இசை' பேரின்பம் பயப்பதாக அமைகிறது. இதைப் போன்றே, மக்களுள்ளே அவர்களுடைய வேடங்களை மட்டும் நம்பாமல், அவர்களுடைய ஒழுக்கத்தைக் கண்டு, ஆராய்ந்து, அவர்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்கள் அல்லது சிறவாதவர்கள் எனத் தீர்மானிக்க வேண்டும்" என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

"கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்"

என்பது வள்ளுவர் வாய்மொழி. (279)

பயன் கருதாது பணிசெய்வதையே திருவள்ளுவர் சிறப்பாகப் போற்றுகிறார்.

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன் அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு (981)

..... மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று (222)
கைம்மாறு வேண்டா கடப்பாடு (211)

எனும் குறட்பாக்கள் "பயன்கருதாமல், தொண்டு செய்வதே சிறந்தது; போற்றத்தக்கது!" எனும் கருத்தினை உலகிற்கு உணர்த்துகின்றன. இக்குறட்பாக்களைப் பயின்றவர் டாக்டர் ஆல்பெர்ட் சுவைட்சர். அவர் 'உலகச் சிந்தனையுள் தலைசிறந்த அறக்கொள்கையாக – தொண்டு நெறிக்குரிய விளக்கமாக இவற்றைப் போற்றியுள்ளார். இவ்வகையில் சாக்ரடிசின் கொள்கையைவிட வள்ளுவருடைய கருத்து, சிறப்புடைய தாகும்.

அறிவும் ஒழுக்கமும்

'நல்லொழுக்கமே அறிவு' (Virtue is Knowledge) என்பது சாக்ரடிசின் மற்றொரு கோட்பாடாகும். திருவள்ளுவர்

அறிவு அற்றம் காக்கும் கருவி (421)
சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு (422)

என்பர். வள்ளுவர் கருத்துப்படி, 'நல்லொழுக்கத்திற்கு அறிவு ஒரு கருவி; உறுதுணை; தூண்டு கோல்!". எனவே, 'கருவியும், அக்கருவியால் அடையும் பயனும் எவ்வாறு ஒன்றாக இயலும்?" எனும் ஐயம் எழுகிறது. மேலும், 'அறவொழுக்கம்' என்பது வெறும் பழக்கத்தால் மட்டும் உண்டாகக் கூடியது அன்று! அது மனித இயல்பை அடிப்படையாகக் கொண்டது என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். மனித இனத்தை மதி நுட்ப நிலையிலும், அறவாழ்வு நிலையிலும் அறிவு பெறச் செய்யவேண்டும். அதற்கு ஒரேவொரு வழிதான் உண்டு. உண்மையைப் பற்றிய அறிவைப் பெறுவதே சிறந்த வழி. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்', 'எப்பொருள் எத் தன்மைத் தாயினும்' அவற்றின் உண்மை இயல்புகளைக் காண முயலுவதால் அறிவு தெளிவுபெறும்; வாழ்க்கையை நன்மை நிறைந்ததாக நடத்த இயலும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மனித இனத்தை மதிநுட்பத்தோடு, அறவாழ்வு வாழச் செய்ய வேண்டுமானால், அதற்கு ஒரேவொரு வழிதான்

உண்டு என்பது சாக்ரடிசின் நம்பிக்கை. 'உண்மையைப் பற்றிய அறிவைப் பெறுவதே அதற்குரிய சிறந்தவழி' என்று அவர் கூறுகிறார். உண்மையைப் பற்றி அறிந்தவர்கள் எல்லாரும் அற வாழ்வு வாழ்வது இல்லை. அவர்களே தீய செயல்களில் மிகுதியாக ஈடுபடுவதை நாம் உலகில் காணுகின்றோம். அறிந்தால் மட்டும் போதாது; அறிந்ததை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் உள்ளவுறுதியோடு கூடிய தெளிவும், துணிவும் இருந்தால்தான் மனிதன் அற வாழ்வு வாழ இயலும்.

'யாருமே வேண்டும் என்று தவறு செய்வதில்லை! யாரா கிலும் தவறு செய்கிறார்கள் என்றால் அறியாமையால்தான் தவறு செய்கின்றனர்' என்பது கிரேக்கப் பேரறிஞரின் துணி வாகும்.இதனைக் கருத்தில் கொண்டு, 'கொலை செய்வதுகூட அறியாமையால் செய்யப்படும் தவறே' என்று அவர் விளக்கம் கூறுவார். கொலை செய்வது கொடிய குற்றம் என்பதை நன்கறிந்த ஒருவன், 'பகைவனைக் கொலை செய்வது இன்பம் தரும்' என நம்புகிறான். அதனால், அவன் கொலை செய்கிறான். இங்கே,"வேண்டும் என்றே யாரும் தவறு செய்வதில்லை' எனும் சாக்ரடிசின் சித்தாந்தம் வலிவு இழந்து விடுகிறது. இதில் தனிமனிதனுடைய மனப்போக்கு வெளிப்படுகிறது. இதனைத் தனிநிலைக் கொள்கை (Individualistic)யின் பாற் பட்டது எனலாம். இதனை நல்லொழுக்கமே அறிவு' எனும் அறிவுநிலைக் கொள்கையோடு இணைத்துப் பார்ப்பதால் குழப்பம் உண்டாகிறது. தீமையும் – தீயசெயலும் நல்ல செயலாக, இன்பம் தரும் செயலாகத் தனி ஒருவனுக்குத் தோன்ற இடம் அளிக்கிறது. இவ்வாறு தனிநிலைக் கொள்கையையும் அறிவு நிலைக் கொள்கையையும் இணைத்துப் பொதுமைப் படுத்துவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

சாக்ரடிசும் திருவள்ளுவரும் 'பெண்களைச் சிறப்பாகப் போற்றுகின்றனர்; ஆண்களோடு சரிநிகர் சமானமாக வாழ்வதற்கு அவர்கள் உரிமையுடையவர்களாவர்' என்பதை நன்கு வலியுறுத்தியுள்ளனர்.

(ஆ) அரசியல் கொள்கை

சாக்ரடிசின் அரசியல் கொள்கை சிறிது சிக்கலானது. நல்லொழுக்கத்தையும் மனநலமாகிய இன்பத்தையும் மனிதன் அடைவதற்கு உறுதுணையாக உள்ள ஒரு கருவியாக 'அரசி'னை அவர் கருதுகிறார். அறவாழ்வின் முடிவு நிலையாகவோ, முடிவு நிலைக்காரணமாகவோ அரசினை அவர் கொள்ளவில்லை!

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி (542)

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் (543)

எனும் குறட்பாக்கள் இதற்கு நேர்மாறான கருத்தை வலியுறுத்துகின்றன.

அறச்செயலின் அடிப்படை

அடுத்து 'அறச் செயலின் – அறவாழ்வின் அடிப்படை அரசே' என்று சாக்ரடிசு மொழிந்துள்ளார். திருவள்ளுவரோ, 'குடும்ப வாழ்க்கையே– இல்லறமே' அறவாழ்விற்கு அடிப்படை என்று அறிவுறுத்தியுள்ளார்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (45)

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன்? (46)

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
கோற்பாரின் நோன்மை உடைந்து (48)

அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை (49)

என்னும் குறட்பாக்களால், அறவாழ்வின் அடிப்படை அலகு, குடும்ப வாழ்க்கையே –இல்லறமே – என்பது இனிது புலனாகிறது.

அறமும் அரசியலும்

''அரசியலில் கலந்து தொண்டு ஆற்றுவோர் நல் அறத்தொண்டர்களாக இருக்க இயலாது" என்பது சாக்ரடிசின் கருத்தாகும். இந்தக் கருத்தை, அவர் பெரிதும் மக்களிடையே பரப்பி வந்தமை, அக்காலத்தில் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தோருக்கு வெறுப்பை உண்டாக்கியது. சாக்ரடிசின் கருத்துப்படி "அறமும் அரசியலும் இணைந்து இயங்க இயலாது" என்பதாகும். நடப்பு நிலையில் பெரிதும் இந்நிலையே எங்கும் காணப்படுவதால், அவர் இவ்வாறு கருதியதாகத் தெரிகிறது. அரசியலில் அறத்தைப் போற்றியவர்கள் மிகமிகச் சிலரேயாவர்.

திருவள்ளுவர் சமுதாயத்தைத் திருத்தி அமைக்க அரசியல் அறநெறிப்பட்டதாக அமைய வேண்டும் எனக்கருதுகிறார்.

அறன் இழுக்காது அல்லவை நீக்கிமறன் இழுக்கா
மானம் உடையது அரசு (384)

எனும் குறட்பா இக்கருத்திற்குப் போதிய சான்றாகும்.

(இ) பொருளியல் கொள்கை

பொருளை ஈட்டுவதற்குரிய தொழில்களுள் உழவுத் தொழிலே சிறந்தது என்பது வள்ளுவர் கருத்தாகும்.

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை (1031)

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து (1032)

என்னும் பாடல்கள் உழவுத் தொழிலின் சிறப்பையும், அத் தொழில் செய்வாரின் மேம்பாட்டையும் எடுத்துரைக்கின்றன.

அடிமைகளின் தொழில்

சாக்ரடிசோ 'அடிமைகளின் தொழில் உழவு' என்று இழிவாகக் கூறுகிறார். கிரேக்க நாட்டில் ஆளப்பிறந்தவர்கள் மேட்டுக்குடிமக்கள் –எல்லாம் உரிமையுடையவர்களாவர். அவர்களுக்குத் தொழில், நாட்டு ஆட்சியில் பங்குகொள்ளுவதேயாகும். அவர்களுடைய பண்ணைகளை உழுது பயிரிட்டோர் கொத்தடிமைகளாவர். அவர்கள் தலைவனுடைய வீட்டிலும் வயலிலும் வேலை செய்தனர். கிரேக்கர்கள் பெரிதும் கடல்வாணிகத்தையே நம்பி வாழ்ந்தனர். இக்காரணங்களால் அறிவுலக மேதையாகிய சாக்ரடிசு, உழவுத் தொழிலைப்பற்றி இழிவாகக் கருதும் நிலையில் இருந்தார்.

சுரண்டல் வாணிகம்

திருவள்ளுவர் ஒழுக்கத்தை மறக்கும் அல்லது மறைக்கும் பொருளாதாரத்தை– வாழ்க்கை வளத்தை – ஏற்றுக் கொள்ள வில்லை. சாக்ரடிசு சுரண்டல் மிகுந்த வாணிகப் பொருளா தாரத்தைப் போற்றியுள்ளார்; அதன் அடிப்படையில் அமைந்த பகட்டு ஆரவாரமிக்க நாகரிகத்தை மதிப்பு மிக்கதாகக் கொண்டுள்ளார்.

(ஈ) சமுதாயக் கொள்கை

ஆண்டான் – அடிமை

அன்றைய கிரேக்க சமுதாயத்தில் காணப்பட்ட 'ஆண்டான் – அடிமைப்' பாகுபாட்டைச் சாக்ரடிசு உடன்படுகிறார். அடிமைகளுக்கு எத்தகைய உரிமையும் கிடையாது; கல்வி கற்க இயலாது; உழைக்கவே பிறந்தவர்கள்; எனவே மனித இயந்திரங்களாக அடிமைகள் வாழ்ந்தனர்."

ஏழை – பணக்காரன்

வாணிகத்தால் உண்டான வளம் ஒரு பக்கம்; அயல் நாட்டுப் படையெடுப்புகளில் கொள்ளை அடித்துக் கொண்டு வந்து குவித்த செல்வம் மற்றொரு பக்கம். இவற்றால் சொகுசு மிக்க வாழ்க்கை வாழ்ந்த கிரேக்கர்கள், அடிமைகளின் இரத்தத்தை

உறிஞ்சவும் தயங்கவில்லை. எனவே, ஒரு பக்கம் கோலாகல வாழ்க்கையும், மற்றொரு பக்கம் வறுமையின் கொடுமையும் அங்குக் களிநடம் புரிந்தன.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (972)

எனும் புத்துலகக் கோட்பாடு சாக்ரடிசு அறியாத ஒன்று. இதைப் போன்றே,

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை? (315)

என்பதையும் அவர் அறியார், 'பிறப்பாலும், செல்வத்தாலும் சிறந்தோரே உயர்ந்தோர்' என்பது சாக்ரடிசின் கருத்தாகும்.

(உ) கடவுட் கொள்கை

இறைவனும் தெய்வங்களும்

சாக்ரடிசு ' தெய்வங்கள் வேறு; இறைவனாகிய பரம் பொருள் வேறு' என்று அறிவுறுத்தி வந்தார். கிரேக்கர்கள் வழிபட்ட 'அப்பாலோ','சீயஸ்' போன்றவை தெய்வங்கள் என்றும், இவற்றிற்கு மேலாகப் பேராற்றலும், பேரறிவும், பெருந்திறனும் வாய்ந்த ஒன்று, எங்குமாய் எல்லாமாய் விளங்குகின்ற ஒன்று செம்பொருள் எனவும், மெய்ப்பொருள் எனவும் அவரால் போற்றப்பட்டது.

திருவள்ளுவர் 'கடவுள் வாழ்த்து' எனும் அதிகாரத்தில் போற்றிவணங்குவது, ஓர் எல்லையற்ற பரம்பொருளையே ஆகும்; ஆதிபகவனாக அவனை முதலில் காட்டுகிறார்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு (5)

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் (20)

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும். (388)

எனும் குறட்பாக்களில், 'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன்' என்று எழுதிக்காட்ட இயலாத இறைவனையே திருவள்ளுவர்போற்றுகிறார்.கண்ணால்காண இயலாத இறைவனை 'எண்குணத்தானாக'வும், 'அறவாழி அந்தணனாக'வும் 'வாலறிவனாக'வும் 'வேண்டுதல் வேண்டாமை இலாதவனாக"வும், 'உயர் திணை ஆண்பால் ஒருமையில்' உருவகப்படுத்திக் காட்டி, அவனுடைய அடி சேர்தலே, மனித வாழ்க்கையின் முடிந்த பயன் என்பதையும் வள்ளுவர் அறிவுறுத்தியுள்ளார்.

இறைவனை இவ்வாறு வடிவ நிலையில் காட்டிய வள்ளுவர், மெய்ப்பொருளியல் நோக்கில்,

பிறப்பென்னும் பேதைமை நீங்கசிறப் பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு (358)

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் (91)

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி (356)

என்னும் பாக்களில் 'செம்பொருள், மெய்ப்பொருள்' என்று இறைவனைச் சுட்டுகின்றார்.

இவ்விறைவனிலிருந்து வேறுபட்ட தெய்வங்களையும் திருவள்ளுவர்,

தென்புலத்தார் தெய்வம் விருந்து (43)
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் (50)
தெய்வந் தொழாஅன் (55)
தெய்வத்தான் ஆகாது எனினும் (619)

தெய்வத்தோடு ஒப்பக் கொளல் (702)
தெய்வம் மடிதற்றுத் தான்முந்துறும் (1023)

என்று வகைப்படுத்தியுள்ளார்.

எனவே, இவ்விரு சான்றோர்களும் ஒத்த கடவுட் கொள்கை உடையவர்களாகத் தோன்றுகின்றனர் எனலாம்.

ஊழ்வினை

ஆன்மா வேறு: உடல் வேறு; இந்தப் பிறவியில் நன்மை செய்தால், மறுபிறவியில் ஆன்மாவிற்கு அது நன்மையாக அமையும்' எனும் கருத்துடையவர் சாக்ரடிசு. ஐரோப்பியச் சிந்தனையில், இதனை இந்தியச் சிந்தனையின் தாக்கமாகக் கூறலாம். இதனால், அவர் ஊழ்வினைக் கொள்கையை' உடன்படுவது தெளிவாகிறது. ஆன்மாவைப் பற்றிய கருத்து மேற்கு நாட்டவருக்கு மிகவும் புதுமையானதாகும்.

தன்னுயிர் தானறப் பெற்றனை (268)
அன்பின் வழியது உயிர்நிலை (80)
கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை (298)
உயிர்உடம்பின் நீக்கியார் என்ப (330)
குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு (338)
புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு (340)

எனும் குறட்பாக்கள் உடலும் உயிரும் வெவ்வேறானவை என்பதை அறிவிக்கின்றன.

பிறவிகள் பல என்பதையும் திருவள்ளுவர் உடன்படுகிறார். இதனை,

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் (107)
ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து (126)
ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து (398)

இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் (538)
ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு (835)

என்று அவர் அறிவுறுத்துவதன் மூலம் அறியலாம்.

மற்றும் 'இம்மை' (குறள் 98, 1042, 1315), 'மறுமை' (குறள் 92, 453), 'மறுமைப் பயன்' (குறள் 904), 'மறு பிறப்பு' (குறள் 1042) என்று பலவகையாக மறுபிறப்பைப் பற்றிய நம்பிக்கையைத் திருவள்ளுவர் தெளிவுறுத்தியுள்ளார்.

பிறவிப் பெருங் கடல் (10)
பிறப்பு ஈனும் வித்து (361)
வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை (362)
ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும் (370)

என்பன 'பிறவிச் சுழல்' பற்றிய கொள்கையை உணர்த்துகின்றன.

ஊழினைப் பற்றித் திருவள்ளுவர் மிகவும் தெளிவான கருத்துடையவராகத் தோன்றுகிறார்

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி (371)
பேதைப் படுக்கும் இழவூழ்; அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை (372)
ஊழிற் பெருவலி யாவுள? (380)
ஊழையும் உப்பக்கம் காண்பர் (619)

என்னும் குறட்பாக்கள் ஊழின் ஆற்றலையும், அதன் வகையையும் உணர்த்துகின்றன.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (377)

எனும் குறட்பாவினைப் பயனை ஆன்மாக்கள் துய்க்குமாறு செய்யும் தெய்வத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

சடங்குகளை வெறுத்தல்

தெய்வங்களுக்குப் பலி கொடுப்பதையும், பொருளற்ற சடங்குகளை வழிபாட்டில் இணைத்துப் போற்றுவதையும் சாக்ரடிசு மிக வன்மையாகக் கண்டித்துள்ளார். 'சமய உண்மைகள் வேறு; சமயச் சடங்குகள் வேறு' என்பதைப் புரிந்து கொள்ள இயலாதவர்கள் – மறுத்தவர்கள் – அவருக்கு 'நாத்திகர்' எனும் பட்டத்தைச் சூட்டினர்.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று (258)
அருளல்லது யாதெனில் கொல்லாமை (254)
நல்லாறு எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி (324)

என்னும் குறட்பாக்களால், வள்ளுவர் சமயச் சடங்கின் பேரால் பலி இடுவதையும், கொலைபுரிவதையும் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா (280)

என்று தேவையற்ற சடங்குகளுக்கும் வேடங்களுக்கும் இடம் கொடுப்பதை அவர் வெறுத்து ஒதுக்குமாறு அறிவுறுத்துகிறார்.

இவ்வாறு திருவள்ளுவரும் சாக்ரடிசும் ஆன்மா, பிறப்பு, ஊழ்வினை, பலியிடுதலை வெறுத்தல், சடங்குகளைச் சாடுதல் போன்றவற்றில் ஒத்த கருத்துடையவர்களாகவும், புதுமைப் போக்குடையவர்களாகவும் உள்ளமை சிறப்புமிகு செய்தியாகும். இந்த ஒற்றுமைப் பண்புகள், அவர்கள் அறிவு முதல் வாதிகள் என்பதை அறிவிக்கின்றன.

மதிப்பீடு

"அறிவு உலகத் தந்தை" என்று போற்றப்படும் சாக்ரடிசின் சிந்தனைப் போக்கில், சிற்சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் சில முரண்பாடுகளாகத் தோன்றுகின்றன.

குறைகளா?

'அறமே உயர்ந்தது; தலைச் சிறந்தது '! என்பதைச் சாக்ரடிசு அறிவித்துள்ளார். ஆனால், மக்களை– அறச்செயல்களில்– மனித குலத்தின் துன்பத்தைத் துடைக்கும் அறச் செயல்களில் ஈடுபடுமாறு ஓரிடத்தில்கூட அவர் சொல்ல வில்லை.'அறம் நன்மை தரும்! எனவே அறநெறியில் வாழ முயலுக! என்பதாக அவருடைய அறிவுரை அமைந்துள்ளது'. எனவே, அவருக்குத் 'தொண்டு நெறி' பற்றிய எண்ணம் இருந்ததாகத் தெரியவில்லை.

வாழ்வின் இலட்சியம் நன்மையை அடைதல்' என்று அவர் தெளிவுறுத்தியுள்ளார். ஆனால், 'அந்த நன்மையை அடைவதற்குரிய வழிவகைகள் யாவை ?" என்பதை அவர் கோடி காட்டவும் இல்லை.

யாதாகிலும் ஒரு பயன் கருதியே எதையும் செய்ய வேண்டும் என்பது கிரேக்கப் பெருந்தகையின் துணிவாகும். இதனால் 'பற்றின்றி, பயன் கருதாது பணிசெய்யும் தொண்டு மனப்பான்மை – தியாக உள்ளம் பற்றி' அவர் ஒன்றுமே அறிந்திருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

இறைவனுடைய படைப்பில் ஏழைகளும், அடிமைகளும் இருப்பது இயற்கை' எனும் கருத்துடையவராக அவர் காட்சி தருகிறார். 'கிரேக்கர்களே வாழப் பிறந்தவர்கள்' என்று அவர் கருதுகிறார். இவையாவும் இன்றைய முற்போக்குச் சிந்தனையாளராகச் சாக்ரடிசு விளங்கவில்லை என்பதைத் தெரிவிக்கின்றன. அனைத்துலக மனித நேயம் – சகோதரத்துவம் (Universal Brotherhood of Man) என்பது சாக்ரடிசு அறியாத ஒன்றாகும், யாதானும் நாடாமால் ஊராமால் (397) எனும் குறட்பா 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' எனும் தமிழருடைய கொள்கையை எடுத்துரைப்பதைப் போன்ற முற்போக்குச் சிந்தனையைச் சாக்ரடிசிடமோ, அவருடைய மாணவரான பிளேட்டோவிடமோ, அவருடைய மாணவரான

அரிஸ்டாட்டிலிடமோ நாம் காண இயலவில்லை! இது முற்றிலும் உண்மை!

'கல்வி அனைவருக்கும் பொது' எனும் கருத்து மேற்கண்ட மூன்று சிந்தனையாளர்களும் அறியாதது. "மேட்டுக்குடி மக்களுக்கே 'கல்வி' வேண்டும்" என்பது அவர்களுடைய துணிவாகும். வள்ளுவரோ, 'வாழும் உயிர்கள் அனைத்திற்கும் கல்வி கற்கும் உரிமை உண்டு' (392) என்று அனைத்து உலகிற்கும் அறிவுறுத்தியுள்ளார். இது புத்துலகச் சிந்தனை யாகும்.

பிறர் துன்பத்தை –பிற உயிர்களின் துன்பத்தைத் தம்முடைய துன்பமாக உணரும்,பிறிதின் நோய்,தந்நோய் போல் போற்றும் பண்பைப் பற்றி சாக்ரடிசு ஒன்றுமே சொல்லவில்லை. அவருடைய அறிவு முதல் வாதத்தில் அன்பும், அருளும் இடம் பெறவே இல்லை! அன்பும், அருளுணர்வும் மக்களுக்கேயுரிய சிறப்பியல்புகளாகும்; விலங்குகளிடத்திலும், பறவைகளிடத் திலும் ஓரளவிற்கு இணைவிழைச்சு அடிப்படையில் அன்புதான் உண்டு. இதனால்தான் இவற்றைத் திருவள்ளுவர் * மக்கள் பண்பு ' (997) என்று போற்றியுள்ளார்.

அறத்திற்கே அன்பு சார்பு என்ப (76)
அன்பொடு இயைந்த வழக்கு என்ப (73)
அன்புற்ற அமர்ந்த வழக்கு என்ப (75)
அன்பு அகத்தில்லா உயிர்வாழ்க்கை (78)
அன்பின் வழியது உயிர்நிலை (80)

என்று பலவாறாக அன்பினது ஆட்சியையும், மாட்சியையும் வள்ளுவர் உணர்ந்துள்ளதைப் போன்று, கிரேக்க சிந்தனையாளர்கள் அறியாமல் இருந்தது, அவர்களுடைய சிந்தனைப் போக்கில் காணப்படும் மாபெரும் குறையாகும்.

இனி, அருளுணர்வைப்பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது, என்பதை உலகச் சிந்தனையாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அருள்செல்வம் செல்வத்துள் செல்வம் (241)
நல்லாற்றான் நாடி அருளாள்க (242)
அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு (243)
மன்னுயிர் ஓம்பி அருளாள் வார்க்கு (244)
அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை (247)

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை (315)

என்பன அருள்நெறிக் கொள்கையை அறிவுறுத்துகின்றன. இந்தக் கொள்கையைச் சாக்ரடிசு அறியாதவராக வாழ்ந்தமை விந்தையிலும் விந்தையாகும்.

இத்தகைய குறைபாடுகள் உடைய சிந்தனையாளராக சாக்ரடிசு காட்சி தருவதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது.

கொடை

அவருடைய சிந்தனைத் திறத்தின் சிறப்பு (அ) அறிவிற்கு அவர் கொடுத்த புதிய விளக்கத்திலும் (மனிதனே! உன்னை நீ அறிவாயாக!), (ஆ) அவ்விளக்கத்திற்குப் பகுப்புவழி ஆராய்ச்சி முறை (Deductive Method) யைப் பின்பற்றியதிலும், (இ) மனிதனை மனிதனுடைய வாழ்க்கையை மையமாகக் கொண்டு தத்துவ ஆராய்ச்சி செய்ததிலுமே அமைத்துள்ளதைச் காணுகின்றோம். திருவள்ளுவரின் திருக்குறளும் மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டது. என்பதை யாவரும் அறிவர். அவருடைய மாணவ பரம்பரையின் மதினுட்பமும் ஆராய்ச்சித் திறனும், பரந்துபட்ட புலமையும் சேர்ந்து, பிற்காலத்தில் அவரை 'வியத்தகு பேரறிஞராக உலகிற்கு அறிமுகப்படுத்தும் பணியைச் செய்துள்ளன.

பலவகையில் சாக்ரடிசின் சிந்தனைப் போக்குடையவராகவும், சிலதுறைகளில் அவரைவிட சிறப்புமிகு சிந்தனையாளராகவும், முற்போக்குக் கொள்கையாளராகவும்,

புத்துலகச் சிற்பியாகவும் விளங்கும் திருவள்ளுவரை, 'உலகப் பெருஞ் சிந்தனையாளராக'ப் பண்டைக் காலத்திலேயே தமிழ்மக்கள் அறிமுகப்படுத்தாமல் போனது, தமிழரின் தவக்குறைவே யாகும். முதன்முதல் அறிவுலகத்தின் உயிர்த் தியாகியாக (Apostle of Wisdom) சாக்ரடிசு உயிர் நீத்தது, காலந்தோறும் தோன்றிய சிந்தனையாளர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்தது; உருக்கியது என்பதையும் நாம் மறத்தலாகாது.

> மற்றும் திருவள்ளுவருக்குக் கிடைத்த மாணாக்கர்கள்,
>
> அரசியல் சிந்தனையாளர்கள் அல்லர்; சமுதாயச் சிந்தனையாளர்களும் அல்லர். அவர்கள் இலக்கியச் சிந்தனையாளர்கள்; சமய சிந்தனையாளர்கள் என்றே அமைந்துவிட்டார்கள்[6]

என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறுவது முற்றிலும் உண்மை. இதனால், திருவள்ளுவருடைய புகழ் குன்றின் மேலிட்ட விளக்காகவும், அவருடைய சிந்தனை அனைத்துலகத்திற்கும் வழிகாட்டும் ஒளி விளக்காகவும் பொன்றாப் புகழ் பெற இயலாமற் போயிற்று!.

குறிப்பு

கிரேக்க சிந்தனையாளரான சாக்ரடிசின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அறிவதற்கு உதவிய நூல்கள்:

(1) Great Dialogues o Plaot
Tr. W. H. D , ouse, Mentor Book, New york, 1956.

(2) Plato's Republic
(Ed.) 1. A. Richards, Cambridge University Press, Cambridge, 1966

---

6 நமது நிலையில் சமயமும் சமுதாயமும், பக். 67.

(3) Aristotle's Ethics

(Ed.) John Warrington,

Every man's Library, London, 1970

(4) Socrates

E. Zeller (German)

Eng. Tr. Oswald J. Raichel

Longmans Green, London, 1885.

(5) The Philosophy of Socrates,

Noeman Gulley,

Macmillan, Newyork, 1968,

(6) Socrates

W. K. B. Guthrie,

Cambridge University Press, Cambridge, 19.71

திருவள்ளுவரும் சர்வஞ்ஞரும்

நாட்டின் சிறப்பு

விண்ணைத் தீண்டித் தழுவும் நீல மலைகள், வற்றாது வளம் கொழிக்கும் பேராறுகள்; அரிய பல கனிப்பொருள்களைக் கொண்ட பரத்த நிலப்பரப்பு: நீண்ட நெடும் கடற்கரை போன்றவை மட்டும் ஒரு நாட்டின் சிறப்பிற்குக் காரணமாகா. ஒரு நாட்டின் பெருமை, வெறும் நீர் வளத்திலும் நிலவளத்திலும் மட்டும் அடங்கிவிடவில்லை. இவற்றிற்கு மேலாகக் குடிவளம் இன்றியமையாது தேவைப்படுகிறது. மனவளம் வாய்ந்த குடிமக்கள் ஒரு நாட்டின் பெருமைக்கும் சிறுமைக்கும் மூல காரணமாக அமைகின்றனர். அவர்களுடைய அறிவும், உழைப்பும், ஊக்கமும், ஆற்றலுமே அந்நாட்டை, நாகரிகப் பண்பாட்டில் உயர்ந்தும், சிறந்தும் விளங்கச் செய்கின்றன. அவர்களிடையே மக்களினத்திற்கு வழிகாட்டும் பேரறிஞர்கள், சான்றோர்கள், ஞானிகள் தோன்றுகின்றனர்.

நீர் வளத்தாலும் நிலவளத்தாலும் சிறப்புற்றிலங்கும் தமிழ கத்தையும், கருநாடகத்தையும் வாழ்விக்க வந்த அறவோர் களே திருவள்ளுவரும் சர்வஞ்ஞருமாவர், அவர்கள் இருவரும் தென்னாட்டில் தோன்றியவர்கள்; எங்கோ பிறந்தவர்கள்; யாருக்கோ பிறந்தவர்கள்; எங்கோ வளர்த்தவர்கள், அவர் களுடைய வரலாற்றை அறிய இயலவில்லை. "ஊருமிலார் பேரு மீலா உற்றார் பெற்றாருடனே யாருமிலார்" என்று நாம் சொல்லத்தக்க வகையில் அவர்கள் வாழ்ந்து, மறைந்தனர்.

ஆனால், சின்னாள் பல்பிணி சிற்றறிவினோ'னாகிய மனிதன் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு, வழிகாட்டும் அருள் உணர்வால் என்றும், எங்கும், யாருக்கும் பயன்படத்தக்க அறவுரைகளை மக்கள் பேசும் மொழியிலே அவர்கள் படைத்து அளித்துள்ளனர்.

வரலாறு

திருவள்ளுவர் ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவராவர், சர்வஞ்ஞரோ, நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் விசய நகரப் பேரரசின் காலத்தில் வாழ்ந்தவராவர். திருவள்ளுவரின் இயற்பெயரை நாம் அறிய இயலவில்லை. இதைப்போன்றே, சர்வஞ்ஞரின் இயற்பெயரையும் உலகம் அறிந்து போற்ற இயலவில்லை. எங்கும் பரவிய நிலையில், எல்லாமாய் விளங்கும் இயல்பும், படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல், அழித்தல் எனும் ஐந்தொழிலையும் செய்யும் பேராற்றல் வாய்ந்தவன் இறைவன் ஒருவனேயாவான். தம்முடைய திரிபதியம் ஒவ்வொன்றின் ஈற்றிலும் இறைவனைச் ' சர்வஞ்ஞா ? ஏ சர்வஞ்ஞா? ' என விளித்துக் கன்னடமொழியில் பாடியுள்ள அருளாளரைக் கன்னட மக்கள் 'சர்வஞ்ஞர்' எனும் காரணப்பெயரால் சுட்டி வருகின்றனர். எனவே, இவ்வகையில் நம்முடைய பாம்பாட்டிச் சித்தரையும், அகப்பேய்ச் சித்தரையும் அச்சான்றோர் பெரிதும் ஒத்துள்ளார்.

பாவும் பாவலரும்

தம்முடைய நற்செய்தியை மனிதகுலத்திற்கு வழங்கத் திருவள்ளுவர் தேர்ந்தெடுத்துக் கொண்டது வடிவால் மிகவும் சிறிய, ஈரடியால் அமைந்த குறள் வெண்பாவாகும். இதைப் போன்றே, சர்வஞ்ஞரும் கன்னடமொழிப் பாவகையில் மிகவும் சிறிய வடிவினதான 'மூன்றடிப் பாட்டாகிய, திரிபதியத்தைச் (திரிபாதம்), சிறப்புமிகு கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்.

திருவள்ளுவர், 'வாமனனாய் வந்து, திரிவிக்கிரமனாய் வளர்ந்து மூவுலகையும் தம் ஈரடியால் அளந்த திருமாலைப் போன்று', ஈரடிக் குறள் வெண்பாவால், உலகத்தார் உள்ளக் கருத்து அனைத்தையும் அளந்தார் எனப் போற்றுவது மரபு

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தனந்தான் – வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவஎல்லாம் அளந்தார் ஓர்ந்து

என்னும் திருவள்ளுவ மாலைப் பாடல் (6) இதற்குச் சிறந்ததொரு சான்றாகும். மூவடியால் (திரிபதியம்)உலகத்தில் வாழ்வோரின் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் எடுத்தியம்பும் சர்வஞ்ஞரைத் திரிபதிய விக்கிரமன் எனப் போற்றுவது கன்னடப் புலவர்களின் வழக்கமாகும்.

காலச்சூழல்

திருவள்ளுவரும் சர்வஞ்ஞரும் ஏறக்குறைய ஒரே வகையான சூழ்நிலைகள் அமைந்துஇருந்த காலத்தில் வாழ்ந்தனர். இவர்கள் வாழ்ந்த காலத்தை நிலைமாறுபட்டுக் காலம் (Transi– tional period) எனலாம். பௌத்த, சமண, வைதிக சமயத் தவரின் தாக்கத்தால், தமிழருடைய சிந்தனையிலும் வாழ்க்கை முறையிலும்பல மாற்றங்கள் உண்டாகத் தொடங்கிய காலம் திருவள்ளுவர் வாழ்ந்த காலமாகும். யவனரோடு கொண்ட வாணிகத் தொடர்பால், ஓரளவிற்கு ஸ்டாயிக் (Stoicism)கு மெய்யுணர்வுக் கோட்பாடும், கிரேக்கரின் மெய்யுணர்வுக் கோட்பாடுகளின் சிறப்புமிகு பகுதிகளும் தமிழருடைய உள்ளத்தைக் கவரும் ஆற்றல் உடையனவாக இருந்தன. இதனால், தமிழரின் சிந்தனையில் – எண்ணப்போக்கில் பழமைக்கும் புதுமைக்கும் இடையே மோதல்கள் உண்டாயின; போராட்ட உணர்வு தலையெடுக்கலாயிற்று. இந்நிலையில், வேற்றுமைக்கு இடையே ஒற்றுமையைக் கண்டு, மக்களை மக்களாக

வாழுமாறு செய்வதற்கு உதவும் கொள்கைகளைப் பழைய சிந்தனையிலும், புதிய எண்ணங்களிலும் தேடிப்பார்த்து, அவற்றை ஒன்றாக இணைத்து, அவற்றிற்குப் புதியதொரு வடிவத்தை வள்ளுவர் கொடுத்தார். அதுதான் 'வள்ளுவம்' எனும் வாழ்க்கை நெறியாகும்.

இதைப்போன்றே, இறுகிப்போன சமுதாய அமைப்பு உடையதாகவும், சமய உண்மைகளை மறந்து சமயச்சடங்கு களுக்கே பெரிதும் முக்கியத்துவம் கொடுப்பதாகவும் இடைக் கால கன்னட சமுதாயம் மாறிவிட்டிருந்தது. இந்நிலையில், இசுலாமிய சமயத்தின் ஊடுருவல் இந்தியச் சிந்தனையில் ஒரு புதிய எழுச்சியை உண்டாக்கியது; சமுதாய அமைப்பில் ஒரு வகை நெகிழ்ச்சியைத் தோற்றுவித்தது; சாதி வேறுபாடற்ற சகோதரத் தன்மையையும், 'ஒன்று பரம்பொருள்' எனும் நம்பிக்கையையும் ஊட்டியது. இதனால், இந்திய மக்களின் உள்ளத்தில், நெடுங்காலமாகத் தாங்கள் போற்றி வந்த சமய, சமுதாயப் பயன் மதிப்புகளிடத்து ஒரு வகை வெறுப்பும், அரு வருப்பும், நம்பிக்கை இன்மையும் உண்டாயிற்று. இத்தகைய சூழ்நிலையில், இந்து தருமத்தைப் போற்றிக் காக்க –அதற்குப் புதுவாழ்வு அளிக்க விசயநகரப் பேரரசு நிறுவப்பெற்றது.

சிந்தனையாளர்கள் பழைமையில் சிறப்புமிக்கவற்றைப் போற்றிக்காக்கவும், தேவையற்ற தீய இயல்புகளைப் புறக்கணிக்கவும் முன்வந்தனர். இதனால், விழுமிய பயன்மதிப்புகளை அக்காலச் சூழலுக்கேற்ற வகையில் விளக்கியும், வாழ்க்கையோடு பொருத்திக்காட்டியும், மக்களுக்கு அவற்றிடையே உள்ள நம்பிக்கை குறைந்து போகாமல் காக்கவும்அவர்கள்முயன்றனர்.இத்தகையசூழலில், சர்வஞ்ஞர் புதிய இந்து சமுதாயத்தை உருவாக்குவதற்குரிய வழிவகைகளை வகுத்து அளித்தார்.

சிறப்புமிகு கொள்கை

ஊரெல்லாம் உறவினர்!
சேரியெல்லாம் நண்பர்!

உலகமே குலதெய்வம்!

நான் யாரை விட முடியும் ? (திரிபதி. 1565)

என்பது சர்வஞ்ஞரின் சித்தாந்தம். இத்திரிபதியம், அவருடைய அனைத்துலகக் கோட்பாட்டையும், உலக சகோதரத் துவத்தையும் உரத்த குரலில் முழங்குகிறது. இதில் கணியன்பூங்குன்றனாரின் 'யாதும்ஊரே!யாவரும்கேளிர்!' எனும் அனைத்துலக, மனிதகுல, ஆன்மநேய ஒருமைப்பாட்டின் எதிரொலியைத் தமிழர்களாகிய நாம் கேட்கின்றோம்; மற்றும், திருமூலரின் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் திருமந்திரத்தின் பொருளைக் கண்டு மகிழ்கிறோம்.

சர்வஞ்ஞரின் திரிபதியத்தைப் புனித வசனங்கள் எனப் போற்றுவர். "அவை வெறும் நீதியுணர்த்தும் கவிதையல்ல! உண்மையான வாழ்க்கைக் காவியம் மக்கள் குரல்! அவற்றில் வாழ்வின் உண்மை தெளிவாகவும் சுவையாகவும் பொங்கி வழிகிறது!" இவருடைய சில பாடல்களில், உமர்கயாமினுடைய வாழ்க்கை; தத்துவத்தைப் பெரிதும் ஒத்துவரும் எழுச்சிமிகு எண்ண அலைகள் மோதுகின்றன.

நல்ல மனையுண்டு !

வாழ்விற்குப் பொருள் உண்டு !

உளமறிந்து ஒழுகும் மனைவியும் உண்டு !

இனி சுவர்க்கம் எதற்கு?

சுவர்க்கத்தைத் தீயிட்டுப் பொசுக்குவோம் வாரீர்! (திரிபதி. 1711)

எனும் பாடல் சர்வஞ்ஞரின் மனப்போக்கை நன்கு வெளிப்படுத்துகிறது.

"ஆண்கள் வெண்ணெய் போன்றவர்கள்; பெண்கள் தீயினைப் போன்றவர்கள். பெண்களிடையே ஆண்கள் பழக நேர்ந்தால் எளிதில் உள்ளவுரம் குன்றி, உணர்ச்சி வயப்பட்டு எளிதில் தவறுசெய்வர்" என்பது பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனாரின் கருத்தாகும். இக்கருத்தின் மூலத்தைச் சர்வஞ்ஞரின் திரிபதியம் ஒன்றில் காணுகின்றோம்.

தீயிடையே வெண்ணெய்யை வைத்தால், அது
உருகாமல் இருக்க இயலுமா ? இதைப் போன்றே,
பெண்களின் நட்புறவுக்கு இடையே வாழும் யோகி,
மனத்தின் நடுநிலைமையைப் போற்றிக்காக்க இயலாது (திரிபதி. 534)

எனும் பாடல் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

வேடதாரிகள்

பொருளற்ற சடங்கு நெறியை வள்ளுவரும் சர்வஞ்ஞரும் மிக வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

தம்மனத்தினிடத்துக்குற்றம் இருக்கவும், தவத்தால் மாட்சிமைப் பட்டவர்போல் பலமுறை குளிர்ந்த நீரில் மூழ்கி, அதன்மூலம் தங்கள் குற்றங்களை மறைத்து வாழும் மக்கள் பலராவர்.

உலகத்தோர், தவநெறியில் வாழ்வோருக்கு ஆகாது என்று வெறுத்து ஒதுக்கிய செயல்களை விட்டுவிட்டாலே போதும்; தலைமயிரை மழித்து மொட்டை அடித்துக் கொள்ளுவதோ, சடைமுடி வளர்த்துக் கொள்ளுவதோ தேவை இல்லை.

என்பது வள்ளுவர் அறிவுறுத்தும் அறநெறியாகும்.

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர் (278)
மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்தது ஒழித்து விடின் (280)

என்பது வள்ளுவர் வாய்மொழி.

ஏறக்குறைய இதே வகையான கருத்தினை,
மெய்ப்பொருளை உணர்ந்தோர்க்கு அன்றாட வழிபாட்டால்
பல்வேறு சடங்குகளால் என்ன பயன்?
மழித்த தலையினாலோ சடைமுடி யுடைய
தலையினாலோ என்ன பயன்? (திரிபதி.292)

என்று சர்வஞ்ஞர் அறிவிக்கின்றார்

"ஒழுக்கமே உயிரினும் சிறந்தது; உயர்ந்தது" எனும் கருத்தை வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். ஒழுக்கம் கெட்டவன் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அவன் இழிந்தவனாகக் கருதப்படுவான்.

மறப்பினும் ஒத்துக் கொளலாகும்; பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கம் குன்றக்கெடும் (134)

என்னும் திருக்குறள், நாள்தோறும் வேதம் ஓதுவதைப் பார்ப்பான் மறந்தாலும் மறக்கலாம். ஆனால் ஒழுக்கத்தோடு வாழ்வதை அவன் மறந்தால், 'பிறப்பால் தான் உயர்ந்தவன்' என்று அவன் கொண்டாடும் சிறப்புரிமை அழிந்துபோகும் என்பதைத் தெரிவிக்கிறது.

சர்வஞ்ஞர் இதே தொனியில், மக்களைச் சிந்திக்குமாறு வேண்டுகின்றார்

(புனித) நீரில் மூழ்கி, நாளும் குளிப்பதனால் பிராமணன் சுவர்க்கத்தை அடைகிறான் என்பது உண்மையா? இது உண்மையானால், என்றும் அப்புனித நீரில் வாழும் தவளைகளும் சுவர்க்கத்தை அடையாமல் போகுமா ? (திரிபதி. 921)

சாதி வேறுபாடற்ற சமுதாயம்

'மக்களாகப் பிறந்தவர் இடையே பிறப்பை அடிப்படை யாகக் கொண்டு உயர்வு தாழ்வு கற்பிப்பது அறியாமையால் செய்யப்படும் செயலாகும். ஒருவன் செய்யும் தொழிலினைக் கொண்டு அவனை, உயர்ந்தவன் என்றோ, சிறந்தவன் என்றோ போற்றுவது அறிவுடைமை யாகாது' என்பது திருவள்ளுவரின் துணிவாகும். 'பிறப்பால் மேல் சாதிக்காரார் எனத் தங்களை உயர்வாகக் கருதிக்கொள்ளுபவர் உண்மையில் உயர்ந்த சாதிக்காரர் ஆகார். இதைப்போன்ற, 'பிறப்பால் கீழ்சாதியினராக, மேல்சாதிக்காரரால் இழித்துரைக்கப் படுவோர், உண்மையில்

கீழ்சாதிக்காரரும் அல்லர். இறைவன் படைப்பில் எல்லோரும் சமமானவர்' எனும் கருத்துடையவர் திருவள்ளுவர்.

பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (672)

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர் (673)

என்னும் குறட்பாக்களால் இவற்றைத் தெளியலாம்.

நாம் எல்லாரும் ஒரே பூமியில் நடக்கின்றோம்!
ஒரே தண்ணீரைத்தான் குடிக்கின்றோம்!
இறந்துபட்டால் ஒரே தீயால்தான்
எரித்துச் சாம்பலாக்கப் படுகின்றோம்!
இந்நிலையில் சாதி வேற்றுமைக்கோ,
உயர்ந்த குலம், தாழ்ந்த குலம்
எனும் வேற்றுமைக்கோ இடம் ஏது? (திரிபதி.972)

என்பது சர்வஞ்ஞரின் வினாவாகும். மேற்கண்ட பாடல்களிலிருந்து, திருவள்ளுவரும் சர்வஞ்ஞரும் "பிறப்பால் உயர்வு தாழ்வு கிடையாது; சாதி வேற்றுமை பாராட்டுவது அறியாமை; 'ஒழுக்கமே உயர்வுதரும்' " என்பதை அழுத்தம் திருத்தமாக அறிவுறுத்துவதையும், 'பொருளற்ற சடங்குகளால் மனிதன் விண்ணுலகை அடைவான்' என நம்புவது பகற்கனவு எனத் தெளிவுறுத்துவதையும் நாம் எளிதில் உணரலாம்.

ஊழ்வினை ஆற்றல்மிக்கது

ஊழ்வினையைப்பற்றி இவ்விருவரும் ஒரே வகையான கருத்துடையவராகக் காணப்படுகின்றனர்.

ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும் (380)

என்பது வள்ளுவர் வாக்கு.

கருமத்தை–விதியை எதிர்த்து யாரால்
நிற்க இயலும்? (திரிபதி .251)

என்பது சர்வஞ்ஞரின் வினா.

உணவு அளிப்பதே உயர்ந்த அறம்

"தமக்குக் கிடைத்த உணவை, பசித்தவுயிர்களுக்குப் பகுத்துக் கொடுத்து உண்டு, பலவகையான உயிர்களையும் போற்றிக் காத்தல் அறநூல்களில் சிறப்பாகப் போற்றப்படும் தலைசிறந்த அறமாகும்" என்பதைப்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாம் தலை (322)

என்று வள்ளுவர் அறிவிக்கிறார்.

அன்னதானமே தலைசிறந்த அறம்!
ஏனெனில் உணவே உயிரை உடலில் பொருந்தி
இருக்குமாறு செய்கிறது! (திரிபதி. 711)

என்பது சர்வஞ்ஞரின் முதுமொழியாகும்.

அருள் நெறி

உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும், தம்முயிர் போல எண்ணிப் போற்றி வாழவேண்டும் என்பதை இவ்வருளாளர் இருவரும் பலவகையாக எடுத்துரைத்துள்ளனர். 'இன்னாசெய்யாமை' (அதி.32), 'கொல்லாமை' (அதி.33), 'புலால் மறுத்தல்' (அதி.26), 'அருளுடைமை' (அதி. 25) எனும் நான்கு அதிகாரங்களில், திருவள்ளுவர் அருளறத்தை விரித்துரைத்துள்ளார்.

அறிவினான் ஆகுவது உண்டோ? பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை. (315)

தன்உயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்உயிர்க்கு இன்னா செயல்? (317)

என்னும் குறட்பாக்கள் அருளற நெறியை உணர்த்தும் தலை சிறந்த குறட்பாக்களாகும்.

எப்பொழுதும் தன்னையே நினைப்பவன்
தன்னலத்தையே பேணுபவனாவான்;
எத்தகைய பற்றும் பாசமுமில்லாப்
பதராக உலகில் அவன் வாழ்வான்! (திரிபதி. 392)
உத்தமனாய் எவ்வுயிரும் தம்முயிர்போல்
எண்ணி யுள்ளே ஒத்துரிமை
உடையவனாய் வாழ்பவன் உலகமெலாம்
தானாகி நிற்பான். (திரிபதி.570)

என்பது சர்வஞ்ஞரின் கருத்தாகும்.

வாய்மையே சிறந்த அறம்

திருவள்ளுவர் 'வாய்மையை'த் தலை சிறந்த அறமாகப் போற்றுகிறார். 'யாம் உண்மையான அறங்களாகக் கண்டவற்றுள் எவ்வகையிலும் வாய்மையைப் போலச் சிறந்த அறங்கள் இல்லை' என்பர்.

யாமெய்யாக் கண்டவற்றுல் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற! (300)

என்பது வள்ளுவர் வாய்மொழி. இதே கருத்தை,

ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று (323)

எனும் குறட்பாவாலும் வள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

இத்தகைய எண்ணப்போக்கு சர்வஞ்ஞரிடமும் காணம் படுகிறது.

சத்தியத்திற்கு யாதும் சமமாகாது! பொய்யோ
நிலைத்து நிற்காது அழிந்துவிடும்.! தாயைப்போன்ற
அன்புடையோர் உலகில் யாருமில்லை! மனிதரில்
அழியாதவர் யாருமிலர்! (திரிபதி.504)

என்னும் திரிபதியம், 'வாய்மைக்கு ஒப்பான அறம் உலகில் வேறில்லை' என்பதை உணர்த்துகிறது.

உழவுத் தொழிலின் முதன்மை

இந்திய நாடு, பன்னெடுங்காலமாக விவசாயத்தையே நம்பி வாழ்ந்துவரும் நாடாகும். எனவே, திருவள்ளுவரும் சர்வஞ்ஞரும் உழவுத்தொழிலை வானளாவப் புகழ்ந்து போற்றுவதில் வியப்பு இல்லை!

திருக்குறளில் 'உழவு' எனும் அதிகாரம் (104), உழவின் சிறப்பினை. உழவு செய்ய வேண்டிய முறையினை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை . (1031)

என்பது தமிழ் மறை.

கோடிக்கணக்கான தொழில்கள் உண்டு இவ்வுலகில்!
அவற்றுள் உழவுத்தொழிலே உயர்ந்ததாகும்.
நாடுநலமுற்று உயர்வது எத்தொழிலால்?
நானிலம் போற்றும் உழவுத்தொழிலால்! (திரிபதி.747)

என்பது சர்வஞ்ஞரின் சீரிய கருத்தாகும்.

இவ்வாறு அறம்பாடும் அறவோராக இவ்விரு ஞானிகளும் காட்சி தருகின்றனர். எனினும், இவர்களிடையே ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. சர்வஞ்ஞரின் நெறி யோக நெறி! குறிப்பிட்ட ஒரு தெய்வத்தைச் சிறப்பிக்கும் தெய்வநெறி! அத்துவித வேதாந்தத்தில் ஐக்கியமாகும் அனுபூதி நெறி!

திருவள்ளுவரின் நெறி அறவழிப்பட்ட அன்பு நெறி! சித்தாந்த செந்நெறிகளுக்கு வித்திட்ட உண்மை நெறி! வாழ்க்கை மறுப்பினை உடன்படாதத் தொண்டு நெறி ! அடிசேர் ஞானத்தை அறிவுறுத்தும் அரிய நெறி ! தமிழன் கண்ட தனி நெறி! தமிழ்ப்பண்பாட்டை உலகிற்கு உணர்த்தும் புதுமை நெறி!

தால்ஸ்தாய் கண்ட திருவள்ளுவர்

தால்ஸ்தாயின் மாட்சி

உலகம் போற்றும் பேரறிஞன் தால்ஸ்தாய்! 'நாவல்' உலகில் புதியதொரு திருப்பு மையத்தை உண்டாக்கிப் பொன்றாப் புகழ்பெற்ற புதுமைப் படைப்பாளன் தால்ஸ்தாய் ! அறம் பாடிய அறவோன் தால்ஸ்தாய்! ஆன்மிகப் பயன்மதிப்புகளுக்குப் புத்தொளி ஊட்டிய அருளாளன் தால்ஸ்தாய் ! 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணியுள்ளே ஒத்துரிமை உடையவராய்' மனித குலத்திற்குத் தொண்டாற்ற வந்தத் திருத்தொண்டன் தால்ஸ்தாய்! சமுதாயச் சிந்தனையொடு மெய்யுணர்வு ஒளிபெற்று, 'மக்கள் தொண்டே மகேசுவரன் தொண்டு' எனும் முழக்கத்தை முதன் முதல் ருஷியாவில் ஒலித்த பேரருளாளன் தால்ஸ்தாய்!

அன்பும் அறமும் அணியெனப் பூண்டு, எளிமையும் ஏழ்மையும் இயல்பெனக் கொண்டு, ஈரமும் தீரமும் இரு விழிகளாகக் கொண்டு உள்ளத்தில் உண்மை ஒளிபெற்ற உத்தமராய், ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராய், மனித இனத்திற்குப் புதுவழிகாட்ட முயன்ற புத்துலகச் சிற்பியாய் வான்புகழ் கொண்டார் தால்ஸ்தாய்.

புத்துலகச் சிந்தனையில், கடந்த நூற்றாண்டில் புதியதொரு துடிப்பைத் தோற்றுவித்து, மனித நலக் கோட்பாட்டிற்கு வலிவும் பொலிவும் அளித்த உலகச் சிந்தனையாளருள் தால்ஸ்தாயும்

ஒருவராவார். அவர் ஒரு போர்வீரர்; எழுத்தாளர்; நிலக்கிழார்; பண்ணையாள்; தொழிலாளரின் தோழர்; மெய்ப் பொருள் கண்ட மெய்ஞ்ஞானி; போரே மூளாத உலகை உருவாக்க, திட்டம் வகுத்துக் கொடுத்த பேரறிஞர்; 'மனிதம்' எனும் மலர், ஆதிக்க வாதிகளின் கால்களினால் மிதியுண்டு, சிதைந்து, சீரழிந்து போகாமல் தடுக்க – காக்க– பேனா மன்னர்களை விழித்தெழுமாறு வீறுகொண்டு எழுமாறு வீர முழக்கம் செய்த மாவீரன் தால்ஸ்தாய்!

அவருடைய புதினங்கள் எழுச்சி மிகு வண்ணங்கள்! குமுறிவெடிக்கும் எரிமலைகள்! உள்ளதை உள்ளவாறு படம்பிடித்துத் காட்டும் நடைச் சித்திரங்கள்! அவருடைய சமுதாயச் சிந்தனைகள், மனித உள்ளங்களில் ஆழப் பதிந்து, உலகின் பல்வேறு பகுதிகளில் சமுதாயப் புரட்சிகளுக்கும் சீர்திருத்தங்களுக்கும் உந்துதல் சக்தியாய் அமைந்துள்ளன.

புதினப் படைப்பாளர்

இத்தகைய பேரறிஞர், ருஷியாவில் கி. பி. 1825.ல் உண்டான திசம்பர் புரட்சிக்குப் பின்னர், மூன்றாண்டுகள் கழித்துத் தோன்றினார்; 1917–இல் உண்டான மாபெரும் ருஷியப் புரட்சிக்கு ஏழாண்டுகளுக்கு முன்னரே இவ்வுலகைவிட்டு மறைந்தார். அவர் வாழ்ந்த எண்பத்திரண்டு ஆண்டுகளில், ஆற்றியுள்ள அரும்பணி பலதிறப்பட்டன. போர் வீரராகப் பணியாற்றத் தொடங்கிய காலமுதலே, அவர் எழுத்தாளராக விளங்கத் தொடங்கினார். அவருடைய 'போரும் அமைதியும்' எனும் 'நாவல்' இன்றுவரை உலகம் கண்டிராத மாபெரும் 'வசனகாவியம்'; 'அன்னாகரினீனா' உள்ளத்து உணர்வுகளை நுட்பமாக அலசிக் காட்டும் கருகிய காதலின் – கறைபட்ட காதலின் – உயிரோவியம்.

சிறப்புமிகு சிந்தனையாளர்

தலைசிறந்த நாவலாசிரியராக விளங்கிய தால்ஸ்தாய்க்கு, 'சிறப்புமிகு எழுத்தாளர் எனும் பெருமை' அவருக்கு மன நிறைவை அளிக்கவில்லை. அவர் 'ஏழைப்பங்காளனாக' வாழ

விரும்பினார். அவருடைய பண்ணையில் வேலைசெய்த பண்ணையாட்களின் கொடிய வறுமையைப் போக்க, அவர் அரும்பாடுபட்டார். உழவர்களைப் போன்று அவர் எளிமையாக வாழ்ந்தார்; தம்முடைய சொத்தினையும் பண்ணையையும் அத்தொழிலாளர் அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். 'நிலவுடைமை தனியுடைமையாக இருக்கக்கூடாது ' என்னும் கருத்தினையும், 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' எனும் புதிய கொள்கையையும் தால்ஸ்தாய் கொண்டிருந்தார். சென்ற நூற்றாண்டின் கடைசிப் பகுதியில், 'உழவுத் தொழில் செய்யப்படும் நிலம் அனைத்தையும் நாட்டுடைமையாக – தேசியமயமாக ஆக்க வேண்டும்' எனும் ஆலோசனையை அரசிற்கு எடுத்துரைத்து, அதைச் செயல்படுத்துமாறு அவர் வற்புறுத்தினார்.

அறப்போருக்கு வழிவகுத்த சான்றோர்

மற்றும், 'வன்முறையில் புரட்சியை உண்டாக்கி நாட்டின் அரசியல், சமுதாய நிலைகளை மாற்ற முயல்வது அறிவுடைமை யாகாது; அன்பு நெறியில் – அகிம்சை வழியில், அறப்போர் – சத்தியாக்கிரகம் புரிந்து மாபெரும் வெற்றி பெற இயலும்' எனும் கொள்கையை, ருஷியாவில் 1905–ல் உண்டான புரட்சிக்கு முன்னரும் பின்னரும், சலிப்புறாமல் அவர் பரப்பி வந்தார். 'நான் அமைதியாக இருக்க இயலாது' எனும் ஆய்வுரையின் மூலம், இரத்தம் சிந்தும் கொடிய புரட்சியை அவர் எதிர்த்தார்.

அருள் நெறி

கி. பி. 1891 இல் தம்முடைய நம்பிக்கைகளை கொள்கைகளை –அவர் உலகிற்கு அறிவுறுத்தினார். அவை (1) தூய்மை யான வாழ்க்கை வாழ்வதே முதல் நோக்கமாகும், (2) உரிமைமிகு வாழ்க்கை வாழ்வது (அரசுக்கோ, அரசருக்கோ விசுவாசமாக இருப்பதாக உறுதிமொழி கூற மறுத்தல்), (3) தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவோ, பிறரைக்

காப்பாற்றவோ வன்முறையைப் பின்பற்றுவதில்லை; கொடிய விலங்குகளுக்கு எதிராகவும் வன்முறை பயன்படுத்தப்படுவது கூடாது, (4) பகைவருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்பனவாகும். இவையாவும் அருள்நெறிக் கொள்கைகளாகும். இக்கொள்கைகள்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்;
ஆகுல நீர பிற . (34)

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். (455)

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். (271)

அறிவினான் ஆகுவது உண்டோ? பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை! (315)

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். (316)

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்? (318)

அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல் (203)

என்னும் வள்ளுவரின் வாய்மொழிகளை நினைவூட்டு கின்றன. இவ்விழுமிய கொள்கைகளைப் பேரார்வத்தோடு, அவர் வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்தார்.

சிறப்புமிகு திருநூல்

தம்முடைய அகிம்சைக் கொள்கையைத் தெளிவாக எடுத்துரைக்கும் வகையில், தால்ஸ்தாய் "கடவுளின் திருநாடு உன் உள்ளத்திலேயே இருக்கிறது" (The Kingdom of God is within you) எனும் நூலை 1893இல் வெளியிட்டார். ருஷியாவில் இந்நூல் தடை செய்யப்பட்டது; அமெரிக்காவில்

ஆர்வத்தோடு வரவேற்கப்பட்டது. இந்நூலை, அறம்பாடும் அறநூலாகவும், சிறப்புமிகு சமுதாய வாழ்க்கைக்கு வழிகாட்டும் சமூக சீர்திருத்த நூலாகவும், ஆன்மிக அனுபவப் பேற்றை அளிக்கும் திருமறையாகவும் காந்தியடிகள் போன்ற உலகப் பெரியார்கள் போற்றியுள்ளனர். உலக சகோதரத்துவத்தையும், சமூக சேவையையும் இந்நூல் உணர்த்துவதைப் போல, உலகில் இதற்கு முன்னர் வேறு எந்த நூலும் உணர்த்தியதாகத் தெரியவில்லை.

மகாத்மாவின் குருநாதர்

தென்னாப்பிரிக்காவில் பணிபுரிந்து வந்த காந்தியடிகளின் உள்ளத்தை இந்த நூல் பெரிதும் கவர்ந்தது! 'கடவுளின் திருநாடு உன் உள்ளத்திலே இருக்கிறது' எனும் இந்நூலில், அகிம்சை நெறியின் தத்துவங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன; சத்தியாக்கிரகத்தின் – அறப்போரின் அடிப்படைக் கொள்கைகள் நன்கு தெளிவுறுத்தப்பட்டுள்ளன; 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும்' அருள் நெறியின் அருமை பெருமைகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

இந்நூலினுடைய கருத்துகளில் நம் அண்ணல் உள்ளத்தைப் பறிகொடுத்தார். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்து வெள்ளையரோடு போராடிய போராட்டங்களில் எல்லாம், தால்ஸ்தாயின் நெறி முறைகளைக் காந்தியடிகள் பரிசோதனை செய்து பார்த்தார்; வெற்றியும் பெற்றார். தால்ஸ்தாயின் நிலவுடைமைக் கொள்கை மோகனதாசரைப் பெரிதும் கவர்ந்தது! தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்காகப் போனிக்ஸ் எனும் இடத்தில், தாம் நிறுவிய பண்ணைக்குத், 'தால்ஸ்தாய் பண்ணை' என்று அவர் பெயரிட்டார். இதனோடு அமையாது. தம்முடைய சிந்தனைப் போக்கினை உருவாக்கியவர்களுள் தால்ஸ்தாய் முக்கிய இடம் பெறுவதாகப், பிற்காலத்தில் காந்தியடிகள் எழுதியும், பேசியும் வந்துள்ளார்.

இவை யாவற்றையும்விட, இந்தியாராகிய மகாத்மா அவர்கள், இந்திய நாட்டின் தென்கோடியில் உள்ள தமிழ்நாட்டில் தோன்றிய ஞானியாகிய திருவள்ளுவரைப் பற்றித் தெரிந்து கொண்டது தால்ஸ்தாயால்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.அவருடையகட்டுரைஒன்றின்ஆங்கில மொழிபெயர்ப்பு மூலம் திருவள்ளுவரைக் காந்தியடிகள் அறிந்துகொண்டார். அதன் பிறகே, திருக்குறளைப் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு (ஏரியல்) உதவியால் படித்து, அதன் சிறப்புமிகு தத்துவத்தை உணர்ந்து கொண்டதாக நம் தேசத் தந்தை குறிப்பிட்டுள்ளமை நம் உள்ளத்தைக் கவருவதாகும்.

> திருவள்ளுவர் ஒரு தமிழ்முனிவர், கிறித்தவ நூற்றாண்டு வரிசையில் முதல் நூற்றாண்டில் அவர் வாழ்ந்ததாகக் கூறுவர். புனிதமான பொய்யாமொழிகளைக் கொண்ட திருக்குறளை,அவர்நமக்குவழங்கியுள்ளார்.தங்களுடைய வேதமாகத் தமிழர்கள் இந்நூலைப் போற்றுகின்றனர்! 'மனித இனத்தின் சிந்தனையில் மலர்ந்த சிறப்புமிகு இலக்கியக் கருவூலம் திருக்குறள்' என்று ஏரியல் (Ariel) இதனைப் பாராட்டுகின்றார்

என்று மகாத்மா காந்தியடிகள், திருக்குறளைப் படித்து, போற்றுவதற்குத் தூண்டுதலாக அமைந்தது, தால்ஸ்தாயின் 'இந்து ஒருவருக்கு' எனும் கடிதமாகும்.

தால்ஸ்தாய் கண்ட திருவள்ளுவர்

கி. பி. 1906ல், தால்ஸ்தாய் 'இந்து ஒருவருக்கு எழுதப்படும் கடிதம்' என்பதை எழுதியுள்ளார்; அதில் "இந்துக்களின் குறள்" (The Hindu Kural) காட்டும் வாழ்க்கை நெறியை விளக்கியுள்ளார். அதில், பெரிதும் தம்முடைய உள்ளத்தைக் கவர்ந்த திருக்குறட்பாக்கள் சிலவற்றை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அவை 'இன்னாசெய்யாமை' (அதி.32) எனும் அதிகாரத்தில் உள்ளகுறட்பாக்கள்ஆகும்.ஆறுகுறட்பாக்களைக்குறிப்பிட்டு, அவர் விளக்கியுள்ளார். அவை பின்வருவனவாகும்.

பிறருக்குத் துன்பத்தைச் செய்வதால், பல்வேறு சிறப்பு களைத் தரும் செல்வத்தைப் பெற இயலும் என்றாலும், அத் தகைய துன்பத்தைச் செய்யாமல் இருப்பதே குற்றமற்ற பெரி யோர்கள் கொள்கை என்பதனை,

சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள் (311)

எனும் குறட்பா தெரிவிக்கிறது.

ஒருவன் ஒரு தீங்கும் செய்யாத பொழுது, அவனைப் பகைத்து அவனுக்குப் பெரும் தீமைகளைச் செய்தவர்க்கு, யாதாகிலும் கெடுதியை அவன் (அந்த ஒருவன்) செய்தால், அச்செயல், தப்ப முடியாத துன்பத்தை அவனுக்குத் தரும் என்பதைச்

செய்யாமல் செற்றார்க்கும் இன்னா செய்தபின்
உய்யா விழுமம் தரும் (313)

என்னும் குறட்பா அறிவிக்கிறது.

தம்மீது பகைமை கொண்டு ஒருவன் தமக்குத் துன்பம் பலவும் செய்த அந்த நேரத்திலும், அந்தந்தத் துன்பங்கட்கு எதிராக அவனுக்குத் தீங்கு செய்யாமல் இருத்தலே குற்றமற்ற பெரியோர்களது கொள்கையாகும்

என்னும் கருத்தினை விளக்குவது,

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள் (312)

எனும் குறட்பாவாகும்.

தனக்குத் தீங்கு செய்தவர்களைத் தண்டிப்பதற்குரிய சிறந்தவழி, தீங்கு செய்தவர்களே வெட்கப்படுமாறு அவர்களுக்கு நன்மை தரும் செயல்களைச் செய்து, அவர்கள் செய்த தீங்கினையும், தான் செய்த நன்மையினையும் மறந்து விடுவதேயாகும்

எனும் சிறப்புமிகு அறிவுரையை,

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (314)

எனும் குறட்பா தெரிவிக்கிறது. இக்குறட்பா இயேசு நாதரின் அறிவுரையை விட, உயர்ந்ததாகவும், உளவியல் நுட்பம் வாய்ந்ததாகவும் காணப்படுவதாகத் [தால்ஸ்தாய்] குறிப்பிட்டுள்ளார்.

மற்ற உயிருக்கு நேர்ந்த துன்பத்தைத் தமக்கு நேர்ந்த துன்பம் போல் எண்ணி, அந்த உயிரைக் காப்பாற்றாவிட்டால், ஒருவர் பெற்றுள்ள அறிவினால் உண்டாகக்கூடிய பயன் யாது? எனும் கருத்து,

அறிவினான் ஆகுவது உண்டோ? பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை. (315)

எனும் குறளில் வெளிப்படுகிறது. இக்கருத்து கிறித்தவ சமய "அருள் கொள்கை' (Doctrine of grace)யை உணர்த்துவாகத் தால்ஸ்தாய் கருதுகிறார்.

பிறருக்குத் துன்பம் தருவனவற்றை ஒருவர், ஒருநாளின் முற்பகலில் செய்வாரேயானால், அவருக்குத் துன்பம் தருவன அன்றைய பிற்பகலில், பிறர் செய்யாமல் தாமே அவரை வந்து அடையும் என்பதை,

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும் (319)

எனும் குறட்பா அறிவுறுத்துகிறது.

இந்த ஆறு குறட்பாக்களும் தால்ஸ்தாயின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன; அவருடைய 'அகிம்சை'க் கொள்கையை உருவாக்க உதவியுள்ளன; அறநெறியில் போராடுவதைப் பற்றிய அவருடைய சிந்தனைக்கு உரமாக அமைந்துள்ளன.

நாம் எல்லாம் திருக்குறளின் சிறப்பினை உணர்வதற்கு முன்பே, நாம் எல்லாம் திருவள்ளுவரின் அறநெறியைப்

புரிந்துகொண்டு வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயலுவதற்கு முன்பே ருஷிய நாட்டு ஞானியும், உலகப் பேரறிஞருமான தால்ஸ்தாய், "தமிழருடைய வேதமாகிய திருக்குறளை ", உலகப் பொதுமறையாகிய திருக்குறளைச் சிறப்புமிகு அறநூலாகப் போற்றிப் பின்பற்றியுள்ளமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

மறைமலையடிகள் கண்ட திருவள்ளுவர்

தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தனிப்பெருந் தமிழறிஞராக மறைமலையடிகள் விளங்குகிறார். அவருடைய ஆழ்ந்த தமிழ்ப்புலமையும், அகன்ற ஆங்கில அறிவும், பரந்த சமஸ்கிருத மொழிப்புலமையும் தமிழின் மறுமலர்ச்சிக்கும், தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கும் உந்துதல் சக்தியாக அமைந்தன. 'தமிழன்' எனும் அவருடைய எண்ணத்தின் எழுச்சியும், 'சைவன்' எனும் உணர்வினால் அவர் உள்ளத்தில் உண்டான மலர்ச்சியும் தமிழ் ஆராய்ச்சியுலகில் புதியதொரு திருப்பத்தை உண்டாக்கின. இதனால் பண்டைத்தமிழரின் பழம் பெருமையையும், தமிழ்ப்பண்பாட்டின் தொன்மைச் சிறப்பையும் உலகிற்கு உணர்த்தும் வகையில் அடிகளாரின் ஆராய்ச்சிப்பணி அமைந்ததைக் காணுகின்றோம்.

அடிகளின் ஈடுபாடு

அவருடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த தமிழ் இலக்கியங்கள் திருவாசகம், திருக்குறள், தொல்காப்பியம், திருக்கோவையார் என்பன. இவற்றுள் திருவாசகமும் திருக்குறளும் முதன்மையிடம் பெற்றுள்ளன. திருக்குறளின் கருத்துகளை வாய்ப்புக்கிடைக்கும் இடங்களில் எல்லாம் அவர்

எடுத்துரைத்துள்ளார். அவருடைய புதினங்களில் திருக்குறள் கருத்துகள் கதிர்மணிகளாக ஒளிவிடுகின்றன.

ஐம்பதுக்கு மேற்பட்ட ஆராய்ச்சி நூல்களை அடிகள் வரைந்துள்ளார். அவற்றுள் எல்லாம் திருக்குறள் பற்றிய ஆராய்ச்சிப் பகுதிகள், விளக்கங்கள், புத்துரைகள் இடம் பெற்றுள்ளன . 'திருக்குறள்" எனும் பெயரினைக் கொண்டு அவர் இரண்டு நூல்கள் இயற்றியுள்ளார். முதற்குறள் வாத நிராகரணம் என்பது முதல் நூலாகும். 'அகர முதல எழுத்தெல்லாம்' எனத் தொடங்கும் முதற்குறட்பாவிற்கு, அத்து விதத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட விளக்கத்தை மறுக்கும் நூல் இது. 'எழுத்துகள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன; அதைப்போல, உலகம் இறைவனை முதலாக உடைத்து' எனும் கருத்தினை விளக்குகின்ற நிலையில் முதலாக எனும் தொடர் மயக்கம் தருவதாக அமைந்துள்ளதை அடிகள் நன்கு தெளிவுறுத்தியுள்ளார்.'இறைவன் உலகம் உயிர்' எனும் முப்பொருள்களுள் இறைவன் முதன்மையானவன் என்பதை அவர் தக்க காரணங்கள் காட்டி நிறுவியுள்ளார். அடிகளின் மற்றொரு நூல் திருக்குறளாராய்ச்சி என்பதாகும். திருக்குறளைப் பற்றி அறிய விரும்புவோருக்கு இந்நூல் சிறந்ததோர் அறிமுக நூலாகப் பயன்படுவதாகும்.

தமிழக வரலாற்றின் கலங்கரை விளக்கம்

மறைமலையடிகளாரின் திருக்குறள் ஆராய்ச்சிப்பணியில் தன்னிகரற்று விளங்குவது திருவள்ளுவரின் காலத்தைக் கணித்து, தமிழருக்கென்று ஒரு சகாப்தத்தை (Era) வரையறுத்துத் தந்துள்ளமையாகும். இந்திய வரலாற்றில் எத்தனையோ சகாப்தங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால், தமிழருக்கென்று இது வரையில் சகாப்தம் கண்டவர் யாருமிலர். எனவே, அது ஒரு பெருங்குறையாகவே இருந்து வந்தது. அக்குறையைப் போக்குகின்ற வகையில், யுவ ஆண்டு தைத் திங்கள் ஐந்தாம் நாள் (18.1.1935) திருவள்ளுவர் திருநாள்

கழகத்தினர் நடத்திய திருவிழாவில் தலைமைப் பூண்டருளிய அடிகள், "கிறித்துப் பிறப்பதற்கு 30 ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிவாகும்[1] என்று அறிவித்துத், திருவள்ளுவர் நூற்றாண்டைத் தொடங்கி வைத்தார். வருங்காலத்தில் தமிழ் வரலாற்றையும் தமிழக வரலாற்றையும் ஆராய்வோருக்கு இத்திருவள்ளுவர் நூற்றாண்டு ஒரு கலங்கரை விளக்கமாக விளங்கும் என்பது உறுதி.

திருக்குறள் ஆராய்ச்சி

திருக்குறளை உலகிற்கு வழங்கிய தெய்வப்புலவர் திருவள்ளுவரின் பெயர்க் காரணம், திருக்குறளின் சிறப்பு, திருவள்ளுவரின் வரலாறு போன்ற பல செய்திகளை ஆய்ந்து உண்மையை நிலைநாட்டுவதில் ஆசிரியர் பேரீடுபாடு கொண்டிருந்தார். இதனால், பல சமயங்களில், 'திருவள்ளுவர் திருக்குறள் ', 'திருவள்ளுவர்' எனும் பொதுக் கட்டுரைகளை அடிகள் எழுதியுள்ளார்.[2]

இவை அல்லாமல் 'ஞானசாகரம்' எனும் திங்கள் இதழில் திருக்குறள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் சில வெளிவந்துள்ளன. அவை, இப்பொழுது திருக்குறளாராய்ச்சி

---

1 திருவள்ளுவர் நினைவுமலர், யுவ–தை (1935), பக். 117, திருவள்ளுவர் நூற்றாண்டைக் கிறித்தவ சகாப்தத்தோடு 31 (30+1) ஆண்டுகளைக் கூட்டிக் கணக்கிட வேண்டும் என்பது அடிகள் கருத்து.
எ–டு இப்பொழுது கி. பி. 1979 ஆம் ஆண்டு நடை பெறுகிறது. இதனுடன் 31 ஆண்டுகளைச் சேர்ப்போமானால், 2010 ஆம் ஆண்டு வரும். இது திருவள்ளுவர் பிறந்த ஆண்டாகும். இதையே திருவள்ளுவ நூற்றாண்டின் தொடக்கமாக அடிகள் அறிவித்துள்ளார்.

2 அறிவுரைக்கோவையில் (கழகம், சென்னை, 1971)' திருவள்ளுவர் திருக்குறள்' எனும் கட்டுரையும், உரைமணிக் கோவையில் 'திருவள்ளுவர்' எனும் கட்டுரையும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

எனும் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன.[3] இவையாவும் அடிகளின் திருக்குறள் புலமையையும், ஆராய்ச்சி நோக்கையும் நமக்கு அறிவிக்கின்றன.

'வள்ளுவர்' எனும் பெயர்க் காரணத்தை ஆராய்ந்த மறைமலையடிகள், "வள்ளுவர் என்று ஒரு மகன் பெயரிடப் படுதல் யாண்டும் வழக்கில் இருந்ததாகத் தெரியவில்லை! ஆயினும், தொன்மையாக அப்பெயர் இருந்து வருவது குறித்து அஃதே பெயராகக் கொள்ளல் அறிவுடைமையாகும்"[4] எனத் துணிந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்குறள் 'அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்' எனும் முப்பெரும் பிரிவுகளை உடையதாக அமைக்கப்பட்டிருப்பதைப் பற்றிப் பலர் ஆராய்ந்துள்ளனர். பொருளை அகம், புறம், எனப் பகுப்பது பண்டைத் தமிழர் மேற்கொண்ட முறை. ஆனால், திருவள்ளுவரோ இவ்வாறு பாகுபடுத்தவில்லை. இதனை "இவர் பொருட்பாகுபாட்டினை அறம் பொருளின்பமென வடநூல் வழக்குப்பற்றி யோதுதலான்" என்று பரிமேலழகர் குறிப்பிடுவார்.[5] ஆனால், அடிகளோ, "... என்று கூறுவது பொருந்தாது என மறுக்க. வடமொழியில் மனுமுதலான மிருதி நூல்கள் எல்லாம் பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சன்னியாசம் என்னும் நால்வகை நிலைபற்றி யோதியதல்லது அறம் பொருளின்ப வழக்குப்பற்றியோதாமையும் யாங் கூறியதே பொருள் என்பதை வலியுறுத்தம்"[6] என்று விளக்கியுள்ளார்.

மற்றும் 'இன்பமும் பொருளும் அறனும்' எனும் தொல் காப்பியர் வைப்பு முறைக்கு மாறாகத் திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம்' என்று தம் நூலினை அமைத்ததற்குரிய

---

3 திருக்குறள் ஆராய்ச்சி, பாரிநிலையம், 1957.

4 அறிவுரைக் கோவை,பக்.88.

5 திருக்குறள் பரிமேலழகரின் காமத்துப்பால் முகவுரை

6 திருக்கிறள் ஆராய்ச்சி,பக். 40–41

காரணங்களை, அடிகள் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். ''ஆசிரியர் திருவள்ளுவனார் அறம் பொருள் இன்பமென வைத்து நூல் செய்த முறை தமிழ்முறை யன்றாம்"[7] என்று அடிகள் அறிவிக்கின்றார். அதற்குரிய காரணத்தை, "திரு வள்ளுவனார், காலத்துத் தம்மோடுடனிருக்கும் மக்கள், பௌத்த சமண் மயக்குரையிற் சிக்கி அறத்திற்கே உயர்வு சொல்லுதல் கண்டு அவர் வழியே சென்று அவரைத் திருத்து வாராய், அறத்தை முன் வைத்து நூல் செய்வாராயினர் "[8] என்று விளக்கியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

தென்புலத்தார்

> இல்வாழ்க்கை எனும் அதிகாரத்தில் வரும்,
> தென்புலத்தார் தெய்வம் விருந்துஓக்கல் தானென்றாங்கு
> ஐம்புலத்து ஆறுஓம்பல் தலை. (43)

எனும் குறட்பாவிற்குப் பலர் பலவகையான விளக்கங்கள் கொடுத்துள்ளனர். சிறப்பாக, 'தென்புலத்தார் யார்?' என்பதில் பண்டை உரையாசிரியர்கள் இடையேயும் கருத்து வேற்றுமை உண்டு, மறைமலையடிகளார் இதைப்பற்றி நீடு நினைந்துள்ளார். பழைய ஆசிரியர்களுடைய கருத்துகளின் பொருத்தமின்மையைப் புலப்படுத்தி,

> தென்புலத்தில் மிக்க நாகரிகமுடையவராயிருந்து காலஞ்சென்ற தம்மூதாதையர் அனைவரையும் ஒருங்கு சேர்த்து நினைந்து, அவர்க்கு மேன்மேல் நலம் அருள்கவென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நன்றிக் கடன் செலுத்துவதே அம்மூதாதையர் வழிவந்த நமக்கு உரியதாம்[9]

எனத் தம் கருத்தினை நிறுவியுள்ளார்.

---

7 பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம் (கழகம், சென்னை. 1968), . பக்.71.

8 ஷ, பக்.73

9 உரைமணிக் கோவை பக். 60.

வாய்மையின் பயன்

வள்ளுவர் வாய்மைக்கு அளித்துள்ள விளக்கம் புதுமை யானது; போற்றத்தக்கது.

வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றும்

தீமை யிலாத சொலல் (291)

எனும் குறட்பாவிற்கு, அடிகள் நல்லதொரு விளக்கம் கொடுத்துள்ளார். இக்குறட்பாவில் 'பெரும்பான்மையோருக்குப் பெரும் பயன் அளிப்பதாக வாய்மை விளக்கப்பட்டுள்ளது' என்று அடிகள் குறிப்பிட்டுள்ளார். மற்றும் "என்று ஆசிரியர் வரையறுத்துக் கூறியது ஜான் ஸ்டூவர்ட்மில் (J. S. Mill) என் பாரின் பெரும்பயன் என்ற 'யுட்டிலிட்டேரியனிஸம்' (Utilitari anism) என்ற கொள்கைக்கு அரண் கோலுவது கண்டு விய வாதார் யார்?[10] என்று அவர் வினவுகிறார்.

அகர முதல எழுத்து

திருக்குறளின் முதற்பாவிற்கு மறைமலையடிகள், 'சிவஞானபோத ஆராய்ச்சி' எனும் நூலில் தந்துள்ள விளக்கம் சிறப்புமிக்கது.

> விந்து நாதங்கள் இவ்விரண்டனுள்ளும் விந்து முதலாய் நிற்றல் தெளித்தற் பொருட்டன்றே 'ஆசிரியர் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார், அகர முதல எழுத்தெல்லாம்' என்று ஓதுவாராயினதூஉ மென்க. ஈண்டு 'எழுத்தெல்லாம்' என்றது வரிவடிவு ஒலிவடிவில் நின்ற எல்லா எழுத்துக்களையும் அகப் படுத்துதற் பொருட்டு; 'அகரம்' என்றது புலப்பட்டும் புலப்படாதும் நின்ற அகரவொலியினையும் அகரவடி வினையும் உணர்த்துதற் பொருட்டுப் பொதுப்பட நின்றமையும் உய்த்துணரற் பாலதாம் என்க[11]

---

10 அறிவுரைக் கோவை, பக். 100.

11 சிவஞான போத ஆராய்ச்சி. (கழகம், சென்னை, 1971), பக். 141.

எனும் விளக்கம் அடிகளின் மதினுட்பத்தையும் ஆராய்ச்சித் திறனையும் வெளிப்படுத்துகிறது.

திருக்குறளே தலைசிறந்த பிரமாண நூல்

இறைவனின் இயல்புகளை விளக்குகின்ற இடத்து,

> பிரமம் உள் பொருளாய்க் குணமுடைத்தாதல் பற்றியன்றே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் 'எண்குணத்தான் தாளை வணங்காத் தலை' என்று அருளிச் செய்வாராயினர், திருக்குறளின் மேற்பட்ட பிரமாண நூல் உலகத்தின்மையின், இவ்வருமைத் திருவாக்கியவுரையோடு முரணி எவர், யாது கூறினும் அஃதெல்லாம் பிரமாணமாதல் இல்லையென் றொழிக![12]

எனத் திருக்குறளை ஒப்புயர்வற்ற பிரமாண நூலாக மறைமலை யடிகள் போற்றியுள்ளார்.

அடிகளின் திருக்குறள் ஆராய்ச்சித் திறனுக்கு, இவை போதிய சான்றுகளாகும். மக்களிடையே திருக்குறளைப்பற்றிய கருத்துகளைச் சொற்பொழிவுகளின் மூலமும், எழுத்துரை களின் மூலமும் பரப்பிக்கொண்டிருந்த காலத்தில் திருக்குறளைப்பற்றி அவர் செய்துள்ள நுட்பமான ஆராய்ச்சிகள் மிகப்பலவாகும். தமிழனுக்கு ஒரு சகாப்தத்தை – திருவள்ளுவர் நூற்றாண்டை அளித்தவர் அடிகள். திருவள்ளுவரின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் மறைமலையடிகளாரைப் போன்று நுட்பமாக அலசி, ஆராய்ந்தும் வடமொழி மிருதி நூல்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்தும் உண்மை நிலையைத் தெளிவுறுத்திய அறிஞர்கள் மிகச் சிலரேயாவர். அவர்களுக்கு எல்லாம் கிடைக் காதத் தனிச்சிறப்பு அடிகளை நாடி வந்துள்ளது. திருவள்ளுவரின் காலத்தைக் கண்டறிந்து, வரையறுத்து அறிவுறுத்திய பெருமை அடிகளுக்கேயுரியதாகும். இதனால் தமிழ் இலக்கிய வரலாற்றில் 'வள்ளுவரின் காலத்தைக் கண்ட பேரறிஞர்" எனும் சிறப்பு அடிகளுக்கு என்றும் நிலைத்து நிற்கும்.

---

12 சிவஞான போத ஆராய்ச்சி, (கழகம், சென்னை, 1971) பக் 13

தந்தை பெரியார் கண்ட திருவள்ளுவர்

தமிழ்நாடு இன்று மறுமலர்ச்சியுற்று வருகிறது. சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக மேற்கு நாட்டுக் கல்விமுறை, சிந்தனை, பண்பாடு முதலியன இந்நாட்டு மக்களிடையே புதியதொரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கியுள்ளன, அதன் விளைவாக. 'நாம் யார் ? நம்முடைய மரபுவழி யாது? இன்றையச் சூழலில் நம்முடைய நிலையாது? இந்த நிலையில் நாம் எல்லாம் அல்லற்படக் காரணம் யாது?" என்பனவற்றைப் பற்றி அறிஞர் பெருமக்கள் சிந்திக்கலாயினர். வடக்கே இராசாராம் மோகன்ராய் போன்ற பேரறிவாளர்கள் 'இப்புதிய சிந்தனையின் முன்னோடிகளாக விளங்குகின்றனர்.

ஐயாவின் அரும்பணி

நம் நாட்டில் தென்னாட்டில் – ஈரோட்டுப் பாசறையின் முதல்வராகத் தோன்றி, தன்மான இயக்கத்தின் தந்தையாய் மாபெரும் சமுதாய சீர்திருத்த இயக்கத்தின் தனிப்பெருந் தலைவராய், நடுங்கும் வயதிலும் நடுங்காத கொள்கைப் பிடிப்பு உடையவராய், சிந்தனைப் புரட்சியையும், சமுதாய மறுமலர்ச்சியையும் உண்டாக்க அரும்பாடுபட்டவர் நம் தந்தை ஈ.வெ. ராமசாமிப் பெரியார் ஆவார்.

மனிதனுடைய பகுத்தறிவை அளவுகோலாகக் கொண்டு, வாழ்க்கையின் பல்வேறு இயல்புகளையும், நிலைகளையும், அமைப்புகளையும், சூழல்களையும் சிக்கல்களையும் அலசி ஆராய்ந்து உண்மையைக் கண்டறியத் தூண்டிய பெருமை நம் ஐயாவிற்கேயுரியதாகும். தமிழ் இனத்தைப் பழமைப் பிடியிலிருந்து விடுவித்து, புதுமைப் புல்வெளியில் அறிவொளி எனும் மெல்லிய பூங்காற்றினை நுகர்ந்து, இன்பமுறச் செய்தவர் வைக்கம் வீரரேயாவார். அவருடைய பேச்சும் மூச்சும், சொல்லும் செயலும், அறிவும் ஆற்றலும் கடை நிலையில் உள்ள தமிழனும் தன்மானவுணர்வு பெற்று, பகுத்தறிவு சிந்தனையாளனாகத் தலைநிமிர்ந்து நிற்பதற்காகப் பயன்படுத்தப்பட்டன. இதன் விளைவாக, இன்று விழிப்புற்ற, வீறுமிக்க தமிழினத்தை நாம் காணமுடிகிறது.

"தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்று சொல்லத்தக்க வகையில், திராவிட இனத்தின் சீரையும் சிறப்பையும் உலகு அறியச் செய்தவர் பெரியார் ஆவார். தமிழ்மொழியின் சிறப்பிற்குக் காரணமாக உள்ள திருக்குறளைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துகள் சிலவற்றைத் திருவள்ளுவர் திருநாளில் நினைவு கூர்வோமானால், நம் எண்ணத்தில் எழுச்சியும் இதயத்தில் மலர்ச்சியும் உண்டாகுமென நம்புகின்றேன்.

தமிழின் சிறப்பு

புதியதோர் உலகை உருவாக்க முயன்ற தந்தை பெரியார், மனிதனைச் சிந்திக்க வொட்டாமல் பழமைக்கு அடிமையாக வாழத்தூண்டிய அனைத்தையும் சாடினார்.

> வட மொழியில் நம்மை, மேலும் மேலும் அடிமை யாக்கும் தன்மை அமைந்திருப்பதால்தான், அதையும் கூடாது என்கிறேன். நமது முற்போக்குக்கு ஏற்ற மொழி தமிழைவிட மேலான ஒரு மொழி இந்நாட்டில் இல்லை என்பதற்காகவே தமிழை விரும்புகிறேனே தவிர, அது அற்புத அதிசயங்களை விளக்கக் கூடியது என்பதற்காக

அல்ல. 'அற்புத சக்திகள் நிறைந்த மொழி' என்று பிடிவாதம் செய்வது அறியாமை தான்! அது தமிழ்ப் பண்புகூட அல்ல! தமிழில் அதிசயம், மந்திரம், சாதி முதலிய சொற்களே இல்லை![1] என்னும் விளக்கத்தால், ஐயா அவர்கள் தமிழ் மொழியைச் சீர்திருத்த இயக்கப் பிரசாரத்திற்கு ஒரு கருவியாகக் கொண்டதற்குரிய காரணம் புலனாகின்றது. 'மக்கள் பேசும் மொழி' எனும் காரணத்திற்காக மட்டும் அல்லாமல், பகுத்தறிவுச் சிந்தனையை இயல்பாகக் கொண்டுள்ள மொழி எனும் எண்ணத்தாலும், அவர் தம் தமிழ்மொழியைப்போற்றிப் பயன்படுத்தியுள்ளார்.

திருக்குறள் சிறந்த நீதி நூல்

தொடக்கத்தில், பெரியார் அவர்கள் திருக்குறளைப்பற்றித் தவறாக நினைத்துக்கொண்டு இருந்தாராம். "பிறகு திருக்குறளைப் படித்துப் பார்த்த நேரத்தில், மற்றப் புலவர்களைப் போலல்லாது ஓரளவுக்கு அறிவுக்கு மதிப்புக் கொடுத்துப் பாடி இருப்பவை என்பது புலப்பட்டது. இருக்கிற இலக்கியங்களில் நீதிகள் வகுக்கின்ற நூல்களில் சிறந்த நூல் என்று சொல்லத்தகுந்தது திருக்குறள் தான்"[2] எனும் முடிவிற்கு அவர் வந்துள்ளதைக் காணுகின்றோம்.

சீர்திருத்தக்காரரான பெரியார் அவர்களுக்குத் திருக்குறளிடத்து ஈடுபாடு உண்டானமைக்குரிய பல்வேறு காரணங்களுள், முக்கியமானது "நான் திருக்குறளைப்படித்து ஏதோ சிறிது ஆராய்ச்சி செய்து எடுத்துச் சொல்லி வருவதன் உண்மையான கருத்து, அவற்றில் பல எனது தொண்டுக்கு அரண் செய்வதாகவும், எனது கருத்துக்கு ஆதரவு அளிப்பதாகவும் இருக்கிறது என்பது தான்"[3] என்று அவரே தெரிவித்துள்ளார்.

---

1 பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், தொகுதி 2; பக், 969.

2 குறளும் வாழ்வும், பக். 3;

3 ஷை, பக்.3–4

குறள் தோன்றக் காரணம்

சமுதாய நலனையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருந்த ஐயா அவர்கள், சமுதாய நலனிற்காகவே திருக்குறளின் கருத்துகளைப் பயன்படுத்தியுள்ளார்கள். குறள் தோன்றக் காரணம் யாது?" என்பதைப் பற்றி அவர் ஆழ்ந்து சிந்தித்துள்ளார்.

> வள்ளுவர் குறளை எழுதிய காலம், தமிழ்நாடு ஆரிய ஆதிக்கத்தில் அமிழ்ந்து கிடந்த காலம், குறள் தோன்ற வேண்டிய அவசியம் கூட ஆரிய ஆதிக்கம் தோன்றி மக்களை அழித்து, நமது கலாச்சாரத்தை ஒழித்துக் கொண்டிருந்த நிலையைத் தடுப்பதற்குத்தான் வள்ளுவர் குறளை எழுதினார். குறளில் காணப்படும் தத்துவங்கள் அத்தனையும் இதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன[4]

என்று திருக்குறள் தோன்றியதற்குரிய காரணத்தைத் தந்தை பெரியார் தெரிவித்துள்ளார். தமிழக வரலாறு உணர்த்தும் உண்மையும் இதுவேயாகும். தமிழகத்தில் பல்வேறு இனத்தவர், சமயத்தவர் சங்ககாலத்தில் நுழைந்தனர்; அரசர்களின் ஆதரவைப் பெற்றனர்; தங்கள் புதுமையான, அறிவுக்குப் பொருந்தாத கொள்கைகளை,நம்பிக்கைகளை,பழக்க வழக்கங்களை மக்கள் மீது திணித்தனர். இவ்வாறு வடவருடைய நாகரிகம், தமிழ்ப் பண்பாட்டில் ஊடுருவலாயிற்று. இதனால் மக்கள் மனத்தில் அதிர்ச்சியும் குழப்பமும் உண்டாயிற்று: பழமைக்கும் புதுமைக்கும் போராட்டம் உண்டாயிற்று. *சிறந்தது எது? தேவைப்படுவது எது? நம்முடைய பண்பாடு எது? இவற்றுள் சிறந்தது எது?' என்பனவற்றைப் பற்றி எல்லாம் எளிதில் புரிந்துகொள்ள இயலாது மக்கள் திகைப்புற்றனர். சுருங்கச் சொல்லுவதானால், வாழ்க்கை எனும் நெடுஞ்சாலையில் குறுக்குத் தெருக்கள் பல பிரிந்துசெல்லும் ஒரு மையப் பகுதியில் வந்து நின்ற தமிழினம், 'எப்பக்கம் செல்லுவது?

---

4 குறளும் வாழ்வு, பக். 4.

எந்தத் தெருவழியாகச் செல்லுவது? எந்த வழியாகச் சென்றால் நம்முடைய குறிக்கோளினை அடையலாம்?" என்பன போன்ற பல சிக்கலான பிரச்சினைகளுக்கு இடையே சிக்கி, செல்லும் வழியறியாது மலைப்பும், திகைப்பும் அடைந்து தவிக்கலாயிற்று. இத்தகைய காலச் சூழலில் தான், திருவள்ளுவர் வழிகாட்டும் வான்மறையாகிய திருக்குறளை இயற்றினார்.

புத்தரும் வள்ளுவரும்

திருவள்ளுவருடைய கருத்துகளோடு பெரிதும் ஒத்த இயல்புடைய கருத்துகளை, கொள்கைகளைச் சித்தார்த்தர் எனப்படும் புத்தர் பெருமான், வள்ளுவருக்கு முன்பே எடுத்துரைத்து இருப்பதைப் பெரியார் பல வகையாகச் சுட்டிக் காட்டியுள்ளார். அவற்றுள் இருவருடைய ஒத்த கருத்துகளைப் பின்வருமாறு ஐயா அவர்கள் பிழிந்து தத்துள்ளார்:

> மற்ற ஆதாரங்கள், பழக்க வழக்கங்கள் என்பவைகள் எப்படியிருந்தாலும் சரி, உன் அறிவைப் பயன்படுத்திக்கொள்! எந்தக் காரியத்தையும் அனுபவ அறிவின்படி ஆராய்ந்து பார்! முன்னாள் பழக்க வழக்கங்கள்,பெரியவர்கள், மனிதத் தன்மைக்கு மேற்பட்டவர்கள் சொன்னது, நீண்ட நாளாக இருந்து வருவது என்பதற்காக எதையும் எடுத்துக் கொள்ளாதே என்பதாகும். இப்படி உன் அறிவுக்கு மதிப்புக்கொடு என்று அறிவை முதலாக வைத்தவர்கள் வேறு யாரும் கிடையாது, இந்த இருவர்களையும் தவிர[5]

என்பதனால், திருவள்ளுவரும் புத்தரும் அறிவு முதல்வாதிகள் (Rationalists) என்று பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கருதியமைப் புலனாகிறது. தமிழ்ப் புலவர்களிலேயே, மிகக் குறைந்த அளவு மூடநம்பிக்கையுடைய புலவராக விளங்கியவர் திருவள்ளுவர் என்பது அவருடைய திருக்குறளால் தெரியவருகிறது.

---

5 குறளும் வாழ்வும், பக். 7–8.

மற்றும், அவர் அறிவிற்கே முதன்மையிடம் கொடுத்த முத் தமிழ்ப் பாவலராவர்.

அறிவுடையார் எல்லாம் உடையார் (430)
அறிவுடையார் ஆவது அறிவார். (427)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (423)

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (354)

எனும் குறட்பாக்கள், 'அறிவு – ஆராய்ச்சியின்' சிறப்பினை முதன்மைப் பாட்டை உலகிற்கு உணர்த்துகின்றன. இவ்வாறு அறிவிற்கு முதன்மை இடம் கொடுத்த தமிழ்ப் புலவர் வேறு யாருமிலர்.

தமிழரின் இலக்கியம் திருக்குறனே

தமிழில் உள்ள இலக்கியங்கள் யாவும் பகுத்தறிவிற்கு ஒவ்வாதவை; மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டாதவை. ஆனால், அவற்றுள் திருக்குறள் ஒன்றே இதற்கு விதிவிலக்கு! இதனை,

> தமக்கு இலக்கியம் என்று சொல்லுகிற முறையில் ஏதாவது ஒன்று வேண்டுமே என்று சொன்னால், அதற்கு இதை வைத்துக்கொள்ளலாம் என்ற கருத்தில்தான், நாம் பின்பற்றக் கூடிய முறையில் ஏதாவது ஒன்று இருக்கிறது என்றால், அது இது தான் என்று சொல்லக்கருதித்தான், பத்தாண்டுகட்கு முன்பு (1949) குறள் மாநாடு சென்னையில் கூட்டினோம். எதற்காக ? புத்தரையும் வள்ளுவரையும் பெருமைப் படுத்தவா ? நமக்கு இருக்கும் இழிவுடைமை, முட்டுக்கட்டைகள் இவைகளிலிருந்து விடுதலை அடைய வழிவகை காணுவதற்கு அவர்கள் கருத்து உதவியாக இருக்கும் என்பதால் தானேயொழிய வேறில்லை.[6]

---

6 குறளும் வாழ்வும், பக், 9

என்று ஐயா தெளிவுறுத்தியுள்ளமை ஆழ்ந்து சிந்திக்கத்தக்க தாகும்.

புத்துரை

திருவள்ளுவரை ஓர் அறிவியல்வாதியாகப் பெரியார் போற்றுகிறார். தம்முடைய பகுத்தறிவுச் சிந்தனை நோக்கில் தந்தை பெரியார் அவர்கள், திருக்குறளின் 'கடவுள் வாழ்த்திற்கு'க் கொடுத்து இருக்கும் புதிய விளக்கம் நம் சிந்தனைக்கு விருந்தாக அமைகின்றது.

"கடவுள் வாழ்த்து எனும் தலைப்புப் பொருந்தாது. திருக்குறளை முழுமையாக ஆராய்ந்து பார்த்தால், அதனுள் எங்குமே 'கடவுள்' எனும் சொல்லாட்சியைக் காணோம் என்பது யாவரும் அறியவேண்டிய உண்மை " என்று பெரியார் அறிவுறுத்துகிறார். இதற்குமேல் ஒருபடி சென்று, அவர்

> ஆனால், மற்றவர்கள் சொல்லலாம்: கடவுள் தன்மை கொண்ட இறைவன் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளாரே என்று கேட்கக் கூடும். இறைவன் என்பது கடவுளுக்கு ஏற்பட்ட சொல் அல்ல; கடவுளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. நான் அச்சுப் போட்டு விற்ற திருக்குறளைப் பார்த்தால் தெரியும். அதில் கடவுள் வாழ்த்து என்று போடாமல் "பண்பு சிறப்பு" என்றுதான் போட்டிருக்கிறேன்.[7]

என்று அதிகாரத் தலைப்பை மாற்றி அமைத்தமைக்குக் காரணம் காட்டியுள்ளார். இதற்கு அடுத்து 'ஆதிபகவன்' எனும் தொடருக்கு,

> குணமும் உருவமும் ஆதி அந்தமும் இல்லாத கடவுள் என்பவருக்கு ஆதி, குணம்,உருவம் கற்பிப்பது என்பது அறியாமையும் மூட நம்பிக்கையும் ஆகும். வள்ளுவர் அப்படிப்பட்டவர் அல்ல... அவர் அறிவு ஆராய்ச்சியையே

---

7 குறளும் வாழ்வும், பக். 12

அறிவினால் ஆராய்ந்து கருத்துக் கொள்ளுவது மேலானது என்ற கருத்தில்தான் சொல்லி இருக்க வேண்டும்[8]

என்று பெரியார் பொருள் கொண்டுள்ளார்.

மலர்மிசை ஏகினான்' (குறள்.3) எனத் தொடங்கும் குறட்பாவிற்கு "பூவின்மீது பூக்குவியலின் மீது நடப்பது என்றால், பூக்கள் கசகச என்று நசுங்கி விடாமல், மேலாக நிதானமாக நடக்கவேண்டும் என்பதுதான் கருத்தாகும். எந்த மனிதனும் நிதானமாக, அவசரம் இல்லாமல், பொறுமையோடு நடந்துகொள்வானானால், அவனது உடல் அவயவங்களுக்கு அமைப்புத் தன்மைக்குக் கேடு வராது என்பதோடு, அவைகள் நீண்ட நாட்களுக்கு வேலை செய்யத்தக்க அளவுக்குப் பயன்படும் என்பதுதான்"[9] என்று அவர் தந்துள்ள விளக்கம் சிறப்புமிக்கதாகும்.

தனக்குவமை இல்லாதான்' (குறள் 7) எனத் தொடங்கும் குறட்பா 'கவலையற்ற திருப்திகரமான வாழ்க்கை வாழ[10] வழி காட்டுவதாக அவர் விரித்துரைத்துள்ளார்.

மனிதன் தனது கடமையாகிய மற்ற மக்களுக்குத் தன்னால் கூடியதைச் செய்ய வேண்டும் என்கிறார். பிறர் நல உணர்ச்சிக் கொண்டவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான். அல்லாது சுயநலத்தையே கருதுகிறவன் வாழ்க்கையில் இன்பம் அடைய முடியாது[11] என்பதைத்தான் "அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால், பிறவாழி நீந்தல் அரிது" எனும் குறட்பா (8) உணர்த்துவதாக ஐயா அவர்கள் விளக்கம் தந்துள்ளார்.

இதைப்போன்றே, "இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ முயலுமாறு" "பிறவிப் பெருங்கடல்' எனத் தொடங்கும்

---

8 குறளும் வாழ்வும், பக். 27–28,

9 ஷ பக்.29.

10 ஷ பக்.30

11 ஷ பக்.28

பத்தாவது குறட்பா அறிவிப்பதாக ஐயா தெரிவித்துள்ளமை புதியதொரு விளக்கமாகும்,[12]

இவ்வாறு பல புதிய விளக்கங்களை இன்றைய வாழ்க்கை முறைக்கு ஏற்ற வகையில், பல திருக்குறள்பாக்களுக்குப் பெரியார் அவர்கள் உரை கூறியுள்ளமை, திருவள்ளுவரின் கருத்துகளுக்குப் புதிய ஒளி ஊட்டுவதாக அமைந்துள்ளன.

பொதுநலத் தொண்டன்

பொதுத் தொண்டில் ஈடுபடும் தொண்டனுக்குத் திருவள்ளுவர், குடிசெயல்வகை ' எனும் அதிகாரத்தில் (103) அறிவுரைகள் வழங்கியுள்ளதாக ஐயா தந்துள்ள விளக்கம் புதுமையானது; போற்றி வரவேற்கத் தக்கதுமாகும்.

> பொதுவாக முதலில் உழைப்பதற்குப் பருவம் அதாவது காலம் – தேவையில்லை. அவன் சோம்பேறியாக இருக்கக் கூடாது என்று கூறி, அவன் தனக்கு நேரும் மான அவமானத்தைக் குறித்துக்கூட அவமானப்படக்கூடாது என்றும் கூறியுள்ளார். இதனைப் பொதுத் தொண்டு செய்பவர்கள் மறக்கக்கூடாது[13]

என்னும் விளக்கம்

> கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
> பெருமையில் பீடுடையது இல் (1021)
>
> குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
> மானம் கருதக் கெடும் (1028)
>
> இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ? (1029)

எனும் மூன்று குறட்பாக்களுக்குத் தரப்பட்டுள்ள விளக்கம் காலத்திற்குகந்த கருத்துரையாகும். இவற்றைப் போன்று பல செய்திகளை – ஐயா உணர்ந்து போற்றிய உண்மைகளை விரித்துரைக்கலாம்.

---

12 குறளும் வாழ்வும், பக். 29.

13 ஷ பக். 33

தந்தை பெரியார் கண்ட திருவள்ளுவர் ஓர் அறிவியல் வாதி: பகுத்தறிவாளர்; புத்தர் பெருமானோடு ஒப்பவைத்துப் போற்றத்தக்க பொன்றாப் புகழுடையவர்; அவருடைய அறவுரைகளுள் பல, மனித இனத்தின் துன்பத்தைக் குறைத்து இன்பவாழ்வை அடைய வழிகாட்டுவன. இக்காரணங்களால், ஐயா அவர்கள் 'திருக்குறளைத் தமிழரின் தனிப் பேரிலக்கிய மாக'ப் போற்றியுள்ளமைப் புலனாகின்றது.

"குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய எல்லாம் அதில் அடங்கியுள்ளன."

– குடியரசு (13–11–48)

"நீங்கள் என்ன சமயத்தவர் என்று கேட்டால் "வள்ளுவர் சமயம்" என்று சொல்லுங்கள்! உங்கள் நெறி என்னவென்றால் "குறள் நெறி" என்று கூறுங்கள்! அப்படிச் சொன்னால் எந்தப் பிற்போக்கு வாதியும், எப்படிப்பட்ட சூழ்ச்சிக்காரனும் எதிர்நிற்கமாட்டான். யாரும் குறளை மறுக்க முடியாததே இதற்குக் காரணம்."

விடுதலை– (18–4–50)

மன நலம்

மனம் என்பது யாது?

மனம் எனும் சொல், "நெஞ்சம், எண்ணம், நினைவு, விருப்பம்" எனும் பல பொருள்களை உணர்த்துவதாகும். எண்ணுதல் எனும் பொருளைத்தரும் நிலையிலேயே, மனம் மாட்சியுற்று விளங்குகிறது.'மனஸ்' எனும் வடசொல்லின் திரிபாகவே, அறிஞர் பலர் இச்சொல்லைக் கொண்டுள்ளனர், 'மனஸ்' எனும் வடசொல், "அறிவுத்திறன், மதிநுட்பம், புரிந்து கொள்ளுதல், புலன்கள் வாயிலாக உணர்தல், ஊற்றுணர்வு (பரிசம்), மனச்சான்று" ஆகிய ஆறு பொருள்களைக் கொண்டதாக வடமொழியில் வழங்கிவருகிறது. இவையாவும் மனத்தின் செயல்நிலை ஆற்றலைப் புலப்படுத்துகின்றன.

இவை அனைத்தையும் 'சிந்தனைத் திறன் ' எனும் ஒரே தொடரில் அடக்கிவிடலாம். 'மனம்' என்பதைத் தமிழ்ச் சொல்லாகக் கொள்ளுகின்றவர்கள், 'மன்', 'அம்' எனப்பிரித்து மன்னுதற்கு – நிலை பெற்று விளங்குவதற்குக் காரணமான திறனாக இருப்பது மனம் என விளக்கம் தருவர். இவர்கள் கருத்துப்படி, மனிதன் உலகில் நிலைபெற்று நீண்ட நெடுங்காலம் வாழ்வதற்குக் காரணமாக – தூண்டுதலாக இருக்கும் மனிதனுடைய அகக்கருவியே மனம் என்பது தெரியவருகிறது.

இவ்விருவகை விளக்கங்களில் இருந்தும், 'மனம்' என்பது சிந்தனைத் திறனுக்கு அடிப்படையாக உள்ள ஓர் உறுப்பு என்பது புலனாகிறது. உலகில் உயிரினங்களை 'ஓரறிவு உயிர்', 'ஈரறிவு உயிர்' என்று ஆறுவகை உயிரினங்களாகப் பாகுபடுத்தியுள்ளனர். இவற்றுள், 'ஆறாவது அறிவு' என்பது சிந்தனைத் திறனேயாகும். * நல்லதன் நலனையும் தீயதன் தீமையையும்' பகுத்தறியும் மனத்திறனாகிய இதனைப் 'பகுத்தறிவு' எனப் போற்றுவது மரபு. இவ்வறிவு மனிதனைத் தவிர, வேறு எந்த உயிரினத்திற்கும் வாய்க்கப் பெறாததாகும். இதனால் இதனை 'மனிதன் எனச் சுட்டுவதற்குரிய அடிப்படைப் பண்பு' என்பர் தொல்காப்பியனார்.

உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே (தொல்.சொல்.1)

எனும்நூற்பாவில்இக்கருத்தையேஅவர்தெளிவுறுத்தியுள்ளார்.

எனவே, 'மனம்' என்பது மனிதனுடைய சிந்தனைத் திறனுக்குக் காரணமாக உள்ள ஒரு கருவி என்பது புலனாகின்றது. மனிதனுடைய உடலிலே, அது எங்கே இருக்கிறது என்பதைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் நடந்து கொண்டே இருக்கிறது. இந்தியத் தத்துவ ஞானிகளுள் ஒரு சாரார், மனிதனுடைய உடலில், இடப்பக்க மார்பில் உள்ள இருதயத்தில் மனம் இருப் பதாக நம்பினர்; மற்றொரு சாரார் யோக நெறியில் – ஈடுபட்டோர் நெற்றியில் இருபுருவங்களுக்கும் இடையில் மனம் இருப்பதாகக் கருதினர். இன்றைய அறிவியல் ஆராய்ச்சியால், தலையின் இடப்புறப் பிற்பகுதியில் உள்ள சிறு மூளையே மனத்தின் நிலைக்களம் எனத் தெரியவருகிறது. இந்த மனம், நான்கு வகையாகச் செயற்படுவதைக் கொண்டு, நான்கு பகுதிகளாக அல்லது நான்கு உறுப்புகளைக் கொண்ட ஒரு கருவியாக நம் நாட்டுத் தத்துவ நூலார் இதனை வகைப்படுத்தியுள்ளனர். சிந்திக்கும் கூறுடையதுமனம்; அறிவு நலக் கூறுடையது புத்தி; முடிவு எடுத்து, செயல்படுமாறு தூண்டும் கூறுடையது சித்தம்; இவை மூன்றிலும் கலந்தும் வேறாகவும் உள்ள 'தன் முனைப்பு'

எனப்படும் அகங்காரம் (Ego) மனித மனத்தின் நான்காவது கூறாகும். இந்நான்கு கூறுகளும் ஒன்றோடொன்று இணைந்தும், இயைந்தும் இயங்குவதனாலேயே மனம் செயற்படுகிறது என்பர். இவற்றுள் ஒன்று பேராதிக்கம் செய்யத் தொடங்கினால், மனக்கோட்டம் (Comp– lex) உண்டாகிவிடும் என்பது உளவியல் அறிஞரின் துணிவாகும்.

நலம் என்பது யாது?

'நல் + அம்' என இச்சொல்லைப் பிரிக்கலாம். 'நல்' என்பது 'நன்மை' எனப் பொருள் தரும் அடிச்சொல்லாகும். 'அம்' என்பது பண்புப்பெயர் விகுதி. 'நலம்' எனும் சொல்,"நன்மை, அழகு, ஆசை, இன்பம், உதவி, பண்பு, பயன், புகழ், உயர்வு, கண்ணோட்டம், சுகவாழ்வு, நிறம், செம்மை நிறம்" எனும் பல்வேறு பொருள்களை உணர்த்துவதாகும்.

'மனநலம்' எனும் தொடர், மனத்தின் தன்மையை, அழ கினை, இன்பத்தினைச் சுட்டுவதாகக் கொள்ளலாம்.'இன்பம் என்பது என்ன?" எல்லா உயிர்களும் இன்பத்தை நாடி, வேண்டிச் செயல்படுகின்றன. இன்பம் என்பது இருவகைப் படும். ஐம்பொறிகள் வாயிலாக அனுபவிக்கும் நுகர்ச்சியால் பெறும் இன்பம் ஒருவகை. இதனைப் புலனுகர் இன்பம் என லாம். ஆங்கிலத்தில், பிளஷர் (Pleasure) எனும் சொல், இத்தகைய இன்பத்தையே சுட்டுகிறது. மன நிறைவால் உண்டாகும் இன்பம் – உள்ளத்து உணர்வுகளின் நிறைவால் உண்டாகும் இன்பம் மற்றொரு வகைப்பட்டதாகும். இதைத்தான் வள்ளுவர் 'மனநலம்' எனும் தொடரால் சுட்டுகிறார் . இதனை ஆங்கிலத்தில் 'ஹாப்பினஸ்' (Happiness) என்பர்.

இருவகை வாழ்க்கை

வாழ்க்கை இருவகைப்படும். உடலால் வாழும் வாழ்க்கை ஒருவகை; மனத்தால் வாழும் வாழ்க்கை மற்றொரு வகையாகும். இவற்றுள் இரண்டாவதாகச் சுட்டப்பட்ட வாழ்க்கை

சிறந்தது என்பர். உடலால் வாழும் வாழ்க்கை விலங்குகளுக்கும், உள்ளத்து உணர்ச்சிகளும் அறிவும் பண்படாத/பதப்படாத மக்களுக்கும் பொதுவாக அமைந்துள்ளதாகும். உண்பது, உறங்குவது, கூடி இன்புறுவது எனும் மூன்று பகுதிகளால் இவ்வாழ்க்கை முழு நிறைவு அடைந்து விடுவதாகும்.

மனத்தால் வாழும் வாழ்க்கையே சிறந்தது; உயர்ந்தது. எல்லாவற்றையும் இயக்கும் பேராற்றல் வாய்ந்தது மனம். உடலில் உள்ள உயிரினை இயக்கும் ஆற்றல் உடையது மனம்.

மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல். (435)

என்பது வள்ளுவர் வாய்மொழி. இதனால், மனத்தால் வாழும் வாழ்க்கையே ஒரு மனிதனைப் பண்பு நலன்களில் சிறந்து விளங்குமாறு செய்கிறது என்பது புலனாகின்றது.

மனத்தின் மாட்சி

மனத்தின் பண்பையும் பயனையும், அமைப்பையும் ஆற்றலையும் நன்கு திருவள்ளுவர் அறிந்தவராவார். 'அறத்திற்கு ஊற்றாக நிலைக்களமாக இருப்பது மாசற்ற மனமே' என்பதை அவர் அழுத்தம் திருத்தமாக அறிவுறுத்தியுள்ளார்.

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்;
ஆகுல நீர பிற (34)

எனும் குறட்பா,மனத்தின் மாட்சியைப் புலப்படுத்துவதாகும்.

மனநலம் என்பது யாது?

மனநலம் என்பது மனவமைதியால் உண்டாகும் இன்ப நிலையைக் குறிக்கிறது. மனவமைதியை எளிதில் பெற இயலுமா?' எனும் ஐயம் எழலாம். உலகியலில் போட்டி, பொறாமை, வஞ்சனை, சூழ்ச்சி, விருப்பு வெறுப்பு, எதிர்பார்ப்பு ஏமாற்றம், வெற்றி தோல்வி போன்ற பல்வேறு

உணர்வுகளால்,'ஆடிக்காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல்' மொத்துண்டு, நைந்து, சிதைந்து, நிலைகுலைந்து போகின்றபொழுது, மனம் அமைதியை அடைவது எப்படி?

'இதற்கு வள்ளுவர் காட்டும் வழி யாது?' எனும் நோக்கத்தோடு திருக்குறளை அணுகுகின்றபொழுது, இரண்டு நெறிகளை வள்ளுவர் சுட்டுவதைக் காணலாம். முதல்நெறி மனத்தைத் தூய்மையாக – அறத்தின் நிலைக்களமாக வைத்துக் கொள்ளுவதற்கு வழி காட்டுகிறது.

'மனம் தூய்மை' (குறள் 455), 'மனந் தூயார்க்கு' (குறள் 456), 'மனம் நல்லர் ஆகுதல்' (குறள் 823), 'மனத்தது மாசாக' (குறள் 278), 'மனத்துக்கண் மாசிலனாதல்' (குறள் 34) எனும் குறட்பாக்கள், 'மனிதன், தன் மனத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள முயல்வானானால், மன அமைதியைப் பெற இயலும்' என்பதை அறிவிக்கின்றன.

மனவமைதிக்கு வள்ளுவர் காட்டும் மற்றொரு வழி, தனக்குவமை இல்லாத இறைவனுடைய திருவடிகளை இடைவிடாது மனத்தால் நினைந்து போற்றுவ (தியானிப்ப) தாகும்.

தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது (8)

எனும் வள்ளுவர் வாக்கு, இக்கருத்தையே அறிவுறுத்துகிறது.

இவற்றை இருவேறு நெறிகள் என்று கூட சொல்ல இயலாது; இருவேறு நிலைகள் எனச் சொல்லலாம். மனத்தைத் தூய்மையாக்கிய பிறகு, அதனை இடைவிடாமல் இறைவனைத் தியானிக்குமாறு பழக்க வேண்டும் என வள்ளுவர் கூறுவதாகக் கொண்டால், இவ்விரண்டும் அடுத்தடுத்துள்ள இருவேறு நிலைகளாகவே தோன்றும். இவ்விருவகை நிலைகளில் உள்ளம் பயிற்சி பெற்றுச் சிறக்குமானால், மனவமைதி – மன இன்பம் மன நலம் தானே நம்மை வந்தடையும்.

மனத்தின் நன்மை மக்களுக்கு மேலுலகச் செல்வத்தைத் தரும் எனும் கருத்தமைய

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்... (457)

எனத் திருவள்ளுவர் தெளிவுறுத்தியுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

மனிதன் மனநலத்தைப் பெற்றால் போதும்; அது வீடு பேற்றிற்கு வழிகாட்டும் வான் பொருளாய் அமையும் என்பதும் திருவள்ளுவரின் சித்தாந்தமாகும்.

மயக்கும் மோகினி

"நாங்கள் வாழப் பிறந்தவர்கள் ! " என மக்கள் பலர் அடிக்கடி கூறுவதை நாம் கேட்டு மகிழ்கின்றோம். 'எல்லோரும் வாழப் பிறந்தவர்கள்' தாம் என்பதில் நமக்குக் கருத்து வேற்றுமை இருக்க இயலாது. ஆனால், 'எத்தகைய வாழ்க்கை வாழ நாம் பிறந்திருக்கிறோம்?' என்பதிலேயே கருத்து வேற்றுமை எழும். ஒவ்வொருவரும் 'வாழத்' துடிக்கின்றனர். * எத்தகைய வாழ்க்கை வாழத் துடிக்கின்றனர்?' என்பதைப் பற்றிச் சிறிது எண்ணிப் பார்ப்போமானால், நமக்கு வியப்புண்டாகும். 'சிறப்பாக வாழ வேண்டும்' என்பதே பலருடைய இலட்சியமாக இருக்கிறது! 'சிறப்பாக' எனும் சொல் எதைக் குறிக்கிறது? சிலர் உடல் நலத்தோடுவாழ்வதே 'சிறந்த வாழ்க்கை' எனக் கருதுகின்றனர். வேறு சிலர் 'உடல் நலத்தோடு மன நலமும் பெற்று வாழ்வதே சிறந்த வாழ்க்கை' எனப் போற்றுகின்றனர். ஆனால், பெரும்பாலான மக்கள் 'பண வளத்தோடு வாழ்வதே சிறப்பான வாழ்க்கை' எனக் கருதுகின்றனர். அவர்கள் 'பணமே வாழ்க்கை' எனக் கருதுவதில் வியப்பில்லை.

'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை!' என்பது வள்ளுவர் வாய்மொழி அல்லவா? இதை மட்டும் நன்குணர்ந்தவர்கள் உலகில் மிகப் பலராக உள்ளனர். இதனால், பொருள் வளத் தோடு – பண வளத்தோடு வாழ்வதற்கு உரிய வழிவகைகளை அவர்கள் நாடுகின்றனர். பொதுவாக நாள்தோறும் உழைத்துப்

பாடுபட்டுப் பொருளீட்டுவதே வழக்கமாக இருந்துவருகிறது. ஆனால் அவ்வாறு முயன்று, கடுமையாக உழைத்து ஈட்டும் பொருள், அன்றாட வயிற்றுப் பிழைப்பிற்கு மட்டுமே போதுமானதாக அமைகிறது. ஆனால், அப்பொருள், அவர்கள் வாழ விரும்பும் 'வளமான வாழ்க்கை 'யை அமைத்துக்கொள்ளப் போதியதாக இல்லை என அவர்கள் உணருகின்றனர். அவர்கள் நினைக்கும் 'வளமான வாழ்க்கை', பிறர் கண்டு பொறாமைப் படத்தக்க ஆடம்பர ஆரவாரமிக்க வாழ்க்கையாக அமைய வேண்டும் எனத் துடிக்கின்றனர். பகட்டான வாழ்க்கை வாழ, நேர்மையான முறையில் ஈட்டும் பொருள் போதியதாகாது! 'அவ்வாறானால் என்ன செய்வது?" எனச் சிந்திக்கின்றனர்! குறுக்கு வழியில் பொருளீட்டுவதற்குரிய வழி வகைகளை அவர்கள் ஆராய்கின்றனர்!

திருவள்ளுவர் 'செய்க பொருளை!' என அறிவுறுத்துவது மட்டுமே அவர்கள் மனத்தை ஆட்டிப் படைக்கின்றது. அவர்கள் பொருளைத் தேடுவதற்குப் பல புதிய வழிகளை நாடுகின்றனர். அப்புதிய வழிகளில் ஒன்றாகத் தோன்றுவது சூதாட்டமாகும். மற்றும் சிலர், உழைக்காமலேயே வாழ விரும்புகின்றனர். அவர்களுக்குச் சூதாட்டமே சிறந்த தொழிலாகத் தோன்று கிறது ! இன்னும் ஒரு சிலருக்கு ஊழ்வினைப் பயனால், யாரோ தேடிவைத்துவிட்டுச் சென்ற செல்வம் வந்து சேருகிறது. தங்கள் வளமிக்க வாழ்க்கைக்குச் சிறப்பைத் தருவது ' சூதாட்டம்' என அவர்கள் கருதுகின்றனர். அதனால், அவர்கள் பொழுது போக்கிற்காகச் சூதாடுவதை ஒருவகை விளையாட்டாகக் கொள்ளுகின்றனர். ஆனால், விளைவு என்ன?

'யார்? யார்? எத்தகைய நோக்கில் சூதாட்டத்தில் ஈடுபட்டாலும் அதன் முடிந்த பயன் என்ன?" என்பதை நாம் சீர் தூக்கிப் பார்ப்போமானால், பொருட்கேடு உண்டாவது முதல் பயனாகவும், மானத்தையும் மதிப்பையும் இழப்பது அடுத்த விளைவாகவும் அமைவது நமக்குப் புலனாகிறது! இக்கருத்துக் களையே திருவள்ளுவர் 'சூது' எனும் அதிகாரத்தின் வாயிலாக உலகிற்கு உணர்த்துகின்றார்!

கள்ளுண்ணல் அறிவைக் கெடுத்து மனிதனை விலங்காக மாற்றும்! எனவே, அறிவும் பண்பும் நிறைந்த மனிதர் கள்ளுண்ணாமையைச் சிறந்த அறமாகப் போற்ற வேண்டும் என்று கூறிய வள்ளுவர், அடுத்து 'சூதாட்டத்தை விரும்பாதீர்!" என எச்சரிக்கை செய்கிறார்! சூதாட்டம் அறிவைக் கெடுப்பதில்லை! ஆனால், கடமையைச் செய்யாமல் புறக்கணிக்கத் தூண்டுகிறது! இதனால், அதுவும் பொதுவாழ்வுக்கு இடை யூறானது. 'அவ்வாறானால், சூதாட்டம் தனி வாழ்க்கைக்கு நன்மை தருகிறதா?" என ஆராய்ந்தால் அதுவும் இல்லை! முதலில் வெற்றி தருவதைப் போன்று தோன்றினாலும், பின்னர் பொருள் இழப்பிற்குக் காரணமாக அல்லவா அது அமைகிறது!

ஒருவன் சூதாட்டத்தில் பையப்பையப் பொருளை இழந்து கொண்டே போனால், அவன் நிலை என்னாகும்? வறுமைதான் வந்து நிற்கும்! வறுமை வந்துவிட்டால், பல்வேறு இழிவுதரும் துன்பங்கள் தாமே அடுக்கடுக்காய் வந்து சேரும்; உள்ள பெருமையும் புகழும் கெட்டு அல்லற்படும் அவல நிலை அவனுக்கு உண்டாகும்! இதனை,

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல் (934)

எனத் திருவள்ளுவர் அறிவுறுத்துகின்றார்

"சூதாட்டத்தைப் போன்று வறுமை தரத்தக்கது உலகத்தில் வேறொன்றும் இல்லை! " என வள்ளுவர் குறிப்பிடுவது, இங்கு நாம் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும். வறுமை எத்தகைய கொடுமையானது என்பதை உணர்ந்த எந்த மனிதனும் தனக்குத்தானே துன்பத்தைத் தேடிக் கொள்வானா? அறிவுடையவனாகயிருந்தால், தானே வறுமையை வரவழைத்துக்கொள்ள மாட்டான் என்பதே வள்ளுவருடைய கருத்தாகும்.

பொருள் வசதியற்றோர், அரும்பாடுபட்டு உழைத்து, அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முயல்வது உலக இயற்கை! அப்படி வாழுகின்றவர் சிலர், தம்முடைய ஓயாத உழைப்பாலும், அறிவுத் திறத்தாலும் செல்வராக வாழ்க்கையில் சிறப்புறுவதும் உண்டு! 'பொருளற்றார் பூப்பர் ஒருகால்!" என வள்ளுவரே இதனை வேறோர் இடத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனால், குன்றமனைய செல்வத்தைப் பெற்ற பெருமகன் ஒருவன், அதைப் போற்றிக் காக்காமல், காலம் எல்லாம் சூதாட்டத்தில் கழிப்பானானால் அவன் நிலையாதாகும்? நாளடைவில் வறுமையுற்று வருந்துவான்! இயல்பாக வளமிக்க வாழ்க்கையைச் செல்வச் சிறப்புமிக்க வாழ்க்கையைப் பெற்றவர்கள் வறுமை அடைவதற்குக் காரணமாக உள்ளவை மூன்று. பொது மகளிருடைய நாட்டம், கள்குடித்து மயங்குதல், (ஓயாமல்) சூதாடுதல் என்னும் மூன்றே பெருஞ் செல்வரையும் ஓட்டாண்டியாக்கி விடுவதை நாம் இன்றைய உலகிலும் காணுகின்றோம். இதனை,

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு (920)

எனத் திருவள்ளுவர் தெரிவிப்பதனால் தெளியலாம்.

பொதுமகளாகிய மாதவிபால் தீராக் காதல் கொண்ட கோவலன், வறுமையுற்றான். 'சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக், குலந்தரு வான்பொருள் குன்றந் தொலைத்த, இலம் பாடு நாணுத்தரும்' என்று அவன், தன் வாழ்க்கைத் துணைவியிடத்துக் கூறி வருந்தியதை நாம் எளிதில் மறக்க இயலுமா? அவன் வறுமையை அடையாமல் இருந்திருந்தால், கண்ணகியிடம் திரும்பி வந்திருப்பானா? அவன், தன் வீட்டரசியைக் காணத் திரும்பி வந்திருக்க மாட்டான் என உறுதியாகச் சொல்லலாம். பொதுமகள் தொடர்பால் பொருளை இழந்தவன் வரலாறே கோவலன் கதையாகும்!

கள்ளுண்டமையால் வறுமை அடைந்தோர் எண்ணற்ற வராவர். தன் மனைவியின் தாலியை விற்று, கள்ளைக்குடித்து இன்பம் கண்ட பலர், நடைப் பிணங்களாக அல்லற்பட்டதை – ஏன்? – ஆற்றாது அழுது கண்ணீர் வடித்துத் தற்கொலை செய்து கொண்டதை நாடு நன்கறியும். இதற்குச் சுட்டி ஒருவர் பெயரைச் சொல்லவேண்டிய தேவை இல்லை! அறிவுத்திறனும் கலைத்திறனும் வாய்ந்த பலர் கள்குடிக்கு இரையாகி, இருக்கும் இடம் தெரியாத நிலையை எளிதில் அடைந்து விட்டனர்!

இவை இரண்டிற்கும் மற்றொரு தோழி இருக்கின்றாள் 'சூதாட்டம்' எனும் சுந்தரி அவள்! அறிவிற் சிறந்தவரையும், ஆற்றலில் சிறந்தவரையும் சிறிது நேரத்தில் சிந்தை குலைய வைத்து, சீரழியச் செய்துவிடும் பேராற்றலைப் பெற்றவள் அவள்! நாடாண்ட முடிவேந்தரை ஓட்டாண்டியாக்கிக் காடாளச் செய்வதில் கைத்தேர்ந்தவள் அவள்!

சூதாடுவது பண்டைக் காலத்தில் அரசர்க்கும், இக்காலத்தில் பெருங்குடி மக்களுக்கும் ஒரு பொழுதுபோக்கு எனக் கூறுவர்.

கேடில் விழுச்செல்வம் கேடெய்து சூதாடல்
ஏடவிழ்தார் மன்னர்க் கியல்பேகாண்! (நள .6)

என்னும் கூற்று, மதி நுட்பம் நூலோடுடைய அறிஞர் கூற்றாகாது. ஏனெனில், சூதாட்டத்தின்மீது மனம் வைப்பவர்,

அடியு மாண்மையும் வலிமையுஞ் சேனையு
மழகும் வென்றியுந் தத்தங்
குடியு மானமுஞ் செல்வமும் பெருமையும்
குலமு மின்பமுந் தேசும்
படியு மாமறை யொழுக்கமும் புகழுமன்
பயின்ற கல்வியுஞ் சேர
மடியுமால்! மதி யுணர்ந்தவர் சூதின்மேல்
வைப்ப ரோ? மனம் வையார்! (வில்லிபா. சபா. சூ....)

என்பதை அறிஞர்களும், அறவோர்களும் அவ்வப்போது நமக்கு அறிவுறுத்திச் சென்றுள்ளனர்.

சிலர், "என்னைப் போன்று சூதாடுவதில் வல்லவர் உலகத்தில் யாருமே இருக்க இயலாது! என்னைப் போல் கைத்தேர்ந்தவர் யாருளர்? நான் உருட்டுகின்ற வழியிலே காய்கள் உருளும்! என்றும் எனக்கு வெற்றியே அன்றி, தோல்வி கிடையாது!" எனச் செருக்குடன் தருக்கிப் பேசுவர். ஆனால், நாளடைவில் அவர்களும் தம் செல்வத்தைச் சூதாட்டத்தில் இழந்து, மானமிழந்து, மதிப்பிழந்து வாழ வழியறியாது வருந்துவதைக் காணலாம்.

சூதாடு கருவியையும், ஆடும் இடத்தையும், தம் கைத்திற மையையும், பெரிதென மதித்து சூதாட்டத்தைக் கைவிடாதவர், அதில் பேரீடுபாடு கொண்டு சூதாட்டத்தையே தொழிலாகக் கொள்ளுபவர் – மனித வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பொருள்களைப் பெற்றிருந்தும், அவற்றை எல்லாம் இழந்து வறுமையுற்று துன்புறுவர்!

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார் (935)

என்று வரலாற்று நாயகர் சிலரைக் கருத்தில் கொண்டு வள்ளுவர் அறிவுறுத்துகிறார்

நம் புராணங்களில் சிறப்பிடம் பெற்றுள்ள நளனுடைய வரலாறு, நாடு அறிந்த ஒன்று. அன்பும், அறிவும், அழகும், பண்பும் வாய்ந்த நளன், மாற்றானுடைய சூழ்ச்சியை அறியாது, பொழுது போக்கிற்காகச் சூதாட இசைகின்றான். விளைவு யாது? நாடிழந்து, நன்மதிப்பை இழந்து, கானகத்துக் காதலியைக் காரிருளில் கைவிட்டு, மாறு வேடத்தில் மடைத் தொழில் செய்து, சிறுமையுற்று, சீரழிந்து 'சோகமே வடிவமாக' நளன் வாழ நேர்ந்தமை,மனித குலத்திற்குச் சிறப்புமிகு படிப்பினை அல்லவா? சூதாட்டத்தால் பாண்டவர் பட்ட அல்லலை ஓடும் திரைப்படமாக நம் மனக்கண் முன்னால் 'பாரதம்' கொண்டு

வந்து நிறுத்துவதை எந்த இந்தியனாலாகிலும் மறக்க இயலுமா?

"பேராசையின் குழந்தையே சூது! ஏற்றத் தாழ்வான வாழ்க்கையின் சகோதரனே சூது ! தீமையின் தந்தையே சூது!" என்பர் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியான ஜார்ஜ் வாஷிங்டன். அவருடைய வாய்மொழி இன்றும் உண்மையாக இருப்பதைக் காணலாம். 'குறுக்குவழியில் பொருளைத் தேடிப் பணக்காரனாக வேண்டும்' எனும் பேராசையால் உந்தப்படுபவர்களே, சூதாட்டத்திற்கு இரையாகி விடுகின்றனர். சூதாட்டத்தினால் பொன்னையும் பொருளையும் இழப்பதோடு, மானத்தையும் இழந்து விடுகின்றனர். இதனால் வறுமையையும், பழியையும் அவமானத்தையும் தேடிக் கொள்ளுகின்றனர்; சமுதாயத்தின் அருவருப்புக்கும், புறக்கணிப்புக்கும் அவர்கள் ஆளாகின்றனர். இதன் விளைவாகத் தீய செயல்களில் அவர்கள் ஈடுபடுகின்றனர். இவற்றால் மனவமைதி கெட்டு, நடைப்பிணங்களாக அவர்கள் நாட்களைத் தள்ளுகின்றனர்.

ஆனால், சூதாட்டத்தில் அவர்கள் ஈடுபடுகின்ற பொழுது, பின்னால் உண்டாகக் கூடிய விளைவுகளைப் பற்றி எண்ணிப் பார்ப்பதே கிடையாது! 'ஏன் இந்த மதிமயக்கம் அவர்களுக்கு உண்டாகிறது?" என நாம் நினைக்கலாம். அதுதான் அந்த ஆட்டத்தில் இருக்கின்ற கவர்ச்சியாகும். ஒரு முறை சூதாடத் தொடங்கி, அதில் சிறு வெற்றியும் பெற்று விட்டால் போதும்! பின்னர், எத்தனைத் தோல்விகள் உண்டானாலும் சரி! அதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதே கிடையாது! ஏன்? 'என்றைக்காகிலும் வெற்றி பெறுவோம்! அப்பொழுது நிச்சயம் நிறைய பொருள் கிடைக்கும்!' என்னும் நப்பாசையால், அவர்கள் திரும்பத் திரும்ப சூதாடுகின்றனர்!

கிண்டியில் நடைபெற்றுவரும் குதிரைப் பந்தயத்திற்குச் செல்லுபவர்களை நாம் நன்கு அறிவோம் ! 'அடுத்த வேளை சோற்றுக்கு வழி என்ன?' என்பதை அறியாதவர்கள் பலர், ஓயாது கிண்டி குதிரைப் பந்தயத்திற்குச்சென்று, கைப்பொருளை இழந்து, நடுத் தெருவில் நின்றதை – நிற்பதைப் பட்டியல்

போட்டுக் காட்டலாம். இவ்வாறு அவர்கள் சூதாட்டத்திற்கு அடிமையாகக் காரணம் என்ன? அதிலே அவர்களுக்கு 'கவர்ச்சி' உண்டாகக் காரணம் என்ன?

ஆடவர்கள் பெண்களைக் கண்டு மயங்குவது இயற்கை! அதிலும், அப்பெண்கள் மயக்கும் மோகினிகளாக இருந்தால், சொல்லத் தேவை இல்லை! அவர்கள் கண்ணின் கடைப் பார்வைக்குத் காத்துத் தவங்கிடப்பர்! அப்பெண்டிர் முன்னால் 'கையுங்காலுந் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை போல' அவர் களை மகிழ்விக்க முயலுவர்! இது உலகியலில் நாம் காணும் காட்சி!

சூதாட்டமும் ஒரு மயக்கும் மோகினி என்று வள்ளுவர் சொல்லுகிறார். ஆனால், அந்த மோகினி, 'அழகுத் தெய்வம் அன்று!'' எனவும் அவர் கூறுகிறார். காண்பதற்கு அருவருப்பான தோற்றமுடைய மூதேவி அவள்! அவளுடைய 'அழகிலே' உள்ளத்தைப் பறிகொடுத்தவர்களே சூதாடுவோர். அவ ளுடைய கவர்ச்சி இன்பத்தில் இருந்து 'விடுதல் அறியா விருப்பினராக' அவர்கள், அவளுக்கு அடிமையாகி விடுகின்றனர். அதன் விளைவு என்ன? வயிறு நிறைய உணவு உண்பதற்கும் வழியற்றவராய் அவர்கள் வாடுகின்றனர்! இது மட்டுமா? இன்னும் எத்தனையோ துன்பங்களை விரும்பி ஏற்றுக் கொண்டு அவர்கள் அல்லற்படுகின்றனர்!' ஏன் இப்படி அவர்கள் துன்புற வேண்டும்?' எனத் திருவள்ளுவர் அவர்களைக் கேட்கிறார்! "அழகற்ற ஒரு பெண்ணை! துன்பத்தைத் தவிர வேறொன்றையும் தாராத 'சூது' எனும் பெண்ணைக் காதலித்துத் துன்புறலாமா?" எனக் கேட்டால், "எங்கள் கண்களைக் கொண்டு அவளைப் பாருங்கள்! எத்துணைப் பேரழகியாக அவள் தோன்றுகிறாள் என்பதை உணர்வீர்கள்!" என்று அவர்கள் சொல்லுகின்றனர். இதைக் கேட்ட திருவள்ளுவரின் உள்ளம் குமுறுகிறது! "அட பாவிகளா! நீங்கள் வயிறு நிறைய உணவு உண்ணாதவராகிப் பலவகைத் துன்பங்களை அனுபவித்து அழியப் போகிறீர்களா? அறிவு

வாராதா? அந்த மூதேவியின் பிடியிலிருந்து – மயக்கத்திலிருந்து விடுபடமாட்டீரா?" என ஏக்கத்தோடு அவர் எண்ணுகிறார். அவர்களுக்கு 'இனி விமோ சனமே கிடையாது' என அவர் அறிவிக்கின்றார்!

அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியால் மூடப்பட் டார் (936).

மழையே நீ வாழ்க!

தமிழ்த் தாயின் தவமகனாய், தலைமகனாய்த் தோன்றியவர் வள்ளுவர். மக்கள் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு அவர் காட்டிய வழி எளிய வழி; சான்றோர்கள் பலர் சென்ற வழி; இன்றைக்கும் என்றைக்கும் யாவருக்கும் பயன்படக் கூடிய சிறந்த வழி! அவ்வழியில் சென்றால், நாம் அறிவொளியைப் பெறலாம்; ஆன்மிகப் பேரின்பப் பெருவாழ்வை அடைந்து, அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டினை எய்தலாம்.

வான்மறைதந்த வள்ளுவர் பெருமான், வாழ்வியல் நெறியை வகுத்துக் கூறும் இடத்து, கடவுள் வாழ்த்திற்கு அடுத்து, வான் சிறப்பு எனும் அதிகாரத்தினை அமைத்துள்ளார். இவ் வமைப்பிற்குரிய காரணம் என்ன? "கடவுள் வாழ்த்திற்கு அடுத்து, கடவுளின் மண்ணுலக வடிவங்களாக விளங்கும் 'நீத்தாரின் பெருமை'யைப் பேசும் பகுதியை வைத்து இருந்தால் பொருத்தமாக இருக்காதா?" எனும் எண்ணம் எழலாம்.

இறைவனுடைய அருட்பேற்றின் அறிகுறி

அருள் வடிவானவன் இறைவன். இறைவனுடைய இன்னருளால் உலகம் இயங்கிவருகிறது; யானை முதல் எறும்பு ஈறாக உள்ள உயிர்கள் எல்லாம் அவனுடைய அருள்பேற்றினால் வாழ்வும் வளமும் பெற்று இன்புறுகின்றன.

அந்தப் பேற்றினை உலகத்து உயிர்கள் எவ்வாறு பெறுகின்றன? மழையின் மூலம் பெறுகின்றன. அனைத்துலகிலும் மழையின்றேல் மன்னுயிர் இல்லை! மழை வடிவில் ஆண்டவனுடைய அருள் உணர்வு வெளிப்படுவதாக ஆன்றோர்கள் கூறுவர்.

இப்பேரண்டத்தில், 'கைபுனைந்து இயற்றாக் கவின்பெரு வனப்புடன்' காட்சிதருவது இயற்கை! இயற்கையை இறைவனுடைய உடல் எனக்கொண்டால்,அந்த இயற்கையை இயக்கும் உயிராக இறைவன் ஒளிர்கிறான் என்பது உறுதி. எனவே, இயற்கையும் இறைவனும் இணைந்ததே உலகம்.

'வான்சிறப்பு' எனும் அதிகாரத் தலைப்பினை, 'கடவுளது ஆணையான் உலகமும், அதற்கு உறுதியாகிய அறம்,பொருள், இன்பங்களும் நடத்துவதற்கு ஏதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல்' என்று உரையாசிரியர் விளக்குவர். இவ்விளக்கமும், 'இறைவனுடைய அருள்பேற்றின் வெளிப்பாடே மழை என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறது.

அரசனுடைய அருளினைப் போன்றது மழை என்பதை,

மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!
நாமநீர் வேலிஉலகிற்கு அவனளி போல்
மேல்நின்று தான் சுரத்தலான்

என்று சிலப்பதிகாரம் எடுத்தியம்புகிறது. இவ்வடிகளில் அரசனுடைய அருளுக்கு மழையை உவமையாக இளங்கோ வடிகள் கூறுகிறார். இதே ஒப்புமை இறைவனுக்கு முழுமையாகப் பொருந்தும் அல்லவா?

சொல்லும் பொருளும்

'வான் சிறப்பு' எனும் தொடருக்கு என்ன பொருள்? 'வான்' எனும் சொல்லிற்கு, 'மழை, மேகம், விண்' எனப் பல பொருள் உண்டு. வானத்தில் மேகம் தவழுகிறது; மேகத்திடமிருந்து மழை பெய்கிறது! எனவே, 'வான்' எனும் சொல், 'மழை' எனும்

பொருளை ஆகுபெயராக நின்று, உணர்த்துகிறது. 'சிறப்பு' எனும் சொல்லோ, 'ஒன்றற்கேயுரியது, செல்வம், மதிப்பு, தலைமையும் முதன்மையும்' எனும் பல பொருள்களில் வழங்கி வருகிறது. எனவே, இயற்கையின் பல்வேறு சக்திகளுள் 'மழையே' தலைமையும் முதன்மையும் வாய்ந்தது என்பதை 'வான் சிறப்பு' என்னும் தொடரினால் வள்ளுவர் அறிவிக்கின்றார் எனலாம். மணக்குடவர் எனும் பண்டை உரையாசிரியர் 'மழையினது தலைமை கூறல்' என்று பொருள் கொண்டுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

அதிகாரத் தலைப்பு

''கடவுள் வாழ்த்து' எனும் அதிகாரத்துள் "கடவுள் எனும் சொல்லையே காண்பது அரிது, திருக்குறள் முழுவதிலுமே 'கடவுள்' எனும் சொல் இடம் பெறவில்லை. ஆனால், 'வான் சிறப்பு' எனும் அதிகாரத்தில், 'வான்' எனும் சொல் 'வானின்று உலகம் வழங்கி வருதலான்' (குறள் 11), 'வான் இன்று அமையாது ஒழுக்கு' (குறள் 20) எனும் இரு இடங்களில் வழங்கப் பெற்றுள்ளதைக் காணுகின்றோம். இச் சொல்லோடு, 'அம்' விகுதி சேர்த்து, 'வானம்' எனும் சொல்லை அமைப்பது வழக்கம். இச்சொல், 'வான் சிறப்பில்,' 'சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு' (குறள், 18), 'தானம் தவம் இரண்டும் தங்காவியன் உலகம் வானம் வழங்காதெனின்' (குறள் 19) எனும் குறட்பாக்களில் இடம் பெற்றுள்ளது. இவற்றிலிருந்து, குறட்பாக்களில் இடம் பெற்றுள்ள சொல்லாலேயே, அதிகாரத்திற்குத் தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளமைப் புலனாகின்றது.

மழையின் மாட்சி

உயிர் வாழ உணவு வேண்டும்; உணவுக்கு விளைவு தேவை; விளைவுக்கு மழை தேவை; மழையின் பெருக்கத்திற்குக் கடலாதிக்கம் தேவை; மழையால் உணவுப் பொருள்களின் விளைச்சலைப் பெறும் உலகிற்கு ஒழுக்கம்

தேவை; ஒழுக்க மேம்பாட்டால் தானம், தவம் தவறாமல் நடை பெறும்; அன்றாடப் பூசைகளும் சிறப்புமிகு திருவிழாக்களும் வலிவும் பொலிவும் பெற்று விளங்கும். இவை யாவற்றிற்கும் அடிப்படைத் தேவையாய் இருப்பது மழை! இதனால்தான் 'மழையின்றி மாநிலத்தார்க்கு வாழ்க்கை இல்லை' எனும் பழமொழி எழுந்தது.

உணவுக்குத் தேவை மழை

வான் சிறப்பு' எனும் அதிகாரத்தின் முதல் மூன்று குறட்பாக்கள், உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு மழை எவ்வாறு தேவைப்படுகிறது என்பதைத் தெளிவுறுத்துகின்றன.

உடலோடு உயிரைப் பொருந்தி இருக்குமாறு செய்வது– மருவி இருக்குமாறு செய்வது மருந்து. இதனை ஆருயிர் மருந்து என்பர் மணிமேகலை ஆசிரியர், திருவள்ளுவர் மழையை, 'அமிழ்தம்' என்றே போற்றுகிறார்,

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று (11)

அமிழ்தம் மனித உடலுக்கு மட்டும் அல்லாமல், உயிரினங்கள் எல்லாவற்றின் உடல்களுக்கும் உயிர்ப்பினையும் தளிர்ப்பினையும் வழங்கி வருகிறது, 'அமிழ்து திகழ் கருவிய கணமழை' (பதிற். 17 : 11) என்பர் பண்டைச் சான்றோர். எனவே, இவ்வுலகில் கண்கண்ட அமிழ்தமாக இருப்பது மழையே யாகும் என்பது திருவள்ளுவரின் துணிவாகும்.

உணவாவதும் மழை

பல்வேறு உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு மட்டும் காரணமாக மழை அமையவில்லை; தானே பருகும் நீராகப் பயன்படும் சிறப்பையும் மழை பெறுகிறது. உண்பவர்க்குத் தேவையான உணவுப் பொருள்களை உண்டாக்கி, தானும் உணவாய் இருப்பது மழை என்பதை,

துப்பார்க்குத் துப்புஆய துப்புஆக்கித் துப்பார்க்குத்
துப்புஆய தூஉம் மழை. (12)

என்று வள்ளுவர் அறிவிக்கின்றார்.

உணவை அளிப்பதும், உணவாவதும் மழை என்பது, உயிர்களிடையே கலந்தும், உயிர்களைக் கடந்தும் இறைவன் இருப்பதைப் போன்று மழை பேராற்றல் வாய்ந்ததாயும், பெரும் பயன் விளைப்பதாயும் உள்ள நிலைமையைத் தெளிவுறுத்துகிறது.

பசிப்பிணி மருத்துவன்

அடுத்த குறட்பாவில், மழை பெய்ய வில்லையானால்,உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் பசியால் வருந்தும் என்பதை வள்ளுவர் அறிவிக்கிறார். வேறு வகையாகச் சொல்லுவது என்றால், மழை பெய்யாமல் பொய்த்து விடுமானால் உண்டாகும் கேட்டை மூன்றாவது பாடல் தெரிவிக்கிறது எனலாம்.

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து
உள்நின்று உடற்றும் பசி. (13)

என்பது வள்ளுவர் வாய்மொழி.

உலகத்தை வருத்தும் பசி' என்பது இங்கு ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. பசியிளைக் "காய்பசி, அழிபசி, கொடும்பசி, பசிப்பிணி" எனப் பலவாறாகச் சிறப்பித்துக் கூறுவது மரபு. ஒவ்வோர் அடையும் அதன் தனிச்சிறப்பை உணர்த்துவதாக அமைந்துள்ளதைக் காண்க.

'வயிற்றுப் பசி உண்டானால் என்ன ? அதனால் குடி முழுகியா போய் விடும்?" என்று யாரும் கேட்க மாட்டார்கள். ஏனெனில், அதன் கொடுமையை – துன்பத்தை – அனுபவிக் காதவர் உலகில் இருப்பது அரிது.

உலகெங்கும் உள்ள பசிப்பிணியாகிய கொடிய நோயினை அடியோடு ஒழிக்க வேண்டும் என்பதை எண்ணத்து அளவில் "பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக!" என்று முதன் முதல்

எடுத்துரைத்த தமிழன், மணிமேகலைக் காப்பியத்தை, இயற்றிய சீத்தலைச் சாத்தனாரே யாவார். அச்சான்றோர்,

குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணிகளையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி (11:76–80)

என்று பசியினால் வரும் துன்பத்தை மனம் நொந்து குறிப்பிடுகிறார்.

இடைக்காலத் தமிழகத்தின் 'மக்கள் கவியாக' விளங்கிய ஔவை மூதாட்டியார்,

மானம்குலம் கல்விவண் மையறி வுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை– தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்போம் பறந்து (நல்வழி 26)

என்று அழுத்தந் திருத்தமாக அறிவுறுத்துகிறார்.

உயிரினங்கள் அனைத்திற்கும் பொதுவான ஒரு நோய் பசி! ஆனால், அந்த வயிற்றுப் பசி மனிதனுக்கு வந்து விட்டால், அதனால் மனிதனுக்கு உரிய அறிவுப்பசி, உடற்பசி, ஆன்மிகப்பசி போன்ற பல 'பசிகள்' இருக்கும் இடம் தெரியாமல் ஓடிப்போய் விடும், இதனால் தான். "பொருளும் காமமும் துய்க்கலாற்றாது துன்பமுறும்" என்று மணக்குடவர் மொழிந்துள்ளார். இத்தகைய கொடிய நோயைப் போக்கும் மருத்துவனாக மழை விளங்குகிறது. கடல் நீரும் மழை நீரும் "மழை பெய்யாமல் போனால் என்ன? உலகைச் சுற்றித்தான் கடல்கள் உள்ளனவே! அவற்றின் நீரைப் பயன்படுத்திக் கொண்டால் போகிறது" எனும் எண்ணம் சிலருக்கு எழலாம். உலகம் பரந்த நீரால் சூழப்பட்டது தான்! 'விரிநீர் வியனுலகம் தான் !' ஆனால், அந்த நீரால் என்ன பயன் ? கடல் நீர் உப்பு நீர் ஆயிற்றே! அதைக் கொண்டு என்ன செய்வது? இந்தக் காரணத்தினாலேயே,

உவர்க் கடலன்ன செல்வரும் உளரே!
தெண்ணீர்ப் பெருங்கடல் உண்ணாவாகும்
நீர் வேட்டோரே!

என்று ஆன்றோர்கள் அறிவித்துள்ளனர்.

மழையின் பேராற்றல்

எல்லாத் தொழில்களுக்கும் அடிப்படையானது உழவுத் தொழில்! அதற்கு இன்றியமையாது தேவைப்படுவது நீர். நீரினை வழங்குவது மழை. அம்மழை பெய்யவில்லையானால், மழை எனப்படும் வருவாய் குறையுமானால், உழவர் ஏரினைக் கொண்டு உழமாட்டார்கள். உழவர்கள் நிலத்தினை உழுது பயிரிடவில்லையானால், உணவுப் பொருள் பற்றாக்குறையும், பஞ்சமும் உண்டாகும். இதனால் உலகில் வாழும் மக்கள் பட்டினியால் மாண்டு போவர்; உழவர்கள் வறுமையால் வாடி, அழிவர். இந்நிலையில் மழைபெய்யுமானால், பட்டினியும் நீங்கும்; வறுமையும் மறையும்; மக்களிடையே புதுவாழ்வு பூக்கும்: இத்தகைய பேராற்றலுடையது மழை. மக்களை அழிப்பதும் அழிந்த மக்களுக்குப் புதுவாழ்வு அளித்துப் பொலிவுறச் செய்வதுமான ஆற்றலையுடையது மழை ! இதனை

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால் (14)

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. (15)

எனத் தெய்வப்புலவர் தெளிவுறுத்துகிறார்.

உழவுத் தொழிலின் சிறப்பை எடுத்துரைக்கும் பகுதியிலும் வள்ளுவர்,

உழவினார் கைமடங்கின் இல்லை, விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை. (1036)

என நினைவுபடுத்துகிறார்.

மழை பெய்யா விட்டால்.....!

மனிதர் மட்டுமா, மழையில்லாமல் போனால் வாழ இயலாது? "ஓரறிவுடைய புல்பூண்டுகள் வாழவும், தோன்றவும் இயலாது. வானத்திலிருந்து மழைத்துளி விழாமல் போகுமானால் பசிய புல்லும் தோன்ற முடியாது. புல்லே முளைக்க வில்லையானால், மக்கள் எவ்வாறு வாழ இயலும் ?" என்று அடுத்து வள்ளுவர் வினவுகிறார்.

விசும்பின் துளிவீழின் அல்லாமல்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்ப அரிது. (16)

மழை பெய்ய வில்லையானால், இத்தகைய கேடுகள் மட்டுந்தானா உண்டாகும்? கடல்நீர் ஆவியாக மாறி, மழை பெய்யா விட்டால், பெரிய கடலும் தன் வளம் அற்றுப்போகும். எனவே கடலில் வாழும் உயிரினங்களும் அழிந்து போகும் என்பது இதனால் புலனாகின்றது.

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்து எழிலி
தான்நல்காது ஆகி விடின். (17)

உலகம் – உலக வாழ்க்கை – ஒழுங்காகத் தொடர்ந்து நடைபெறுவதற்கு மூல காரணமாக இருப்பது மழை என்பதைத் திருவள்ளுவர் இவ்வாறு பலவகையாக எடுத்துரைத்துள்ளார்.

ஒழுக்கத்திற்கு உறுதுணை

உலக வாழ்க்கையைச் செம்மையாகவும் சிறப்பாகவும் நடத்துவது எதற்கு? நல்வாழ்வின் மூலம் ஆன்மிகப் பேற்றினை–பேரா இயற்கைப் பெருநிலையாகிய வீடு பேற்றினை அடைவதற்கேயாகும். அப்பெருநிலையை – பேரின்ப நிலையை அடைவதற்குரிய படிநிலைகளே நாள் தோறும் செய்யப்படும் பூசைகளும், சிறப்பாகச் செய்யப்படும் திருவிழாக்களுமாகும். அவற்றிற்கு அடுத்த நிலை அறம் (தானம்) செய்வதாகும்; இதற்குப் பிறகு, மனிதன் தன்னுடைய ஆன்மிகக் கடைத்தேற்றத்திற்காகத் தவநெறியில்

ஈடுபடுவான். இந்நெறியில் ஈடுபடுவோன் உற்ற நோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை ஆகிய அருள் நெறியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் மழை தேவைப்படுகிறது. மழை பெய்ய வில்லையேல்,

சிறப்பொடு பூசனை செல்லாது (18)
தானம்தவம் இரண்டும் தங்கா (19)

என்பதை உலகம் உணர்தல் வேண்டும் என்பது திருவள்ளுவருடைய உள்ளக் கிடக்கையாகும்.

நீர் இல்லாமல் உலகம் வாழ இயலாது. இதைப் போன்றே ஏழை, பணக்காரர், இல்லறத்தார்,துறவறத்தார், தொழிலாளி முதலாளி, ஆண்டான், அடிமை போன்ற பலவகைப்பட்ட மக்கள் தத்தம் தொழில்களைச் செய்ய, ஒழுக்கத்தோடு வாழ இன்றியமையாது தேவைப்படுவது மழையேயாகும். உலகம் வாழ நீர் வேண்டும்! நீர் பெருக மழை வேண்டும் ! ஒழுக்கம் சிறக்க மழை வேண்டும்!

ஒரு நாட்டின் வாழ்வியல், சமூகவியல், பொருளியல், அரசியல், ஆன்மிக இயல் ஆகிய அனைத்தும் இடையறாது அமைதியாக நன்கு நடைபெற வேண்டப்படுவது மழை! அதனை "மழையே நீ வாழ்க!" என வாழ்த்துவோமாக!

தலைவரும் தொண்டரும்

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வள்ளுவர் நல்லதொரு நீதி இலக்கியத்தைப் படைத்துத் தந்தார். அதைக் காலந் தோறும் தோன்றிய அறிஞர் பெருமக்கள், தத்தம் வாழ்க்கைப் பயணத்திற்கு உற்றதுணையாகப் போற்றிப் பயன்படுத்தி யுள்ளனர். அதனுடைய "உறுதியும் தெளிவும், பொருளின் ஆழமும் விரிவும், அழகும்" இடத்தைக் கடந்தும், காலத்தை வென்றும் வழிகாட்டும் ஒளிவிளக்காய் ஒளிரச் செய்துள்ளன.

அறத்துப்பாலில் தனிமனிதனுக்குரிய அறத்தை வள்ளுவர் அறிவுறுத்துகிறார்; பொருட்பாலில் தனி மனிதன் பலரோடு சேர்ந்து பழகுகின்ற பொழுது, மேற்கொண்டு ஒழுக வேண்டிய சமுதாய அறத்தைத் தெளிவுறுத்துகிறார். பொதுவாகப் பொருட்பாலில் கூறப்பெற்றுள்ள அறங்கள் அரசனுக்கும், அவனைச் சார்ந்த அரசியல் அதிகாரிகளுக்கும் உரியனவாகக் கருதப்பெறுகின்றன. முடியாட்சிக் காலத்திற்கு உரைக்கப் பெற்ற பொதுவான உண்மைகளும் அரிய அறநெறிக் கொள்கைகளும் குடியாட்சிக் காலத்திற்கும் பொருத்தமானவை யாகவே உள்ளன.

அன்று மன்னர்கள் நாடாளும் தலைவர்களாக விளங்கினார். இன்று மக்களின் பிரதிநிதிகளாகிய அரசியல் தலைவர்கள் முடிசூடா மன்னர்களாக நாட்டை ஆட்சி

புரிகின்றனர். அன்றைய ஆட்சித் தலைவர் அரசர், மன்னர், வேந்தர் என்று போற்றப்பெற்றனர். இன்றைய அரசியல் தலைவர் அமைச்சர், முதல்வர், குடியரசின் தலைவர் எனப் பலவாறாக அழைக்கப் பெறுகின்றனர். எனவே, பெயரிலும் ஆட்சியமைப்பிலுந்தான் மாற்றம் உண்டாகியிருக்கிறது! அவர்களும் தலைவர்களாகவே விளங்கினார்! இவர்களும் தலைவர்களாகவே விளங்குகின்றனர்! அன்றும் இன்றும் தலைவர்கள் மனிதர்களாகவே உள்ளனர்! அதில் ஒன்றும் மாற்றம் உண்டாகவில்லை!"

தலைவனை அணுகும் முறை

இந்த உண்மையைக் கருத்தில்கொண்டு, நாம் 'மன்னரைச் சேர்ந்தொழுகல்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் உணர்த்தும் கருத்துகளைக் காணலாம்.

'மன்னரைச் சேர்ந்தொழுகல்' என்னும் தலைப்பிற்குத் 'தலைவரைச் சேர்ந்தொழுகுதல்', 'தலைவரைப் பொருந்தி நடக்கும் முறை' என்பதே பொருளாகும். நாடாளும் தலைவனுக்குரிய பண்புகளை முன்னர்த் தெளிவுறுத்திய வள்ளுவர், அத் தலைவனைச் சார்ந்து பழகுகின்றவர் களுக்குச் சிறப்பாகச் சில கடமைகளை இப்பகுதியில் எடுத்துரைக்கின்றார்.

தலைவனைச் சார்ந்து நடக்கின்றவர்கள் அவனிடத்தில் அளவாகப் பழக வேண்டும்; அவனிடமிருந்து மிகவும் விலகியும் இருக்கக் கூடாது; மிக நெருங்கியும் பழகக் கூடாது. தீயில் குளிர் காய்பவர் போல் பழகவேண்டும்;மழைக் காலத்தில் குளிரைப் போக்குவதற்காகத் தீயை மூட்டிப் பக்கத்தில் உட்கார்ந்து குளிர்காய்பவர்கள், நெருப்பின் பக்கத்தில் போனால் நெருப்பு சுடும்; நெருப்பு சுடுகிறதே என அஞ்சி விலகி விடுவார்களானால் குளிர் நீங்காது! இதைப் போன்று, தலைவரிடம் மிகவும் நெருங்கி விட்டால், அவனுடைய அதிகாரத்தால் அழிவு உண்டாகும். ஆனால் விலகி விட்டாலோ, தலைவனால் அடையக்கூடிய

நன்மையை அடைய முடியாமல் போய்விடும். ஆகவே, தலைவனுடைய இயல்புணர்ந்து அன்பு காட்டி விலகியிருந்தும், மதிப்பைக் காட்டி அணுகி இருந்தும் பழகவேண்டும் என்பது எக்காலத்தவர்க்கும் பயன்படத்தக்க அறிவுரையாகும்.

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க!
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார் (691)

என்பது வள்ளுவர் வாய்மொழி.

இன்றைக்குச் சிலர் "இவர் யாருங்க? இவர் எம்மைவிட வயதில் எவ்வளவோ இளையவருங்க! அதுமட்டு மில்லைங்க! இவர் எனக்கு மாமன் மகனுங்க! இவர் ஒன்றும் எனக்குத் தீங்கு செய்ய மாட்டாருங்க!" என்று அமைச்சர்களைச் சுட்டி சொல்லுவதை நாம் கேட்கின்றோம்.

ஆனால், அரசியலறிவில் தெளிவும், தேர்ச்சியும் பெற்ற வள்ளுவர் சொல்லுகிறார்: "இந்தத் தலைவர் என்னைவிட வயதில் இளையவர்; எனக்கு இன்ன முறையில் உறவினர் என்று தலைமைப் பதவியை மதிக்காமல் நடக்கக் கூடாது. பதவிக்குரிய பெருமையைக் கொடுத்து, நாம் அவரைப் போற்றி மதிக்க வேண்டும்!"

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும் (698)

என்பது வள்ளுவர் வாக்கு.

தலைவனை அணுகிப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைப்பதே மிகவும் அரிது. அத்தகைய ஒரு வாய்ப்புக் கிடைக்குமானால் தொண்டன் அதை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், கடமை அவர்களுக்குக் கண் போன்றதும் காலம் பொன்போன்றதும் ஆகும். தலைவனோடு பேசுகின்ற வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால், அவனுடைய குறிப்பை அறிந்து, அவனுக்கு வெறுப்பு இல்லாத செய்திகளையும், விருப்பமான செய்திகளையும் அவனுடைய உள்ளம் விரும்பும்படியாக எடுத்துரைக்க

வேண்டும். விருப்பமானவற்றைச் சொல்லுவதோடு, பயனில்லாதவைகளைத் தலைவனாகக் கேட்டாலும் சொல்லக் கூடாது. இதனை,

குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில்
வேண்டுப வேட்பச் சொலல் (696)

வேட்பன சொல்லி வினையில் எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல் (697)

மன்னரையும் தலைவரையும் சேர்ந்து ஒழுகுகின்றவர் அளவுடன் பழக வேண்டும்; அன்புடன் பழக வேண்டும்; பண்புடன் பழக வேண்டும் என்பது திருவள்ளுவருடைய கருத்தாகும். எல்லை மீறி நடத்தலும், உரிமைப் பாராட்டி நடத்தலும் அரசியலில் விரும்பத் தக்கவை அல்ல!' என்று தலைவனோடு நெருங்கிப் பழகுவோரை–பழக விரும்புவோரை வள்ளுவர் நெறிப்படுத்துகிறார். இவ்வாறு பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் பல, இன்றைய மக்களாட்சிக்குப் பொருத்தமாக அமைந்துள்ளதை நாடாளும் தலைவர்களும், அவர்களைச் சார்ந்துள்ள தொண்டர்களும் உணர்ந்து போற்றினால், பொதுவாழ்வில் ஈடுபடுவோர் தங்கள் பணிகளைச் செம்மையாகச் செய்ய இயலும்.

தலைவனுடைய கருத்தை அறியும் முறை

தலைவனிடம் பேசுவதற்கும் பழகுவதற்கும் முயல்கின்றவர் அவனுடைய உள்ளக் குறிப்பை முதலில் அறிய வேண்டும். அரசன் மனத்தில் எண்ணியிருப்பதை அவன் சொல்லாமலே குறிப்பால் அறிந்து, அதன்படி அமைச்சர் முதலிய அரசியல் அதிகாரிகள் செயலாற்றுவது குறிப்பறிதலாகும். அரசரை அல்லது தலைவர்களைச் சேர்ந்தொழுகும் அரசியல் அதிகாரிகள், தாங்கள் செய்யவேண்டிய கடமையைக் குறிப்பால் அறிதலும் குறிப்பறிதலாகும். இப்பண்பு பொதுவாக உலகத்தில் பிறரோடு பழகுகின்றவர்கள் எல்லாருக்கும் இன்றியமையாது தேவைப்படுவதாகும். பேசுகின்ற பேச்சும், செய்கின்ற

செயலும் மற்றவர்களிடத்தில் எவ்வாறு பயன்தரும் என்று ஆராய வேண்டுமானால், நாம் பிறருடைய உள்ளக் கருத்தை உணர வேண்டும். இவ்வாறு பிறருடைய உள்ளக் கருத்தை உணருவதே ஒரு கலை! அக்கலையில் தேர்ச்சியும் திறமையும் பெற்றோரே வாழ்க்கையில் வெற்றிகள் பல பெறுகின்றனர்.

திருக்குறளில் 'குறிப்பறிதல்' என்னும் அதிகாரம் இரண்டிடங்களில் அமைக்கப் பெற்றுள்ளன. பொருட்பாலில் உள்ளது தலைவனுடைய குறிப்பறிதலைப் பற்றியது. காமத்துப்பாலில் உள்ளது காதலன் காதலியின் குறிப்பை அறிதலும், தோழியின் குறிப்பை அறிதலும், தோழி காதலன் காதலி ஆகிய இருவர் குறிப்பை அறிதலும் பற்றியதாகும். இங்கு நம் ஆய்விற்குரியது தலைவனுடைய உள்ளக்குறிப்பை அறிதல் பற்றியதே.

பிறர் உள்ளத்தை ஆராய்ந்து உணர்வது அரிய செயல். அதிலும் வாய்ச்சொல் இல்லாமல், பிறருடைய முகத்தையும் கண்ணையும் கூர்ந்து நோக்கி அவருடைய 'மனத்தில் உறையும் எண்ணம் யாது?" என்பதை ஆராய்ந்து அறிவது மிக மிக அரிய செயலாகும். இத்தகைய அரிய செயலைச் செய்கின்றவர்களைத் திருவள்ளுவர் புகழ்ந்து போற்றியுள்ளார். அரசன் சொல்லாமலே அவனுடைய முகத்தை நோக்கி, அவன் உள்ளத்தில் நிழலாடும் எண்ணத்தை ஐயப்படாமல் உணர வல்லவன், இந்த உலகத்திற்கே அணிகலன் என்றும், தெய்வம் போன்றவன் என்றும் வள்ளுவர் பாராட்டுகிறார்:

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி (701)

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல் (702)

அரசனைச் சேர்ந்து ஒழுகுகின்றவர் குறிப்பறிதல் வேண்'டும்' என்று உணர்த்திய வள்ளுவர், இங்குக் குறிப்பறிதலில் வல்லவனைப் பாராட்டுவதில் வியப்பில்லை.

ஆனால், ஒருவ ருடைய உள்ளக் குறிப்பை எவ்வாறு அறிவது?' என்னும் எண்ணம் நமக்கு எழலாம். உள்ளத்து உணர்ச்சிகள் மிக விரைவில் வெளிப்படும் இடம் முகம். எனவே, முகத்தைக் கூர்ந்து நோக்கியே, நாம் ஒருவனுடைய உள்ளக் குறிப்பை உணர்தல் வேண்டும்.

ஒருவருடைய உள்ளத்தில் மிகுந்திருக்கும் குறிப்பை அவனுடைய முகம் காட்டும். மனம் மகிழ்ச்சியுற்றாலும், வெறுப்புற்றாலும் அந்த உணர்ச்சியை மற்ற உறுப்புகள் முதலில் உணர்த்துவது இல்லை. முகம் முன்னே உணர்த்துகின்றது. முகத்தைவிட அறிவு மிகுந்த உறுப்பு வேறொன்று உண்டோ? முகத்தைக் கூர்ந்து நோக்கினால் யாவும் எளிதில் புலப்படும்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் (706)

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ? உவப்பினும்
காயினும் தான்முந் துறும் (707)

ஒருவருடைய முகத்தைக் கொண்டே அவருடைய உள்ளக் குறிப்பை நாம் அறிந்து கொள்ளலாம் எனக் கூறுவது வழக்கம். ஆனால், முகத்திலுள்ள கண்களே அந்த உள்ளக் குறிப்பை மிக நன்றாக வெளிப்படுத்துகின்றன. எனவே, கண் பார்வையின் வேறுபாட்டை உணர வல்லவர்களாக நாம் இருந்தால், மற்றவர்களுடைய கண்களே அவர்களுடைய உள்ளத்தில் உள்ள பகையையும் நட்பையும் நமக்குச் சொல்லி விடும். இதனால், நுட்பமான அறிவை உடையவர், பிறரை அறிந்து கொள்வதற்கு உற்ற துணையாக உள்ள அறிகருவி யாதென்று ஆராயுமிடத்து, கண்ணைத் தவிர வேறொன்றும் இல்லை

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும்; கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின் (709)

நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற (710)

என்பன தலைவனோடு பழகுவோர்க்கு வள்ளுவர் கூறும் அறி வுரையாகும்.

தலைவனின் கருத்தைக் கவரும் முறை

அரசரைச் சார்ந்த அறிஞர்களும் பெரியோர்களும் கூடி இருக்கும் மன்றத்தை 'அவை' என்று வள்ளுவர் சுட்டுகிறார். 'அவையறிதல்' என்பதற்கு அந்த அவையில் உள்ளார் இயல்புகளை அறிந்து, அவற்றிற்கேற்பத் தம் கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும் என்பது பொருளாகும்.

ஒரு பொருளைப்பற்றிப் பேசுகின்ற பொழுது, 'யாரிடையில் பேசுகின்றோம்? எதற்காகப் பேசுகின்றோம்?' என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்துப் பேசவேண்டும். அவ்வாறு ஆராயாமல் பேசினால், ஒரு பயனும் உண்டாகாது.

ஒரு பேச்சாளன் ஒழுங்காகவும், நேர்மையாகவும், முரண் பாடில்லாமலும், கேட்பவரையெல்லாம் பிணிக்குமாறும் பேசினால் மட்டும் போதாது. அவன் பேசுகின்ற அவையின் இயல்பினை உணர்ந்து பேசவேண்டும். அப்பொழுது தான், அவனுடைய பேச்சால் எதிர்பார்த்த பயனை அடைய முடியும். பேச்சே முதன்மையிடம் பெற்றுள்ள இன்றைய சனநாயக ஆட்சிக் காலத்தில், பேசுகின்ற தலைவர், தம் முடைய பேச்சால் உண்மையான பயன்விளைய வேண்டும் என்பதில் நாட்டம் உடையவராக இருப்பாரானால், அவர் அரசியல் மேடையில் பேசுவதைப் போல் இலக்கிய மேடையிலோ, கலைத்துறை மேடையிலோ, புராணப் பிரசங்க மேடையிலோ, தொழிற் சங்கக் கூட்டங்களிலோ பேசுவதில்லை. தாம் அம்மேடைகளில் கூறவிரும்பும் கருத்துகள் ஒன்றாகவே இருந்தாலும், இடத்திற்கு ஏற்றவண்ணம் கருத்துகளை எடுத்துரைக்கும் முறையையும், சில சமயங்களில் மொழிநடையையும் அவர் மாற்றிக் கொள்ளுவதையும் நாம் காண்கிறோம். இதையே, 'அவையறிதல்' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் அழகுற எடுத்தியம்புகிறார்.

சொல்லும் சொற்களின் தொகுதியை அறிந்த தூயவர்கள், கூட்டத்தில் உள்ளவர்களுடைய இயல்பினை அறிந்துகொண்டு, அதற்கேற்ப ஆராய்ந்து பேசவேண்டும். அவ்வாறு பேசுவதே ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் பயன்படுத்தும் முறையை அறிந்தவர்களுடைய கடமையாகும். சொற்களை வழங்கும் முறையை ஆராய்ந்து பேசினால் மட்டும் போதாது. எந்தக் கருத்தை, எந்தச் சமயத்தில் எடுத்துரைக்க வேண்டும் என்பதையும் தெரிந்துகொண்டு பேசவேண்டும் என வள்ளுவர் கூறுகிறார்:

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக! சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர் (711)

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக! சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர் (712)

அறிவுநலமிக்க அறிஞர்களிடையே பேசும்பொழுது பேச்சாளனும் அறிவு மிகுந்தவனாகப் பேசவேண்டும். அறிவு குறைந்தவர்களின்முன் ஒன்றும் அறியாதவன் போல், அவன் இருக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல் (714)

தம்மைவிட அறிவில் முதிர்ந்தவர்களின் கூட்டத்தில் முந்திக் கொள்ளாமல் இருக்க வேண்டும். அவ்வாறு அடக்கமாக இருத்தலே சிறந்த பேச்சாளனுக்குரிய நல்லியல்பாகும். கற்றவர்கள், தங்களைப்போல் கற்றவர்களின் கூட்டத்தில் பேசுவதே மிகுந்த பயனைத்தரும். குற்றம் நீங்கச் சொற்களை ஆராய்ந்து பார்க்கவல்ல அறிஞர்களின் கூட்டத்தில் கற்று அறிந்தவர் களின் கல்வி மேலும் விளக்கம் பெறும்.

கற்றறிந்தார் கல்வி விளங்கும் ; கசடறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து (717)

என்று கூறும் வள்ளுவர், ஓரிடத்தில் மட்டும் பேசாதே என்று எச்சரிக்கை செய்கிறார்.

அறிவாலே தம் இனத்தவர் அல்லாதார் அவையில், அறிவுடையார் ஒரு பொருள் பற்றிப் பேசுதல், சாய்க்கடையில் சிந்திய அமிழ்தம் போன்றது ஆகும் என்று அவர் குறிப்பிடு கிறார்:

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல் (720)

அமிழ்தம் யாருக்கும் எளிதில் கிடைக்கக் கூடிய பொருள் அன்று!உண்பவர் கையில் கிடைத்து இருந்தால்அதைமகிழ்ச்சி யோடு போற்றி உண்பர். அது உண்பவருக்குப் பயன்படாமல், சாய்க்கடையில் சிந்தப்பெற்றால், அதனால் மனிதருக்கு மட்டுமல்லாமல், ஈ, எறும்பு போன்ற உயிரினங்களுக்கும் பயன்படாமல் வீணாகப் போய்விடுகிறது. அதைப் போன்று நல்லோர் அவையில் பேசுவது அமிழ்தத்தை ஆவலோடு உண்டு மகிழ்பவரிடத்தில், அதைக் கொடுப்பதைப் போன்றதாகும். புல்லறவாளர் நிறைந்துள்ள அவையில் பேசுவதோ சாய்க்கடையில் சிந்திய அமிழ்தம் போன்று பயனற்றுப் போகும். இந்த உவமையால் தகுதியற்றவர் அவையில் பேசுவது, எவ்வகையிலும் பயன்தராது என்பதை வள்ளுவர் தெளிவுறுத்துகின்றார்.

அறிவுடைய ஒருவன் இடமறிந்து பேசவேண்டும்; கால மறிந்து பேசவேண்டும்; பயன் தரத்தக்க வகையில் சொற்களின் பொருள் தெரிந்து பேசவேண்டும்; கேட்போருடைய தகுதியறிந்து பேசவேண்டும். இவ்வாறு பேசுவோரை எளிதில் தலைவன் இனங்கண்டு கொள்ளுவான். இதனால் தலைவருடைய அன்பையும் ஆதரவையும் தொண்டன் எளிதில் பெறஇயலும்.

பொய்தீர் ஒழுக்கநெறி

மக்கள் எல்லாரும் வளமாகவும் நலமாகவும் வாழ விரும்புவது இயற்கை. 'எல்லாரும் வாழப் பிறந்தவர்கள்' என்னும் கருத்து மக்களாட்சி மலர்ந்திருக்கும் இந்நூற்றாண்டிற்குரிய சுலோகமாக ' உலகமெங்கும் ஒலிக்கப்படுவதைக் கேட்கின்றோம். இக்கருத்து மக்களின் உள்ளங்களில் ஆழப் பதிந்தமையின் விளைவாக, உலகின் பல பகுதிகளில் உரிமைப்போர் தொடுக்கப்பட்டதை வரலாறு எடுத்தியம்புகிறது. ஆனால், மக்கள் எல்லாரும் எவ்வாறு வாழவேண்டும் என்பதைப் பற்றி வரையறுத்துக் கூறுவதிலே. கருத்து வேற்றுமை நெடுங்கால மாக இருந்து வருகிறது.

இருவகை மக்கள்

மக்கள் எப்படியாகிலும் வாழ்ந்து, வாழ்க்கையின் பயனாகிய இன்பத்தை அடையலாம் எனக் கூறுவோரே உலகில் மிகப்பலராக உள்ளனர். 'வாழ்க்கை இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று வரையறுத்துக் கொண்டு வாழ விரும்புவோரும், வாழ்பவரும் மிகச்சிலரே யாவர். இவர்களுடைய குறிக்கோளும் இன்பத்தை அடைய வேண்டும் என்பதுதான். ஆனால், வாழ்வின் பயனாகிய இன்பத்தை அடைவதற்குரிய வழியும் சிறந்ததாக இருக்க வேண்டும் என்பதில் இவர்கள் கண்ணுங்கருத்துமாக உள்ளவராவர்.

அப்பொழுதுதான் வாழ்க்கையும் சிறப்புடையதாக இருக்கும்; வாழ்க்கையின் பயனாகிய இன்பமும் சிறந்த, உயர்ந்த இன்பமாக அமையும் என்பதில் இவர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளனர். இவ்வாறு மக்கள் வாழமுயன்றால், அவர்கள் உலகில் வாழ்வாங்கு வாழ்வதோடு, பொன்றாப் புகழ் பெற்று விளங்கவும் முடியும் என்பது சான்றோர்கள் கண்ட உண்மையாகும்.

வாழ்க்கை வளமாகவும் நலமாகவும் அமைவதோடு சிறப்புடையதாகவும் விளங்கவேண்டும் என்றால், வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய நெறிமுறைகள் எவை என்பதை மக்கள் நன்குணர்தல் வேண்டும். இல்லாத ஊருக்கும் போகாத வழியில் மக்கள் புதியதாகச் செல்ல முயன்று சொல்லொண்ணாத துன்பத்திற்கு ஆளாகி அல்லற்படுவதை விட, சமுதாயம் என்னும் வழுக்கு நிலத்தில் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பே, "எங்குச் செல்ல வேண்டும்? எப்படிச் செல்லவேண்டும்?" என்பதை நன்றாகச் சிந்தித்து, பின்னர் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்க வேண்டும். அவ்வாறு வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குவோர், 'நாலுபேர் சென்ற வழி' எது என்பதை ஆராய்ந்து பார்த்து, அவ்வழியில் தங்கள் வாழ்க்கைத் தேரைச் செலுத்துவர்.

அவ்வழி பெரும்பாலும் கரடு முரடானதாக– மேடு பள்ளங்கள் நிறைந்ததாக இருக்காது. எனவே,வாழ்க்கைத் தேர் தங்குதடையின்றி அவ்வழியில் வசதியாகச் சென்று குறிக்கோள் நகரை எளிதில் அடையும்.

வாழ்க்கை நெறி

இவ்வாறு வாழ்க்கைத்தேர் விரைவில் எளிதாகச் செல்லுவதற்குரிய வழியை, நம்முடைய முன்னோர்கள் பன்னெடுங்காலத்திற்கு முன்பே, நன்கு கண்டறிந்து இருந்தனர். அவ்வழியைச் ' சான்றோர் சென்றநெறி ' (புறம் – 134) என்றும், 'பெரியோர் அடிவழி' (பத்து : 6: 191) என்றும்,

'சிறப்புடை மரபு' (புறம் 31) என்றும், 'நல்லாறு' (புறம் 195; குறள் 324) என்றும் போற்றி வந்தனர். இந்நெறியை 'வாழ்க்கை நெறி' எனப் பொதுவாகக் கூறலாம்.

தனி மனிதர்களாகிய சான்றோர்கள் தத்தம் வாழ்க்கையில் கடைப்பிடித் தொழுகிய பழக்கங்களை, அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் முதன் முதலில் பின்பற்றி நடக்கலாயினர். நாளடைவில், அச்சான்றோர்களின் பழக்கங்கள், அவர்கள் வாழும் சமூகத்தினரால் சிறப்புடையதாகப் போற்றப்பட்டுப் பெரும்பான்மை மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தன, அத்தனிமனிதர்களின் பழக்கங்களே, ஒரு குறிப்பிட்ட மக்கள் சமுதாயத்தின் வழக்கங்களாகப் போற்றப்படும் தகுதியையும் சிறப்பையும் அடைந்து, அதனை மற்றவர் கடைப்பிடித்து ஒழுகுவர். இத்தகைய 'வாழ்க்கை' நெறியை, வழக்காற்று ஒழுக்கநெறி' (Customary Morality) என்பர்.

ஒழுக்கம்

இவ்வழக்காற்று ஒழுக்கநெறியே, மக்கள் வாழ்க்கையின் அடித்தளத்தைச் செம்மையாக அமைத்துத் தருவதாகும். எனவே,சான்றோர் சென்ற நெறியாகிய இவ்வழக்காற்று ஒழுக்க நெறியைக் காலப்போக்கில் "ஒழுக்க நெறி" எனப் பொதுப் படையாகக் கூறுவது மரபாயிற்று. ஒழுக்கம் என்னும் சொல், 'ஒழுகு' என்னும் வேர்ச்சொல் அடிப்படையாகப் பிறப்பதாகும். 'ஒழுகு' என்னும் சொல்லிற்கு இடையறாது கடைப்பிடித்தல் என்னும் மற்றொரு பொருளும் உண்டு. இடையறாது மழை நீர் ஒழுகுவதை 'ஒழுக்கு' என்பதைப்போல, வாழ்க்கையில் உயர்ந்தவையெனக் கருதப்படும் நெறிமுறைகளை எக்காலத்தும், எவ்விடத்தும், இடையறாது இறக்கும் வரை ஒருவன் கொண்டொழுகுவதையே, நம்முடைய முன்னோர்கள் 'ஒழுக்கம்' என்று போற்றினர்.

'ஒழுகு' என்னும் வேர்ச் சொல்லிற்கு 'நட' என்னும் பொருளும் உண்டு. எனவே, 'ஒழுக்கம்' என்பது 'நடக்கை * எனவும் பொருள் தரும். நமது மொழி மரபுப்படி 'நடக்கை' என்பது

'நன்னடக்கையையே' குறிப்பதாகும். இதனால்,வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் சென்ற வழியிலேயே நாமும் நடந்து செல்வது 'ஒழுக்கம்' எனப் போற்றப்படுவது புலனாகின்றது.

ஒழுக்க நெறியே, மக்களுக்குச் சிறந்த இன்பத்தை இவ்வுலகில் அளிப்பதோடு, சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய பேரின்ப வாழ்விற்கும் வழிகாட்டியாக அமைகிறது என்பது நமது ஆன்றோர்கள் கண்ட முடிவாகும். சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினோராகிய மக்களுடைய வாழ்க்கையில் அடையத்தக்க உறுதிப்பேறு 'பேரின்பம்' என்பது உலகிலுள்ள பல்வேறு சமயங்களும் ஒருமுகமாகப் போற்றும் உண்மையாகும். அப்பேரின்பத்தை அடைவதற்கு ஒழுக்கநெறி வாழ்வாகிய அறவாழ்வு இன்றியமையாதது என்பதைப் பல்வேறு சமயங்களின் கொள்கைகளும் கோட்பாடுகளும் தெரிவிக்கின்றன. அவ்வொழுக்க நெறியும், 'பொய்தீர் ஒழுக்கநெறியாக இருக்கவேண்டும் என்பதே வான்மறை தந்த வள்ளுவரின் உள்ளக் கிடைக்கை யாகும்.

பொய்தீர் ஒழுக்கம்

வள்ளுவர் பொய்தீர் ' என்னும் அடை மொழியினைக் கொடுத்து ஒழுக்க நெறியைச் சிறப்பித்தமைக்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தறிதல் நம்முடைய கடமையாகும். 'பொய்' என்னும் சொல், "குற்றம், தவறு, தீமை, வஞ்சனை, நிலையற்ற தன்மை, உள்ளீடற்றது" என்னும் பல்வகைப் பொருள்களையுணர்த்துவதாகும். இவை யாவற்றைக் காட்டிலும், 'பொய்' என்னும் சொல் 'உண்மைக்கும் மெய்ம்மைக்கும் மறுதலையானது' என்னும் பொருளையே சிறப்பாக உணர்த்துவதைக் காணலாம். இதனால்தான் 'பொய்தீர் ஒழுக்கநெறி" என்பதற்கு 'மெய்யான ஒழுக்கநெறி' என்று பரிமேலழகர் உரை விளக்கம் தந்துள்ளார். 'தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டாகும்' என்னும் தொல்காப்பிய நூற்பாவினால் 'தீர்' என்பது 'நீக்கற்பொருளை உணர்த்தும் வேர்ச்சொல்' என்பது தெரியவருகிறது. எனவே 'பொய்தீர்'

என்பது, 'பொய்யற்ற', 'பொய்யில்லாத,' 'பொய்ம்மை நீங்கிய' என்னும் பொருளைத் தருவதால் பரிமேலழகர், பொய்ம்மைக்கு மறுதலையான மெய்ம்மையை இச்சொல் உணர்த்துவதாகக் கொண்டு, அவர் மெய்யான ஒழுக்கநெறி என்றார்.

அம்மெய்யான ஒழுக்க நெறி எது என்பதைத் திருவள்ளுவரே குறிப்பாகக் கூறியுள்ளார்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் (6)

என்னும் குறட்பாவின் மூலம், ஐம்பொறி வாயிலாகப் பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்கநெறியில் நின்றவர், நிலைபெற்ற நல்வாழ்க்கை வாழ்பவர் என்று அவர் அறுதியிட்டு உரைக்கின்றார். இதனால், ஒழுக்க நெறிகள் பல உள்ளன என்பதும், அவற்றுள் 'மெய்யான ஒழுக்கநெறி' எது என்பதை நன்கு ஆராய்ந்து தெளிந்து, அந்நெறியில் நின்று ஒழுகுதலே சிறப்புடையது என்பதும் பெறப்படுகின்றன.

சமயம்

'மெய்யான ஒழுக்க நெறி' என்பது ஐம்பொறிவாயிலாகப் பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய 'பொய்யற்ற ஒழுக்கநெறி' எனப் போற்றப்படுகிறது. இதனால், இறைவனோடு தொடர்புடைய அல்லது இறைவனால் வகுக்கப்பெற்ற ஒழுக்க நெறியே, மெய்யான ஒழுக்கநெறி எனப்போற்றப்படுவது புலனாகின்றது. இவ்வாறு இறைவனோடு தொடர்புடைய ஒழுக்க நெறியைச் 'சமயம்' என்றும், 'மதம்' என்றும், 'கடவுள்நெறி' என்றும் பலவகையாகக் கூறுவர். வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்ட ஒழுக்க நெறியே 'சமயம்' எனப் பல்லோராலும் போற்றப்படுகின்றது.

ஆங்கிலத்தில் சமயத்தை 'ரெலிஜன்' (Religion) என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றனர். இச்சொல் 'பிணைப்பது','ஒன்று சேர்ப்பது' என்னும் பொருளையுணர்த்தும் 'ரெலிக்கரே' (Religare) என்னும் இலத்தீன் மொழிச் சொல்லின் திரிபாகும். இதனால்,

மக்கள் உள்ளங்களை இறைவன் இடத்தில் பிணைப்பது 'சமயம்' என்றும், மக்களுடைய உணர்வையும் உயிரையும், அறிவையும் ஆற்றலையும் இறைவனிடத்து ஒருமுகப்படுத்துவதே சமயம் என்றும் அறிஞர்கள் விளக்கம் தந்துள்ளனர். மற்றும், சமயத்தின் அடிப்படை நோக்கம் என்னவென்பது தெளிவாகின்றது.

உலகில், இந்நாள் வரை தோன்றியுள்ள மெய்யுணர் வாளர்கள் எல்லாரும், சமயத்திற்குத் தந்துள்ள விளக்கங்கள் யாவும் மக்களுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒரு பேராற்றல் உண்டு என்பதையும், மக்கள் அப்பேராற்றலின் ஆட்சிக்கு உட்பட்டு வாழ வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் உணர்த்துகின்றன. மேலும், அச்சான்றோர்கள், அப்பேராற்றலோடு மக்கள் தொடர்புகொள்ள முயலுவதே 'சமய வாழ்வு' என்றும் மொழிந்துள்ளனர்.

மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி வகுத்துத்தந்த திருவள்ளுவர், மக்கள் தம்மைவிட உயர்ந்ததும், சிறந்ததும், வலிமைபெற்றதும், தம்மால் முற்றிலும் அறியப் படாததுமான ஓர் உண்மையுடன், ஆற்றலுடன் தமக்குள்ள தொடர்பையறிய உதவும் வாழ்க்கை நெறியை – ஒழுக்க நெறியைப் – பொய்தீர் ஒழுக்கநெறி என எடுத்தியம்புகின்றார். பண்டைத் தமிழர்தம் கடவுள் நெறியைத் தான், வள்ளுவர் பெருமான் "பொய்தீர் ஒழுக்கநெறி " எனச் சுட்டியுள்ளதாகத் தோன்றுகிறது.

அறமே வடிவான அன்புசால் பெரும!
முப்பால் முனிவ! நின்மலரடி. போற்றும்!
ஒருமனம் எய்தி, இருவினைப் பிணிநீங்கி,
முப்பகை கடந்து, நால்வகைப் பொருள்
உணர்ந்து, பொய்தீர் ஒழுக்க நெறி நின்று
ஓங்குநீர் உலகிடை யாவரும், என்றும்
நீங்கா இன்ப மொடுநீடு வாழ்ந்திடப்
பாங்காய் நும்மைப் பரவுதும் யாமே!

– க.த.தி.

ஒப்புரவு

உலகில் மக்கள் பலமொழிகளைப் பேசுகின்றனர். பேசுகின்ற மொழியின் அடிப்படையில் மக்களினத்தைப் பல்வேறு குழுவினராக, இனத்தவராக, நாட்டவராகப் பாகுபடுத்தும் பழக்கம் மிகப்பழைமையானது. ஆயினும், இந்நூற்றாண்டில் தான், இப்பழக்கம் பெருவழக்கு ஆகியுள்ளது எனலாம். "இனம் என்பது ஒரு புனைகதை' எனும் கருத்து செல்வாக்கு அடைந்ததன் விளைவாக, மொழியடிப்படையில் மக்களையும், அவர்களுடைய பண்பாட்டையும் வகைப்படுத்தும் வழக்கம் இந்நூற்றாண்டில் வலிவும் பொலிவும் பெற்றது. குறிப்பிட்ட ஒரு மொழியைப் பேசும் மக்களின் பண்பாட்டைப் புலப்படுத்தும் கருவிகளுள், அம்மக்கள் பேசும் மொழியே, முதன்மையான இடத்தைப் பெறுகிறது.

பண்பாட்டுக் கலைச்சொற்கள்

தமிழ்மொழி யுணர்த்துவது தமிழ்ப் பண்பாடு. தமிழில் வழங்கும் ஐந்தாறு சொற்களைக் கொண்டு, நாம் அப்பண்பாட்டின் முக்கிய இயல்புகளைத் தெளிவுறுத்த இயலும். தமிழ்ப் பண்பாட்டினை ஐந்திணை, அகம், புறம், சால்பு, ஒப்புரவு, பக்திஎனும் சொற்களைக் கொண்டு கோடிகாட்டலாம். இப்பண்பாட்டுக் கருத்து, விளக்கச் சொற்களில்,ஒப்புரவு எனும் சொல்லால் அறியப்படும் தமிழ்ப்பண்பாட்டின் தனிப்பெருஞ்

சிறப்பினை விளக்க முயல்வதே இவ்வாய்வுரையின் நோக்கமாகும்.

இலக்கியச் சிறப்பு

ஒப்புரவு எனும் சொல் தனித் தமிழ்ச் சொல். இது ஒப்பு, உரவு (ஒப்பு + உரவு = ஒப்புரவு) எனும் இரு சொற்களின் சேர்க்கையால் உண்டானது என்பது ஒருசார் அறிஞர்களின் கருத்தாகும். இச்சொல்லிற்கு 'ஒற்றுமை, சமம், உலகவொழுக்கம்,உதவி, சமாதானம் செய்தல்' எனும் பல பொருள்களைத் தருகிறது தமிழ்ப் பேரகராதி.[1] அதே அகராதி ஒப்புரவறிதல் எனும் சொல்லிற்கு 'உலக நடைக்கேற்ற உபாயங்களைத் தெரிதல்" [2]எனும் விளக்கத்தையும் அளிக்கிறது.

இச்சொல்லைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பல நிலைகளில், பல்வேறு இடங்களில் பயன்படுத்தியுள்ளனர்

தாமே ஒப்புரவு அறியின் (நற். 220:8)
புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவி னல்ல பிற (குறள். 213)
இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர் (ஷெ. 218)
ஒப்புரவினால் வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து (ஷெ. 220)
அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் (ஷெ. 983)
உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை (ஷெ.480)

என்பன சங்க இலக்கியத்துள் இடம் பெற்றுள்ளப் பாடற் பகுதிகளாகும். இவையல்லாமல் நாலடியார்.[3] நான்மணிக்கடிகை,[4]

---

1 தமிழ் லெக்சிகன், பக். 596
2 ஷை, பக்,596
3 நாலடியார் 22, 37, 148
4 நான்மணிக்கடிகை, 80

பழமொழி,[5] ஆசாரக்கோவை,[6] முதுமொழிக்காஞ்சி,[7] ஆத்திசூடி [8]போன்ற நீதி நூல்களிலும் இச்சொல் வழங்கப்பட்டுள்ளதைக் காணுகின்றோம்.

மூவகை விளக்கம்

திருக்குறளின் இருபத்திரண்டாவது அதிகாரம் ஒப்புரவறிதல் என்பதாகும். திருக்குறளுக்குப் பண்டைக் காலத்திலேயே பல உரைகள் எழுதப்பட்டுள்ளன. அவ்வுரைகளுள் மூன்று வகையான விளக்கங்கள் இச்சொல்லிற்குத் தரப்பட்டுள்ளன. அவற்றுள் 'உலக நடை'[9] என்பது பரிமேலழகரின் விளக்கமாகும். இவருடைய விளக்கத்தையே பெரும்பாலான அறிஞர்கள், அன்றுமுதல் இன்றுவரை பின்பற்றி வருகின்றனர். இவருக்குக் காலத்தால் முற்பட்டவரான மணக்குடவர்,

> ஒப்புரவறிதலா வது இல்லென இரந்து வந்தார் யாவர்க்கும் வரையாது கொடுக்கும் ஆற்றல் இலரெனினும், தம் அளவிற்கும் தம் வருவாய் அளவிற்கும் ஏற்கத்தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தல் [10]

என்று இச்சொல்லின் பொருளைத் தெளிவுறுத்தியுள்ளார். இவர்களிருவருக்கும் பிற்பட்டவரான கவிராஜ பண்டிதர், "உலகத்திற்கு ஏற்ற நடத்தையை அறிந்து செய்வது. உலக நடத்தையாவது தருமசாஸ்திரங்களிலே சொல்லப்பட்ட தருமத்தின் வழியே நடப்பது"[11] என்று விரித்துரைத்துள்ளார்.

---

5 பழமொழி 217

6 ஆசாரக்கோவை 1,

7 முதுமொழிக்காஞ்சி 52

8 ஆத்திசூடி,10

9 திருக்குறள் உரைவளம், அறத்துப்பால், பக்.285 –289

10, 11 ஷ (ச. தண்டபாணிதேசிகர் பதிப்பு)

இம்மூவகை உரையுள் மணக்குடவர் 'இயன்ற உதவி' எனும் பொருளிலும், பரிமேலழகர் 'உலக நடை' (ஒழுக்கம்) எனும் பொருளிலும் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இவர்கள் இருவரும். இருவகை நோக்கில்–அதாவது ஒருவர் அறச்செயலாகவும், மற்றொருவர் அறப்பண்பாகவும் இச்சொல்லின் பொருளை விளக்க முயன்றுள்ளனர். மூன்றாவது விளக்கம் தந்தவர் 'சாஸ்திரங்களிலே சொல்லப்பட்ட தருமத்தின் வழியே நடப்பது' என்று துணிந்து கூறியுள்ளார். இவருடைய கருத்தைச் சிறிது விரிப்போமானால் "சாஸ்திரங்களிலேநால்வகைச் சாதியினருக்குச் சொல்லப்பட்ட சநாதந தருமத்தின் வழியேநடப்பது" எனும் பொருள் புலனாகும். இப்பொருள் திருவள்ளுவர் கருதாத ஒன்றாகும். ஒப்புரவறிதல் எனும் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களுள் ஒன்றில்கூட, இக்கருத்தின் நிழலைக் காண்பது அரிது. எனவே, தாம் வாழ்ந்த காலத்தின் கொடுமைக்கு எளிதில் இரையாகிவிட்ட கவிராஜ பண்டிதர், மூலநூல் ஆசிரியரின் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் – உள்ளத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்.

புத்துலகச் சிந்தனை

இவ்விருபதாம் நூற்றாண்டில் திருக்குறளுக்கு இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட புத்துரைகள், தழுவல் உரைகள், ஆராய்ச்சியுரைகள் வெளிவந்துள்ளன. அவ்வுரைகள் ஒப்புரவிற்குத் தந்துள்ள விளக்கம் நம் கருத்தைக் கவருவதாகும், அவையனைத்தையும் தொகைவகைப்படுத்திப் பார்க்கின்ற பொழுது, எண் வகையான பொருள்களுள் அவற்றை அடக்கிக் கூறலாம் போல் தோன்றுகிறது.

கோ. வடிவேல் செட்டியார் எனும் பெரும்புலவர் 'ஒப்புரவு' எனும் சொல்லிற்கு 'உலக ஒழுக்கம்'[12] என்று பொருள் கொண்டுள்ளார், மு. இராகவையங்கார் அவர்கள் "பொதுநிலைத்

12 திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், பக். 205

தன்மம்' (பூர்த்தம்)[13] என்று விளக்கம் தந்துள்ளார். 'பிறருக்கு, உதவுதல்' எனும் பொருளையே[14] டாக்டர் சி.இலக்குவனார், தவத்திரு அழகரடிகள் போன்றோர் கொண்டுள்ளனர். 'ஆற்றாதவர்க்கு ஈவதாம் கடனறி வாழ்க்கை,[15] என்று பேராசிரியர் வ. சுப. மாணிக்கனார் குறிப்பிடுகின்றார். 'உள்ளவர் இல்லாதவர்க்குஉதவி,உலகவாழ்வைச்சமன்செய்வதுஒப்புரவு செய்தலாகும்[16] என்பது புலவர் குழந்தையின் உரையாகும். 'ஒப்புரவாவது சமதர்மம் (Socialism)' என்பது தோழர் ப. ஜீவானந்தம் அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.[17] ஒப்புரவு மன்பதை (சமுதாய)த் தொண்டினைக் குறிப்பதாகத் தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார் கருதினார்.[18] 'தம்மைச் சார்ந்த பிறரைத் தம்மோடு ஒத்த நன்னிலை அடையும்படி செய்தல், அவருடைய குறைகளை உணர்ந்து அவற்றை நீக்குவதற்கு வழியறிதல் ஒப்புரவு எனப்படும். தம்முடைய குலத்தினருக்கும் நாட்டினருக்கும் இடர் வந்தபோது உதவுதல் ஒப்புரவு என்ப'[19] என்பது பேராசிரியர் கா.சு.பிள்ளையின் கருத்தாகும். "தம் வாழ்க்கை முழுதும் பிறர்க்குப் பயன் பட வேண்டும் என்பதை அறிந்து வாழ்தல்"[20] என்பது டாக்டர் மு. வரதராசனாரின் விளக்கமாகும். 'தத்தம் (செல்வத்தின்) அளவறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளுதல்[21] ஒப்புரவறிதலாகும் என்பர் தேவநேயப் பாவாணர். இவ்விளக்கங்கள் யாவும், திருவள்ளுவரின் உள்ளக் கிடக்கையை ஓரளவிற்கு உணர்ந்து கொள்ள உதவுகின்றனவேயொழிய, முழுமையாக அவருடைய கருத்தைத் தெரிந்து கொள்ள பயன்படா.

---

13 'ஈகை' – செந்தமிழ், தொகுதி 7, பகுதி 6, பக். 148.

14 திருக்குறள் எளிய பொழிப்புரை, பக். 49.

15 வள்ளுவம், பக். 89.

16 திருக்குறள், பக்.84.

17 இலக்கியமும் வாழ்க்கையும்,13.

18 திருக்குறள் விரிவுரை, பகுதி 1, பக்.119.

19 திருக்குறள் தெளிபொருள் விளக்கப் பொழிப்புரை, பக் 62.

20 திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் பக். 360

21 திருக்குறள் தமிழ் மரபுரை, பக். 129.

இந்நிலையில், திருக்குறளைப் பிற மொழிகளில் – சிறப்பாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள் ஒப்புரவைக் குறித்து என்ன கருதுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முயன்றால் புத்தொளி கிடைக்கக் கூடும். டாக்டர் ஜி.யூ. போப்பு 'பொருத்தமானது (Befitting)' என்று பொருள் கொண்டுள்ளார்.[22] நடைமுறை வரம்பிற்குப் பொருந்திய செயல் (According to propriety)'எனஎல்லீசாரும்[23](Beneficence)என்றுஜே.லாசருசும்[24] பொருள் கொண்டுள்ளனர். 'சமுதாயக் கூட்டுறவு'[25] என்று ராஜாஜியும்,'கொடைத்திறன்அறிதல்'என்றுஅ.சக்ரவர்த்தியும்[26] விளக்கம் தந்துள்ளனர். 'சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய கடமை'[27] என்பது கே.எம்.பாலசுப்பிரமணியம், கவியோகி சுத்தானந்த பாரதி ஆகிய இருவரின் கருத்தாகும். உடன் வாழ்வோருக்குக் கடமைப்பட்டுள்ளதை உணர்தல்[28] என்பது ஜி.வான்மீக நாதன்பிள்ளை அவர்களுடைய விளக்கமாகும்.

இவ்வறிஞர்களின் கருத்துகளோடு டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சரின் 'மனித இனத்திற்குச் செய்யும் தொண்டு"[29] எனும் கருத்தைப் பிணைத்துப் பார்க்கின்ற பொழுது, ஓர் உண்மை புலனாகின்றது. 'அனைத்துலக மனிதனைப் பாடிய பாவலரான வள்ளுவர், மனித குலம் முழுமைக்கும் (சாதி, சமய, இன, இட, மொழி வேற்றுமைகளைக் கருதாமல்) தொண்டு செய்வதற்குரியஉள்ளஉணர்வைப்பெற்றுச்செயற்படுவதையே 'ஒப்புரவறிதல்' எனும் சொல்லால் குறித்தனரோ எனும் எண்ணம் எழுகின்றது.

---

22 The Sacred Kurral of Tiruvalluvar, P. 123,

23 Ellis Commentary on Tirukkural, P. 92.

24 Tirukkural with English Translations, P. 71.

25 Kural, The Great Book of Tiruvalluvar, P. 33

26 Tirukkural, P. 121.

27 Tirukkural of Tiruvalluvar, P. 45 & Tirukkural with English Couplets, P. 45.

28 The Tirukkural, Ch. 22

29 Indian Thought and Its Development, P. 199.

புதிய விளக்கம்

இதனை ஆழ்ந்து சிந்திக்கின்ற பொழுது, 'தன்னோடு ஒத்த நிலையில் வைத்துப் பிறரைப் போற்றுதல்' எனும் பொருளினை ஒப்புரவுக்குரிய விளக்கமாகக் கூறத் தோன்றுகிறது. 'ஒப்புரவு' எனும் சொல்லை 'ஒப்பு, உரவு' எனப் பிரித்துப் பொருள் கொள்ளாமல், ஒ, புரவு (ஒ+புரவு = ஒப்புரவு) எனப் பிரித்துப் பார்ப்போமானால், புதிய பொருள் கொள்ள இச்சொற்கள் இடம் தருகின்றன. ஒ, எனும் எழுத்தை ஓரெழுத்து ஒரு (சொல்) மொழி எனக் கூறுவது நம் இலக்கண மரபாகும். இச்சொல்விற்கு, 'போலுதல், சமமாதல், சம்மதமாதல், ஒழுக்கமுடைய வராதல், ஒற்றுமைப்படுதல், இல்லாத ஒன்று இருத்தலைப் போன்று தோன்றுதல்'[30] எனும் அறுவகைப் பொருள் வழங்கி வருகின்றன. இவற்றுள் ' ஒத்தநிலை 'எனும் பொருள் தரும் 'சமமாதல்' திருவள்ளுவரின் கருத்தை அறிய பெரிதும் உறு துணையாகின்றது. 'புரவு' எனும் சொல், 'புர' எனும் வினையடியாகப் பிறந்த சொல்லாகும். இதற்கு ஏழுவகையான பொருள்கள் உண்டு. அவற்றுள் முதன்மையானதாக உள்ளது 'பாதுகாத்தல்' எனப் பொருள்படும் 'போற்றிக் காத்தலாகும்'.[31]

இவ் விளக்கத்தால், 'தன்னோடு ஒத்த நிலையில் வைத்துப் பிறரைப் போற்றுதல்' என்பதே பொருத்தமான பொருளாகத் தோன்றுகிறது. பிறருடையதுன்பத்தைத், தம்முடையதுன்பமாக உணர்ந்து, அவர்களுடைய துன்பத்தைப் போக்கவும், நீக்கவும் பாடுபடுவதே, ஒப்புரவு என்பது இதனால் புலனாகின்றது. இவ்வடிப்படையில், திருக்குறளின் 'ஒப்புரவு அறிதல்' எனும் அதிகாரத்தை நோக்குவோமானால், வான்மறை தந்த வள்ளுவரின் திருவுள்ளத்தை ஓரளவிற்குப் புரிந்துகொள்ள இயலும்.

---

30 தமிழ் லெக்சிகன், தொ. 1. 'ஒ'

31 ஷ தொகுதி 3. 'புரவு'

ஒப்புரவின் மாட்சி

தனி மனித நிலையில், 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணியுள்ளே ஒத்துரிமையுடையவராய்' வாழ்வதே ஒப்புரவிற்கு நிலைக்களனாகும். இவ்வாறு வாழ்கின்றவன் பிறருடைய துன்பத்தைத் துடைக்க, நீக்க, போக்க முயலுகின்ற முயற்சியே – செயற்பாடே – ஒப்புரவாக மலருவதைக் காணலாம்.

'ஒப்புரவு அறிதல்' எனும் அதிகாரத்தின் (22) முதல் மூன்று குறட்பாக்கள், ஒப்புரவின் சிறப்பினை எடுத்தியம்புகின்றன. 'மேகங்கள் உலகிற்கு நீரை உதவுகின்றன. அந்த மேகங்களுக்கு உலகத்து உயிர்கள் என்ன கைம்மாற்றைச் செய்யக்கூடும்? இதைப் போன்றே கைம்மாறு கருதாமல் பிறர் துன்பத்தைக் குறைக்கவும், போக்கவும் செய்யப்படும் தொண்டே, ஒப்புரவாகும். அரும்பாடுபட்டு ஒருவன் ஈட்டிய பொருளினைக் கொண்டு பொருள் முட்டுப்பாட்டால் துன்புறுவோருக்கு உதவி செய்வதே – அவர்களுடைய அல்லலைப் போக்க முயலுவதே சிறப்புமிகு தொண்டாகும். தெளிந்த அறிவும், பரந்த உள்ளமும் வாய்ந்தோர் இத்தகைய செயலுக்கே தங்கள் பொருளினைப் பயன்படுத்துவர். இச்செயலை விட மிகச்சிறந்த அறம் உலகில் வேறில்லை!" என்பன ஒப்புரவைப்பற்றி வள்ளுவர் கொண்டுள்ள கருத்தாகும்.

ஒப்புரவாளர் இயல்பு

இத்துன்பம் துடைக்கும் தொண்டு ஒவ்வொருவரும் அறிவும் திருவும் படைத்த ஒவ்வொருவரும் – மேற்கொள்ள வேண்டிய கடமையாகும். இதனை உணர்ந்து போற்றாதவன் நடைப் பிணத்திற்குச் சமமாவான். ஊரில் உள்ளார் அனைவருக்கும் பயன்படும் குடிநீர்க்குளம், நீரால் நிறைந்தது போல இவ்வுலக இயல்பினை அறிந்து, பிறருக்குத் தொண்டு செய்ய விரும்பும் பேரறிஞனுடைய செல்வம், வேறுபாடில்லாமல் எல்லாருக்கும் பயன்படும். பிறருக்கு நன்மை செய்வதையே

அறமாகக் கொண்டவன் செல்வம், தன்னைத் தேடிவந்து உதவி புரியுமாறு வேண்டும் பலருக்கும், அவரவர் தேவைகளுக்கேற்ற வகையில் பயன்படும். ஊருக்கு நடுவே சுவைமிகு கனிகளைத் தரும் மரம் பழுத்தால், பலருக்கும் பயன்படுவதைப் போன்று இவர்களுடைய செல்வம் பயன்படும். பெருந்தன்மை வாய்ந்தவனுடைய செல்வம், மருந்து மரத்தின் தளிர், இலை, காய், கனி, பட்டை, வேர் முதலியவற்றைப் போன்று எல்லா வகையிலும் சிலருக்கே பயன்படும்.

ஒப்புரவு செய்வதற்குப் போதிய செல்வம் தம் இடத்து இல்லையென்றாலும், அத்தொண்டு செய்யும் தூய உள்ளம் வாய்ந்தோர், தங்கள் கடமையைச் செய்வதில் தவறமாட்டார்கள். இத்தொண்டினைச் செய்வதனால், யாருக்கும் வறுமையுண்டாகாது; 'தொண்டு செய்ய இயலவில்லை' என அவர்கள் வருந்தும்நிலைஉண்டானால், அதுதான்வறுமையுற்ற நிலையாகும். ஒப்புரவு செய்வதனால், ஒருவனுக்குக் கேடு உண்டாகுமானால், அதனை மன மகிழ்ச்சியுடன் அவன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு, ஒப்புரவு செய்யும் பணியில் ஈடுபடுவோருடைய செல்வம் பயன்படும் முறைகளையும், வறுமையே வந்தாலும் இப்பணியைச் செய்வதே சிறந்தது என்பதனையும் திருவள்ளுவர் தெளிவுறுத்தியுள்ளார்.

தொண்டு நெறி

இவை அனைத்தையும் ஒருங்கு இணைத்துச் சீர்தூக்கிப் பார்க்கின்ற பொழுது, 'பற்றின்றிப் பயன்கருதாது பணி செய்வதையே' உள்ள உவகையோடு, பிறருடைய துன்பத்தைப் போக்க முயலும் சமுதாயத் தொண்டையே, திருவள்ளுவர் 'ஒப்புரவாக'ப் போற்றுகிறார் என்பது புலனாகின்றது.'தொண்டு நெறியின்" மாட்சியை இந்த அதிகாரத்தினுள் வள்ளுவர் சுருங்கச் சொல்லிவிளங்கவைத்துள்ளார். சமயவாதிகள் தங்கள் 'சமயத்தைச் சேர்ந்த துறவிகளுக்கும், அடியார்களுக்கும், பக்தர்களுக்கும் சேவை செய்தால், புண்ணியத்தைப் பெறலாம்;

அதன் மூலம் வீடுபேற்றை அடையலாம்' எனும் கருத்தினைத் தமிழகத்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டையொட்டிப் பரப்பத் தொடங்கினர்.

ஆனால், அவர்களுக்கு எல்லாம் காலத்தால் பல நூற்றாண்டுகள் முற்பட்ட திருவள்ளுவரோ, சாதி, சமயம் பற்றிய "வித்தகம் பேசாது 'மக்கள் பணி செய்ய மன்பதைத் தொண்டாற்றப் 'பணி செய வாரும்!" என எல்லாரையும் அழைக்கின்றார்! அன்பர் பணி செய, 'சேரவாரும் செகத்தீரே!' என வள்ளுவர் வேண்டுகோள் விடுக்கின்றார்!

திருவள்ளுவர் காட்டும் இத்தொண்டு நெறி தூய்மையானது! தன்னலம் அற்றது. மேலுலகத்தைப் பற்றிக் கவலைப்படாதது! அனைத்துலக மனிதனின் நலத்தை நாடுவது! மனிதனை மனிதனாக வாழுமாறு வழிகாட்டும் மனிதநலனை நாடும் நன்னெறி!

திருக்குறளின் மொழி இயல்பு

தமிழ் இலக்கிய வரலாற்றில், திருக்குறள் சிறந்ததொரு மெய்யறிவு ஆராய்ச்சிக் காலத்தைத் தொடங்கி வைக்கிறது. திருக்குறளில் காணப்படும் கருத்துகள் பழைய தமிழ் இலக்கியத்துள் கமணப்படும் கருத்துகள் சிலவற்றிலிருந்து வேறுபட்டு விளங்குகின்றன. இதைப்போன்றே, அதனுடைய மொழியமைப்பிலும் நடையிலும் சிற்சில மாற்றங்கள் காணப்படுகின்றன. அம்மாற்றங்கள் பிற்கால இலக்கியங்களில் பெருவழக்காகியுள்ளன. இவ்வகையில், தமிழ் மொழியின் வரலாற்றில், திருக்குறள் ஒரு திருப்பு மையமாக அமைந்துள்ளதென்று நாம் கூறலாம். சொற்செறிவும், பொருட்செறிவும், கொண்ட முடுகிய அகநானூற்றுத் தமிழ்நடையைப் போன்றோ சிறிது எளிமையும் நெகிழ்வும் பொருந்திய புறநானூற்றுத் தமிழ்நடையைப் போன்றோ திருக்குறளின் தமிழ்நடை அமையவில்லை.

திருக்குறளில் சொற்செட்டு இருக்கிறது; பொருட்செறிவு பொருந்தியுள்ளது. ஆனால், அதன் நடையில் ஒருவகை நெகிழ்ச்சியை நாம் காணுகின்றோம். வழக்கிறந்த சொற்களோ, இலக்கண முடிவுகளோ, மரபுகளோ திருக்குறளில் இடம்பெறவில்லை. இதற்கு மாறாக, மக்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திய 'பேச்சு மொழியின்' இயல்புகள்

பல, திருக்குறளில் இடம் பெற்றிருக்கின்றன எனக் கூறினால், அது தவறாகாது.

திருக்குறள் காலத்திய தமிழ்மொழியில், ஒலியியல் துறையில், குறிப்பிடத்தக்க அளவிற்கு எத்தகைய மாற்றமும் உண்டானதாகத் தெரியவில்லை. ஆனால், சொல்லமைப்பிலும் தொடர் அமைப்பிலும், சொற்பொருள் துறையிலும் சிற்சில திரிபுகள் தோன்றியுள்ளன. இம்மாற்றங்களை நாம் அறு வகையாகப் பகுத்துக் கூறலாம்.

புதிய விகுதிகள்

(1) அஃறிணை இயற்பெயரில் பன்மையைக் குறித்த உறழ்ச்சியாய்,கள் விகுதி வரும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு மாறாகத், திருக்குறளில் ஆறு இடங்களில் உயர்திணைப் பெயர்ப்பன்மையாகக் 'கள் 'விகுதி வழங்கப்பட்டிருக்கின்றது.

எ – டு மற்றையவர்கள் தவம் (263)

(2) அன்னீற்றுத் தன்மையொருமையைத் தொல்காப்பியர் கூறவில்லை. ஆனால், வள்ளுவர் அதைக் கையாண்டுள்ளார்.

எ –டு இலனென்று தீயவை செய்யற்க (206)

(3) திருக்குறளில் ஐ. ஆய், முன்னிலை வினையெச்ச விகுதிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வழக்குகள் கலித்தொகை, பரிபாடல் ஆகிய இரண்டு தொகை நூற்களிலேயே இடம் பெற்றிருக்கின்றன. பிற சங்க இலக்கியங்களில், இவற்றைக் காண்பது அரிது.

எ – டு –

புல்லா திராஅப் புலத்தை அவர் உறும் (1301)

நினைத்தொன்றும் சொல்லாயோ நெஞ்சே (1241)

(4) கால் எனும் வினையெச்சவிகுதிபெருவழக்காகத் திருக்குறளில் இடம் பெற்றிருக்கிறது.

எ – டு வாரி வளங்குன்றிக் கால் (14)

(5) 'வி','பி' எனும் இடைநிலைகள் பிறவினையை உணர்த்தும் விகுதிகளாகத் திருக்குறளில் வழங்கப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றிப் பழைய தமிழ் இலக்கணத்தில் எத்தகைய குறிப்பும் காணப்படவில்லை.

எ–டு தணந்தமை சால அறிவிப்ப போலும் (1233)
அல்லல் உழப்பிக்கும் சூது (938)

(6) ஆல், ஏல் என்பன புதிய வினையெச்ச விகுதிகளாகத் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன.

எ – டு அற்றால் அளவறிந்து உண்க (943)
காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் (386)

(7) கடை யெனும் வினையெச்ச விகுதி திருக்குறளில் முதன்முதலாகக் கையாளப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

எ டு இல்லவள் மாணாக் கடை (53)

(8) மல் எனும் எதிர் மறை வினையெச்சம் பழைய தமிழில் காணமுடியாத வழக்காகும். ஆனால், திருக்குறளில் அது பல இடங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளதைக் காணலாம்.

எ – டு செய்யாமல் செய்த உதவிக்கு (101)

புதிய இடைநிலைகள்

தொல்காப்பியத்தில் கூறப்படாதனவும், பழையதமிழ் இலக்கியத்துள் காணப்படா தனவுமாகிய இடைநிலைகள் சில திருக்குறளில் இடம் பெற்றுள்ளன.

(1) கில் எனும் ஆற்றல் உணர்த்தும் இடைநிலை திருக்குறளில் காணப்படும் புதிய இடை நிலையாகும்.

எ.டு அறிந்தாற்றிச் செய்கிற்பார்க்கு அல்லால் (515)

(2) ஆநின்று என்னும் நிகழ்கால இடை நிலையைச் சங்கச் சான்றோர்களின் பாடல்களில் காண்பதரிது. ஆனால்

திருவள்ளுவர் அவ்விடைநிலையைக் கையாண்டுள்ளார்.

எ – டு இறை இறவாநின்ற (1157)

புதிய உருபுகள்

திருக்குறளில் பல புதிய வேற்றுமை உருபுகள் இடம் பெற்றிருக்கின்றன.

(1) ஆல் எனும் மூன்றாம் வேற்றுமை உருபை முதன்முதலாகத் திருக்குறளில் நாம் காணுகின்றோம்.

எ – டு இதனை இதனால் இவன் முடிக்கும் (517)

(2) மாட்டு எனும் ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு திருக்குறளில் காணப்படும் புதிய வழக்காகும்.

எ – டு பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு (5)

(3) பொருட்டு எனும் நான்காம் வேற்றுமைச் சொல்லுருபு திருக்குறளில்தான், முதன்முதலாக வழங்கப்பட்டுள்ளது.

எ – டு வேளாண்மை செய்தற் பொருட்டு (81)

புதிய அசைநிலைகள்

தொல்காப்பியரால் கூறப்படாத அசை நிலைகள் திருக்குறளில் புதியனவாக இடம்பெற்றுள்ளன.

(1) ஆம் எனும் அசை

எ–டு பணியுமாம் என்றும் பெருமை (978)

(2) இருந்து எனும் அசை

எ–டு இழைத்திருந்து எண்ணிக்கொளல் (530)

(3) பிற்கால இலக்கியங்களில் பல்கிப் பெருகிய அரோ எனும் அசை.

எ–டு அரிதரோ தேற்றம் (1153)

புதிய இயல்புகள்

பண்டை இலக்கண நூலார் கூறியுள்ள கருத்துகளுக்கு மாறுபட்ட வகையில், அவர்களுடைய கருத்துகளில் மாற்றமும், திரிபும் கொண்ட மொழி இயல்புகள் திருக்குறளில் பரவலாகக் காணப்படுகின்றன:

(1) எல்லார்க்கும் எனும் வழக்கு,

தொல்காப்பியர், 'எல்லார் தமக்கும்' 'எல்லார் தம்மையும்' என்று வழங்க வேண்டுமென்று கூறியுள்ளார். ஆனால், திருக்குறளில் 'எல்லார்க்கும்', 'எல்லாம்' என்னும் திரிந்த வடிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எ – டு எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை (582)

(2) நீவிர் என்பதை முன்னிலைப் பன்மையாகத் தொல் காப்பியர் வழங்கியுள்ளார். ஆனால் திருவள்ளுவர், 'நீர்' என்பதையே முன்னிலைப் பன்மை வடிவமாக வழங்கியுள்ளார்.

எ – டு தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று (1319)

(3) வியங்கோள் வினை தன்மை, முன்னிலையில் வாராதென்பது தொல்காப்பிய விதி. ஆனால், திருக்குறளில் வியங்கோள் வினை தன்மையிலும் முன்னிலையிலும் கையாளப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

எ – டு காண்கமன் கொண்கனைக் கண்ணார (1265)
காதல் அவரில ராகநீ நோவது (1242)

(4) வினைச்சொற்களின் அடிச்சொற்கள் முன்னிலை ஏவலாகவும் திருக்குறளில் கையாளப்பட்டுள்ளன.

(அ) ஓம்பு

அலர் நாண ஒல்வதோ அஞ்சலோம்பு (1149)

(ஆ) உரை

செல்லாமை உண்டேல் எமக்குரை (1151)

(3) விடு

காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே (1241)

புதிய வழக்குகள்

திருக்குறளில் சில புதிய சொல்லாட்சிகளும், இலக்கண வடிவங்களும் இடம் பெற்றுள்ளன.

செய்யா எனும் எதிர்மறை வினையெச்சம் நேரடியாகவும், வாய்பாடாகவும் வழங்கப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

எ – டு செறுவார்க்கும் செய்யா விடல் (203)

புதிய சொல்லாட்சி

இவ்விலக்கண இயல்புகள் மட்டும் அல்லாமல், புதிய சொற்கள் சில திருக்குறளில் முதன் முதலாக இடம் பெற்றுள்ளன. தமிழ் மொழியின் சொற் களஞ்சியத்தில் புதியனவாகப் புகுந்த சொற்களாக அவை இருக்கலாம்; அல்லது பேச்சு வழக்கில் மக்கள் பயன்படுத்திய சொற்களை முதன்முதல் வள்ளுவர், தம் நூலில் கையாண்டதன் மூலம், அவற்றிற்குச் சிறப்புமிக்கப் புதுவாழ்வை அளித்தும் இருக்கலாம். அவற்றுள் சிலவற்றை நாம் இங்குக் காணலாம்.

[1] அவ்வாறு என்று பொருள்படும் புதிய சொல் அவ்வது என்பது. அதை வள்ளுவர்.

எவ்வதுறைவது உலகம்; உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு. (426)

என்ற குறளில் வழங்கியுள்ளார். அவ்வது. எவ்வது என்னும் சொற்களில் உள்ள அகரச் சுட்டு வகர உடம்படு மெய் பெறுவதனால் இச்சொல் வடிவங்களைப் பெறுகின்றன. "எவ்வது' என்பதற்கு, 'எவ்வாறு?' என்பது பொருள்.

(2) பொறாமைப் படுதல் என்னும் பொருளில் அவ்வித்து என்னும் சொல்லை நாம் திருக்குறளில் காணுகின்றோம்.

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். (167)

(3) உறை என்னும் சொல்லை வள்ளுவர் உரிய (498) மழை (559) நகர் (680) ஆயுள் (564) என்னும் நால்வகைப் பொருள் களில் பயன்படுத்தி யுள்ளார்.

உறை எனும் சொல்லுக்குத் தமிழில் பதினைந்து பொருள்கள் வழங்கி வருகின்றன. அவற்றுள் "வாழ்நாள்" அல்லது "ஆயுள்" என்பதும் ஒன்று. இப்பொருளில் "உறை" என்னும் சொல்லை, முதன் முதல் கையாண்டவர் வள்ளுவர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இறை கடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். (564)

(4) கடை என்னும் வினையெச்ச விகுதி இடம் என்னும் பொருளில் பத்து இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுள்,

பலநல்ல கற்றக் கடைத்தும் மன நல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது. (823)

என்னும் குறட்பா குறிப்பிடத்தக்கது.

(5) நுதுப்போம் என்னும் சொல் 'அவிப்போம்' என்ற பொருளில் வள்ளுவரால் கையாளப்பட்டுள்ளது.

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்போம் எனல் (1148)

பின்னர் வந்த புலவர்கள் நுதுத்தல் என்னும் சொல்லை அழித்தல், நீக்குதல்' என்னும் பொருள்களிலும் பயன்படுத்தியுள்ளனர். வள்ளுவர் இவர்களுக்கு வழிகாட்டியாகக் காணப்படுகிறார். அவர் 'அவித்தல்' என்னும் பொருளில் இச்சொல்லைக் கையாண்டார். இப்பொருளை விரித்துரைக்கும் வகையில் இடைக் காலப் புலவர்கள் 'அழித்தல், நீக்குதல்' என்னும் பல பொருள்களில் வழங்கியதாகத் தெரிகிறது.

(6) ஆமா, கவ்விது, அருங்கேடன் போன்ற சில புதிய சொல் வடிவங்களையும் வள்ளுவர் கையாண்டுள்ளார்.

எ–டு ஊடி இருந்தே மாத் (1312)
கவ்வையால் கவ்விது (1144)
அருங்கேடன் அறிக (210)

இத்தகைய புதுமைப் பண்புகள் சில திருக்குறளில் கையாளப்பட்டுள்ளமையால், திருக்குறள் பழைய தமிழ்மொழியின் நடையைப் பின்பற்றாத நூலென்றும், சங்க காலத்திற்கு மிகப் பிற்பட்ட காலத்தில் இயற்றப்பட்ட நூலென்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். இக்கருத்து பொருத்தமற்றதாகும்.

திருக்குறளின் மொழியமைப்பில் காணப்படும் புதுமைப்பண்புகள் 'எங்கிருந்து எவ்வாறு வழக்கத்திற்கு வந்தன ?" என்பதை நாம் காண்பதற்கு முயல வேண்டும். அப்பண்புகள் சங்க நூல்களான அகத்திலும் புறத்திலும் காணப்படவில்லை. குறுந்தொகையிலும் நற்றிணையிலும் இடம் பெறவில்லை. கலித்தொகையிலும் பரிபாடலிலும் அவை அங்கொன்றும் இங்கொன்றுமாக நுழைந்துள்ளன. இவை இரண்டும் இசைப்பாடல்களால் இயற்றப்பட்டவை. இவ்விசைப் பாடல்களைச் செந்துறை மார்க்கப் பாடல்கள் என்பர். இவை செய்யுள் வழக்கினை மட்டும் பின்பற்றாமல், இசை வழக்கினையும் பின்பற்றுவதால் இப்பாடல்களை இயற்றிய புலவர்கள், எல்லாரும் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில், பேச்சு வழக்கினையும் பின்பற்றி இருக்கலாம். இதைப் போன்றே, உலகிற்கு அறத்தினை எடுத்துரைக்க முன்வந்த திருவள்ளுவர், "தம் நூலை, எல்லாரும் ஓதியுணர்ந்து பயன் பெற வேண்டும்' என்ற கருத்துடன், செய்யுள் வழக்கினை மட்டும் பின்பற்றாமல், அன்றைய மக்களின் பேச்சு வழக்கினையும் தழுவியே தம்முடைய 'முப்பாலை ' இயற்றினார் எனக் கொள்ளுவது சாலவும் பொருந்தும்.

புதிய விகுதிகள், இடைநிலைகள், உருபுகள், அசைநிலைகள் வழக்குகள், இயல்புகள் என்றெல்லாம் நாம் மேலே கண்ட வழக்காறுகள், மக்களுடைய பேச்சு வழக்கில் பலகாலம் மரூஉ வழக்காய் வழங்கிப், பின்னர் பையப் பைய இலக்கியத்தில் நுழையும் அளவிற்கு ஏற்ற முற்று இருக்க வேண்டும். மன்பதைப் பாவலராகிய வள்ளுவர் மக்களுடைய 'பழகுதமிழின்' இயல்புகளைப் புறக்கணிக்காது, தேவையான அளவிற்கு அவற்றை ஏற்றுப் போற்றியுள்ளார். மேலும், ஆய்தம், அளபெடை போன்றவற்றைப் பழைய தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் பயன்படுத்தியுள்ளதைப் போன்று, திருவள்ளுவரும் அவற்றைப் பொன்னே போல் போற்றிப் பயன்படுத்தியுள்ளதை நாம் நினைவுகூர்தல் வேண்டும். திருக்குறளில் காணப்படும் புதிய இயல்புகளை அந்நூலின் பிற இயல்புகளோடு ஒப்பிட்டு நோக்குகின்ற பொழுது, ஐந்து முதல் எட்டு விழுக்காட்டு அளவினதாகவே அப்புதுமைப் பண்புகள் காணப்படுவது மறுக்க இயலாத உண்மையாகும்.

எனவே, அறநூல் எழுதிய வள்ளுவர், அந்நூல் அனைவருக்கும் பயன்படும் வகையில் ஓரளவிற்குப் பேச்சு மொழியையும் கையாண்டுள்ளார் எனக் கொள்வதுதான் பொருத்தமாகும். ஒரு நூலின் மொழிநடையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, அந்நூலின் காலத்தை அறுதியிடுவது ஆராய்ச்சி நெறிக்கு உகந்ததன்று. இவ்விருபதாம் நூற்றாண்டின் சம காலத்தில் வாழ்ந்தவர்களாகிய தமிழ்க்கடல் மறைமலையடிகளின் மொழிநடையையும், தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் மொழிநடையையும் ஆராய்ந்து, அவ்வாராய்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, நாம் அவர்கள் காலத்தை முடிவு செய்தால், மறைமலையடிகள் சங்க காலத்தை ஒட்டி வாழ்ந்தவர் எனவும், திரு,வி.க. இருபதாம் நூற்றாண்டினர் எனவும் கூற நேரிடும். இதனை உலகம் ஏற்றுக் கொள்ளுமா? இதைப் போன்றதுதான் திருக்குறளின் மொழிநடையைச்

சங்கப் பாடல்களின் மொழி நடையோடு ஒப்பிட்டு ஆராய்ந்து, அவற்றிடையே காணப்படும் வேற்றுமைகளை மட்டும் கருத்தில் கொண்டு, திருவள்ளுவர் சங்க காலத்தில் வாழ்ந்தவர் அல்லர் எனக் கூறுவதாகும். எனவே, மொழி ஆராய்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, எந்த நூலின் காலத்தையும் கணிக்க முயலுவது அறிவுடைமையாகாது.

திருவள்ளுவரும் அரிஸ்டாட்டிலும்

மாண்புமிகு கிரேக்கத்தின் மும்மணிகளாகப் பொன்றாப்புகழ் பெற்றோர் சாக்ரடிசு, பிளேட்டோ, அரிஸ்டாட்டில் என்பவராவர். உலகம் போற்றும் மாபெரும் சிந்தனைச் சிற்பியான சாக்ரடிசின் அறிவுவழி வந்த பேரனாக அரிஸ்டாட்டில் விளங்குகிறார். மேலை நாட்டுத் தத்துவ உலகின் முடிசூடா மன்னனாக விளங்கும் பிளேட்டோவின் பெருமைமிகு தலைமாணாக்கராக அரிஸ்டாட்டில் வான்புகழ் பெற்றுள்ளார்.

அரிஸ்டாட்டில் ஓர் அறிவியல் அறிஞர்; அறம் பாடவந்த அறவோர்; மெய்ப்பொருள் கண்ட மெய்ஞ்ஞானி; அரசியல் நுட்பங்களை அறிந்து போற்றிய அரசியல் மேதை;புதிய அரசியல் (அமைப்பு) சட்டங்களை வகுத்துத்தந்த சட்ட வல்லுநர்; அளவை இயலின் அடிப்படையை உலகிற்கு வழங்கிய உலகப்பேராசான்; பேச்சுக்கலைக்கு வலிவும் பொலிவும் சேர்த்த சிறப்புமிகு பேச்சாளன்; இலக்கியக் கலையின் அமைப்பையும் அழகையும், பண்பையும் பயனையும் உலகம் உணர்ந்து போற்றுமாறு தெளிவுறுத்திய முதல் திறனாய்வாளன்| ஆராய்ச்சி நெறியின் விதிகளை வகுத்தளித்த ஆராய்ச்சிப் பேரறிஞன்! அவன் ஒரு பல்கலைச் செல்வன் ! நடமாடும் நூல் நிலையம்! பாரகம் போற்றும் பல்கலைக் கழகம்!

இவ்வாறு அரிஸ்டாட்டிலின் சிறப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம். அதற்கு ஓர் எல்லையை எளிதில் வகுக்க இயலாது! கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக மேற்கு நாட்டவரின் போற்றுதலுக்கும், சில சமயங்களில் தூற்றுதலுக்கும் நிலைக்களனாகி, வீறுடன் விளங்கிவரும் ஒரு பேரறிஞன் அரிஸ்டாட்டில்! தமிழகத்தில் ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளாகச் சிறப்புற்று விளங்கும் உலகப்பேரறிஞன் திருவள்ளுவர்! இவ்விருவரும் மனித இனம் மாண்புற்று, மண்ணில் நல்லவண்ணம் வாழ, வழங்கியுள்ள வளமார்ந்த அறிவுச் செல்வத்தின் அருமை பெருமைகளை அறியவும், அறிவிக்கவும் முயலுவதே இவ்வாய்வுரையின் நோக்கமாகும்.

வாழ்வும் வரலாறும்

பண்டை உலகின் அறிவுத்துறைகள் அனைத்தையும் ஒரு முறையாகிலும் அலசி ஆராய்ந்தவர் அரிஸ்டாட்டில் என்பர். இத்தகைய மாமேதை (கி.மு. 384 –322), ஏதென்சு மா நகருக்கு அருகில் இருந்த ஸ்டாகிரா (Stagira) என்ற ஊரில் கி.மு.384ஆம் ஆண்டில் பிறந்தார்; இவருடைய தந்தை மாசிடோனியாவின் அரசனான இரண்டாம் அமிஸ்தசுக்கு (Amys– tass II) நண்பனாகவும், அரசவை மருத்துவனாகவும் விளங்கினார். இளமையில், தம் தந்தையின் மருத்துவப் பணியிலும், அறுவை மருத்துவத்திலும் அரிஸ்டாட்டில் ஆர்வம்கொண்டார். அதனால் உடலியல் (Physiology), விலங்கியல் போன்ற உடற்கூற்று அறிவியலில் இவர் சிறப்புற்று விளங்கினார்.

இளமைக் கல்வியைத் தம் ஊரில் முடித்துக் கொண்டு,பதினேழாம் வயதில் மேற்படிப்பிற்காக இவர் ஏதென்சு நகர அரசிற்குச் சென்றார்; அங்குப் பேரறிஞன் பிளேட்டோ நிறுவி இருந்த கலைக்கழகத்தில் மாணவராகச் சேர்ந்தார்; பதினேழு ஆண்டுகள், அதாவது கி.மு.347 வரை அங்கு மாணவராகவும், ஆசிரியராகவும் விளங்கினார். பிளேட்டோவின் மெய்யறிவு ஆற்றலினால் கவரப்பட்ட அரிஸ்டாட்டில்,

அவருடைய மதினுட்பம் வாய்ந்த மாணவனாகவும் நெருங்கிய நண்பனாகவும் திகழ்ந்தார்; உள்ளார்ந்த உணர்வுகளைக் கொண்டு கற்பனையாக ஆராய்ந்து அறியும் வாழ்க்கையே, முழுமையான இன்பத்தை அளிக்கக் கூடியது என்று இவர் கருதினார். பிளேட்டோவின் மறைவிற்குப் பிறகு, அக்கலைக் கழகத்தில் உட்பூசல் உண்டாயிற்று.அந்நிலையில்,அதனை அரிஸ்டாட்டில் விட்டு விலகினார்.

பிளேட்டோவின் கொள்கைகளை இவர் முற்றிலும் உடன்பட்டு ஏற்றுக் கொள்ளவில்லை; பல இடங்களில் மாறுபடுகிறார்; மறுக்கிறார். சில நிலைகளில் அடிப்படையிலேயே வேறுபட்ட எண்ணப் போக்குடையவராக இவர் தோன்றுகிறார். ஆனால், தம்முடைய முரண்பாட்டை மிகுந்த பணிவுடனும், வணக்கத்துடனும் இவர் சுட்டிச் செல்லுகிறார். பிளேட்டோவின் மறைவிற்குப் பிறகு, அரிஸ்டாட்டில் கிரேக்கத்தின் பல பகுதிகளில் பயணம் செய்து, தம் பட்டறிவை வளர்த்துக்கொண்டார். இவரோடு கலைக் கழகத்தில் பயின்ற ஹெர்மியஸ், சிறிய ஆசியாவின் ஏடார்னியஸ் அரசின் தலைவனாகப் பதவியேற்றான். அவனுடையவிருப்பத்திற்கு இணங்கி,அங்குச் சென்றுமூன்று ஆண்டுகளை இவர் கழித்தார். அப்பொழுது அவ்வரசனுடைய நெருங்கிய உறவினனான பித்தியா (Pythias) என்பவளை அரிஸ்டாட்டில் மணம் புரிந்து கொண்டார். அவர்களுக்கு ஒரு மகள் பிறந்ததாகத் தெரிகிறது.

கி.மு.342–ஆம் ஆண்டில், அரிஸ்டாட்டில் மாசிடோனியாவின் தலைநகரான பெல்லா (Pella) எனும் நகருக்குப் போனார். அங்கு இரண்டாம் பிலிப்பு எனும் அரசரால் இவர் போற்றி ஆதரிக்கப்பட்டார். பிலிப்பின் மகனான சிறுவன் அலக்சாண்டருக்கு ஆசிரியராக இவர் அமர்த்தப்பட்டார். அலக் சாண்டர் மக்களாட்சியை மதித்துப் போற்றாதவன் ; தனிமனித எதேச்சதிகார ஆட்சியை நிலைநாட்டத் துடித்தவன்; தற்செருக்கு மிக்கவன்; குடிகாரன்; இரக்கமற்றவன்;

பழிக்குப் பழிவாங்கும் கொடியவன் ; முரட்டுத் தன்மைமிக்க இளைஞனாக அவன் வளர்ந்தான். அவனுக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் அரிஸ்டாட்டில் மொழி, இலக்கியம், உயிரியல், பயிரியல்,ஆட்சியியல்போன்றகலைகளைக்கற்பித்தார். அவன் திருந்தியதாகத் தெரியவில்லை. எனினும், அவன் அறிவு ஆராய்ச்சியிலும்,நாகரிகவளர்ச்சிக்குரிய அழகுக்கலைகளிலும் மதிப்பும் ஈடுபாடும் கொண்டவனாக விளங்கினான்.

கி.மு.835 ஆம் ஆண்டில், அரிஸ்டாட்டில் ஏதென்சுக்குத் திரும்பி வந்தார். லீசியம் (Lyceum) எனும் கலைக்கழத்தை இவர் நிறுவினார். அக்கழகத்தில் இருந்த தோட்டத்தில் தம்முடைய மாணவர்களுடன் உலாவிக் கொண்டே, பல்வேறு கலைகளை இவர் கற்பித்து வந்தார். இவ்வாறு நடந்து கொண்டே உயர் கல்வியைப் போதித்தமையால், அக் கல்விக் கழகத்தை, 'நடமாடும் கழகம்' (Peripatetic School) என்று மக்கள் சுட்டினர். காலையிலும் முற்பகலிலும் தம் மாணவருக்கு மெய்ப் பொருள் தொடர்பான சிக்கல் மிகு கல்வியை அரிஸ்டாட்டில் கற்பித்தார்; பிற்பகலில் பொதுவான அறிவுக்கலைகளையும், அன்றாட உலகியல் சிக்கல்களை அலசி ஆராயும் வாழ்வியல் கலையையும்பற்றி, அறிவுப்பசியோடு தம்மைத் தேடி வந்த பொதுமக்களுக்கு இவர் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார்.

இந்நிலையில் இவருடைய மனைவி இறந்துவிட்டாள். பிறகு, ஹெர்ப்பிலி (Herpyllis) என்ற பெண்ணோடு நீடித்த தொடர்பினை இவர் வைத்துக் கொண்டார். அப்பொழுது ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு நிக்கோமாகஸ் (Nichomachus) எனும் பெயரிட்டனர். அரிஸ்டாட்டில் எழுதிய அறவியல் ஆராய்ச்சி நூலுக்கு, நிக்கோமாக்கிய அறநூல் எனும் பெயர் வழங்கி வருவது இங்குக் கருதத் தக்கதாகும். இவ்வாறு தமது வாழ்நாளின் சிறப்புமிகு பன்னிரண்டு ஆண்டுகளை நடமாடும் கலைக் கழகத்திலும், தமது காதல்கிழத்தியின் அன்பிலும் அரிஸ் டாட்டில் கழித்தார்.

அப்பொழுது இவருடைய அருமை மாணவரான அலக்சாண்டர் உலகப் பேரரசை நிறுவ, புதிய நாடுகளைப் பிடிக்கும் செயலில் ஈடுபட்டிருந்தான்; கிரீசின் பல்வேறு பகுதிகளையும், சிறிய ஆசியா, எகிப்து, சிரியா, பாரசீகம், ஆப்கனிஸ்தானம், நடு ஆசியா, வடமேற்கு இந்தியா ஆகிய நாடுகளையும் வென்று, வெற்றிமேல் வெற்றி பெற்றுக் கொண்டிருந்தான். பாரசீகத்தை வென்றவுடன், ஏறக்குறைய ஒரு மில்லியன் டாலர் (தொண்ணூறு லட்ச ரூபாய்) மதிப்புள்ள பொருளைத் தம்முடைய ஆசானாகிய அரிஸ்டாட்டிலுக்கு, அவருடைய அறிவுப் பணிக்குப் பயன்படுமாறு மாவீரன் அலக்சாண்டர் அன்புப் பரிசாக அனுப்பி வைத்தான்; மற்றும் புதிய நாடுகளில் காணப்பட்டனவும்கிரேக்கத்தில் காணப்படாதனவுமாகிய புதிய செடி கொடி வகைகளையும், புதிய விலங்கு இனங்களையும் அவ்வப்போது அவன் அனுப்பி வைத்தான். சில ஆண்டுகளில் அலக்சாண்டர் (கி.மு.323) இறந்தான். எதென்சு நகரில் அலெக்சாண்டரின் ஆதிக்கத்திற்கு எதிராகக் கலகம் உண்டாயிற்று; அவனுடைய ஆசிரியரான அரிஸ்டாட்டிலின் மீது சமயத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. சாக்ரடிசுக்கு உண்டான அவலக்கேடு, தமக்கும் உண்டாகக் கூடாது என்று அரிஸ்டாட்டில் கருதினார். எனவே, ஏதென்சை விட்டு வெளியேறுவதைத் தவிர, யூபேயா நாட்டில் சால்சிஸ் நகரை (சொந்த மாவட்டம்) அடைக்கலம் அடைவதைத் தவிர வேறுவழி அவருக்குப் புலனாகவில்லை. அப்பகுதிக்கு அரிஸ்டாட்டில் ஓட்டம் பிடித்தார். ஆனால் 'காலன்' அவரை விட்டு வைக்கவில்லை. அடுத்த ஆண்டிலேயே (கி.மு. 322). நோய்வாய்ப்பட்டுத் தம் அறுபத்திரண்டாம் வயதில் அரிஸ்டாட்டில் இயற்கை எய்தினார். இவ்வாறு கிரேக்கத்தின் அறிவுப் பேரொளி அணைந்தது! சிறிது காலத்திற்குள் அவருடைய அறிவொளி உலகத்தின் அணையாதத் திருவிளக்காய்– ஒளிவிளக்காய் எங்கும் ஒளிரத் தொடங்கியது!

நூல்கள்

அரிஸ்டாட்டில் உலகிற்கு வழங்கியுள்ள நூல்கள் மிகப்பலவாக இருந்தன. அவற்றுள் சிலவே இக்காலத்தில் கிடைத்துள்ளன. எனினும், அவருடைய காலத்தையொட்டி வாழ்ந்த கிரேக்க, ரோமானிய அறிஞர்களும், இடைக்காலக் கிறித்துவச் சமயத் தொண்டர்களும் குறிப்பிட்டுள்ள செய்திகளில் இருந்து அரிஸ்டாட்டில் "கருவில் திருவுடைய மாமேதை' என்பதும், 'பலபட்டைகள் தீட்டப்பட்ட வைரம்' என்பதும் எளிதில் புலனாகின்றன. தொடக்கத்தில் இவருடைய சிந்தனைப் போக்கு பிளேட்டோவைப் போல், ஒரு பொதுநிலைக் குறிக்கோளினை மையமாகக் கொண்டு மனித வாழ்க்கையைச் சமுதாய, பொருளாதார, அரசியல் துறைகளின் செயற்பாடுகளில் கருத்தைச் செலுத்தி, ஆராய முயன்றது. அவற்றின் நெறிமுறைகளையும் நோக்கையும் போக்கையும் இவர் ஆராய்ந்தார். அவற்றோடு நிறுவனங்கள், கொள்கைகள் போன்றவற்றின் இயல்புகளையும் இயங்கு முறைகளையும் பகுத்துப்பகுத்து ஆராய்வதில் இவர் பேரீடுபாடு கொண்டிருந்தார். முதலில் இவருடைய ஆராய்ச்சி கற்பனை ஆய்வாக (Speculative) அமைந்தது. எனினும், சிந்தனை முதிர்ச்சியுற்றமைக்கு ஏற்பப் பல்வேறு முறைகளை ஆராய்ந்து, நடைமுறையில் அவை எவ்வாறு காரணகாரியத் தொடர்புமுறையில் அமைந்துள்ளன என்பதை இவர் கண்டறிந்தார்; அவற்றிற்குரிய விதிமுறைகளைப் பின்னர் இவர் வகுத்தளித்தார் அவ்விதி முறைகளை வகுப்பதில் காரணகாரியத் தொடர்பினை விளக்கும் அறிவியல் பகுப்பு முறை ஆராய்ச்சியை (Ana– lytical Method) இவர் அடிப்படையாகக் கொண்டார். "அரிஸ்டாட்டிலின் சிந்தனை வளர்ச்சி முதலில் பிளேட்டோவினுடைய கற்பனை ஆராய்ச்சியில் தொடங்கியது; பையப் பைய நிகழ்வியல் பாங்காக மாறியது; அறிவியல் ஆராய்ச்சியாக முதிர்ந்தது'"[1] என்பர்.

---

1 G. H. Sabine, A History of Political Theory, Ch. 5.

தமக்கு முற்பட்ட கிரேக்கச் சிந்தனையாளர்களின் போக்கிலிருந்து வேறுபட்ட எண்ணப் போக்குடையவராக அரிஸ்டாட்டில் விளங்கினார். "முதன் முதலாக ஒரு பேராசிரியரைப் போன்று இவர் எழுதினார்; இவருடைய நூல்கள் அனைத்தும் முறைப்படுத்தப்பட்ட சிந்தனைக் கருவூலங்களாகும்; இவருடைய விளக்கவுரைகள்யாவும் பல்வேறு தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவர் உணர்ச்சியின் உந்துதலால் செயல்பட்ட அருளாளர் அன்று! அறிவுத்துறைகளைக் கற்பிப்பதையே தொழிலாகக் கொண்ட ஓர் ஆசிரியர்! இவருடைய படைப்புகள் யாவும் ஆய்வியல் நோக்கில் அமைந்தவையாகும். அவற்றில் கருத்தூற்றமும் தெளிவும் களிநடம் புரிகின்றன; பகுத்தறிவு மனப்போக்கு மேலோங்கி நிற்கின்றது."[2] அவற்றின் நயமிகு நடை நலத்தைச் சிசரோ (Cicero)[3]வும், குயிண்டிலியனும் (Quintilian)[4] மிகச் சிறப்பாகப் போற்றிப் பாராட்டியுள்ளனர்.[5] தத்துவ ஆராய்ச்சி யாயினும், அரசியல் ஆராய்ச்சியாயினும் இலக்கிய ஆராய்ச்சி யாயினும் வெற்றெனத் தொடுக்காது, 'செஞ்சொல் கவியின்பம்' பயக்கும் ஏற்றமிகு இனியநடையை அரிஸ்டாட்டில் பயன்படுத்தி யுள்ளார். காப்பியப் புலவர்கள் மடியில் தவழ்ந்து விளையாடிய கிரேக்க மொழி, தன்னுணர்ச்சிப் பாடல் இயற்றிய புலவர்களின் கைகளைப்பற்றித் தளர்நடை பயின்ற கிரேக்க மொழி, நாடக ஆசிரியர்களின் கைகளில் துள்ளி விளையாடிய கிரேக்க மொழி, அறிவுப் பெட்டகமாம் அரிஸ்டாட்டிலின் நூல்களிலே ஏறுநடை போடலாயிற்று.

இவர் எழுதிய நூல்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் அவை (') அளவை நூல் (Logic), (2) அறிவியல், (3) 44 (Rhetoric),

---

2 Bertrand Russell, A History of Western Philosophy, P. 161.

3 சிரோ, மார்கஸ் தூலியஸ் (கி.மு 104 கி.மு. 43 என்பவர் ரோமானிய தத்துவ ஞானியும், சிறப்புமிகு பேச்சாளருமாவார்

4 குயிண்டிலியன் ஸ்பெயின் நாட்டு ரோமானிய அறிஞன் ; சிறப்புமிகு எழுத்தாளன்; பேச்சுக் கலை நூல் ஆசிரியர்

5 TA. Sinclair, A History of Classical Greek Literature, P. 371.

(4) கவிதை இயல் (Poetics), (5)அரசியல், (6) அரசியல் அமைப்புகள் (The Constitutions), (7) இயற்பியல் (Physics. (8) மெய்ப்பொருளியல் (Philosophy), (9) உளவியல் (Psychology) (10) விலங்கியல் (Zoology), (11) கால இயல் (Meteorology) (12) ஆன்மாவைப் பற்றி என்பன. இவற்றுள் முழுமையாகக் கிடைத்தவை சில; அரைகுறையாகக் கிடைத்துள்ளவை பல. இவற்றோடு இவருடைய இறுதி முறியும் (Will), சிதைந்த கவிதைகளும் கிடைத்துள்ளன.

அரிஸ்டாட்டிலின் நூல்களை ஆராய்ந்த அறிஞர்கள், இவருடைய சிந்தனைப் போக்கில் உண்டான வளர்ச்சியை மூன்று காலகட்டங்களாகப் பாகுபாடு செய்துள்ளனர். கி.மு. 347 வரை பிளேட்டோவின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்குவதிலும், அவற்றின் சிறப்பினை எண்பிப்பதிலும் அரிஸ்டாட்டில் கருத்தைச் செலுத்தி வந்தார். ஏதென்சு நகரை விட்டு வெளியே சென்று அவர் வாழ்ந்த காலத்தில் (கி.மு.347– 385), பிளேட்டோவின் கருத்துகளை மறுத்தும், தம்முடைய எண்ணப் போக்கினை உருவாக்கி முறைப்படுத்தியும் மெய்ப் பொருள் கண்ட வித்தகராக இவர் மலர்ச்சியுற்றார். மூன்றாவது கால கட்டத்தில் (கி.மு.335–க்குப் பிறகு) லீசியத்தில் பேராசிரியராக அரிஸ்டாட்டில் பெரும்புகழ் பெற்றார். இக்கால கட்டத்தில் இவர் பிளேட்டோவினுடைய கொள்கைகளில் இருந்து பெரிதும் முரண்பட்ட நூல்களான நடைமுறைக்குகந்த அரசியல், அரசியல் அமைப்புகள், இயற்பியல், உளவியல், விலங்கியல், கால இயல் போன்ற நூல்களைப் படைத்ததாகக் கூறுவர். இரண்டாவது கால கட்டத்திலேயே அறவியல், கவிதை இயல் போன்ற ஆராய்ச்சியில் இவர் ஈடுபட்டிருந்ததாகவும் ஆராய்ச்சியாளர் துணிந்துள்ளனர்.[6] இதனை மறுப்பவர்களும் உண்டு.

---

6 Werner Jaeger, Aristotle, Fundamentals of the History of His Development, PP. 15–104; 105–311; 311–407.

(1) ஆய்வுக்குரிய நூல்கள்

அரிஸ்டாட்டிலின் நூல்களுள் நான்கு நம்முடைய கருத்தைக் கவருகின்றன. அவருடைய அறவியல், அரசியல், மெய்ப்பொருளியல், கவிதை இயல்நூல்களேநம்ஒப்பாய்விற்குப் பயன்படுவன. இவற்றுள் அறவியலும், அரசியலுமே முதன்மையானவையாகும். இவை இரண்டும் அறநெறிப் பற்றிய ஒரு நூலின் இரு பகுதிகளாகும் என்பது அறிஞரின் துணிவாகும்.[7] இவ்வகையில் திருக்குறளில் அறத்துப்பாலும் பொருட்பாலும் அடுத்தடுத்து அமைக்கப்பட்டுள்ளதைப் போன்று, ஒரு நூலின் இரு பகுதிகளாக இவை உள்ளமை இங்குக் கருதத்தக்கது. நிக்கோமாக்கிய அறவியல் (Nicho machean Ethics) எனும் அறவியல் நூல் அல்லாமல்,வேறு அறவியல் நூல்கள் இரண்டினை அரிஸ்டாட்டில் இயற்றியுள்ளதாகக் கூறுவர். அவை 'யூடேமியன் அறவியல்' (Eudemian Ethics). 'மெக்னா மாரலிஸ்' (Magna moralis) எனும் பெருமை மிகு ஒழுக்க நூல் என்பன. ஆராய்ச்சியாளர் இவற்றைக் குறித்து ஐயுறவு கொண்டுள்ளனர். முதலில் குறிப்பிட்ட 'யூடேமியன் அறவியல்' எனும் நூலை, அரிஸ்டாட்டிலின் மாணவரும், ரோட்ஸ் (Rhodes) நாட்டவருமான யூடேமஸ் (Eudemus) என்னும் அறிஞர்,தம் ஆசானுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி, சிற்சில புதுமைப் போக்குகளோடு இயற்றிய நூல் என்பர். வேறொரு சாரார், பிளேட்டோவின் கல்விக் கழகத்தில் ஆசிரியராக அரிஸ்டாட்டில் பணிபுரிந்தபொழுது, ஆற்றிய சொற்பொழிவுகளை அவருடைய மாணவர் யூடேமஸ் தொகுத்தது என்பர்.

பெருமை மிகு ஒழுக்க நூல், அரிஸ்டாட்டிலின் கலைக்கழக மாணவர்களுக்காக, பல்வேறு சான்றோர்களின் அறவியல் கொள்கைகளைத் தேர்ந்து எடுத்து, அக்கழகத்தின் ஆசிரியர் ஒருவரால் தொகுக்கப்பட்ட தொகை நூல் என்பது அறிஞர்களின் துணிவாகும், இவ்விரு நூல்களிலும்

---

7 W. D. Ross (Tr.), Nichomachean Ethics, Intr. P. X.

அரிஸ்டாட்டிலின் அறவியல் நோக்கும் போக்கும் செல்வாக்குடன் விளங்குவதால், கிறித்துவ நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய அறிஞர்கள், அவற்றையும் அரிஸ்டாட்டிலே படைத்துள்ளதாக நம்பினர் போலும்.

எனவே, இன்றைக்கு அரிஸ்டாட்டிலின் அறவியல் எனப் போற்றப்படுவது நிக்கோமாக்கிய அறவியலே ஆகும். இது பிற்பகல் வேளைகளில் கலைக்கழகத்தைச் சேராத, அறிவுப்பசி வாய்ந்த மக்களுக்குச் செய்யப்பட்ட சொற்பொழிவுகளின் தொகுப்பு ஆகும். இந்நூல் திருவள்ளுவரின் திருக்குறளை விட நான்கு மடங்கு அளவால் பெரியது, முழுமையாக அறத்தைப் பற்றியே பேசுவது; பத்துப் பெரும் பிரிவுகளைக் (Books) கொண்டது. இவற்றைத் திருக்குறளின் 'பால்'களுக்கு ஒப்பாகக் கூறலாம். இந்நூலில் இடைச் செருகல் பல உள்ளதாக அறிஞர்கள் நம்புகின்றனர். திருக்குறளில் இடைச் செருகல் இருப்பதாக யாரும் கூறுவது இல்லை. அறத்துப் பாலின் முதல் நான்கு இயல்களாகிய பாயிரப் பகுதியைத் திருவள்ளுவர் இயற்றியதாகக் கூற இயலாது என்பது வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களுடைய கருத்து.இதனை, வேறு எந்தத் தமிழறிஞரும் உடன் பட வில்லை என்பது நாடறிந்த உண்மை.

அரிஸ்டாட்டிலின் அறவியல் நூலில் விரித்துரைக்கப் பட்டுள்ள கருத்துகளை வகைப்படுத்தி உரைப்பதானால், அவற்றை ஏழு பெருந்தலைப்புகளில் அடக்கி விடலாம். அவை (1) மனித வாழ்க்கையின் குறிக்கோள் (2) ஒழுக்கத்தின் நன்மை (3) நல்லொழுக்கம், (4) அறிவுத்திறன் சார்ந்த அறம், (5) அடக்க முடைமையும் புலனுகர் இன்பமும், (6) நட்பு, (7)இலட்சிய வாழ்க்கை என்பன இந்த எழுவகைப்பட்ட துறைகளில் அரிஸ்டாட்டில் மிக நுட்பமாகவும், அதே சமயத்தில் இயன்ற வரையில் விரிவாகவும் அறவியல் ஆராய்ச்சியை நடத்தியுள்ளார். ஆனால் அறத்தின் விதிகளை வகுத்துக் கூறும் நீதிநூல் ஆசிரியராக விளங்காமல், எதையும் அறிவுக்குப் பொருந்துமாறு காரணகாரியத் தொடர்புபடுத்திக் காட்டி, இக்காரணங்களினால்

இப்படி ஒழுகுவது சிறந்தது என்பதை நிலைநாட்ட கிரேக் கத்தின் அறவியல் அறிஞர் முயன்றுள்ளார். இந்த முறையை நம் திருவள்ளுவர் பேரளவிற்குக் கையாண்டுள்ளார். எனினும், முக்கியமான கருத்துகளை விதிகளாக வகுத்து, அவற்றைப் பின்பற்றுமாறு ஆசிரியராக நின்று வள்ளுவர் அறிவுறுத்து கிறார். இந்த இயல்பு இந்திய அறநூல்களில் பெருவழக்காக உள்ளதைக் காணலாம். திருவள்ளுவரிடம் இப்பண்பு மிகக் குறைந்த அளவே இடம் பெற்றிருக்கிறது.

அரிஸ்டாட்டிலின் அறவியல், கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் அண்மைக் காலம் வரையில், ஐரோப்பிய நாடு காளின் ஒழுக்க நெறி தத்துவ ஆய்வில் பேராதிக்கம் செலுத்தி வந்துள்ளதைச் சரித்திரம் பேசுகிறது! நம் திருக்குறள் இலக்கிய உலகிலும், அறவியல் ஆராய்ச்சியிலும் வழிகாட்டும் வான் பொருளாக விளங்கிவருகிறது. திருக்குறளினுடைய தாக்கம் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக இயற்றப்பட்டுள்ள நம் இலக்கியங்களிலும், சமய நூல்களிலும் பதிந்துள்ளதைக் காணுகின்றோம்.

அரசியல்

தனிமனிதனுடைய வாழ்க்கைக்கு உரிய ஒழுகலாறுகளை அறவியல் அறிவுறுத்துகிறது. 'மனிதன் ஒரு சமூக (கூடி வாழும்)விலங்கு' எனும் கருத்தை முதன்முதல்உலகிற்குத் தம்முடைய அரசியல் நூலின் மூலமே இவர் அளித்துள்ளார்; இதனுள் சமுதாய அறத்தைப்பற்றிப் பேசுகிறார். இவ்வகையில் அறவியலின் தொடர்ச்சியாக இந்த அரசியல் நூல் கருதப்படுகிறது.

பிளேட்டோ கற்பனை நெறியில், இலட்சிய அரசின் இயல்புகளை உள்ளுணர்வால் உணர்ந்து, கருத்துகளாகத் தொகுத்துக் கூறினார் அவருடைய மாணவரோ, நடைமுறையில் செயல்பட்ட அரசியல் அமைப்புகளையும் (Constitutions), ஆட்சிமுறைகளையும் ஆராய்ந்து, இலட்சிய

அரசின் இயல்புகள் சிறப்புமிகு அரசியல் பண்புகள் – எந்த அளவிற்கு அவற்றில் இடம் பெற்றுள்ளன என்பதைத் தெளிவுறுத்தியுள்ளார்.

தம் காலத்திய கிரீசிலும், கிரேக்கர் அல்லாதார் வாழ்ந்த நாடுகளிலும் நடைமுறையில் இருந்து வந்த 150க்கும் மேற்பட்ட அரசியல் அமைப்புகள் எவ்வாறு செயல்பட்டன என்பதை ஆராய்ந்து, அவற்றின் குறைகளைப் போக்குவதற்கு அரிஸ்டாட்டில் வழி காட்டியுள்ளார். இந்நூலின் பல்வேறு பகுதிகளுள், ஏதென்சு நகர அரசின் அரசியல் அமைப்பே முழுமையாகக் கிடைத்துள்ளது.

நம்முடைய ஆய்விற்கு நாம் எடுத்துக் கொண்டுள்ள அரசியல் எனும் நூல், இவருடைய அரசியல் கோட்பாடுகளை முறைப்படுத்திக் கூறுகிறது. இவை மேலே குறிப்பிட்ட நூலின் கருத்துகளில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன; புதிய தாகப் பொதுவான பல கொள்கைகளையும் இந்நூலில் இவர் நன்கு வரையறுத்துக் கொடுத்துள்ளார்.

அரசியல் எனும் இந்நூல், எட்டுப் புத்தகங்களை – பகுதிகளைக் கொண்டதாகும். அரசு என்ற சமுதாய அமைப்பின் சிறப்பு, சிறந்த அரசியல் சமுதாயம் யாது? குடிமக்கள் என்பவர் யார்?, சிறப்புமிகு (இலட்சிய) அரசியல் அமைப்புகள், பல்வேறு அரசியல் அமைப்புகளை அமைக்கும் முறைகள், இலட்சிய அரசியல் அமைப்பின் இயல்புகள், 'அரசியலாரும் கல்வி–கலைகளும்' என்னும் எண்வகையான அரசியல் கோட்பாடுகளை இந்த நூலில் அரிஸ்டாட்டில் விரித்துரைத்துள்ளார். இக்கொள்கைகள், நடைமுறை அரசியலில் காணப்படும் குறைகளை நீக்குவதற்கு உரிய வழிமுறைகளை வகுத்துத் தருகின்றன ; புதிய அரசியல் அமைப்பை, சிறப்புமிக்கதாக அமைப்பதற்குரிய 'வரைவுத் திட்டத்தை'த் தெளிவாகத் தீட்டப் பயன்பட்டன; இன்றும் பயன்படுகின்றன.

இக்காரணங்களால், முடியாட்சி முறைமுதல்,மக்களாட்சி வரையில் உள்ள பல்வேறு அரசியல் அமைப்புகளுக்கு வழிகாட்டக் கூடிய பல்வேறு நெறிமுறைகள் இந்த நூலில் இடம் பெற்றிருக்கின்றன. உலகிலேயே முதன்முதல் முடியாட்சி (Monarchy), (Aristocracy), மிதமான குடியாட்சி (Polity), சர்வாதிகாரம் (Tyranny). செல்வர் சிறுகுடியாட்சி (Oligarchy), மக்களாட்சி (Demo– racy) எனும் பல்வேறு அரசியல் முறைகளை நடைமுறையில் ஆட்சி நடத்தி, ஆராய்ந்து பார்த்த பெருமைக்குரிய நாடு கிரீஸ். எனவேதான், அரிஸ்டாட்டில் இவற்றைப் பற்றியெல்லாம் பட்டறிவோடு ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

இந்த அரசியல் எனும் நூலே சமூகவியல் ஆராய்ச்சிக்கு அடிப்படையான முதல் நூலாக அமைந்துள்ளது. குடிமகன், குடும்பம், சமுதாயம்,அரசு,அதிகாரவரம்பு, சட்டம், அடிமை நல்வாழ்வுப் பொருளாதாரம், மக்கள் தொகைப் பெருக்கக் கட்டுப்பாடு, புரட்சி, கல்வி, நல்வாழ்வுப் பணிகள் போன்ற பல செய்திகள் –சமூக இயல் கருத்துகள் முதன் முதலாக இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. இவ்வகையில் சமூகவியல் பொருளியல், கல்வியியல் போன்ற அறிவுத் துறைகளுக்கும் இந்நூலே முதல் நூலாகும்.

தமிழகத்தில் தோன்றிய திருவள்ளுவருக்கோ, முடியாட்சி ஒன்றைத் தவிர, வேறு வகையான ஆட்சி முறைகளைப்பற்றி ஒன்றும் தெரியாது. எழுத்து வடிவம் பெற்ற அரசியல் அமைப்புகளைப் பற்றியும் அவர் அறியார். எனினும் குடிமக்களின் நலங்கருதி ஆட்சி புரியும் அரசர்களின் அரசியலையும், குடி மக்களின் நலன் கருதாதக் கொடுங்கோல் அரசியலையும் அவர் வேறுபடுத்திக் காட்டியுள்ளார். அரசன் பின்பற்ற வேண்டிய சட்ட நெறிமுறைகளைப்பற்றி அறியாதவர் வள்ளுவர். ஆனால், அற நெறிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட முடியாட்சி அமைப்பின் மாட்சியையும், ஆட்சிக்கலையின் பல்வேறு இயல்புகளையும் நன்கு திருவள்ளுவர் தெளிவுறுத்தியுள்ளார்.

கிரேக்கத்தின் பேரறிவாளன் அரிஸ்டாட்டிலும், தமிழகத்தின் தனிப்பெருஞ் சிந்தனையாளன் திருவள்ளுவரும் அறமும் அரசியலும் இணைந்து இயங்க வேண்டும் என்பதில் அசைக்க இயலாத நம்பிக்கை கொண்டிருந்தனர். அரசியலை அறம் இயக்கவில்லை யென்றால், அது கொலையியலாக மாறிவிடும் என்று அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளமை, அவர்களுடைய சிந்தனையோட்டத்தில் காணப்படும் அடிப்படை ஒற்றுமைப் பண்பைப் புலப்படுத்துகிறது.

மெய்ப்பொருள் இயல்

மெய்ப்பொருள் இயல் (Philosophy) பற்றிச் சிந்தித்த அறிஞர்களின் சிந்தனைகள், பல்வேறு நாகரிக நாடுகளிலும் வளர்ந்து வந்துள்ளன. இந்நாகரிக நாடுகளில் கிரேக்கமும், இந்தியாவும் முன்னணியில் நிற்கின்றன.

மெய்ப்பொருள் இயல் என்பது என்ன? வாழ்க்கையின் இயல்பையும், இருப்பின் (Existence) இயல்பையும் ஆராய்வது மெய்ப்பொருள் இயல். இதை இருவகையாகப் பகுப்பர். அவை புலன் கடந்த பொருள் இயல் (Metaphysics), மெய்ப்பொருள் இயல் என்பனவாகும்.

அரிஸ்டாட்டில் உலகத்தின் உண்மையை நிலைக்களனாகக் கொண்டு, மெய்ப்பொருள் இயல் ஆய்வில் ஈடுபடுகிறார். இவர் ஓர் இயற்பியல் அறிஞர். இதனால் இவர் உலகத்தின் உண்மையை ஆராய்கிறார்; உலகத்திலேயே நிலைபேறுடைய பரம் பொருள் சுரந்து நிற்பதாகக் கருதுகிறார். தம்முடைய 'மெய்ப் பொருள் இயல்' நூலிற்கு இவர் 'மெடபிசிக்ஸ்' (Metaphyics) எனும் பெயரினையே இட்டுள்ளார். அக்காலத்தில், "புலன் கடந்த பொருள் இயல் வேறு; மெய்ப்பொருள் இயல் வேறு" எனும் நுட்பமான வேறுபாட்டு உணர்வு அறிஞர்கள் இடையே தோன்றவில்லை. எனவே, அரிஸ்டாட்டிலின் மெய்ப்பொருளியல், மெடபிசிக்ஸ் ' எனவே குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணுகிறோம்.

அரிஸ்டாட்டிலின் "மெய்ப்பொருள் இயல்" பதினான்கு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதியில் மெய்ப்பொருளைப் பற்றிய வரையறையையும், அவருக்கு முற்பட்ட காலத்திய கிரேக்கத்தின் தத்துவ வளர்ச்சியையும் காணுகின்றோம். மெய்ப்பொருள் ஆய்வு, ஆய்வுமுறைகள் இரண்டாம் பகுதியில் இடம் பெறுகின்றன. மெய்ப் பொருளியலின் அடிப்படைச் சிக்கல்கள் மூன்றாம் பகுதியில் விரித்து உரைக்கப்படுகின்றன. அடுத்த பிரிவில் இருப்பு நிலை, அடிப்படைக் கொள்கைகள் விளக்கப்படுகின்றன.

ஐந்தாம் பகுதியில் மெய்ப்பொருள் இயல் 'கலைச் சொற்கள்" ஆராயப்படுகின்றன. இயற்கை, தோற்றம், காரணம், ஒன்று, பல, முரண், இயல்பு, பகுதி, முழுமை போன்ற பல சொற்களின் அடிப்படைப் பொருள்கள் தெளிவுறுத்தப்படுகின்றன. இறையியலுக்கும் மெய்ப்பொருள் இயலுக்கும் இடையே உள்ள வேற்றுமைகள் அடுத்த இயலில் சுட்டிகாட்டப்படுகின்றன. உயிர்கள், பருப்பொருள்கள், வடிவம் போன்றவற்றின் விளக்கம் ஏழாம் இயலில் இடம் பெற்றுள்ளன. பருப்பொருள் வடிவ வகைகள் முதலியன அடுத்து ஆராயப்படுகின்றன .

ஒன்பதாம் இயலில் ஆற்றல், மெய்ம்மை, உண்மை முதலியவை விளக்கப்படுகின்றன. நான்குவகை அலகுகள், ஒற்றுமை, பன்மை, முற்றொருமை, போன்மை, மறுமைத் தன்மை, வேற்றுமை, அழிவன, அழியாதன பற்றிய ஆய்வு பத்தாம் பகுதியில் இடம் பெற்றுள்ளன. பதினோராம் இயலில், முதல் பத்துப் பகுதிகளில் ஆராயப்பட்ட செய்திகள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

மூவகைப் பருப்பொருள்கள். மாற்றமும் வளர்ச்சியும், தெய்விக உணர்வு, நன்மையின் சிறப்புப் போன்றவை பன்னிரண்டாம் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. நுண் பொருள்கள், எண்ணங்கள், கணித வடிவுகள், பிளேட்டோவின் கருத்துகள், ஆய்வு முதலியவை பதின்மூன்றாம் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. இறுதியாக

நிலைபேறுடைய பருப்பொருள்கள். எண்மான ஆய்வு, பைத்தாகரசின் கொள்கை மறுப்புப் போன்றவை தெளிவுறுத்தப் பட்டுள்ளன. இந்த 'மெய்ப் பொருள் இயல்' எனும் நூலோடு பெரிதும் தொடர்புடைய ஆன்மாவைப் (De Anima) பற்றிய நூல் ஒன்றையும் அரிஸ்டாட்டில் எழுதியுள்ளார்.

ஆன்மாவைப் (On the soul) பற்றிய நூல்,மூன்று பகுதி களைக் கொண்டது. முதல் பகுதியில் உளவியலின் சிறப்பும், ஆன்மாவின் அமைப்பும் விளக்கப்படுகின்றன. இரண்டாம் பகுதியில் ஆன்மாவைப் பற்றிய இருவகை வரையறை, ஆன்மிகத்திறன், ஆன்மாவின் கூறுகள், உணர்வுத்திறன் போன் றவை தெளிவுறுத்தப் பட்டுள்ளன. பொறி, புல அமைப்பும் செயற்பாடும், 'ஆன்மா, மனம் ஆகிய இரண்டும் ஒன்றா? அல்லது வெவ்வேறா ?" எனும் ஆய்வும் மூன்றாம் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

திருக்குறளின் அறத்துப்பாலில், அருளுடைமை எனும் அதிகாரம் (25) முதல், ஊழ் எனும் அதிகாரம் (38) வரையில் உள்ள பதினான்கு அதிகாரங்களைத் 'துறவற இயலாகக்' கூறுவர். இவற்றோடு அறத்துப் பாலின் பாயிரமாக உள்ள நான்கு அதிகாரங்களையும் ஒன்றாகச் சேர்த்து, திருக்குறளில் காணப்படும் மெய்ப்பொருளியல் பகுதி எனலாம். இப்பதினெட்டு இயல்களிலும் புலன்கடந்த பொருள் இயலும், மெய்ப்பொருள் இயலும், அனுபூதியுணர்வான மெய்யுணர்வு (Mysticism) இயலும் எடுத்துரைக்கும் உண்மைகள், கவிதை வடிவில் தரப்பட்டுள்ளன. இவற்றை மெய்ப்பொருள் இயல் கண்ணோட்டத்தில் நோக்குவோமானால் பல புதிய உண்மைகள் புலனாகும்.

கவிதை இயல்

பல்வேறு துறைகளில், மனித இனத்தின் நாகரிகத்தை வளர்த்ததில் முதன்மை இடத்தைக் கிரீஸ் பெற்றுள்ளதைக் கண்டோம். இதைப் போன்றே, இலக்கியத் திறனாய்வுத்

துறையிலும் கருத்தைச் செலுத்தியவர்கள் கிரேக்கர்களாவர். "மாமேதை அரிஸ்டாட்டிலின் கவிதை இயல் இத்துறையில் தோன்றிய முதற்பெருநூல்.கி.மு. நான்காம் நூற்றாண்டில் தோன்றிய இம்முதல்நூல், பின்னர்ப் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய அராபியமொழிபெயர்ப்புதான்தற்போதுகிடைத்தவற்றுள்மிகவும் தொன்மையானது. அதனுடைய இலத்தீன் மொழி பெயர்ப்பு D.S. மார்க்கோலித் என்பவரால் 1911இல் வெளிவந்தது.[8]" இதன் ஆங்கில மொழி பெயர்ப்பினையொட்டி இரண்டாண்டுகளுக்கு முன்பு, நல்லதொரு தமிழாக்கம் வெளி வந்துள்ளது.[9]

இலக்கியத் திறனாய்வுக்கலையை அறிய விரும்புவோருக்கு 'அரிச்சுவடியாகப்' பயன்பட்டு வருவது அரிஸ்டாட்டிலின் கவிதை இயலேயாகும். இதனை "அரிஸ்டாட்டிலைத் தொடாமல் இலக்கியத் திறனாய்வின் தொடக்கத்தையோ, வளர்ச்சியையோ உணர்ந்து கொள்ள இயலாது. 'திறனாய்வுத்துறை' எனத் தனித்த ஒரு கலைப்பிரிவு தமிழுக்குப் புதியது"[10] என்பதனால் தெளியலாம்.

கவிதை இயல் இருபத்தாறு இயல்களைக் கொண்ட நூலாகும். இந்நூலினுள் கவிதையின் இயல்புகள், நாடகத் தோற்றமும் வகையும், காப்பிய நெறிகள், அவல நாடகம், சொல்லாட்சியும் நடைநலமும், காப்பியம் – அவல நாடகம் ஒப்பாய்வு, அவல நாடகத்தின் சிறப்பு ஆகிய செய்திகள் மிக நுட்பமாக விரித்துரைக்கப் பட்டுள்ளன.

இத்தகைய திறனாய்வு பற்றிய நூல் ஒன்றினைத் திருவள்ளுவர் இயற்றவில்லை. திருக்குறளின் எந்தப் பகுதியும் இத்தகைய திறனாய்வுக் கலை இயல்புகளை எடுத்துரைப்பனவாக அமையவில்லை. ஆயினும்,

---

8 அ.அ.மணவாளன், கவிதை இயல், பக். 111.

9 ஷ, திறனாய்வு நூலகம், சென்னை, 1976

10 ஷ, மு.கு.நூல்,பக். III.

திருக்குறளின் பல பகுதிகளில் திறனாய்வுக் கருத்துகள் இலைமறை காய்கள் போன்று, இங்குமங்கும் இடம் பெற்றுள்ளன. இவற்றைத் திரட்டி வகைப்படுத்துவோமானால் ஒருசில இலக்கியத்திறனாய்வுக்கலைக்கூறுகள் வள்ளுவரால் எவ்வாறு தெளிவுறுத்தப்பட்டுள்ளன என்பதை அறிய இயலும்.

2. அறவியல் கோட்பாடு

அரிஸ்டாட்டிலினுடைய காலத்தில் வாழ்ந்த அனுபவம் நிறைந்த கற்றறிந்தோரின் கருத்துகளே, நம்முன் இவருடைய அறவியல் கருத்துகளாக மிதந்து வருகின்றன. இயேசு பெருமான் கண்ட விழுமிய மெய்யறிவிற்கும், தெய்வப் புலவர் திருவள்ளுவர் அமைத்த பெருந்தவ நெறிக்கும் அரிஸ்டாட்டிலின் அறவியலில் இடம் இல்லை! பிளேட்டோவின் மனிதப் பண்புகளைக் கடந்த அறநெறிக் கொள்கைகளையும், அவருடைய 'குடியரசில்' கோயில் கொண்ட பொதுவுடைமைத் தத்துவத்தையும் இவருடைய அறவியல் கோட்பாட்டில் காண இயலாது!

அறிவின் வகை

அரிஸ்டாட்டில் அறிவை மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளார். வெறும் நூலறிவு முதல் பகுதி; நம்முடைய நடத்தைக்கும் – அன்றாடப் பழக்க வழக்கத்திற்கும் அடிப்படையாய் உள்ள செயல் முறை அறிவு இரண்டாம் பகுதி; நமக்குப் பயன் படக்கூடியதாய், அழகுமிகு பொருள்களைப் படைக்கத் தூண்டுவதாய், நம்மை இயக்கும் அறிவுத்திறன் எனும் கலை அறிவு மூன்றாம் பகுதி. இம்மூன்று நிலைகளில் தான், நம் அறிவு இயங்கும் என்று இவர் கருதுகின்றார், முதல் வகை அறிவு ஏட்டுக் கல்வியால் பெறப்படும் கொள்கை அறிவு (Theoretical). இரண்டாம் வகை நடைமுறை வாழ்க்கையை உணர்ந்து செயற்படத் தூண்டும் அறிவு (Practical); மூன்றாவது படைப்பாற்றலாய் (Creative genius). மூவகைக்

கூறுகளைக் கொண்டதே மனிதனுடைய அறிவு என்று இவர் தெளிவுறுத்தியுள்ளார்.

வாழ்க்கையின் குறிக்கோள்

அறவியலைப்பற்றி அரிஸ்டாட்டில் தனிப்பட்ட நிலையில், சிறப்பித்துப் பேசவில்லை. அரசியலின் ஒரு பகுதியாகத்தான் இவர் அறவியலைப் போற்றுகின்றார். அறமும் அரசியலும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவர் இக்கிரேக்க ஞானி. ஆனால், அறத்திற்கு முதன்மை இடத்தைத் தம்முடைய மெய்ப்பொருளியலில் இவர் தரவில்லை. இதற்கு முற்றிலும் நேர்மாறான நோக்கம் உடையவர் நம் திருவள்ளுவர்! பொருளும் இன்பமும், அரசியலும் வாழ்வியலும், இல்லறமும் துறவறமும், மனிதனின் தனிவாழ்க்கையும் சமுதாயவாழ்க்கையும் அறத்துவழிப்பட்டதாக அமைய வேண்டும் என்பதே வள்ளுவரின் அடிப்படை கோட்பாடாகும்.

சிறப்பும்ஈனும் செல்வமும் ஈனும், அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. (31)

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை! அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை கேடு. (32)

அறத்தான் வருவதே இன்பம் (99)
அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை! (49)

அறனிழுக்காது அல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடையது அரசு (884)

இறைகாக்கும் வையகம் எல்லாம்; அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் (547)

நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும் (558)

அறனறிந்து ஆன்ற அமைந்த சொல்லான் (635)

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் (764)

என்பன போன்ற குறட்பாக்களில், 'அறமே முதன்மையானது; அரசியலையும் வாழ்வு இயலையும் இயக்குவது' என்னும் கொள்கையைத் தமிழ்ச் சான்றோர் அறிவுறுத்துகிறார்

அடுத்து சமுதாயத்தின் நலன் தான் தனிமனிதனுடைய நலத்தைக் காட்டிலும் பெரியது; முக்கியமானது[11] எனும் கருத்தோடு அரிஸ்டாட்டில் தம்முடைய அறவியலைத் தொடங்குகிறார் ஆனால், இந்நூலின் இறுதியில் தனி மனிதனின் தூய ஒழுக்கத்தை நிலைநாட்டுவதற்கே சமுதாயம் நிறுவப்பட்டது எனும் கருத்தை இவர் வெளியிட்டுள்ளார்.[12] இந்த வகையில் ஓரளவிற்கு முதலில் வள்ளுவரோடு முரண்பட்டாலும், இறுதியில் ஏறக்குறைய திருவள்ளுவருடைய முடிவிற்கே அரிஸ்டாட்டிலும் வந்துள்ளார் என்பது கருதத்தக்கதாகும்.

நன்மை

மனிதன் வாழ்க்கையில் அடையத் துடிப்பது இன்பம். இன்பத்தை எவ்வாறு பெற இயலும்? நன்மையில் இருந்து பெற இயலும். எனவே 'நன்மை தருவன எல்லாம் இன்பம் பயப்பன எனும் முடிவிற்கு அரிஸ்டாட்டில் வருகிறார்.

அடுத்து, நன்மை என்பது யாது? இன்பத்தைத் தருவது, மனநிறைவை அளிப்பது யாதோ, அதையே 'நன்மை' எனக் கூறலாம் என இவர் துணிகிறார்[13] திருவள்ளுவர் இதனை 'மன நலம்' என்பர்[14]. இதைப்பற்றி இந்நூலில் இடம் பெற்றுள்ள மனநலம் எனும் ஆய்வுரையில் விரிவாகக்

---

11 Aristotle: Ethics, (Ed) J. Warrington P. 7.

12 PP 230–232.

13 Ethics, P. 12.

14 திருக்குறள் 5 457, 458, 459.

காணலாம். மன நிறைவைப் பெறுவது எப்படி? நாம் ஒன்றை அடைய விரும்புகிறோம்; நேர்மையான முறையில் முயற்சி செய்கின்றோம்; அதனை அடைகின்றோம். அதனால் நமக்கு இன்பம் உண்டாகிறது. இன்பம் ஏன் உண்டாகிறது? நாம் அடைய விரும்பி முயன்ற ஒன்றை அடைந்தபொழுது, நமக்கு நன்மை உண்டாகிறது. அதனால் மனநிறைவு உண்டாகிறது. மனநிறைவால் மகிழ்ச்சி உண்டாகிறது. எனவே, நன்மை என்பது நம் மனநிறைவிற்கு – மன நலத்திற்குக் காரணமாக அமைகிறது. நன்மையின் உள்ளுறு பயன்மதிப்பால் (Intrinsic value) நாம் அடைவதே மனநிறைவு. அதன் வாயிலாக அகத்தெழுச்சி உண்டாகிறது. அவ்வகத்து எழுச்சியே மனநலமாகிய இன்பத்தை (Happiness) அளிக்கிறது.

மன நலம் எனப்படும் இன்பம் முடிந்த பயனா? அல்லது நன்மையை அடைவதற்குரிய ஒரு கருவியா?' எனும் வினாவினை எழுப்பி, மன நல இன்பம் ஓர் அடிப்படைக் கொள்கை; அதனை அடைவதற்காகவே நன்மை பயப்பனவற்றையெல்லாம் நாம் போற்றி மேற்கொள்ளுகின்றோம் என்று 'மனித வாழ்க்கையின் குறிக்கோள்' எனும் பகுதியை அரிஸ்டாட்டில் முடிக்கின்றார்.[15] திருவள்ளுவர் அறத்தின் பயனாகப் பெறப்படுவதே மன நல இன்பம் எனும் கருத்துடையவர் ஆவார். எனவே, திருவள்ளுவரும் அரிஸ்டாட்டிலும் இவ்வகையில் ஒத்த கருத்து உடையவர்களாகத் தோன்றுகின்றனர்.

அறத்தின் இயல்பு

அறவியலை இரண்டு வகையாக விளக்குவது அறவியல் ஆராய்ச்சியாளரின் வழக்கமாகும். அறவொழுக்கங்களை முடிந்த முடிவாகக் கொள்ளுவது ஒரு மரபு. மன நலமாகிய இன்பத்தை அடைவதற்குக் கருவிகளாக அற வொழுக்கங்களைக் கொள்ளுவது மற்றொரு வகை ஆராய்ச்சி முறையாகும். இந்த இரண்டினுள், அரிஸ்டாட்டில் அறநெறியை ஒரு கருவியாகவே

15 Ethics, P. 21.

கருதுகிறார் என்பதை இவ்வுரையின் தொடக்கத்தில் கண்டோம்.

திருவள்ளுவரோ இன்பம், அறத்தான் வருவதே என்பதைத் தெளிவாக எடுத்துரைத்து இருப்பதை முன்னரே கண்டோம். இதனை, தொடக்க நிலையாகவே அவர் கொண்டுள்ளார். ஆனால், 'செயல் நிலை அறத்தை'ப்பற்றிப் பேசுகின்ற பொழுது, "நன்மைக்காகவே நன்மை செய்ய வேண்டும்" எனும் நோக்குடையவராக வள்ளுவர் விளங்குகிறார்.

நல்லாறு எனினும் கொளல்தீது; 'மேலுலகம்
இல்' எனினும் ஈதலே நன்று. (222)

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றும் கொல்லோ உலகு? (211)

இத்தகைய நோக்கைப்பற்றி ஆல்பர்ட் சுவைட்சர் கூறுவதைக் காண்போம்:

> பகவத்கீதையோ, "உலகஒழுங்குக்குப்பொருத்த மானதால், செயற்பாட்டு வாழ்வே நாம் வாழ வேண்டும்" எனச் செயல்முறை வாழ்விற்கு, ஊக்க மற்ற நிலையில் வலிந்து காரணங் காட்டுகிறது. குறளோ அறநிலைச் செயன்முறை என்ற கருத்தின் வழியே, செயல்முறை வாழ்வு தக்கது என நிலைநாட்டுகிறது. எவ்வளவு முன்னேற்றமான நிலை இது! செயலும் அதன் ஊதியமும் நன்மை செய்யும் நிலையில் மனிதனை நிலைநிறுத்துகின்றன[16]

என்று கீதையும் குறளும் அறச்செயல் பற்றிக் கொண்டுள்ள வேறுபட்ட நோக்கங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இத் துணிவுரையை அரிஸ்டாட்டிலின் அறநெறிக் கொள்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது, திருக்குறள் வகுத்துரைக்கும் அறவியல் கோட்பாட்டின் சிறப்பு எளிதில் புலனாகின்றது.

இந்தக் கருத்திற்கு ஊற்றம் தரும் வகையில்,

---

16 Albert Schweitzer, Indian Thought and Its Deve– lopment, P. 198.

இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம், விருந்து ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (81)
தாள்ஆற்றித் தந்தபொருள் எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (212)

எனும் குறட்பாக்கள் அமைந்துள்ளன.

இவற்றிலிருந்து ஓர் உண்மை தெளிவாகத் தெரிகிறது. அறத்தின் மாட்சியை மக்களுக்கு அறிவுறுத்தும் முதல் நிலையில், அறநெறியில் ஒழுகுவதால் பயன் உண்டாகும் என்பதை வள்ளுவர் கோடி காட்டியுள்ளார். ஆனால், தனிமனிதனுடைய உள்ளம் அறவுணர்வால் பண்பட்டு விரிகின்ற பொழுது, 'அறத்தையே முடிந்த பயனாகக் கருதும்' இரண்டாவது நிலையை வள்ளுவர் காட்டுகிறார். அந்நிலையில் 'கடன்என்ப நல்லவை எல்லாம்' (681) என்று அவர் அறிவுறுத்துகிறார்.[17]

இதற்கும் மேலாக மூன்றாவது நிலை ஒன்றைத் திருவள்ளுவர் சுட்டுகிறார். அறவாழ்வின் முடிவான பயனாக மனிதன்தன்னைஉணர்தலை(Self Realisation)குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்பது திருவள்ளுவருடைய அறக் கொள்கையின் முடிமணியாகும். 'தன்னை உணர்தல்' என்பது மனிதன் ஆர்வத்தோடு அடையத்துடிக்கும் ஆன்ம நிறைவைக் குறிப்பதாகும். 'தன்னை உணர்தலில்' தனிமனிதனே முதன்மை வாய்ந்தவனாகத் தோன்றுகிறான் என்பதையும் இங்கு நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் (6)
யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் (346)
இருள் நீங்கி இன்பம் பயக்கும் (352)

---

17 இதன் விரிவினை ஆசிரியரின், 'திருக்குறளும் இந்திய அற நூல்களும்' எனும் நூலில் (பக். 90–94) காணலாம்.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி (356)

என்னும் குறட்பாக்கள் 'தன்னை உணர்தலின்' பண்பையும் பயனையும் எடுத்துரைக்கின்றன.

அறத்தின் வகை

அரிஸ்டாட்டிலின் அறவியல் கோட்பாடு 'நன்மை – தீமைகளைப்பற்றியவிளக்கத்தைஅடிப்படையாகக்கொண்டது. நன்மையின் நிலைக்களனாக விளங்குவது ஒழுக்கம். அதனை அறவொழுக்கம் (Moral Virtue), அறிவுவொழுக்கம் (Intellectual virtue) என்று இவர் பாகுபடுத்தியுள்ளார். அறவொழுக்கம் பழக்கவழக்கத்தால் அமைவது. அறிவுவொழுக்கம் கல்வியால் வளர்வது. அறவொழுக்கம் வெறும் பழக்கம் அன்று; அது மனிதனுடைய தேர்ந்திடும் பழக்கம் (Selecting habit) என்பர். இக்கருத்து வழக்காற்று ஒழுக்க நெறியின் இயல்புகளில் சிறந்தவற்றையே சுட்டுகிறது.

அறவொழுக்கம்

"அறவொழுக்கம் என்பது யாது? அது ஒருவகை மன நிலையைக் குறிக்கிறதா? வெறும் உணர்ச்சியா? அல்லது அது ஒருவகை மனத்திறனா?"[18] என்பதைப்பற்றி அரிஸ்டாட்டில் விரிவாக ஆராய்ந்துள்ளார். இறுதியாக, "அறம் மனநிலையும் அன்று; உணர்ச்சியும் அன்று; மனத்திறனும் அன்று" எனும் முடிவிற்கு இவர் வருகிறார். மிதமான ஒருநிலையை – நடுவழியைத் (Mean) தேர்ந்தெடுத்து, அந்நெறியில் வாழ்வதே அறவொழுக்கம் என்று இவர் துணிகின்றார். [19]

இரு எல்லைகளுக்கும் போகாமல், எதிரிடையான பண்புகளுக்கு இடையே, நடுவுநிலையில் நின்று ஒழுகும் தன்மையே அறம் என்பது அரிஸ்டாட்டிலின் சித்தாந்தமாகும்.[20] இருவகைத் தீமைகளுக்கும் இடையே – நடுவே – ஒழுக்கம்

18 Ethics:P. 27–29.

19 ஷெபக். 33–34.

20 Ethics, PP. 34–36.

நிலை பெற்றிருப்பதாக இவர் கருதுகிறார். துணிவு அல்லது உள்ளவுரம் என்பதை எடுத்துக் கொண்டால், அது முரட்டுத் துணிச்சலுக்கும்,கோழைத் தனத்திற்கும் இடையே அமைவதாக இவர் கூறுகின்றார். இரண்டு தீமைகளின் எல்லைகளுக்கும் இடையே விளங்கும் நடுவுநிலை என்பது, ஒரு மனிதனின் சூழ்நிலையைப் பொறுத்து அமைவதாகும். ஓர் அரசியல் வாதியை விட, ஒரு போர்வீரன் முரட்டுத்தனமானத் துணிச்சல் உடையவனாக இருக்கவேண்டும். வீரனுடைய முரட்டுத் துணிச்சல் குற்றமாகாது. ஏனெனில், அவன் நாட்டைக்காக்க வீரமுடன் போரிட வேண்டி இருக்கிறது என்பர். இவ்வாறே ஈகையின் தருமம் செய்வதின் – இரு எல்லைகளாக ஊதாரித் தனத்தையும் உலோபத் தன்மையையும், கல்வியின் இரு எல்லைகளாக அறிவின்மையையும் கல்லாமையையும் இவர் குறிப்பிடுவர்.

நடுவழியைக் கடைப்பிடிக்கும் முறையை மொத்த மனித இயல்புடன் தொடர்பு படுத்துவதே சிறந்த நிலையாகும். ஆனால் இரு தீமைகளுக்கு இடையே நல்லொழுக்கம் அமைவதாக அரிஸ்டாட்டில் காட்ட முயன்றார். இதனால் பெருமத்திற்கும் (Maximum), குறுமத்திற்கும் (Minimum) இடையே அறத்தை நிறுத்திக்காட்ட நேர்ந்தது. இதன் விளைவாக, அறத்தின் சிறப்பினை இவர் குறைத்து மதிப்பிட்டு விட்டார். உவமை என்பது 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை'[21] என்று தொல்காப்பியர் கூறுவதைப் போன்று, அறம் என்பது குறிப்பிட்ட ஒரு பண்பின் உயர்ந்த நிலையாகவே எப்பொழுதும் இருத்தல் வேண்டும். இதற்கு மாறாக, அரிஸ்டாட்டில் அறத்திற்கும் மறத்திற்கும் இடையே சிறிதளவு வேற்றுமையே காட்டியுள்ளார். திருவள்ளுவர் அறத்திற்கு எல்லை வகுக்கவில்லை! ஆனால், அறத்தைச் செயலின் நிறைவாகவும், மீயுயர் நிலையாகவும் அவர் போற்றுவதைக் காணலாம்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்? (71)

---

21 தொல். 1224

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் (596)

மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று (222)

ஒப்புரவினால் வரும்கேடெனின் அஃது ஒருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து. (220)

அறநெறியில் வாழ விரும்பும் மனிதனுடைய 'பொறுப்புகளைச் சுட்டி, அவை எவ்வாறு சூழ்நிலைகளால் அமைகின்றன என்பதை அரிஸ்டாட்டில் தெளிவுறுத்தியுள்ளார். பிறகு அறத் திறனை அறவொழுக்கம், அறிவு ஒழுக்கம் என்று பாகுபடுத்தியதோடு அமையாமல் (அ) தனிமனித அறம், (ஆ) மனித உறவுக்குரிய அறங்கள், (இ) அறிவு ஒழுக்கம் (ஈ) நட்பு என்று நான்கு வகையாகப் பிரித்து விளக்கியுள்ளார். அவற்றின் சிறப்பு இயல்புகளைக் காண்போம்.

(அ) தனிமனித அறம்

நன்னெறியில் நின்று ஒழுகுவதாலும் நற்செயல்களைத் திரும்பத் திரும்பச் செய்வதாலுமே, ஒருவன் அறவொழுக்கம் உடையவனாக விளங்க முடியும். இன்ப துன்பத்தை அடிப்படையாகக் கொண்டதே அறவொழுக்கம். நாம் நல்லவர்களாக இருந்தால்தான் நற்செயல்களைச் செய்ய இயலும். எனவே, முதலில் நாம் நல்லவர்களாக வாழமுயலவேண்டும்.[22] அறவொழுக்கத்திற்குரிய பொறுப்புகள் தனிமனிதனையே சார்ந்து இருக்கிறது; புகழும் பழியும் அவற்றை முறைப்படுத்துகின்றன.

(1) அறிவு

அறியாமையாலேயே மனிதன் தவறு செய்கிறான். மீண்டும் அதே தவற்றினைச் செய்யாமல் தடுக்கவல்லது அறவுணர்வு; அவ்வுணர்வினைப் பெறுவதற்கு உதவுவது அறிவு. எனவே மனிதன் பட்டறிவோடு, நூலறிவையும் பெற

22 Ethics, pp. 31–32.

முயலவேண்டும். தீய செயலைச் செய்வதிலிருந்து தடுத்து, நல்ல செயலைச் செய்யுமாறு நெறிப்படுத்துவது அறிவு[23] என்பது அரிஸ்டாட்டிலின் சித்தாந்தமாகும்.

திருவள்ளுவர் அறியாமையைப் போக்குவதற்குரிய கருவி "கல்வி" என்பதை அழுத்தம் திருத்தமாகக் கல்வி (40) கல்லாமை (41), கேள்வி (42) எனும் அதிகாரங்களில் விரித்துரைத்துள்ளார்.

கேடில் விழுச்செல்வம் கல்வி (400) என்று அவர் அறிவுறுத்துகிறார். அடுத்து அறிவுடைமை (43) எனும் அதிகாரத்தில் அறிவின் பண்பையும், பயனையும், சிறப்பையும் வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். இப்பகுதியில் கூறப்படும் கருத்துகள் பல, அரிஸ்டாட்டிலின் கருத்துகளோடு முற்றிலும் ஒத்தவையாக உள்ளன.

அறிவற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண் (421)
சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு (422)

எனும் இருகுறட்பாக்களும் கிரேக்கதமிழக அறிஞர்களின் ஒத்த சிந்தனைக்குச் சிறப்புமிகு சான்றுகளாகும். அரிஸ்டாட்டில் தனிமனிதனுக்கு உரியதாகக் கூறும் இவ்வறத்தைப் பொருட்பாலில், அரசனுக்கும், அரசனைச் சார்ந்தவருக்கும், நல்ல குடிமக்களுக்கும் தேவையானதாக திருவள்ளுவர் கூறுகிறார்.

(2) உள்ளவுரம்

உள்ளவுரம் என்பது என்ன? அது தன்னம்பிக்கையின் அடிப்படையில் அமைவதா? அச்சத்தின் உணர்ச்சிச்செறிவால் உண்டாவதா? என்பதை அரிஸ்டாட்டில் ஆராய்கிறார். தன்னம்பிக்கையாலும் தற்காப்பு உணர்வாலும் தோன்றுவதே உள்ளவுரம் (தைரியம்) என்று இவர் துணிகின்றார். கோழைத்

23 Ethics, pp. 48–49.

தனத்திற்கும் முரட்டுத்தனமான துணிச்சலுக்கும்[24] இடைப் பட்ட தன்மானத் தன்மதிப்பு உணர்வின் வெளிப்பாடே உள்ளவுரமாகும்.[25] ஊக்கம் உடைமை (60), ஆள் வினையுடைமை (62) எனும் அதிகாரங்களில் வள்ளுவர் உள்ளவுரத்தை விளக்கியுள்ளார்.

(3) பொறுமை

உள்ளவுரம் இருந்தால் போதாது. பொறுமையுணர்வும் வேண்டும். அப்பொழுதுதான் நிலைத்த பயன் தரும் செயல்களைச் செய்ய இயலும். புலனடக்கம் பொறுமை யுணர்வை வளர்க்கும். எனவே, இரண்டும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றது ஆகும்.[26]

திருவள்ளுவர் தனிமனிதனுடைய அறமாகவே அடக்கம் உடைமையையும்(13), பொறையுடைமையையும் (16)போற்றுகிறார்."அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றுக; இதைக் காட்டிலும் ஆன்மாக்களுக்குச் சிறந்த பேறு அளிப்பது வேறொன்றும் இல்லை"[27] என்று அவர் அறிவிக்கிறார். பிறர் நமக்குச் செய்யுங்குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுதலையே 'பொறையுடைமை' எனும் அதிகாரத்தில் அவர் எடுத்துரைக்கின்றார். "ஒருவன் செய்த தீமைகளை எப்போதும் பொறுத்துக் கொள்ளுக! அத்தீமைகளை, மறந்து விடுதல் பொறுத்தலினும் நன்று! மனத்திட்பமாகிய சான்றாண்மை தன்னைவிட்டு நீங்காதிருக்க வேண்டும் என்று ஒருவன் விரும்பினால், தன்னிடம் உள்ள பொறுமைப்பண்பு கெடாமல் பாதுகாத்து நடக்க வேண்டும்! தமக்குத் தீங்கு செய்தாரை மன்னிக்காமல், அவரைத் தண்டிப்பவரை, ஒரு பொருளாக அறிஞர் மதிக்க மாட்டார்![28]

---

24 Ethics, p. 58.

25 Ethics, pp. 58–59

26 ஷ pp. 59–64

27 குறள் 122

28 குறள், 152, 154, 155

(4) பெருமிதம்

பெருமைமிக்கப் பொருள்களோடு தொடர்பு உடையது பெருமிதம். அழகு எனும் சொல், கட்டான உடலினை நினைவூட்டுவதைப் போன்று, பெருமிதம் பெருமைக்குரிய இயல்புகளையும் செயல்களையும் சுட்டி நிற்கிறது.[29] பேரளவிற்கு மதிப்பையும் மரியாதையையும் அடிப்படையாகக் கொண்டது பெருமிதம். பெருமிதம் பேராவலால் – வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியத்தோடு வாழ்வதால் சிறப்புறுகிறது. இப்பெருமிதத்தின் வழியே தோன்றுவது 'செருக்கு ' என்றும், ஒவ்வொரு மனிதனுக்கும் கணிசமான அளவிற்குச் செருக்கு வேண்டும் என்றும் அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். [30]

திருவள்ளுவர் "பெருமைக் குணமாவது செருக்கில்லாமல் இருத்தல்; சிறுமைக் குணமாவது செருக்கினை மேற்கொண்டு ஒழுகுதலாம்" என்பதை,

பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல் (979)

என்று தெரிவிக்கிறார். இவ்வகையில் அரிஸ்டாட்டிலின் கருத்தில் இருந்து நம் வள்ளுவர் முற்றிலும் வேறுபடுகிறார்.

(5) சீற்றம்

"சீற்றம் தேவையா ?" எனும் வினாவினை அரிஸ்டாட்டில் எழுப்புகிறார்; "தேவை" எனவும் இவர் விடை அளிக்கிறார். சரியான பொருள்களிடத்தும், பொருத்தமான மனிதர்களிடத்தும், சரியான முறையில், சரியான சமயத்தில், பொருத்தமான கால அளவிற்கு ஒரு மனிதன் சினங்கொண்டால், அதனால் புகழே உண்டாகும்[31] என்பது அரிஸ்டாட்டிலின் நம்பிக்கை; எல்லைமீறிய சினமே – கடுஞ்சீற்றமே கண்டிக்கத் தக்கது

---

29 Ethics, p. 78.

30 ஷ p. 84.

31 Ethics, pp. 78–82.

என்கிறார். வள்ளுவரோ, 'வெகுளாமை ' எனும் அதிகாரத்தில் (31) சினம் கொள்ளுவதற்குக் காரணம் இருந்தாலும், சினங்கொள்ளற்க என எச்சரிக்கை செய்கிறார்.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும் (306)

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்து அறைந்தான் கையிழையா தற்று (307)

என்னும் குறட்பாக்கள் இங்குச் சிந்திக்கத் தக்கன.

(ஆ) மனித உறவுக்குரிய அறங்கள்

சமுதாயத்தில் உள்ள மற்ற மனிதர்களோடு சேர்ந்து பழகுவதற்குரிய அறங்களை, இப்பகுதியில் கிரேக்கப் பேரறிஞர் கோடி காட்டுகிறார். இப்பகுதியில் இனிமையாகப் பேசுதலும் பழகுதலும், உண்மை, நகைச் சுவையுடன் பேசும் திறன் என்பன விளக்கப்படுகின்றன.

(1) இனியவை கூறல்

இனிமையாக ஒழுகுதல்' எனும் பகுதியில், மேல்நிலையில் உள்ளவர்களோடு ஒருவகையாகவும், தமக்குக் கீழ்நிலையில் உள்ளவர்களோடு வேறொரு வகையாகவும் பழக வேண்டும் என்று அரிஸ்டாட்டில் அறிவிக்கின்றார்.[32]

இக்கருத்து, வள்ளுவத்தின் நோக்கிற்கு முரண்பாடானது. *இரவலரைக் கண்டபொழுதே முகத்தால் விரும்பி, இனிதாக நோக்கிப், பின் நெருங்கி வந்தபோது உளம்கனிந்த இனிய சொற்களைச் சொல்லும் இடத்திலேதான் அறம் களிநடம் புரியும்" என்பதை,

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம் (93)

32 Ethics, p. 87.

என்று தமிழ்மறை தந்த சான்றோர் தெரிவிக்கின்றார். மற்றும் ''எல்லாரிடத்தும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல் கூறவல்லவராக[33] விளங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

(2) உண்மை

உண்மை என்பது யாது ?" என்பதைத் தெளிவுறுத்தாமல், உண்மை பேசும் மனிதன், உண்மை இல்லாத மனிதனுக்கும் தற்பெருமை வாய்ந்த மனிதனுக்கும் இடைப்பட்ட நடுவழிக் கோட்பாட்டினனாவான்[34] என்று வேறுபடுத்திக் காட்டுவதோடு அரிஸ்டாட்டில் அமைகிறார். உண்மைக்காகவும், கருத்துரிமைக்காகவும் உயிர்த்தியாகம் செய்த சாக்ரடிசு அவருடைய உள்ளத்தைக் கவரவும் இல்லை! உண்மை பேசுதலின் சிறப்பை மிகமட்டமாகவே இவர் மதிப்பிட்டுள்ளார்.

வள்ளுவர் போற்றும் தலைசிறந்த அறங்கள் இரண்டு. ஒன்று கொல்லாமை; மற்றொன்று உண்மை பேசுதலாகும்.

ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று (323)

தாம் ஆராய்ந்து அறிந்தவற்றுள், நிலைபெற்ற பொருளாக எவ்வகையிலும் மெய்ம்மையைப் பார்க்கிலுஞ் சிறந்த பொருள் வேறில்லை என்பதை.

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற (300)

என்று அழுத்தந்திருத்தமாக வள்ளுவர் அறிவித்துள்ளமை இங்கு நினைவுகூர்தற்குரியது.

(3) நாணம்

நாணுடைமையைப் பிளேட்டோவின் மாணவர் குறைபாடுகளுடைய அறமாகவே கருதுகிறார். மதிப்புக்கெட்டுவிடும்

---

33 குறள். 94

34 Ethics. pp. 88–89

எனும் அச்சத்தால் உண்டாவதே நாண உணர்வாம்.[35] இது இளைஞர்கள் இடையே காணப்படும் இயல்பாம். திருவள்ளுவரோ நல்ல குடிமக்களுக்கு உரிய இயல்பாக நாணுடைமை (102)யைப் போற்றுகிறார்.

ஊண் உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறல்ல;
நாணுடைமை மாந்தர் சிறப்பு (1012)

பிறர்நாணத் தக்கது தான் நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து (1018)

எனும் குறட்பாக்கள், 'மனிதனுக்கேயுரிய சிறப்பு இயல்பு நாணம் என்பதைத் தெரிவிக்கிறது.

(4) நீதி

நேர்மையான சிந்தனையுடையவராய் வாழ்தலும், நேர்மையான செயல்களைச் செய்வதும், நேர்மையான விளைவை எதிர்பார்ப்பதுமான அறவுணர்வின் நிலையே, நீதி என்பது அரிஸ்டாட்டிலின் வரையறையாகும்.[36] இதனைத் தனிமனித நீதி, அனைத்து உலகிற்கும் பொருந்தும் நீதி என்று முதலில் இரு வகையாகப் பாகுபாடு செய்கிறார். நீதி என்பது சட்டத்திற்குக் கட்டுப்பட்ட செயல்களையும், நேர்மையான செயல்களையுமே குறிப்பதாக அவர் கருதுகிறார்.[37] "நீதி ஆளுக்கு ஆள் வேறுபடும்; எனவே நீதி என்பது எல்லாருக்கும் ஒரேதன்மையுடையதாக விளங்கும் எனக் கருதுதல் தவறாகும்" என்பர். இது 'ஒரு குலத்துக்கு ஒருநீதி' எனும் குறுகிய நோக்கை வெளிப்படுத்துகிறது. அரிஸ்டாட்டிலின் நோக்கில் 'அனைத்து உலக நீதி' (Universal Justice) என்பது சிறப்புடை மக்களுக்கும், செல்வச் சீமான்களுக்கும், மற்றவர்களுக்கும் பொருந்திவரக் கூடிய சட்டங்களாகவே தோன்றுகின்றன.

---

35 Ethics P.91

36 Ethics, P.92

37 Ethics, P.93

ஆனால், இச்சட்டங்கள் அடிமைகளுக்குப் பொருந்தாதாம்[38] இந்த நீதியைச் சார்பு நிலை அறமாகவே கருத வேண்டுமாம்.

மேலும், நீதியை (1) வழங்கும் நீதி, (2) பரிகாரம் செய்யும் நீதி என இருவகையாக இவர் பாகுபாடு செய்கிறார். நாட்டின் வளத்தையும், செல்வத்தையும், பெருமைகளையும் உரிமைக் குடிமக்களுக்குப் பகிர்ந்து அளிப்பது, வழங்கும் நீதியாம். ஒரு மனிதன் மற்றொரு மனிதனோடு கொடுக்கல் வாங்கலில் உண்டாகும் சிக்கலைத் தீர்ப்பதே பரிகார நீதியாம்[39]

'வாணிக நீதி ' என மற்றொரு வகை நீதியைப் பற்றி அரிஸ்டாட்டில் பேசுகிறார். உடன்பாட்டினையும். ஒப்பந்தத்தையும் கடைப்பிடிக்காமல் மீறுவதால் உண்டாகும் தகராறுகளைத் தீர்க்கும் நீதியாக இதை விளக்குகிறார்.[40]

இவற்றிற்கு மேலாக, 'அரசியல் நீதி – அரசியல் சார்பிலா நீதி' என்று ஒருவகையாகவும், 'இயற்கை நீதி – மரபு வழிப்பட்ட நீதி ' என்று வேறொரு வகையாகவும் அரிஸ்டாட்டில் நீதியைப் பாகுபடுத்தியுள்ளார்.[41] நேர்மையுடன் வாழ்வதனால் உண்டாகும் துன்பங்களைச் சுட்டுகிறார் ."கணவன்– மனைவி', 'ஆண்டான் – அடிமை' ஆகியவருக்கு ஏற்ப நீதி வேறுபடும்[42] என்பது இவருடைய துணிவு.

திருக்குறளில் 'நீதி' எனும் சொல்லைக் காண்பது அரிது. ''முறை' எனும் சொல்லால் அரச நீதியைப் பல்வேறு இடங் களில் திருவள்ளுவர் சுட்டியுள்ளார்.[43] 'நயன், அறம்' எனும் இரு சொற்களால், நீதியின் பிறபொருள்களைத் திருவள்ளுவர் உணர்த்தியுள்ளார்.

---

38 ஷ p. 93.

39 Ethics, p. 96.

40 Ethics, p. 101.

41 ஷ p. 105.

42 ஷ p. 116

43 குறள் 388, 541, 547, 548, 553, 558, 559

(இ) அறிவுவொழுக்கம்

உயிரின் இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்ற பொழுது, அறிவுத்திறனைச் சார்ந்து இயங்கும் ஒழுக்கமே அறிவுவொழுக்கமாகப் போற்றப்படுகிறது.[44] இதனை அறிவியல் அறிவு, கலையறிவு, உலகியல் அறிவு, உள்ளுணர்வைச் சார்ந்த அறிவு, இலட்சிய அறிவு எனப் பலவகையாகப் பிரித்து அரிஸ்டாட்டில் விளக்கியுள்ளார்.[45] "இவையாவும் உளவியல் பின்னணியில் செய்யப்பட்டுள்ள பாகுபாடுகளாகத் தோன்றுகின்றன.

இவற்றை அடுத்துச் 'சிறிய அறிவுவொழுக்கங்கள்' எனும் தலைப்பில் தெரிந்து தெளிதல், புரிந்துகொள்ளுதல், தீர்ப்புரைத்தல் என்பனவற்றைப் பற்றிய நடைமுறைச் சிக்கல்களைத் தெளிவுறுத்துகின்றார்.

அறிவுவொழுக்கம், 'இயற்கை அறத்தையும்', 'உலகியல் அறிவையும்' இருகூறுகளாகக் கொண்டதென்று இவர் தெரிவிக்கிறார்; பின்னர் உலகியல் அறிவை நிலைக்களமாகக் கொண்டே, பல்வகை அறங்களும் தோன்றியுள்ளன என்பதைத் தெளிவுறுத்துகிறார். எனினும், உலகியல் அறிவு, அறிவுவொழுக்கத்தோடு இணைந்து இயங்கினால்தான். மனித வாழ்வு சிறக்க முடியும் என்பதை இவர் அறிவுறுத்துகிறார்.[46] 'உலகத்தோடு ஒட்ட ஒழுகலை' வள்ளுவர் வற்புறுத்தியுள்ளார். அதைக் கற்காதவன், எத்துணைக் கல்வி அறிவு பெற்றிருந்தாலும் கல்லாதவனே ஆவான் என்பது அவருடைய கருத்து.[47]

உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு. (425)

---

44 Ethics, pp. 119–120.

45 Ethics, pp. 119–128.

46 ஷ pp. 134–136

47 குறள். 140,

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு. (426)

எனும் குறட்பாக்கள் நடைமுறைக்கு உகந்த உலகியல் அறிவினையே சிறப்பிப்பதைக் காணலாம்.

புலன் அடக்கம்

புலன் அடக்கம் உடையவர்களைத் 'தெய்வத்தைப் போன்ற மனிதர்' என்று போற்றுவது கிரேக்கர்களின் வழக்கமாகும்.[48] உலகியல் அறிவுநலம் வாய்ந்தவர் பெரும்பாலும் புலன் அடக்கத்தைப் போற்றுவது இல்லை. சீற்றத்தையும், புகழ் ஆசையையும், பொருள் ஆசையையும் கட்டுப்படுத்தாதவர்கள், புலன் அடக்கம் இல்லாதவர்கள் என்று அரிஸ்டாட்டில் கருதுகிறார்.[49] எல்லாராலும் அடக்கம் உடையவர்களாக வாழ இயலாது; பெரியோர்(சான்றோர்) களாலேயே புலன் அடக்கத்தை போற்றி வாழ இயலுமாம்.[50]

அடக்கம் அமரர்அருள் உய்க்கும் (121)
எல்லார்க்கும் நன்றாம் பணிதல் (125)

எனும் குறட்பாக்களில், எல்லாருக்கும் பொதுவாகத் தேவைப்படும் பணிவினைத் திருவள்ளுவர் சுட்டுகிறார். பிறகு ஐம்பொறிகளை அடக்குதலையும், சுடுசொல் சொல்லாமையையும், சினத்தைக் காப்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[51] திருவள்ளுவர் அடக்கத்தை மக்கள் அனைவருக்கும் தேவைப்படும் பொது அறமாகவே கொண்டுள்ளார்.

(ஈ) நட்பு

நட்பு வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாது தேவைப்படும் அறவியல் பண்பு. அன்பை வளர்த்து விருப்பத்தை

---

48 Ethics, P.139
49 Ethics, p. 140.
50 ஷ p. 156.
51 5 126–130.8

உண்டாக்குவதே நட்பு. அதில் வாணிக நோக்கு இடம் பெறாது எத்தகைய மனிதனுக்கும் நன்மையும் இன்பமும் தருவதாய் அமைவதே நட்பு,[52] வாழ்க்கையில் எல்லாவகையான வசதி களையும் செல்வத்தையும் பெற்றிருந்தாலும், நண்பர்கள் இல்லாமல் யாரும் வாழ விரும்பார்.[53] இது தேவையான பண்புமட்டும் அன்று; பெருந்தன்மையான இயல்பும் ஆகும். நண்பர்களும் நல்ல மனிதர்களும் வேறுபட்டவர் அல்லர்.[54] ஒத்த அன்புடைய நண்பர்கள், பயன் கருதிப் பழகும் நண்பர்கள், இன்பத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் பழகும் நண்பர்கள் என்று நண்பர்களை அரிஸ்டாட்டில் மூன்று வகையாகப் பாகுபடுத்தியுள்ளார். இவர்களைத் தலையாய நட்பினர், இடையாய நட்பினர், கடையாய நட்பினர் எனத் தமிழ்நீதி நூல்கள் கூறும்.[55]

சிறப்பு மிகு நட்பு, ஒத்த அறவொழுக்கங்களும் நல்லியல்பு களும் உடைய மக்கள் இடையே நிலவுவதாகும். இதுவே சிறந்த நட்பு என்பது இவருடைய கருத்து.[56] இதனைத் 'தலையாய நட்பே சிறந்தது' எனும் நம் நீதி நூல்கள் கூறுவதோடு ஒப்பிடலாம்.[57]

நட்பு, அன்பு செலுத்துவதிலேயே அமைகிறது. அது ஒரு வழிப்போக்குவரவு உடையது அன்று. இருதிறத்தாரும் திறந்த உள்ளத்துடன் நெருங்கிப் பழகுவதாலேயே நட்பு வளருகிறது. குடும்ப வாழ்வில் நட்புப் பெறும் இடத்தையும் அரசியல் வாழ்வில் நட்பின் முக்கியத்துவத்தையும் அரிஸ்டாட்டில் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார்.

---

52 Ethics, p. 178

53 ஷ p. 167.

54 ஷ p. 169–170.

55 நாலடியார், 216

56 Ethics, p. 170.

57 குறள், 783,788

'நட்பு ஏன் தேவைப்படுகிறது?' என்பதை இவர் விளக்கி யுள்ளார். தன்னிறைவு பெற்ற நல்ல மனிதனுக்கும் நட்பு தேவைப்படுகிறது. நண்பர்களாலேயே செம்மையாக எத்தகைய உதவிகளையும் நமக்குச் செய்ய இயலும்; நல்லவர்களும் அறவியல்பு உடையவர்களும் நண்பர்களாக இருப்பார்களானால், ஆதாயம் கருதாமல் உதவிபுரிவர்; வேற்று மனிதர் மூலம் நம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதைவிட, நண்பர்கள் மூலம் இவற்றைச் சாதித்துக் கொள்ளுவது எளிது. எனவே, ஒரு மனிதனுக்கு நண்பர்கள் கட்டாயம் தேவைப்படுகின்றனர் என்பது அரிஸ்டாட்டிலின் துணிவுரையாகும்.[58]

அடுத்து 'இன்பமாக வாழும் காலத்தில் நண்பர் தேவையா? இன்னலுற்ற காலத்தில் நண்பர் தேவையா? என்பதைப் பற்றி ஆராய்கிறார். எல்லா நிலைகளிலும் நண்பர்கள் தேவைப்படுகின்றனர் எனும் முடிவிற்கு இவர் வந்துள்ளார்.[59]

நட்பின் சாரம் உடன் உறைவதிலேயே அமைகிறது. நட்பு ஒரு கூட்டு வாணிகமாகும். தன்னை எப்படி ஒரு மனிதன் கருதுகிறானோ. அப்படியே நண்பனையும் கருதுவான்; தன்னுடைய நலன்களைப் போற்றுவதைப் போலவே நண்பருடைய நலன்களையும் போற்றுவான்; காதலியை அடிக்கடி கண்டு மகிழ்வதால் காதல் வளருவதைப் போன்று, நண்பர்களையும் அடிக்கடி கண்டு, அளவளாவி மகிழ்வதாலேயே நட்பு கனியும். எனவே, உடன் உறைவதிலேயே பல நிலைகளில் சேர்ந்து செயல்படுவதிலேயே – நட்பு மலர்ச்சியுறும்.[60]

யார், யாரிடம் நட்புக் கொள்ளக் கூடாது என்பதை அரிஸ்டாட்டில் விளக்கியுள்ளார். 'தன்னலமிக்கவர், நண்பனின் துன்பத்தைக் கண்டு துடிக்காதவர், அறவொழுக்கத்தில் நாட்டம்

---

58 Ethics, pp. 205–207.

59 ஷ P.210

60 Ethics, p. 211.

இல்லாதவர் முதலியோருடைய நட்பினை விட்டு விலகுக! என்பது அரிஸ்டாட்டிலின் அறிவுரையாகும்.

குறைகள்

மெய்ப்பொருள் இயல் அளவில், எல்லாருக்கும் சம உரிமைகள் உண்டு என நாம் கருதுகின்றோம். வள்ளுவர் 'வாழும் உயிர்கள்' அனைத்தும் சமமானவை என்னும் நோக்கு உடையவர்.'நீதி' பற்றிய கோட்பாட்டில், சமத்துவம் அடிப்படையாக அமைந்து இருப்பதை யாரும் மறக்க இயலாது. ஆனால், அரிஸ்டாட்டில் சமத்துவத்தை ஒப்புக் கொள்ளவில்லை . தகுதியைத்தான் இவர் பெரிதாகப் போற்றுகின்றார்.

'ஓர் அடிமையோடு ஒரு மனிதன் நட்புக் கொள்ளலாமா?" எனும் வினாவினை அரிஸ்டாட்டில் எழுப்புகிறார். அடிமைக்கும் உரிமை குடிமகனுக்கும் இடையே, கடலைப் போன்ற வேறுபாடு உண்டு. ஆனால், மனிதன் என்னும் முறையில் நட்பை அமைத்துக் கொள்ளலாம் என்பது இவருடைய துணிவாகும்,[61] அடிமைகள் நிரம்பிய சமுதாயத்தில் பிளேட்டோவும் அரிஸ் டாட்டிலும் வாழ்ந்தவர்களாவர். இதனால், அடிமைகளுக்குச் சமவுரிமை அளிக்க இப்பேரறிஞர்கள் தயங்குகின்றனர்; அடிமைகளைத் தலைவன் கையில் அகப்பட்ட கருவிகளாகவே கருதுகின்றனர். எத்துணைச் சிறப்பான மெய்ப்பொருள் ஆய்வில் ஈடுபட்ட பொழுதிலும், அடிமைகளுக்கு ஒரு வடிவு உண்டு; பண்புகள் உண்டு; ஓர் அகவுயிர் (ஆன்மா) உண்டு என்பதை இவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. எத்துணைப் பெரிய கருத்துகளில் இவர்கள் திளைத்தாலும், உண்மையை ஆன்மிக ஒருமைப்பாட்டை அறியாமல் போனது வியப்பூட்டுகிறது.

நட்பைப் பற்றி அரிஸ்டாட்டில் கொண்டுள்ள கருத்துகள் ஆராய்ச்சிக்குரியன. நம்மைக் காட்டிலும் உயர்ந்த நிலையில்

---

61 Ethics, p. 184.

உள்ளவர்களோடு, நாம் நட்பை வளர்த்துக்கொள்ளக்கூடாது; நமக்கு வேண்டியவர்கள் என நாம் கருதுவோர். நம்மிடம் அன்பு செலுத்த மாட்டார்கள். நாம்தான் அவர்கள் இடத்தில் அன்புசெலுத்த வேண்டும். மனைவி, கணவன் இடத்தில் அன்பு கொள்ளவும், கணவன் மனைவி இடத்தில் அன்பு காட்டவும் நியதி இல்லையாம். தகப்பனிடம் மகன், தன் அன்பை வெளிப்படுத்துவது அறமாம்; ஆனால், தந்தை மகனிடம் அன்பு கொள்ளத் தேவை இல்லையாம். ஆண்டவன் இடத்திலும் நாம் நட்புரிமை கொள்ள இயலாது என்பது அரிஸ்டாட்டிலின் துணிவாகும். நாமோ, இறைவனைத் தந்தையாகவும், தாயாகவும் மட்டும் அல்லாமல், நண்பனாகவும் தோழனாகவும் கருதிப் போற்றுகிறோம். அரிஸ்டாட்டில் காதல், அன்பு, தம் மக்களிடம் கொள்ளும் பாசம் (Filial love), அருளுணர்வு போன்ற மனிதவுறவுப் பிணைப்புக் கூறுகளை நன்கு வரையறுத்துக் கொள்ளவில்லை; இவற்றிடையே நிறைய வேறுபாடு உள்ளதைக் கருத்தில் கொள்ளவும் இல்லை. திருவள்ளுவர் அறத்துப்பாலில் அன்புடைமை அருளுடைமைகளையும், பொருட்பாலில் நட்பையும், காமத்துப்பாலில் காதலையும் அமைத்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

நமக்குத் துன்பம் உண்டாகின்ற பொழுது நண்பர்கள் ஆறுதல் அளிக்கின்றனர். ஆனால், நம்முடைய குறைகளைச் சொல்லி, அவர்களைத் துன்பக் கடலில் நாம் ஆழ்த்துவது அறமாகாதாம்; முறையுமாகாதாம். நம் துன்பங்களை வெளிப் படுத்தினால் நண்பர் உள்ளம், புண்பட்டுவாடி விடுமாம். எனவே அவற்றை நம் மனத்திலேயே புதைத்து வைத்துக் கொள்ள வேண்டுமாம். இது சான்றோர்களுக்கு அழகாகுமாம். நண்பர்கள் இடையே 'தியாகஉணர்விற்கு', அரிஸ்டாட்டில் இடமே அளிக்கவில்லை. இவ்வகையில் நோக்குகின்ற பொழுது, அரிஸ்டாட்டில் நட்பைக் குறித்துக், கொண்டுள்ள கொள்கை மிக உயர்ந்ததாகத் தோன்றவில்லை; அதைப்பற்றிச் சிறப்புமிக்க கொள்கையை இவர் நமக்கு நல்கவில்லை எனும் எண்ணமே எழுகிறது.

திருவள்ளுவர் காட்டும் நட்பு

அரிஸ்டாட்டிலும் திருவள்ளுவரும் தனிமனித வாழ்க்கைக்கும், அரசியல் சூழ்ச்சித் திறனுக்கும் நட்பு இன்றியமையாதது எனும் ஒத்த கருத்து உடையவர்களாக உள்ளனர். பொருட்பாலிலேயே திருவள்ளுவர் நட்பின் மாட்சியையும், திறத்தையும் விதிமுகத்தான் நட்பு (79), நட்பாராய்தல் (80), பழைமை (81), தீநட்பு (82) கூடா நட்பு (83) எனும் ஐந்து அதிகாரங்களில் தெளிவுறுத்தியுள்ளார்; பிறகு எதிர்மறை முகத்தான் நட்பின்மையால் உண்டாகும் தீமைகளைப் பன்னிரண்டு அதிகாரங்களில் (84–95) விரித்துரைத்துள்ளார். அரிஸ்டாட்டில் அறவியலிலேயே, நட்பினைப் பற்றி ஆராய்ந்துள்ளார்; மனித உறவுக்குரிய நட்பினை, விரிந்த நிலையில் அரசியல் உறவுகளுக்குரிய கருவியாகவும் காட்டியுள்ளார்.

நட்பினைப் போல் பெற்றுக் கொள்ளுவதற்கு அருமையானவை எவையுள்ளன ? நல்ல நூலின் நயமானது கற்குந்தோறும் மிகுந்து கொண்டே போவதைப் போல், நல்ல பண்புடையவர்களின் நட்பு பழகுந்தோறும் மிகவளர்ந்து இனிமையைக் கொடுக்கும் என்பது வள்ளுவரின் கருத்தாகும்.[62]

அடிக்கடி பழகுவதனாலேயே நட்பு, தழைத்து வளரும் என்பதில் இவ்விரு அறிஞர்களும் கருத்து ஒற்றுமை உடையவர்களாவர். ஆனால், அரிஸ்டாட்டில் அறியாத மற்றொரு வகை நட்பினைத் திருவள்ளுவர் காட்டுகிறார். அதுதான் ஆன்மநேயத்தால் அமையும் நட்பு. ஒருவரோடு ஒருவர் நட்புக் கொள்ளுவதற்கு ஒரே நாட்டில் வாழ்பவராகவும், ஒரு குலத்தைச் – சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும் எனும் நியதி இல்லை; நெடுநாள் பழக்கமும் தேவை இல்லை. இத்தகைய தொடர்புகள் இருந்தால்தான்,

---

62 குறள். 781, 783

நட்பு உண்டாகவும் வளரவும் வாய்ப்புண்டு எனக் கருதவும் வேண்டியது இல்லை. இருவருக்கும் இடையே ஒத்த உணர்வும், அறிவும், பண்பும் அமைந்து இருந்தாலே போதும். அவர்கள் சிறப்புமிகு நண்பர்களாக விளங்க இயலும். இதனை,

புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். (785)

என வள்ளுவர் அறிவிக்கின்றார்.

துன்பத்திற்குத் துணையாக நிற்பவரே சிறந்த நண்பராவர், அவர்களிடத்து நம் மனக் கவலைகளை எடுத்துரைத்து, நம் துன்பத்தின் சுமையைக் குறைத்துக் கொள்ளலாம் என்பது திருக்குறள் காட்டும் நட்பு நெறியாகும்[63]. கிரேக்க நாட்டு அறவியலோ இவ்வாறு செய்யக் கூடாது என்று அறிவிப்பதை நாம் முன்னரே கண்டோம்.

ஒருவனை நண்பனாக அடைவதற்கு முன்னர் அவனுடைய பண்புகளையும், குடிப்பிறப்பையும், குற்றங்குறைகளையும், குறைவற்ற சுற்றத்தினையும் ஆராய்ந்து, பிறகு அவனோடு நட்பு கொள்க என்பதே, நண்பர்களைத் தேடுவதற்கு வள்ளுவர் காட்டும் வழியாகும்.[64] அரிஸ்டாட்டில்"சமுதாயத்தில்செல்வத்தாலும்செல்வாக்காலும் உயர்ந்தவனா, தாழ்ந்தவனா என்பதை மட்டும் அறிந்தால் போதும்" என ஒருவகை வருக்க உணர்வை – வரட்டு மதிப்பை – போலி மானத்தை அளவுகோலாகத் தருகிறார். இதனால், உண்மையான தோழமை உணர்வு வளர வாய்ப்பு இல்லாமல் போகும்.

நட்பிற்குச் சிறந்த உறுப்பு, நண்பர் உரிமை பாராட்டுவதாகும். அதற்கு இயைந்து இனிது இருத்தல் பண்புடையோர் கடமையாகும் என்பது வள்ளுவர் காட்டும் வாழ்வியல் தத்துவமாகும்.[65] உரிமையற்ற அடிமைகளிடம்

---

63 குறள் 987, 788, 789

64 ஷெ P.793

65 குறள், 802

தன்னல நோக்குடன் நட்பு கொள்ளலாம் என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். அங்கு உரிமை கொண்டாடுவதற்கு இடமே கிடையாது. எனவே, அவர்கள் இடையே உண்மையான நட்பு வளர வாய்ப்பே இல்லை!

அரிஸ்டாட்டில் விரித்துரைக்கும் நட்பு, தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டது. 'ஒருவரிடத்து நட்புக் கொள்ளுவதால், நமக்கு என்ன ஆதாயம் கிடைக்கும்?" எனும் நோக்கத்தின் அடிப்படையிலே, நட்பை வளர்க்க வேண்டும் எனும் எண்ணத்தை இவருடைய கருத்துகள் ஊட்டுகின்றன.

நட்பினால் தமக்கு வரும் பயனை அளந்து பார்க்கின்றவரும் கொடுப்பாரை ஏற்றுக் கொள்ளாமல், அவர்கள் கொடுக்கும் பொருளையே பெரிதாகக் கொள்ளும் பொதுமகளிரும், பிறருக்குத் துன்பம் உண்டாகுமே எனக் கருதாமல், அவர்களுடைய சோர்வினை நோக்கிப் பொருளைத் திருடும் கள்ளரும் ஒரே வகையான இயல்புடையவராவர் என்பது திருவள்ளுவரின் துணிவாகும்.

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர் (838)

இக்கருத்து, எவ்வாறு அரிஸ்டாட்டிலின் கருத்தோடு முரண்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டத் தேவை இல்லை!

அரிஸ்டாட்டில் கண்ட 'நண்பன்', சிறிது அளவுகூட 'தியாக உணர்வு' இல்லாதவன். 'தியாக உணர்வு உள்ளவனே சிறந்த நண்பனாவான்' என்பதே வள்ளுவர் காட்டும் நட்பின் சிறப்பு இயல்பாகும்.

சிறப்புமிகு வாழ்க்கை

அறவியலின் இறுதிப் பகுதியில், 'சிறப்புமிகு வாழ்க்கை எது?" என்பதைப் பற்றி அரிஸ்டாட்டில் விளக்கியுள்ளார். முதலில் 'இன்பம் என்பது யாது?' என்பதை, இவர் மீண்டும் ஆராயத் தொடங்குகிறார். "சிலர் இன்பமே தலைசிறந்தது என்பர்;

மற்றொருசாரார் இன்பம் போன்ற தீயது வேறு ஒன்றும் இல்லை! என்பர். அறிவுநிலையில் வேண்டுமானால், இரண்டாவது கருத்து உண்மையாகத் தோன்றலாம். ஆனால், வாழ்க்கை அனுபவத்திற்கு இது பொருத்தமாகத் தோன்றவில்லை"[66] என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும்.

'இன்பம் என்பது யாது? எல்லா உயிர்களும் ஏன் இன்பத்தையே நாடுகின்றன? வாழ்க்கையின் இலட்சியமே இன்பம் தானா?" எனும் வினாக்களை அரிஸ்டாட்டில் எழுப்புகிறார். அவரே விடையும் தருகிறார். வாழ்க்கை வளமாகவும் நலமாகவும் அமையவேண்டும் என்னும் நோக்கத்தோடு எல்லாரும் செயல்படுகின்றனர். எனவே அவர்கள் இன்பத்தை நாடுகின்றனர். வாழ்க்கையே செயல்நிலையாகும். ஒருவன் பேரளவிற்கு விரும்புவது எதுவோ, அதை அடைய மும்முரமாக அவன் செயல்படுகிறான். அச் செயற்பாட்டினை முழுநிறைவு உடையதாக்குவது இன்பம். எனவேதான், வாழ்க்கையை எல்லாரும் விரும்புகின்றனர். இதனால், அவர்கள் இன்பத்தை நாடுவதில் வியப்பு இல்லை! வாழ்க்கையை முழுநிறைவு உடையதாக ஆக்குவது இன்பம் அன்றோ? இவ்வாறு வாழ்க்கையும் இன்பமும் இரண்டறப் பின்னிப் பிணைந்துள்ளன.[67] இக்காரணத்தால்தான் இன்பத்தை எல்லாரும் அடையத் துடிக்கின்றனர் என்பதை இவர் விளக்கியுள்ளார்.

இன்பம் என்பது நற்செயலில் பிறக்கிறது. முதிர்ந்த இன்பம் மிகச் சிறந்த செயலில் பொருந்தியுள்ளது என்பர். பிறகு இன்பத்தைப் புலன்நுகர் (புற) இன்பம் (Pleasure) எனவும், மனநலம் எனப்படும் அக இன்பம் (Happiness) எனவும் இவர் பாகுபடுத்துகிறார். புலன்நுகர் இன்பத்தைப்பற்றி மூன்றுவகையான கருத்துகளை இவர் தெரிவிக்கிறார்: (1) அது என்றைக்கும் நல்லது அன்று, (2) சில புலன் நுகர்

66 Ethics, pp 215–219.

67 Ethics, p. 222.

இன்பங்கள் நன்மை பயப்பனவாக உள்ளன, (5) புலன் நுகர் இன்பம் நல்லதுதான் ; ஆனால் அதை மிகச் சிறந்தது எனக் கூற இயலாது. ஆனால், என்றைக்குமே அது நன்மை தராது எனக் கருதுவது தவறு. துன்பம் என்றுமே தீமையில் தோன்றுகின்ற. காரணத்தால், புலன் நுகர் இன்பத்தை நன்மை தருவதாகவே கொள்ளலாம். ஒரே சமயத்தில் இன்பமும் துன்பமும் ஒன்றாகச் சேர்ந்து உறைவதற்கு இயலாது. ஒருவனை மரத்தில் கட்டி அடித்தால், அவன் இன்புற இயலுமா? இன்பத்தை நுகருவதற்குத் தக்க இன்பச் சூழ்நிலையும் வேண்டும். எல்லா இன்பங்களையும் ஐம்பொறிகள் வாயிலாகத் தோன்றுகின்ற புலன் நுகர் இன்பங்களாகக் கூற இயலாது. தெய்வங்களும் அனுபவிக்கக் கூடிய இன்பங்கள் உண்டு அல்லவா ?[68]

மன நலம் எனப்படும் அக இன்பம், புலனுகர் புற இன்பத்தை விட சிறந்தது. மன நலம், மகிழ்வூட்டும் பொழுதுபோக்கு உணர்வு அன்று; உடல் வருந்தி, முயற்சியுடன் செயல்படுவ தால் உண்டாவதே மன நலம்,[69] மன நலம் தரும் வாழ்க்கை அற வாழ்க்கையாகும். அறநெறியில் வாழ்வதற்கு முயற்சி தேவை. எனவே, மனநலம் மகிழ்வூட்டும் இலேசான வாழ்க்கைப் போக்கில் தோன்றுவது அன்று, கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் உடல் வாழ்க்கையால் மனநலம் உண்டாவதுமில்லை. அது அறநெறிப்பட்ட உள்ளவியல்பால் தோன்றுவது.[70]

இதற்குமேல், அரிஸ்டாட்டில் சிலபடிகள் கடந்து,சிறப்பு மிக்க வாழ்க்கையாகிய ஆன்மிக அனுபவ வாழ்க்கையின் வாயிலை அடைகிறார். "அறநெறிப்பட்ட செயல்முறையே மன நலம் எனக் கொண்டால், மிகச்சிறந்த அறங்களோடு பொருந்தி வருவது மன நலம் என்பது புலனாகும். எனவே, நம்முடைய செயல்களில் இதுவே தலைசிறந்ததாகும். இந்தச் சிறப்புமிகு

---

68 Ethics, pp. 223–225

69 pp. 226–227

70 ஷ p. 227.

செயல்களில் நம்மை நெறிப்படுத்துவது அறிவுத்திறனாகும். அவ்வறிவுத்திறனே – சிந்தனைத் திறனே நம்மை மிக உயர்ந்த அறவாழ்விற்கு அல்லது தெய்விக வாழ்விற்குக் கொண்டு செல்லுகிறது. அதனால் மன நலத்தின் முழுமையான அனுபவத்தைப் பெறுகிறோம். இத்தகைய மன நல அனுபவ நிலையை ஒரு முகப்படுத்தப்பட்ட சிந்தனையாகக் கூறலாம். இதனை தியானத்தால் பெறப்படும் அனுபூதி உணர்வாகக் கருத இடம் உண்டு. போரைக் காட்டிலும், அரசியலைக் காட்டிலும் தியானம் விரும்பத்தக்கது[71] என்பது அரிஸ்டாட்டிலின் துணிவாகும்.

விலங்குகள் இந்த மன நலத்தைப் பெற இயலாது. மனிதர் களுள் சிந்தனைத் திறனும் உள்ளத்தை ஒரு முகப்படுத்தும் ஆற்றலும் உடையவர்களே, இந்த அக இன்பத்தை அடைய முடியும். அறவொழுக்கம் நிறைந்த மனிதர்களாலேயே இந்த இன்பத்தைப் பெற இயலும்,[72] இத்தகைய சான்றோரை நாம் அறவோர் எனவும், ஞானிகள் எனவும் போற்றுகின்றோம். இவர்களை 'நீத்தார்' எனவும், 'நிறைமொழி மாந்தர்[73] எனவும், *மெய்ப்பொருள் கண்டார்'"[74] எனவும் திருவள்ளுவர் சுட்டுகிறார். தியானத்தைச் 'சேர்தல்' என வள்ளுவர் குறிப்பிடுகிறார்[75] இந்த மன நலமாகிய அக இன்பத்தின் முதிர்ந்த நிலையையே வான்மறை தந்த வள்ளுவர் 'இருள் நீங்கி (ய) இன்பம்[76] எனப் போற்றுகிறார்.

"இறைவன் எல்லா வகையான நற்பண்புகளின் திருவுருவமாக விளங்குகின்றான். மனிதர்களைவிடப் பல்லாற்றானும் பேரறிவு, பெருந்திறன், பேராற்றல் மிக்கவனாக

---

71 Ethics, P. 228.
72 ஷ P. 230–31.
73 குறள் 21, 28
74 ஷ P. 356.
75 குறள். 3, 4,7,8
76 ஷ P. 352.

அவன் விளங்குகின்றான். எனவே அவனுடைய செயல்களும் சிந்தனைத் திறனால் இயக்கப்படுவதாகும். சிந்தனைத் திறனுடைய உணர்வு நிலை வெளிப்பாடே, மன நலமாகிய பேரின்பமாகும். எனவே, இறைவன் இன்ப வடிவாய் என்றும் இருக்கின்றான்" எனும் முடிவிற்கு அறிவையே தெய்வமாகப் போற்றும் அரிஸ்டாட்டில் வந்துள்ளார்.[77]

சிறப்பு என்னும் செம்பொருளாக விளங்கும் இறைவனை' 'அறவாழி அந்தணனாக' அந்தமில் வள்ளுவர் காட்டுவது இங்குக் கருதத்தக்கது. அந்தப் பேரின்பப் பெருவாழ்வை 'அறத்தான் வரும் இன்பமாக' வள்ளுவர் போற்றுகிறார்.[78]

3. அரசியல் கோட்பாடு

அரிஸ்டாட்டிலைப் பொறுத்த வரையில், அறவியல் என்பது சமூகவியலே யாகும்; அரசியல் என்பது அறவியலே யாகும். மனிதன் தன்னுடைய ஆற்றல்களை வளர்க்கவும், அவற்றைச் செயல்களில் ஈடுபடுத்தவும் வேண்டுமானால், தன்னோடு ஒத்த மக்களுடன் அவன் வாழ்தல் வேண்டும். இயல்பாகவே கூடி வாழும் விலங்காக உள்ள மனிதனுடைய பண்புகள், சமுதாய வாழ்க்கையிலேயே மலர்ச்சியுறுகின்றன. அதற்கு நல்லதோர் அரசு – சிறந்ததோர் அரசு – தேவைப்படுகிறது.

தம்முடைய அரசியல் எனும் நூலின் தொடக்கத்திலேயே "ஒவ்வோர் அரசும் ஒரு வகை சமுதாயமாகும். சமுதாயங்கள் ஒவ்வொன்றும் சிலபல நன்மைகளைக் கருத்தில் கொண்டு நிறுவப் பெற்றுள்ளன. ஏனெனில், மக்கள் இனம் எதை நல்லது என நினைக்கின்றதோ, அதை அடைவதற்காகவே, எப்பொழுதும் செயல்படுகிறது. ஆனால், எல்லா சமுதாயங்களும் நன்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அதை அடைய முயலுகின்றன. எனவே, எல்லா வகையான சமுதாயங்களிலும்

77 Ethics, p. 231.

78 குறள், 39

மேன்மையுடையதும், மற்றவற்றைத் தனக்குள் அடக்கிக் கொள்ளும் ஆற்றல் உடையதுமாக இருப்பது அரசியல் சமுதாயம். இதுதான் எல்லாவற்றிற்கும் மேலான நலனை நாடுவது; மற்ற சமுதாயங்களைவிட, பேரளவில் சிறப்புமிகு நன்மையை அடைய உதவுகிறது. எனவே, மக்கள் பேரளவிற்கு நன்மை பெற்று வாழ, வழி செய்யும் அரசு இன்றியமையாதத் தேவையாகும்[79] என்று அரிஸ்டாட்டில் தெளிவுறுத்தியுள்ளார்.

சமுதாயத்தின் உச்சநிலைதான் அரசு (State) ஆகும் என்பது இதனால் புலனாகின்றது. இவ்வரசு எனும் அமைப்பே உலகில் மிக உயர்ந்த நன்மையை நாடுவதாகத் தோன்றுகிறது. அரசு என்பது யாது?' என்பதை இவர்,

> அரசு என்பது மக்கள் அடங்கிய சமுதாய வகைகளில் எல்லாம் மிக உயர்ந்த வடிவத்தில் அமைந்த மனித சமுதாயமே ஆகும். குடிமக்கள் நிறைந்த தொகுதியே அரசு என்பதாகும்[80]

என்று வரையறுத்துக் காட்டியுள்ளார்.

அரசின் தோற்றம்

மனிதன் கூடி வாழத் தொடங்குகிற பொழுது, ஆண் பெண் உறவால் 'குடும்பம்' அமைகிறது. பல குடும்பங்கள் சேர்ந்து 'ஊர்' (கிராமம்) எனும் சிறு சமுதாய அமைப்பு தோன்றுகிறது. பற்பல ஊர்கள் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு தலைவனுடைய ஆற்றலை நம்பி வாழத் தலைப்படுகிற பொழுது, நாடு அல்லது இராச்சியமும், அரசும் தோன்றுகின்றன. ஆனால், தனிமனிதனுடைய தோற்றம், குடும்பம், ஊர் ஆகியவற்றிற்கு முன்பே, 'அரசு' எனும் விதை உலகில் விதைக்கப் பெற்றுள்ளது. அது காலப் போக்கில் குடும்பம் எனும் தளிர்விட்டு, ஊர் எனும் பூவும் மலர்ந்து, சமுதாயம் எனும் காயும் காய்த்து, முடிவில் 'அரசு' எனும் பழமாய்க்

---

79 அரிஸ்டாட்டிலின் அரசியல், பக்.1

80 அரசியல், பக். 1–2

கனிவதாக அரிஸ்டாட்டில் கருதுகிறார்.[81]

இதிலிருந்து அரசின் இன்றியமையாமை புலனாகின்றது. மனிதன், 'முழுமையான நல்வாழ்வைப் பெறுதல்' எனும் உயர்ந்த நோக்கம் நிறைவேறுவதற்கு 'அரசு' எனும் அமைப்பு வேண்டும் என்பதை உணருகிறான் என்பர்.

குடும்பமும் அரசும்

ஆளப்படும் அதிகாரத்தை முதன்முதல் அரசன், குடும்பத்தில் குடும்பத்தலைவனாக உள்ள தந்தையின் அதிகார வழக்கிலிருந்து பெற்றதாக அரிஸ்டாட்டில் கூறுகிறார். எனினும், அரசும், குடும்பமும் வெவ்வேறானவை. குடும்பத்தலைவன், தன் மனைவி மக்கள் மீது, வரம்பு கடந்த நிலையில் அதிகாரத்தைச் செலுத்துவது இல்லை. அதாவது எதேச்சாதிகாரியாக மாறி விடுவது இல்லை. குடும்பத்தலைவன் செலுத்தும் அதிகாரம், குடும்ப உறுப்பினர்களுடைய நிலைகளுக்கேற்ப வேறுபடும் இயல்புடையது. ஆனால், அரசனோ, நாட்டில் உள்ள குடிமக்கள் எல்லாரிடத்தும் ஒரே வகையான, வேறுபாடில்லாத அதிகாரத்தைச் செலுத்துகிறான் என்பர்.

உலக வாழ்வின் தேவைகளுக்காகவே குடும்பம் இயங்குகிறது அரசு எனும் அமைப்போ மக்களுடைய ஒழுக்க அறவியல்தேவைகளைநிறைவேற்றவே இருக்கிறது[82] என்பது அரிஸ்டாட்டிலின் நம்பிக்கையாகும்.

'அரசை நிறுவ வேண்டும்' என்னும் பேர் ஆர்வத்தில், பிளேட்டோவைப் போல், அரிஸ்டாட்டில் குடும்பத்தைத் தாழ்த்தியும், அரசினை உயர்த்தியும் பேசவில்லை. குடும்பத்திற்கும் அரசியல் திட்டத்தில் ஒரு தக்க இடம் உண்டு என்று அவர் எடுத்துரைக்கிறார். மனிதனை 'அரசியல் விலங்கு'

---

81 அரசியல், 3–5

82 ஷ p. 26–34.

(Political Animal) என்பதை விட, அவனைச் 'சமுதாய விலங்கு' (Social Animal) எனக் கூறுவதே பொருந்தும். அரசையும் சமுதாயத்தையும் வெவ்வேறாகப் பாகுபடுத்திக் காட்டும் சிந்தனை, அந்தக் காலத்தில் முகிழ்க்கவில்லை. சமய நெறியும் சமுதாயத்தைச் சார்ந்ததாகவே இருந்தது. மனிதன் அரசியல் விலங்காகவும் சமுதாய விலங்காகவும் விளங்கிய காலம் அது.

திருவள்ளுவர் 'அரசு வேறு; அதனை இயக்குகின்ற அரசன் வேறு' எனப் பாகுபாடு செய்யாமல், இரண்டையும் ஒன்றாகவே கொண்டுள்ளார். 'அரசனே அரசு; அரசே அரசன்' என்பது அவருடைய கொள்கை. இது இந்தியாவின் பண்டைய அரசியல் கொள்கையாகும். இதனால், 'அரசனே நாட்டின், சமுதாயத்தின் தலைவன்: அவன் இல்லையென்றால், வேறு எத்தகைய வளங்களையெல்லாம் ஒரு நாடு பெற்றிருந்தாலும் பயன் இல்லை' என்பதை,

ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்து அமைவு இல்லாத நாடு (740)

என்று வள்ளுவர் அறிவிக்கின்றார்.

ஆனால், அரசின் உறுப்புகளில் குடிமக்களை ஓர் உறுப்பாக அவர் போற்றுகிறார். குடிமக்கள் சேர்ந்து வாழும் குடும்பத்தை–இல்லத்தை, நாட்டின் அடிப்படை அலகாகவே வள்ளுவர் கொண்டுள்ளார்.

குடிமக்கள்

அரிஸ்டாட்டில் 'குடிமக்கள் என்பவர் யார்?" எனும் வினாவிற்குப் பின்வருமாறு விடை பகர்கிறார். சட்டமன்ற உறுப்பினனாகவோ, நீதிபதியாகவோ, அரசாங்கத்தில் பணிசெய்வதற்கு அரசியல் உரிமைகளைப் பெற்று இருப்பவரே (Political Rights) குடிமக்கள் ஆவர். இதனால், அரசியல் உரிமைகளைப் பெற்றிருக்கும் மக்கள் நிறைந்த கூட்டமே அரசு[83] என்பது தெளிவாகிறது.

---

83 அரசியல், பக்.88–89

இவ்வாறு 'அரசியல் உரிமைகளை மட்டும் பெற்றவரே குடிமக்கள்' எனக் கருதுவது இன்றைய புத்துலகச் சிந்தனைப் போக்கிற்கு முரணானது. ஒரு நாட்டின் மக்கள் இடையே உரிமையுடையோர், உரிமையற்றோர் (அடிமைகள்) எனும் வேறுபாடு இருத்தல் கூடாது; சமுதாய உரிமைகளும் அரசியல் உரிமைகளும் எல்லாருக்கும் பொதுவானவையாகப் போற்றப்படுதல் வேண்டும்.

அரிஸ்டாட்டிலின் கருத்துப்படி குடிமக்கள் என்பவர் ஆளுவதற்கும் ஆளப்படுவதற்கும் தகுதிகளைப்பெற்று, அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை ஈட்டும் தொழில்களில் இருந்து விடுபட்டவராக இருக்க வேண்டும். 'பிறருடைய ஆணைகளுக்குக் கட்டுப்பட்டுத் தொழில் செய்யும் இயல்பு உடையவர் நாட்டிற்கு இன்றியமையாதவர். எனினும், அவர்கள் குடிமக்கள் ஆகமாட்டார்'[84] என்பது இங்குக் கருதத்தக்கது.

'அரசும் குடிகளும்' எனும் அதிகாரத்தில் அரிஸ்டாட்டில் கூறும் கருத்துகள் சிறப்புமிக்கன.ஓர் இடத்தில் நிலைத்து வாழுகின்ற காரணத்தினால், அவர்களைக் குடிமக்களாகக் கருத இயலாது. ஏனெனில் அடிமைகளும் அயலவர்களும் அதே இடத்தில்வாழலாம்.வழக்கைத்தொடுப்பதற்குஓர்உரிமை பெற்றவன் இருக்கலாம். அந்தக் காரணத்தைக் கொண்டு, அவனை அந்நாட்டுக்குடிமகன்எனக்கருதஇயலாது.ஓர்அயல் நாட்டான் ஓர் உடன்படிக்கையின் அடிப்படையில், வழக்கைத் தொடுக்கும் உரிமையைப் பெறலாம். குடிமக்கள் வயிற்றில் பிறந்தவர்கள் கூடக் குடிமக்களாகிவிட இயலாது. அறம் வழங்கு மன்றங்களிலும், நாட்டை ஆளுகின்ற பேரவையிலும் கலந்து கொண்டு நாட்டு ஆட்சியை நடத்துகின்றவனே குடிமகனாவான். கிரேக்க மக்களுடைய வாழ்க்கையில் அரசியல் பெற்றிருந்த ஆதிக்கத்தையே, இது உணர்த்துகிறது.

---

84 அரசியல் பக். 90–91

நகர அரசில் (City State) வாழுகின்ற ஒருவன், பிரதி நிதியை ஆட்சிபுரிய அனுப்புவது இல்லை. அவனே நேரடியாக ஆட்சிபுரிகிறான். அந்தக்காலத்தில், பிரதிநிதித்துவ ஆட்சி முறை தோன்றவில்லை. நகர அரசிலிருந்து பலவகை மக்கள் விலக்கப்பட்டு இருந்தனர். தொழிலாளிகளை அரிஸ்டாட்டில் விலக்கிவிட்டார். அவர்களால் ஒழுங்காக இருக்க இயலாதாம்; மேலும் அவர்களுக்கு ஓய்வு கிடைப்பது அரிதாம்; தொழில் அகவுயிரை மாசுபடுத்தி விடுமாம். எல்லாரும் எல்லாச் செல்வங்களையும் எய்த வேண்டும் என்பது உண்மையே. ஆனால் மனிதர்கள் இடையே அறிவிலும், ஆற்றலிலும் சமத்துவத்தை இயற்கை அன்னை அளிக்கவில்லை. இதனால், சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள், மேடுபள்ளங்கள் இயல்பாகவே உள்ளன[85] எனும் கொள்கையோடு, அரசியலின் நுட்பங்களை அரிஸ்டாட்டில் ஆராய்கிறார். இன்றைய பிரதிநிதித்துவ ஆட்சி முறை அவருடைய சிந்தனைக்கு எட்டவில்லை.

> ஒழுக்கத்தோடு வாழ்வதே குடும்பப் பண்பாகும். இதனை,
> ஒழுக்கம் உடைமை குடிமை (135)

என்று வள்ளுவர் அறிவிக்கிறார்.குடும்ப வாழ்க்கையை,'இல் வாழ்க்கை' எனச் சிறப்பாகத் திருவள்ளுவர் போற்றுகிறார். இல்லறத்தில் வாழுபவன், சமுதாயத்தின் முதுகெலும்பைப் போன்றவன் ஆவான். பிற நிலைகளில் உள்ள மாணவர். வணிகர், அரசர் போன்றவர்களுக்கு நன்மை பயக்கும் வழிகளில் உறுதியான உதவியாளனாக இல்லறத்தான் விளங்குகிறான். இதனை,

> இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றின் நின்ற துணை. (41)

என்று திருவள்ளுவர் தெளிவுறுத்தியுள்ளார்.

---

85 அரசியல், பக்.89–92

இங்குச் சுட்டப்படும் 'இயல்புடைய மூவருள்', அரசனும் (அரசும்) ஒருவனாவான். அரசன் நாட்டு ஆட்சியை நல்லமுறையில் நடத்துவதற்குக் குடும்ப வாழ்க்கை நடத்துவோர் உற்ற துணையாவர் என்பது இதனால் பெறப்படுகிறது. இவ்வகையில், அரசினைச் சிறப்பித்துப் பேசுகின்ற வள்ளுவர், குடும்பத்திற்குரிய மதிப்பினைக் கொடுத்துள்ளார். குடும்பங்கள் பல சேர்ந்ததே சமுதாயமாகும். குடும்பத்தின்பண்பே'குடிமை?யாகும்.நல்லகுடிமகன்'கருத்தும் செயலும் ஒத்திருக்கும் செம்மையும்,பழிபாவங்களுக்கு அஞ்சும் நாணமும் பெற்று இருப்பான் ; தொன்று தொட்டுவரும் குடிப் பண்புகளைப் போற்றிக்காப்பான்[86] எனச் சுட்டுகிறார். இவற்றால் அரசின் உறுப்புகளுள் 'குடிமகன்' முதன்மையானவன் என்பதும், அவனுடைய 'குடும்பம்' சமுதாயத்தின் அடிப்படை அலகு என்பதும், அரசு நல்லமுறையில் செயல்படுவதற்குக் குடும்பம் உறுதுணையாகிறது என்பதும் தெரியவருகின்றன.

திருவள்ளுவரைப் பொறுத்தவரை ஒருநாட்டில் வாழும் மக்கள் அனைவருமே, குடிமக்கள் ஆவர். அவர்களிடையே பிறப்பாலோ, செய்கின்ற தொழிலாலோ வேறுபாடு கிடையாது என அவர் அறிவிக்கின்றார்.

அரசின் இறைமை

அரசாங்கத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உரிய பொதுவான முறையே 'அரசியல் அமைப்பு (Constitution)' எனப்படும்.அரசியல்அமைப்புஎன்றமுறையில்,அரசாங்கத்தின் பல்வேறு உறுப்புகளின் – அதாவது சட்டம் இயற்றும் உறுப்பு, நிருவாக உறுப்பு, நீதிவழங்கும் உறுப்பு–எண்ணிக்கையும், அவற்றிற்கு இடையே நிலவும் தொடர்புகளும், அவை இயங்குவதற்கான முறைகளும், அரசின் இறைமை (Sove-reignty) அமைந்துள்ள இடத்தையும் அடுத்து அரிஸ்டாட்டில் விளக்கியுள்ளார். நடைமுறையில் ஆட்சியை நடத்தும்

---

86 குறள், 951, 955

குழுவே இறைமையுடைய தலைவனாக, அதிகாரியாகக் கொள்ளப்படும்.[87] இத்தகைய இறைமை அதிகாரம் ஒரு நாட்டில் எவரிடத்து இருக்கிறதோ,அதை அடிப்படையாகக் கொண்டு அந்த நாட்டின் அரசியல் அமைப்பு அமைகிறது[88]. எடுத்துக்காட்டாக இறைமை அதிகாரம் மக்கள் இடத்து இருக்குமானால், அந்த நாட்டின் அரசு, குடியாட்சி அல்லது மக்களாட்சி (Democracy)எனும் வகையைச் சேர்ந்ததாகக் கொள்ளப்படும்.

'முடியாட்சி' ஒன்றைத் தவிர வேறு எத்தகைய ஆட்சி அமைப்பையும் அறியாதவர்கள் பண்டைத் தமிழர்கள். எனவே முடியாட்சியின் தலைவனாகிய வேந்தனையே, திருவள்ளுவர் நாட்டின் இறைமைப் பண்புகளையுடைய பேரதிகாரியாகப் போற்றுவதில் வியப்பு இல்லை.

'அரசினுடைய பெருந்தகைமையை' இறைமாட்சி எனும் அதிகாரத்தில் (39) வள்ளுவர் ஆராய்ந்துள்ளார். இறைமையின் நிலைக்களனாக உள்ள வேந்தன் அஞ்சாமை, அறிவு, ஊக்கம் கொடையுள்ளம் வாய்ந்தவனாக இருக்கவேண்டும்; விடா முயற்சி, உள்ளவுரம், கல்வி ஆகிய பண்புகள் நிறைந்தவனாக இருக்க வேண்டும்; அறநெறியில் வழுவாமல் நின்று, குற்றங்களைக் கடிந்து, வீரத்தில் குறையாத மேம்பாட்டினை உடையவனாக விளங்க வேண்டும்.[89]

இவ்வாறு இருபெருஞ் சிந்தனையாளர்களும் அரசின் இறைமையைப்பற்றி மிகுதியாகக் கருத்தைச் செலுத்தியுள்ளனர். இறைமைப்பேறு வாய்க்காத அரசு எதையும் செய்ய இயலாது என்பதை இருவரும் நன்கு உணர்ந்துள்ளனர்.

முடியாட்சியின் வகை

அரிஸ்டாட்டில் 'முடியாட்சி'யில் ஐந்து வகையைச் சுட்டுகிறார். படைத்தலைவனாகவும் சமயத் தலைவனாகவும்

---

87 ஷெ பக். 103–105

88 குறள் 382–384

89 அரசியல், பக்.127–129

அரசன் இயங்குவது ஒருவகை மன்னராட்சி. இது ஸ்பார்ட்டா (Sparta)வில் நிலவிய முடியாட்சியாம்; வாழ்நாள் முழுவதும் ஒருவனே அதிபதியாகவும் தளபதியாகவும் இருப்பது. இது மரபுவழியாகவும் அமையும்; சில சமயங்களில் அரசன் தேர்ந்து எடுக்கப்படுவதும் உண்டாம்.

மற்றொருவகை முடியாட்சி 'தடியெடுத்தவன் தண்டல் காரன்' என்பதைப் போன்று, உடல்வலிமை உடையோன் மற்றவர்களை அடக்கியொடுக்கித் தானே, தலைவனாக நாட்டை ஆளுவதாகும்.[90]

மூன்றாவது வகையான முடியாட்சி ஒரு வகைக் கொடுங் கோல் ஆட்சியாகும். இது தேர்ந்தெடுக்கப்படுகிற தலைவன், பின்னால் கொடுங் கோலனாக மாறிவிடுவதாகும்.[91] நான்காவது வகை மன்னராட்சி, உலகில் பல்வேறு நாடுகளிலும் நிலவிய முடியாட்சி' முறையாகும். இந்த முடியாட்சியே பன்னெடுங் காலமாக, மரபுவழியாக இந்தியாவிலும், பிற நாடுகளிலும் நடைபெற்ற மன்னர் ஆட்சி முறையாகும். தாம் குடிமக்களாக இருப்பதற்குத் தாங்களே இசைந்திருக்கும் மக்கள் மீது, நடத்தப்படும் ஆட்சி இது. போர்க் காலத்தில் சேனாதிபதியாகவும், திருவிழாக்களில் தலைவர் ஆகவும், வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் நடுவராகவும், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு ஆட்சிபுரியும் அரசர்களாகவும் விளங்கியவர்களே இந்த நான்காவது வகையான முடியாட்சி முறையின் தலைவர்களாவர். அவர்களுடைய அதிகாரத்தை, அவர் களுடைய வழிவந்தோர் மரபுரிமைகளாகப் பெற்றுப் பல தலை முறைகள் ஆட்சி செய்தனர்.[92]

மன்னராட்சியில் ஐந்தாவது வகை ஒன்றை அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். இதில் ஒவ்வொரு குலமும் அல்லது அரசும்

---

90 அரசியல் பக்.129

91 ஷ 130

92 ஷ 131

பொதுச் சொத்தைத் தங்கள் விருப்பப்படி அளிக்கும் உரிமை பெற்றிருப்பதைப் போன்று, எல்லாவற்றையும் தன் விருப்பப்படி அளிக்கும் அதிகாரத்தைப் பெற்ற ஒருவன் தலைவனாக – அரசனாக விளங்குவான். இதனை, 'இனக்குழுத் தலைவர்' (Tribal chieftains) ஆட்சிமுறை எனலாம். பெரும்பாலும் குறுநில மன்னர்களுடைய ஆட்சி முறையாக இதைக் கருதலாம்.

திருவள்ளுவருக்கு இரண்டே வகையான முடியாட்சி முறைகள் தான் தெரியும். ஒன்று குடிமக்களின் நலன்கருதி ஆட்சிபுரியும் கோனாட்சி முறை; மற்றொன்று மக்களை மாக்களாக நடத்தும் கொடுங்கோலாட்சி முறை[93] அரிஸ்டாட்டில் குறிப்பிடும் நான்காவது முடியாட்சி முறையே வள்ளுவர் போற்றும் கோனாட்சி முறையாகிய செங்கேன்மை, அரிஸ்டாட்டில் கூறும் இரண்டாவது, மூன்றாவது மன்னராட்சி முறைகளை, வள்ளுவர் கொடுங்கோல் ஆட்சி முறையில் அடக்கி விடுகிறார். ஒரே வொரு வேறுபாடு. அரசனைத் தேர்ந்து எடுக்கும் முறையைப் பற்றி வள்ளுவர் ஒன்றும் கூறவில்லை. இவ்விரு வகை முடியாட்சிகளுள், திருவள்ளுவர் செங்கோன்மையையே மிகச் சிறந்ததாகப் போற்றுகிறார்.

உலகத்து உயிர் எல்லாம் மழையை நோக்கி வாழும். அதுபோல அரசனது செங்கோலை நம்பி குடிகள் வாழ்கின்றன. அறவோர்களின் மெய்ப்பொருள் நூலிற்கும், அதனுள் கூறப்படும் அறத்திற்கும் அடிப்படையாக உள்ளது அரசனது செங்கோல். தம் குடிகளின் நலனைக் கருத்தில் கொண்டு செங்கோல் செலுத்தும் பெருநில வேந்தனது அடியை உலகத்தார் பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்வர். இயற்கை அறத்திற்கு மாறுபடாமல், செங்கோல் செலுத்தும் அரசனுடைய நாட்டில் மழையும், விளைச்சலும் குறைவின்றி இருக்கும். அரசனுடைய ஆட்சியானது செம்மை நலம் சார்ந்தாக இருக்குமானால், அவனுக்கு வெற்றி தருவது செங்கோலே; அவனுடைய வேலன்று.

---

93 திருக்குறள் 55.வது அதிகாரம் 'செங்கோன்மை!; 56–வது அதிகாரம் 'கொடுங்கோன்மை' பற்றியது.

அரசன் உலகத்தை யெல்லாம் காப்பான்; அவன் அற நெறியிலிருந்து வழுவாமல் செங்கோல் செலுத்துவானாயின் நீதியே அவனைக் காக்கும். குடிகள் குற்றஞ்செய்தால், அக்குற்றத்தை ஆராய்ந்து, யாரிடத்தும் விருப்பு வெறுப்பு இல்லாமல், குற்றத்திற்குத் தகுந்த பரிகாரத்தைத் தெரிந்து, அதனை விதிப்பதே ஒழுங்கான நீதிமுறையாகும். குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத், தானும் வேண்டுவன உதவிப் போற்றிக் காப்பதுடன், அவர்கள் குற்றத்திற்காக அவர்களைத் தண்டித்தல் வேந்தனுக்கு இழுக்காகாது; அது அவன் கடமையாகும்[94] என்பது செங்கோல் ஆட்சி யுடைய முடியாட்சியைப் பற்றி வள்ளுவர் தரும் விளக்கமாகும். இதனுள், 'உலகத்து உயிர்களுக்கு வான் மழை எவ்வாறு இன்றியமையாததோ, அதைப் போன்று குடிமக்களுக்கு மன்னவன் முதன்மையான தேவையாவான்' எனும் வள்ளுவரின் கருத்து சிறப்புமிக்கதாகும்.

நெல்லும் உயிரன்றே ! நீரும் உயிரன்றே!
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்! (புறநா. 186)

எனும் புறப்பாடற் பகுதியும் இதனையே தெரிவிக்கிறது.

செங்கோல் ஆட்சி நெறியில் நின்று, குடிமக்களுக்கு நீதி வழங்கி, அவர்களைக் காப்பாற்றும் அரசன், கடவுளைப் போன்று மதித்துப் போற்றப்படுவான். இதனை,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்களுக்கு
இறை என்று வைக்கப்படும். (388)

எனும் குறட்பாவால் தெளியலாம். இங்கு 'அரசனை தெய்வத்தின் மண்ணுலக வடிவம்' என்றோ, தெய்வத் தன்மைகள் உடையவன் என்றோ, திருவள்ளுவர் கூறவில்லை. இதனால் 'அரசு தெய்விகத் தன்மையுடன் தோன்றியது' எனும் பிற இந்திய அறிஞர்களின் கருத்தையோ, பிறநாட்டு அறிஞர் கருத்துகளையோ வள்ளுவர் உடன்படவில்லை என்பது தெளி வாகிறது.[95]

---

94 குறள், 542–547; 541, 549.

95 இதைப்பற்றிய விளக்கத்தை இந்நூலின் பக். 15ல் காணலாம்.

இனிக் கொடுங்கோல் ஆட்சியை வள்ளுவர் முற்றிலும் வெறுத்து ஒதுக்குகிறார். "குடிகளை வருத்துந் தொழிலை மேற்கொண்டு நீதி இல்லாதவற்றைச் செய்யும் அரசன், கொலைகாரர்களைவிட மிகவும் கொடியவனாவான். அறநெறி பிறழ்ந்த அரசனது கொங்குகோலின் கீழ் வாழ்ந்தால், வறுமையைப் பார்க்கிலும் செல்வம் உடைமை துன்பந்தரும். இத்தகைய கொடுங்கோல் அரசனால், அல்லற்பட்டு ஆற்றாது அழுது மக்கள் கண்ணீர் வடிப்பார்களானால், அக்கண்ணீரே[96] அந்த அரசனை அழிக்கும் படையாக அமையும் என்பது வள்ளுவரின் கருத்தாகும். இதனால், திருவள்ளுவரும் அரிஸ்டாட்டிலைப் போலவே கொடுங்கோல் ஆட்சி முறையைப் போற்றவில்லை என்பது புலனாகின்றது.

அரசின் வகை

அரிஸ்டாட்டில் அரசின் வகையினைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துள்ளார். 'அதிகாரத்தை முற்றிலும் நல்லமுறையில் பயன்படுத்தும் அரசு வகை' என்பதில் முடியாட்சி, உயர் குடியாளர் ஆட்சி, மிதமான குடியாட்சி என்பனவற்றை இவர் அடக்கியுள்ளார். அதிகாரத்தை முற்றிலும் நல்லமுறையில் பயன்படுத்தாத அரசு வகையாக எதேச்சாதிகாரம், செல்வர் சிறுகுடியாட்சி, குடியாட்சி அல்லது மக்களாட்சி என்பனவற்றை இவர் குறிப்பிட்டுள்ளார்,[97] இவற்றுள் வள்ளுவர் போற்றுவது முற்றிலும் நல்லமுறையில் அதிகாரத்தைச் செலுத்தும் முடியாட்சி முறையேயாகும். பல்வேறு அரசு வகையைப் பற்றிப் பேனிலும், இத்தகைய முடியாட்சியே சிறந்த அரசியல் அமைப்பாக அரிஸ்டாட்டில் கருதுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசின் குறிக்கோள்

தனது தனிவாழ்வில் அரசியல் அதிகாரத்தையோ, செல்வத்தையோ வளர்த்துக் கொள்ளுவதைக் குறிக்கோளாகக்

---

96 குறள், 551, 558, 555

97 அரசியல், பக்.142–194

கொள்ளாமல், தன் தகுதியை அல்லது திறன்களை வளர்த்துக்கொள்ளுவது தான் ஒருவனுக்குரிய சிறந்த குறிக்கோளாகக் கொள்ளப்படுகிறது. இதைப் போலவே, இலட்சிய அரசின் குறிக்கோளும் குடிமக்களுடைய தகுதியை அல்லது திறன்களை வளர்ப்பதற்கு வேண்டுவன எல்லாம் செய்வதாக இருத்தல் வேண்டும் என்று அரிஸ்டாட்டில் கூறுகிறார்.[98]

மற்றும், 'ஒரு நாடு மற்றொரு நாட்டினரைத் தனது நலனுக்காக ஆளாமல், தனக்குக் கீழ்ப்பட்ட நாட்டின் நலனுக்காக ஆளுமானால், எதேச்சாதிகார ஆட்சியின இயல்பு இல்லாத இத்தகைய ஆட்சி நியாயமானது' என்று இவர் கருதுகிறார். இத்தகைய குறிக்கோளை அடைவதற்கு வழிகள் பல உள்ளன. அவற்றுள் ஒன்று அறவியல் முறையில் சட்டம் வகுத்து, மக்களின் இயல்பையும், நாகரிகத்தையும் வளர்ப்பதாகும்.

இலட்சிய அரசின் பரப்பளவு, மக்கள் தொகை, தொழில், அரசாங்க அமைப்பு முதலியவை மேற்கண்ட குறிக்கோளினை அடைவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். இலட்சிய அரசின் பண்புகளை அரிஸ்டாட்டில் நுட்பமாக விளக்கியுள்ளார். தீவிர நிலைக்குகந்த போக்கை விடுத்து, நடுத்தர இயல்பான (நடுவு நிலைக்) கோட்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டுமென இவர் அறிவிக்கிறார்.[99]

'இறைமாட்சி', 'செங்கோன்மை' எனும் அதிகாரங்களில் வள்ளுவர் கூறும் கருத்துகள் 'அரசின் குறிக்கோள் யாது?" என்பதைத் தெரிவிக்கின்றன. தீமையிலிருந்தும் துன்பத்திலிருந்தும் மக்களைக் காப்பது அரசின் முதன்மையான குறிக்கோளாகும்.[100] மக்களுக்குத் தேவையான பொருள்களைக்

---

98 அரசியல் பக், 280–81

99 ஷெ பக்.83–85

100 குறள் 384

கொடுத்து உதவுவதும், அன்போடு அவர்களிடம் நடந்து கொள்ளுவதும், நீதி தவறாமல் ஆட்சி செய்வதும், தளர்வுற்ற குடிமக்களைப் போற்றிக் காத்தலும் சிறப்புமிக்க அரசனுக்குரிய பண்புகளாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்.[101] இவற்றையே அரசின் குறிக்கோள்களாகக் கொள்ளலாம். இதையே சுருக்கமாக,

குடிபுறம் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று; வேந்தன் தொழில் (549)

என்று வேறோர் இடத்தில் தெய்வப் புலவர் அறிவிக்கிறார். இவையாவும், குடிமக்களுக்கு அமைதியான நல்வாழ்வை அளிப்பதே ஓர் அரசின் – அரசனின் – குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதையே விரித்துரைக்கின்றன.

அரசின் உறுப்புகளாக நாட்டின் பரப்பு அளவு, மக்கள் தொகை, தொழில், அரசாங்க அமைப்பு என்பனவற்றை அரிஸ்டாட்டில் பொதுப்படையாகக் கூறியுள்ளார். திருவள்ளுவர், முடியாட்சிக்குரிய உறுப்புகளை நுட்பமாகப் பகுத்துக் காட்டுகிறார்.

படைகுடி கூழ்அமைச்சு நட்(பு) அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு (381)

எனும் குறட்பா, படை, குடி மக்கள், பொருள் அமைச்சர், நண்பர், தற்காப்பு அரண் (கோட்டை) முதலியன உடையவனே அரசருள் சிங்கம் போன்றவனாவான் என்பதைத் தெரிவிக்கிறது.

குடிமக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் எனும் பகுதியில், குடிமக்கள் இயல்புகளை அரிஸ்டாட்டில் சுட்டுகிறார்; வேலைப் பிரிவுகளும் பொருள் ஈட்டுதலும் அடுத்து இடம் பெறுகின்றன; நாட்டுப் பரப்பு அளவு, கடற்கரைத் தொடர்பு எனும் பகுதிகள் அரணையும் நாட்டையும் சுட்டுகின்றன. 'அரசாங்க அமைப்பு ' எனும் பகுதியில் சட்டம் இயற்றுவோரைப்பற்றி இவர் தெளிவுறுத்துகிறார்.[102] முடியாட்சிக்குரிய 'அமைச்சர்களை'

---

101 ஷ 390

102 அரசியல் பக்,280–290

அரிஸ்டாட்டில், சட்டம் இயற்றுவோர் எனும் தொடராலேயே சுட்டிச் செல்லுகிறார். அவர்களுள் 'சட்டக் காப்பாளர்' உயர்குடி ஆட்சிக்குழு, கவுன்சிலர் எனும் பிரிவுகள் கூறப்படுகின்றன. அவர்கள் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டனர்[103] நண்பரைப்' பற்றி அறவியலில் விளக்கியுள்ளார். தனிமனித வாழ்க்கைக்கு எவ்வாறு நண்பர்கள் இன்றியமையாதவர்களோ, அதைவிட ஓர் அரசுக்கு ஆற்றல்மிகு நண்பர்கள் மிகவும் தேவைப்படுகின்றனர் என்பதை இவர் நன்கு தெளிவுறுத்தியுள்ளார். படையைப் பற்றியும் இவர் குறிப்பிடுகிறார். குதிரைப் படை, வலிய படைக்கலன் தாங்கிய காலாட்படை இலேசான படைபக்கலன் தாங்கிய காலாட் படை, கப்பற்படை என்று நான்கு வகையாகப் படைகளை இவர் பாகுபடுத்தியுள்ளார்.[104] இவ்வகையில் இவ்விருவர் வகுத்துக் காட்டும் அரசின் உறுப்புகள் பெரிதும் ஒத்துள்ளன. திருவள்ளுவர் எடுத்துரைக்கும் அரசின் உறுப்புகளுள். 'அமைச்சு' என்பது அன்றைய முடியாட்சிக்குப் பெரிதும் தேவைப்பட்ட 'ஆலோசனைக் குழுவையும்'. 'ஆட்சிக் குழுவையும்' சேர்ந்த உறுப்பினர்களின் சிறப்பு இயல்புகளையே தெரிவிக்கின்றன. எனினும், இன்றைய மக்களாட்சியில் முதன்மை இடத்தைப் பெற்றுள்ள 'அமைச்சர்'களுக்கும் பேரளவிற்கு அவை பொருந்தி வருவனவாக உள்ளன.

இவ்வகையில், பண்டை உலகின் இருபெரும் சிந்தனை யாளர்கள் வகுத்து அளித்துள்ள அரசின் உறுப்புகள் எக்காலத் திற்கும், எத்தகைய ஆட்சி அமைப்புகளுக்கும் பொருந்திவரு வனவாக உள்ளமை வியப்பில் நம்மை ஆழ்த்துகின்றன.

இலட்சிய நாடு

இலட்சிய அரசு ' எவ்வாறு இருக்க வேண்டும் என் பதை, ஓர் அரசுக்கு இருக்க வேண்டிய சிறந்த குறிக்கோள்,

---

103 அரசியல், பக்.277

104 ஷ பக்.293, 277

அமைதியான வாழ்வை அளிப்பதாகும். அதன் மூலமாக நாட்டின் அரசியல், சமுதாய அமைப்புகளின் கூறுகள் எல்லாம், யாதொரு முரண்பாடும்

ஓய்வும் இன்றிச் செயல்பட்டு முழுவளர்ச்சி பெறுமாறு செய்தலுமாகும். பிறகு நாடு முழுவதற்கும் முழுமையான இன்பம் கிடைக்குமாறு கண்கா ணிப்பதும் ஆகும்[105]

என்று அரிஸ்டாட்டில் கருதினார். இப்படிப்பட்ட அரசு அமைவதற்குரிய சூழல், நல்லதொரு நாட்டிலேயே அமையக் கூடும் எனவும் இவர் நம்பினார். 'அரசு' எனும் சொல்லாலேயே, 'இராச்சியம்' எனப்படும் 'நாட்டை' இவர் சுட்டிச்செல்லுகிறார்.

அரிஸ்டாட்டில் காணவிரும்பிய 'நாடு' சில அடிப்படைத் தேவைகளைக்கொண்டதாக விளங்குகிறது. இலட்சிய நாட்டின் பரப்பு அளவு, மக்கள் தொகை, தொழில், அரசாங்க அமைப்பு ஆகியவை, முன்னர்க் கண்ட குறிக்கோளை அடைவதற்கு ஏற்றவகையில் இயங்க வேண்டுமாம். அப்பொழுது தீவிர நிலைக்குரிய போக்குகளை விடுத்து, நடுவுநிலைக் கோட் பாட்டிற்குப் பொருந்தும் இயல்புகளையே நாடி, அது செயல்படுமாம்.

சிறப்புமிகு நாட்டின் (இராச்சியத்தின்) பரப்பு அளவும், அந்நாட்டில் வாழும் மக்களின் தொகையும், அந்நாடு எல்லாத் துறைகளிலும் தன்னிறைவு பெறுவதற்கு ஏற்றவகையில் இருக்க வேண்டும். அரசாங்கத்தின் சிறந்த கண்காணிப்பிற்குள் அமையக் கூடிய அளவுதான், மக்கள் தொகையும் இருக்க வேண்டும். அவர்கள் தனித்து வாழாமல்,நகர அமைப்பில் சேர்ந்து வாழ்பவராக இருத்தல் வேண்டும். அதாவது பொது வாழ்வில் கலந்து கொண்டு, நாட்டு ஆட்சியில் பங்கு கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும் என்றும் இலட்சிய நாட்டின் அமைப்பையும் மக்களின் கடமையையும் இவர் சுட்டுகிறார்.[106]

---

105 அரசியல் பக்,280–280

106 ஷ பக்.289

இனி, நாட்டின் – நகரத்தின் அமைப்பை இவர் கோடி காட்டியுள்ளார். வெளிநாட்டிலிருந்து தேவையானவற்றைப் பெறுவதற்கு ஏற்றவாறு நகரம் கடலுக்கு அருகில் அமைந்து இருக்க வேண்டும்; மக்கள் வாணிக வாழ்விலும், கடல்கடந்து செல்லும் வாழ்விலும் ஈடுபடாதவாறு கடலில் இருந்து சிறிது விலகியும் இருத்தல் வேண்டும். மக்கள் வடக்கத்திய (கிரீஸ்) இன மக்களைப் போல ஊக்கமும், அஞ்சா நெஞ்சமும் பெற்று ஆரிய மக்களைப் (கிரேக்கர்) போல அறிவுக் கூர்மையும் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

வேளாண்மை, சிறுதொழில் முதலியவை செய்யும் தொழிலாளர்களும், போர்வீரரும், செல்வரும், சமயக் குருமார்களும், ஆட்சியாளரும் சமுதாயத்தில் இருக்க வேண்டும். முதலில் குறிப்பிடப்பட்ட இருவகுப்பாகும், நாட்டில் வாழ்பவராக இருத்தல் வேண்டும். ஆனால், நாட்டின் ஆட்சியில் கலந்து கொள்ளக் கூடிய உரிமைக் குடிமக்களாக அவர்கள் இருத்தல் கூடாது. எஞ்சிய வகுப்பினரே நாட்டின் குடிமக்களாக அமைந்து, நாட்டின் பெரும் பகுதி நிலத்தைத் தங்கள் சொத்தாகப் பெற்று, ஆட்சியாளர்களாகவும், குருமார்களாகவும் பணிபுரிய வேண்டும். [107]

நடுத்தர வகுப்பினர், செல்வர்களையும் வறியவர்களையும் காட்டிலும் வலிவு உடையவர்களாக இருக்கும் நாட்டில், நல்ல ஆட்சியமைப்பு அமையுமாம்.

இலட்சிய அரசில், குடிமக்கள் யாவருக்கும் நல்ல கல்விப் பயிற்சியை அளிக்கும் ஆசிரியராகவே அரசாங்கம் விளங்க லேண்டுமாம். மக்கள் அனைவருடைய ஒழுக்க, அறிவுப் பண்புகள் முழு வளச்ச்சி பெறுதல் மூலமாகவே, அரசியல் சமுதாயமும் நற்பணியைச் செய்ய இயலும், ஒரே சீரான கட்டாயம் கல்வி முறை இலட்சிய அரசுக்கு இருக்க வேண்டிய முதல் தேவையாகும். கல்விமுறையைச் செயல்படுத்துவதுதான்

---

107 அரசியல், பக்.292–305

அரசாங்கத்தின் மிக முக்கியமான அலுவல் ஆகும்.[108]

அரிஸ்டாட்டில் வகுக்கும் கல்வித் திட்டம், உள்ளப் பண்பாட்டை உருவாக்கும் நோக்கம் உடையதாகும். இது, நடைமுறைக்குப் பெரிதும் பொருந்தி வருவதாக அமையவில்லை. உடற்பயிற்சி, இசைப்பயிற்சி முதலியவை மாணவர்க்கு அளிக்கப்பட வேண்டும். மக்களுடைய தனிவாழ்க்கையும், குழந்தை பெறுதற்கான பேறுகாலம், குழந்தைப் பாதுகாப்பு முதலியன அரசாங்கத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வகையில், பிளேட்டோவின் கருத்துகளோடு இவர் ஒன்றிப் போகிறார். இவ்வாறு அரசின் கண்காணிப்பில் குழந்தைகள் வளர்க்கப் பட்டால், பிற்காலத்தில் உடல் உரமும், அழகும், ஒழுக்கழும், அறிவுக்கூர்மையும் உடையவர்களாக அவர்கள் திகழ்வராம்; உரிமையுணர்வு மிக்க குடிமக்களாகச் சிறந்த செயல்களைச் செய்வார்களாம்.[109]

இவ்வாறு புதியதொரு நாட்டினைக் காணவிரும்பும் அரிஸ்டாட்டில்,"அடிமைகள் எனும் ஒருவகுப்பார் சமுதாயத்தில் இருந்தாக வேண்டும்" என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளார்.

புதியதோர் உலகைக் காண உருவாக்க திருவள்ளுவரும் ஒருவகைத் திட்டத்தை 'நாடு' எனும் அதிகாரத்தில் (74) வகுத்துள்ளார். வள்ளுவர் காண விரும்பிய 'திருநாட்டில்' காலந்தவறாமல் உழவுத் தொழிலைச் செய்து, உணவுப் பொருள்களைப் பயிரிடும் உழவரும், நன்னெறியில் வாழும் சான்றோரும், கேடில்லாத செல்வம் உடைய செல்வரும் ஒன்றாகக் கூடி வாழ்க்கை நடத்துவர். பிற நாட்டவர் கண்டு விரும்பத்தக்க வகையில் இயற்கை வளமும், செல்வச் செழிப்பும் உடையதாக அந்நாடு விளங்கும்; கொடிய நோய்கள், வறட்சி

---

108 ஷெ பக்.330–331

109 அரசியல், பக்.332–351

போன்ற கேடுகளால் தீமையுறாமல் திகழும்; புதிய சுமைகளைத் தாங்கிக் கொள்ளும் வள ஆதாரங்களோடு, அரசனுக்குப் புதிய வருவாய்க்குரிய வழிவகைகளைக் கொண்டு இயங்கும்; உறுபசியும், ஓவாப்பிணியும், செறுபகையும் இல்லாமல் இனிது விளங்கும்.

அதில் பல்குழுவும், பாழ் செய்யும் உட்பகையும், அரசனைத் துன்புறுத்தும் கொலைத் தொழில் குறுநில மன்னரும் இருக்கமாட்டார்கள்; பகைவரால் அழிக்கப்படாததாய்,கெட்டாலும் செழிப்பில் குன்றாததாய் விளங்கும். ஆற்றுநீரையும் ஊற்று நீரையும் கொண்ட நீர் அரண்களையும், நாட்டினைச் சுற்றி அமைந்துள்ள மலையரணும், அம்மலையில் இருந்து பெருக்கெடுத்து ஓடிவரும் அருவிகளும், வலிய கோட்டையும் நாட்டிற்குச் சிறந்த உறுப்புகளாகும். பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், தக்க தற்காப்பு ஆகியவை அந்நாட்டினை அழகு செய்யும்; வருந்தித் தேடி அலையாமல், தானே இயற்கையாக எளிதில் கிடைக்கும் செல்வச் செழிப்பு உடையது அத்திரு நாடு. அத்தகைய திருநாட்டில், மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்ற தலைவன் ஒருவன் இருப்பான். அவனே செங்கோலனான வேந்தனாவான்![110]

இத்தகைய இலட்சிய நாட்டில் வாழும் மக்கள், முயற்சியுடையவராய், மானத்தைப் போற்றுபவராய், குடிப்பண்பைக் காப்பாற்றுபவராய் விளங்குவர்.[111] அந்நாட்டில் வாழும் மக்கள் எல்லாரும் கல்வியை விரும்பிக் கற்பர். கல்வி, நாட்டு மக்கள் அனைவரும் பெறவேண்டிய பொதுச் சொத்து,[112] அந்தப் புத்துலகத் திருநாட்டில் சூதாடுதல், கள்ளுண்ணல், பொது மகளிரை நாடுதல் போன்ற சமுதாயத் தீமைகளைக்

---

110 குறள், 731–740

111 ஷ அதி.97, 102, 103

112 ஷ 392

காண இயலாது;[113] ஒழுக்கத்தினை உயிரினும் சிறந்ததாகப் போற்றும் மக்களையே அங்குக் காணலாம். அறத்தின் வழியே வரும் இன்பத்தைத் துய்த்து, உடல் நலத்தோடு மன நலத்தையும் பெற்று, மகிழ்வுறும் மக்களைக் கொண்டதாக வள்ளுவரின் 'இலட்சிய நாடு' விளங்கும்.

அடிமைகள்

இயற்கையிலேயே தோன்றிய ஒரு சமுதாய வகுப்பினராக 'அடிமைகளை' அரிஸ்டாட்டில் கருதுகிறார். இது அக்காலத்திய கிரேக்கருடைய நம்பிக்கையாகும். கிரேக்கர் அல்லாத பிற இனமக்களையே, கிரேக்கர் அடிமைகளாக வைத்துக் கொள்ள வேண்டுமாம். போரில் வெற்றி பெற்றவருடைய அறிவுத் திறமையை அவர்கள் பெற்ற வெற்றி காட்டுகிறதாம். இதனால் போரில் தோற்றவர்கள் அறிவாற்றலில் குறைபாடு உடையவர்கள் என்பது புலனாகின்றதாம். எனவே, போரில் தோற்றவர்களைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்து,அவர்களை அடிமைகளாக நடத்தலாம். ஆனால் அவர்கள் சிறந்த அடிமைகள் ஆகார் என்பது அரிஸ்டாட்டிலின் துணிவாகும். எனவே, பிறப்பாலேயே 'அடிமைகள்' எனும் வகுப்பினர் தோன்றுவதால் நம்புகின்றார்.

பிறரை உடல் உழைப்பு வேலைகளைச் செய்யுமாறு ஏவும் திறமையுடையவர் உரிமைக் குடிமக்கள் ஆவர். சிந்தனைத் திறனில்லாது ஏவப்பட்ட செயல்களைச் செய்ய வல்லவர்கள் அடிமைகளாம். இந்த அடிமைகளை வேலையாட்களாகக் கொண்ட கிரேக்கர்கள், உயர்ந்த தொழிலான நாட்டாட்சியை, நல்ல முறையில் கவனிக்க இயலுமாம். எனவே 'அடிமைகள், நாட்டின் நலத்திற்கும், மேட்டுக்குடி மக்களின் உரிமை வாழ்க்கைக்கும் இன்றியமையாது தேவைப்படுகின்றனர்' என்று சமுதாயத்தில் 'அடிமைகள் ஏன் இருந்தாக வேண்டும்?" என்பதை இவர் விளக்குகிறார்.[114] இந்த அடிமைநிலை, மரபு வழிப்பட்ட தாக இருத்தல் வேண்டுமாம்.

---

113 ஷ அதி,92–94

114 அரசியல், பக்.285–288

திருவள்ளுவர் 'அடிமைநிலை' பற்றி ஒன்றும் வெளிப்படையாகக் கூறவில்லை. ஓர் இடத்தில், வறுமையின் கொடுமை காரணமாகத் தன்னைப் பொருளுக்கு விற்றுக் கொள்ளும் 'கொத்தடிமை முறையை'ப் (Bonded Labour) பற்றிக் குறிப்பிடுகிறார்[115] மக்கள் எல்லாரும் பிறப்பினால் ஒத்த உரிமையுடையவர்கள் ; அவர்கள் செய்யும் தொழிலால் 'இழிந்தோர்" என்றோ, சிறந்தோர்' என்றோ பாகுபடுத்திக் கூறுவது அறிவுடைமையாகாது.[116] எனவே, ஒரு நாட்டுமக்கள் இடையே 'உரிமைக் குடிமக்கள்' எனவும், 'அடிமைகள்' எனவும், வேறுபாடு இருக்கவேண்டும் எனும் கருத்து உடையவராக திருவள்ளுவர் தோன்றவில்லை.

பொருளாதாரக் கொள்கை

தனியுடைமைப் பொருளாதாரத்தை அரிஸ்டாட்டில் போற்றி ஆதரிக்கின்றார். உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாது தேவைப்படும் அளவிற்குப் பொருளை ஈட்டினால் போதும் என்பது இவருடைய கருத்து. ஆடு, மாடு வளர்த்தல், வேளாண்மை செய்தல், வேட்டை ஆடுதல், மீன் பிடித்தல் கொள்ளையடித்தல் முதலியன பொருளீட்டுவதில் இயற்கையான முறைகள் என இவர் குறிப்பிடுகின்றார்,[117] ஆனால் பணத்திற்காகப் பொருளை விற்கும் வாணிகமுறை, வட்டிக்குப் பணத்தைக் கடன் கொடுத்தல் ஆகியவை பொருளீட்டுவதில் இயற்கைக்கு மாறான முறைகளாகும். இம்முறை வாழ்வின் தேவைக்கான பொருள்களை அளிக்காமல், பணமே பணத்தைத் தருகிறதாம். இதனால், இவை வெறுக்கத்தக்கனவாம். ஆனால், கொள்ளையடிப்பது வயிற்றுப் பிழைப்பிற்காகச் செய்யப்படும் தொழிலாம். எனவே, இது நல்ல தொழிலாம். இவரைப் போலவே தனி மனிதப் பொருளாதார நோக்குடைய வள்ளுவரின் கருத்து, இதிலிருந்து

---

115 குறள், 220

116 ஷெ 972

117 குறள், பக்.288–292

வேறுபடுகிறது. பெற்றெடுத்த தாய், பசியினால் வருந்தினாலும் சான்றோர் பழிக்கத்தக்க செயல்களைச் செய்து, தாயின் பசியைப் போக்க முயலாதே![118] என்று அறிவுறுத்தும் வள்ளுவரின் பொருளீட்டும் கொள்கைக்கு, இது நேர்மாறான தாகும்.

அரிஸ்டாட்டில் 'பண்டமாற்று ' வாணிக முறையைப் பெரிதும் போற்றுகிறார். பண்டங்களுக்குப் பதிலாகப் பணம் தோன்றுமானால், அது இயற்கைக்குப் பகையாகுமாம். வாணிகத்திற்குத் தேவை முதல்,[119] "மேல்வரும் ஊதியத்தைக் கருதி, போட்டமுதலையும் இழக்கக்கூடியமுயற்சியைஅறிவுடையோர் மேற்கொள்ள மாட்டார்கள்"[120] என்பது வள்ளுவரின் கருத்தாகும். வாணிகம் செய்வார் பிறர் பொருளைத் தம் பொருள் போற்கருதி வாணிகம் செய்யின், அதுவே சிறந்த வாணிகமாகப் போற்றப்படும்[121] என்பது வள்ளுவரின் சித்தாந்தமாகும்.

'பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருள் அல்லது இல்லை பொருள்[122] எனப் பொருளின் மாட்சியைத் திருவள்ளுவர் போற்றுவது உண்மை! 'செய்க பொருளை' எனப் பொருளை ஈட்டுமாறு[123] அறிவுறுத்துவதும் உண்மை! ஆனால் அப்பொருள் 'தீதின்றி ' வரவேண்டும். 'அருளொடும்[124] அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம்' நல்லது அன்றென வள்ளுவர் எச்சரிக்கை செய்கிறார்.

திருவள்ளுவர் வாணிகப் பொருளாதாரத்தை வரவேற்கிறார்; ஆனால் அது நல்லவழியில் ஈட்டப்படுவதால் குவியும் பொருளாக இருக்க வேண்டும் எனத் தெளிவுறுத்துகிறார்.

---

118 ஷ 656
119 ஷ 449
120 ஷ 463
121 குறள், 120
122 ஷ 751
123 ஷ 759
124 ஷ 754, 755

இவற்றால், வள்ளுவர் சுரண்டல் பொருளாதார முறையை வெறுத்து ஒதுக்குவது புலனாகின்றது.

மதிப்பீடு

கிரேக்கர் பிறஇனத்து மக்களைவிட உள்ளவுரமும் உடலுரமும் வாய்ந்தவர் எனும் இனப்பொதுவுணர்வும், அடிமை வகுப்பினர் சமுதாய அமைப்பிற்கு இன்றியமையாதவர் எனும் மேட்டுக் குடிமனப்பான்மையும் அரிஸ்டாட்டிலின் சிந்தனையைக் களங்க முறச் செய்துள்ளன. மற்றும், அவருடைய 'அரசியல் சமுதாய சிந்தனை' நகர அரசு அமைப்புகளுக்குப் பொருந்தி வருமாறு பெரிதும் வகுக்கப்பட்டுள்ளது. நகர அரசுகள் மறைந்து ஈராயிரம் ஆண்டுகளாகிவிட்டன.

மனிதவுரிமை யுணர்வும், அரசாங்க அதிகாரமும் பற்றி அரிஸ்டாட்டில் தெரிவித்துள்ள கருத்துகள் இன்றைய மக்களாட்சிக்குப் பொருந்தி வருவனவாக உள்ளன. பல்வேறு அரசியல் அமைப்புகளை ஆராய்ந்து, அதிகாரமும் உரிமையும் இணைந்து இயங்க வேண்டும் எனும் முடிவிற்கு இவர் வந்துள்ளார்.'சட்டவிதிகளுக்குஉட்பட்டஉரிமைவாழ்க்கையே முழுவுரிமை பெற்ற உரிமை வாழ்க்கை' எனும் சிறப்புமிகு கருத்தினை, உலகமக்கள் மனத்தில், ஆழப்பதியுமாறு செய்த பெருமைக்குரியவர் அரிஸ்டாட்டிலே ஆவார். மக்கள் இறைமைக் கோட்பாட்டையும், சட்டமியற்றும் உறுப்பு, நிருவாக உறுப்பு, நீதிவழங்கும் உறுப்பு எனும் மூவகை உறுப்புகளைக் கொண்டு இயங்குவதே அரசு ' என்னும் கொள்கையை உலகிற்கு வழங்கியவரும் அரிஸ்டாட்டிலே என்று மக்களின் வரலாறு தெரிவிக்கிறது.

4. இலட்சியக் குடிமகன்

அறத்தின் மாட்சியை அறிவுறுத்திய அறவோர்கள், தத்தம் கொள்கைகளுக்குப் பொருந்தும் வகையில் புதியதொரு சமுதாயத்தை அமைக்க விரும்பியுள்ளனர். அந்தப் புதிய சமுதாயம் எத்தகைய குறைகளுமே இல்லாத 'இலட்சிய சமுதாயமாக' அவர்களால் படைத்துக் காட்டப்பட்டுள்ளதையும்

முன்னரே கண்டோம். அந்த 'இலட்சிய சமுதாயத்தில், வாழப்போகும் குடிமகன் எவ்வாறு இருப்பான்?' என்பதையும் அச்சிந்தனையாளர்கள் புனையா ஓவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளனர். அவர்கள் காணவிரும்பிய சமுதாயத்தில் வாழப் போகும் குடிமகனை, 'இலட்சியக் குடிமகன்' என நாம் சுட்டலாம். அவன் அறவோனாக (Ethical Man) விளங்க வேண்டும் என்பதே திருவள்ளுவருக்கும் அரிஸ்டாட்டிலுக்கும் இடையே முதன்மை இடம் பெறும் விழுமிய நோக்கமாகும்.

திருவள்ளுவர் கண்ட இலட்சியக் குடிமகன்

திருவள்ளுவர் காணவிரும்பிய புதிய சமுதாயத்தின் வரைப்படத்தினை, இந்நூலின் முதல் கட்டுரையான தமிழ்த் தாயின் தவமகன் என்பதில் கண்டோம்,[125] அவர் வாழ்ந்த காலத்திய தமிழ்ச் சமுதாயத்தில், சான்றோர்களே சிறப்புமிகு குடிமக்களாகப் போற்றப்பட்டனர். தன் மகனைச் 'சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடமையாகக்[126] கருதப்பட்டது. மகனைப் பெற்ற தாய், தன்னுடைய மகனை நாட்டிலுள்ள பெரியோர்கள் 'சான்றோன்' எனப் பாராட்டுவதைக் கேட்டு, அம்மகனைப் பெற்றெடுத்தபொழுது அடைந்த மகிழ்ச்சியை விடப் பெருமகிழ்ச்சியுறுவாளாம். இது சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்தினரின் விழுமிய குறிக்கோள் என்பதனை,

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (69)

என்று வள்ளுவரே தெளிவுறுத்தியுள்ளார்.

சான்றோன் என்பவன் யார்? மனிதப் பண்புகள் அனைத்தின் நிலைக்களனாக விளங்குபவன் சான்றோன். மனிதப் பண்புகள் அனைத்தின் முழுநிறை வடிவமாக விளங்குபவன் யாரோ, அவனே சான்றோன். அவனையே முழுமையான மனிதன் (Perfect Man) என்று போற்றினர். அறிவாலும் ஒழுக்கத்தாலும் நிறைவு பெற்றவனே சான்றோன். பொதுவாக உள்ளத்தாலும்

125 பக், 12–16
126 புறநா.312

உரையாலும், அறிவாலும் ஆற்றலாலும், செயலாலும் சிந்தனையாலும் சிறந்து விளங்குபவனே சான்றோன்.

சால்பு எனும் பகுதியடியாகப் படைக்கப்பட்ட சொல்லே சான்றோன். இப்பகுதியைச் 'சால்' எனும் வேர்ச்சொல்லாகவும் 'பு' எனும் தொழிற் பெயர் விகுதியாகவும் பகுக்கலாம். 'சால்' எனும் வேர்ச் சொல்லிற்குப் 'போதும், நிறைவு' என்பன பொருள்களாகும். எனவே, 'போதுமான மனிதப் பண்புகளையும் "நிறைவான மனிதப் பண்புகளையும்' இச்சொல் முதன்முதல் குறித்தது என்பர்.நல்லியல்புகள்,பெருந்தன்மை,சீரியபண்புகள் போன்றவற்றை இச் சொல் உணர்த்துவதைக் காணுகின்றோம். 'சால்பு' எனும் பண்பினை ஆளும் தன்மையைச் சான்றாண்மை எனவும், 'சால்பு' எனும் பண்பினை ஆளுமையாகக் கொண்டவனைச் சான்றோன் எனவும் கூறுவர்

சான்றோனின் இயல்புகள்

திருக்குறளின் 99வது அதிகாரம், 'சான்றாண்மை' என்பதாகும். அந்த அதிகாரத்தில் சான்றாண்மையின் இயல்புகளையும், சான்றாண்மை வாய்ந்த அறவோர்களின் சிறப்புகளையும் வள்ளுவர் விரித்துரைத்துள்ளார். சான்றாண்மை எனும் மாளிகையை அன்பு, நாணம், ஒப்புரவு (தொண்டு செய்தல்), கண்ணோட்டம் (தாட்சண்யம்). வாய்மை எனும் ஐந்து தூண்கள் தாங்கி நிற்பதாக வள்ளுவர் தெரிவிக்கின்றார்.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண் (983)

என்பது வள்ளுவர் வாய்மொழி.

அடுத்துச் சான்றோரின் இயல்புகளையும் சிறப்பையும் தெய்வப் புலவர் விரித்துரைத்துள்ளார்.

தம் கடமைகள் இவை என்பதை அறிந்து, சான்றாண்மையை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்ல

பண்புகள் எல்லாம் இயல்பாக அமைந்து இருக்கும். சான்றோருடைய நலம், அவருடைய குண நலமே! சால்பு என்பது பிறருடைய குற்றத்தை எடுத்துச் சொல்லாத நற்பண்பை அடிப்படையாகக்கொண்டது. சான்றோர் பணிவுமிக்கவர். அதனால் பகைவரையும் நண்பராக அவர்கள் மாற்றிக் கொள்ளுவர். சான்றாண்மையுடையோர், தமக்கு ஒப்புமையற்றவர்களிடமும் தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பண்புடையவராவர். இன்னா செய்தவர்க்கு இனியவை செய்யவே முயல்வர். சான்றாண்மை உடையவருக்கு வறுமை இழிவைத் தராது சான்றாண்மை உடையவர், மலை குலையினும் தம் நிலையில் குலையமாட்டார். சான்றோர், தம்முடைய சான்றாண்மைப் பண்பில் இருந்து குன்றுவார்களானால், இந்த உலகம் தன்னுடைய பாரத்தைத் தாங்க இயலாமல் அழிந்து விடும்.[127]

இச்சான்றோர்கள் 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையினர்;[128] நன்று அறியும் உள்ளம் உடையவர்;[129] செம்மை நலம் மிக்கவர்;[130]கடமை தவறாதவர்;[131] பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சத்தினர் என்று சங்ககால மக்கள் கருதினர். இச்சான்றோர்கள் மனிதர்களே; தெய்வங்கள் அல்லர்! மனிதனாகப் பிறந்தவர்கள் அறிவாலும், ஒழுக்கத்தாலும், பண்பாலும் உயர்ந்து சிறந்த அருளாளர்கள்; தியாகத் தொண்டர்கள்! நண்பர்கள் நஞ்சினைக் கொடுத்தாலும் அதை மகிழ்ச்சியுடன் குடிக்கும் மிகச் சிறந்த நாகரிகம் உடையவர்களாவர்.[132] அவர்கள் பழியொடுவரும் இன்பத்தை

---

127 குறள். 981, 982, 984 –990

128 புறநா.191

129 ஷ 218

130 பதிற்.72, குறுந்,265

131 நற்.327

132 நற்,186, 355, குறள்.580

விரும்பமாட்டார்கள்,[133]புகழுவதற்குமுன்பேநாணம்அடைவர்.[134] அவர்கள் பட்டம் பதவிகளைப் பெரிதாக மதிக்கமாட்டார்கள்; விரைந்து செலும் வாகன வசதிகளையுடையவரை வியப்புடன் போற்றார்; அவற்றை எல்லாம் செல்வமாகக் கருதார்; அவை செய்வினைப் பயன் என எண்ணுவர்; பிறருடைய துன்பத்தைப் போக்கத் துடிக்கும் அருள் உள்ளத்தையே, சிறந்த செல்வமாகப்போற்றுவார்கள்! [135]

இத்தகைய பண்புடையோர் உலகில் வாழ்வதால் தான், இம்மண்ணகம் அழிந்து ஒழியாது, இன்றுவரை நிலைபெற்று விளங்குகிறது என்பது திருவள்ளுவருடைய துணிவாகும்.[136]

அரிஸ்டாட்டிலின் இலட்சியக் குடிமகன்

தம்முடைய அறவியலில், இலட்சியக் குடிமகனைப் பற்றிய தம் கருத்துகளை அரிஸ்டாட்டில் கோடி காட்டியுள்ளார். அவனைப் பெருந்தகையாளன் (Magnanimous Man) என இவர் சுட்டுகிறார். அவன் நேர்மையான அளவிற்குச் செருக்குடையவன். மதினுட்பமும் நூலறிவும் வாய்ந்தவன்; கற்பனையில் மிதக்காமல் நடைமுறை உலகின் இன்பதுன்பங்களை உணர்ந்து வாழ்பவன்; வீரமும் தீரமும் மிக்கவன்;வாழ்வில்உண்டாகும். சிக்கல்களைநடைமுறைக்கு உகந்த முறையில் தீர்வுகாண முயல்பவன்; அரிஸ்டாட்டிலின் உளவியல் நெறிப்படி உணர்ச்சிகளை அடக்கி ஆள்பவன்; அதன் மூலம் அறவியல் பண்புகளைப் பின்பற்றி வாழ்பவன்; அறிவுத்திறனில் உலகியல் ஞானம் மிக்கவன் ; தெளிந்த அறிவும், செயல் திறனும் வாய்ந்தவன்! அவன் பொதுமக்களைக் காட்டிலும் நல்லவனாய் இருப்பான். ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு நற்பண்பிலும் அவன் சிறந்து விளங்குவான். அவன்

---

133 அகநா.112

134 குறுந்.252

135 நற்.210

136 குறள், 996

பிறருக்குத் தீங்கு இழைக்கமாட்டான் ; போரினைக் கண்டு புறங்கொடுத்து ஓட மாட்டான். அஞ்சாமை அவனுக்கு ஓர் அணிகலம். அவன் பெருமித உணர்வுமிக்கவன்; யாரிடத்தும், எதையும் பிச்சை கேட்க மாட்டான்; ஒன்றையும் மறைக்க மாட்டான்; உண்மையைப் பேசுவான்; பைய நடப்பான் ; பெருமிதமாகப் பேசுவான். ஆனால்,உயர்ந்த பதவியில் அமர்ந்து பணிபுரிவதால், அவனிடம் ஒருவகைத் தருக்கும் செருக்கும் காணப்படும். இத்தகைய பண்புகளின் நிலைக்களனாக விளங்கக் கூடிய மனிதனையே, அரிஸ்டாட்டில் 'பெருந்தகையாளன்[137] எனப் போற்றுகிறார். இத்தகைய பெருந்தகையாளர்களின் திருநாடாக என்று கிரேக்கம் விளங்கப் போகிறதோ?, அன்றே அது பொன்றாப் புகழ் பெற்றுத் திகழும்' என்பது இவருடைய நம்பிக்கை.

ஒப்பாய்வு

இத்தகைய போற்றத்தக்கப் பண்புகளையுடையவனாகப் பெருந்தகையாளன் நம் மனக்கண் முன்னால் தோன்றுகிறான்! அரிஸ்டாட்டில் காணவிரும்பிய இந்த மாமனிதன், வல்லவனாகப் படைக்கப்பட்டுள்ளான்; ஓரளவிற்கு நல்லவனாகவும் காட்சி அளிக்கின்றான். ஆனால், அவனிடத்தில் 'மனிதனை மனிதனாகச் சிறப்புறச் செய்வதற்குரிய அடிப்படைப் பண்புகள்' பல இடம்பெறவில்லை. இதனால்'குறைமனிதனாகவே'அவன்தோன்றுகின்றான்! அவனை நிறைமனிதனாக ' ஏற்றுப்போற்ற இயலவில்லை! மனித வாழ்க்கையின் விழுமிய நோக்கங்களான பயன் மதிப்புகளில் அவன் குறைவுடையவன் என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது. மனித குல சகோதரத்துவத்தையோ,மனித நேயத்தையோ அவன் அறியான். ஸ்டாயிக்கு (Stoics)[138] மெய்யறிவாளர் தோன்றுவதற்கு (கி.மு.மூன்றாம் நூ.)

---

137 Ethics. PP.127–128

138 Bertrand Russell, A History of Western Philosophy, p.263

முன்பு, கிரேக்க நாட்டு அறிஞர்கள் அறியாதது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்',[139] யாதானும் நாடாமால் ஊராமால்[140] எனும் கோட்பாடாகும்.

அரிஸ்டாட்டிலின் இலட்சியக் குடிமகன் 'பணிவு' என் பதனைத் தெரிந்து கொள்ளாதவன். 'நேர்மையான அளவிற்கு அவன் செருக்குடையவன்' என்று அரிஸ்டாட்டிலே கூறுகிறார். நேர்மைக்கு அளவுகோல் யாது என்பதை அவர் குறிப்பிடவில்லை ! 'செருக்கில் சிறிது, பெரிது' என வேறுபாடு செய்வது பொருந்துமா? நெருப்பு அளவால் சிறியதாக இருந்தால், அதன் அழிக்கும் இயல்பிலிருந்து வேறுபட்டு விடுமா? நஞ்சினைச் சிறிய அளவில் உட்கொண்டால், அது இறப்பை உண்டாக்காதா? செருக்கு, தீ, நஞ்சு போன்றவை எல்லாம் ஒரே வகையான இயல்புடையவை. இவற்றின் அளவைப் பற்றிக் கவலைப்படுவார் யார்? எனவே, அவனுடைய அறவுணர்வில், பணிவிற்கு இடமே இல்லை. உலகியல் அறிவும், கட்டுப்பாட்டு உணர்ச்சியும் இருந்துவிட்டால் 'பணிவு' எனும் பண்பு, தானாகத் தோன்றிவிடாது!

திருவள்ளுவரின் இலட்சியக் குடிமகன் புலன் அடக்கமும் பணிவும் வாய்ந்தவன்; புகழ்ச்சியைக் கேட்டு நாணம் அடைவான்; பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகவும், பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாகவும் உணர்ந்து வருந்துவான். அரிஸ்டாட்டிலின் பெருந்தகையாளனுடைய இதயத்தை, மனித இனத்தின் துன்பம் தொடுவது இல்லை. இதனால், அவனிடம் அருள் உணர்வோ, பிறருக்கு உதவி செய்ய வேண்டும். எனும் கருணையோ எழுவது இல்லை! கிரேக்க அறிஞன் படைத்த அறவோன் அரசின் (நாட்டின்) நலனையும், செழிப்பையுமே முக்கியமாகக் கருதுகிறான். வள்ளுவர் கண்ட அறவோன் ஒவ்வொரு மனிதனும் அறவொழுக்கத்திலும்,

---

139 புறநா.192.

140 குறள். 397

உலக வாழ்விலும், ஆன்மிக வாழ்விலும் முன்னேற்றம் அடைய அரும்பணி ஆற்றுவதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளான்.

இறுதியாக அரிஸ்டாட்டில் கண்ட இலட்சியக் குடிமகன், மனிதர் இடையே ஏற்றத்தாழ்வு உயர்வு தாழ்வு – இருப்பது இயல்பு என்று நம்புகிறான். இது, இன்றையபுத்துலகச் சிந்தனை வெறுத்து ஒதுக்குவது மட்டும் அன்று! வரலாற்றுக் காலம் நெடுக மனித இனம் போற்றிவரும் சிறப்புமிகு கோட்பாட்டிற்கு முரண்படுவதும் ஆகும். திருவள்ளுவர் 'பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்' (972) எனும் நம்பிக்கையுடையவர். எனவே, அவர் காண விரும்பிய இலட்சியக் குடிமகன் சாதி, சமய, இன, மொழி, இட வேற்றுமைகளைப் பாராட்டாத அனைத்துலகக் குடிமகனாகத் தோன்றுகின்றான். இவ்வகையிலும் அவன், புத்துலகச் சிற்பி யாகவே காட்சி அளிக்கின்றான்.

'இவ்வாறானால், அரிஸ்டாட்டில் கண்ட அறவோனுக்கும் திருவள்ளுவர் கண்ட அறவோனுக்கும் இடையே ஒற்றுமைப் பண்புகளே இல்லையா?' எனும் ஐயம்எழக்கூடும். பெருமையை மதிப்பினை நாடுவதிலும், பொறுமையைக் கடைப்பிடிப்பதி லும் அவர்கள் இருவரும் ஒத்த இயல்புடையவராக உள்ளனர். எல்லாவற்றையும்விடப் புகழையும், பெருமையையும் அரிஸ்டாட்டிலின் இலட்சியக் குடிமகன் மிகச்சிறப்பு உடையதாகப் போற்றுகிறான்.'ஒன்றா உலகத்து உயர்ந்தபுகழ் அல்லால் பொன்றாது நிற்பது ஒன்று இல்'(233) எனவும், "ஒளி" (புகழ்) ஒருவனுக்குரிய செல்வமாகும்" (971) எனவும் அவன் நினைக்கின்றான். எனவே ' பெருமையை விரும்புவோர், அரிய செயல்களையே செய்வர்' (975) என வள்ளுவரின் 'குடிமகன்' சுருதுகின்றான்.

இன்பத்தைக் கண்டு செருக்கும், துன்பத்தைக் கண்டு மனச்சோர்வு அடைவதும் அரிஸ்டாட்டிலின் இலட்சியக்குடி மகனிடத்துக் காண இயலாப் பண்புகளாகும். 'பெருமை

பெருமிதம் இன்மை ' (979) என்பதையும், 'இன்மை ஒருவற்கு இளி வன்று' (988) என்பதையும், 'அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்; பெருமை முயற்சி தரும்'(611) என்பதையும் அற்றோம் என்று அல்லற் படுபவோ பெற்றேம் என்று ஓம்புதல் தேற்றாதவர்'(626) என்பதையும், 'இன்பம் விழையான்; இடும்பை இயல்பு என்பான், துன்பம் உறுதல் இலன்' (628) என்பதையும்,'நாணால் உயிரைத் துறப்பர்; உயிர்ப் பொருட்டால் நாண் துறவார் நாண் ஆள்பவர்'(1017) என்பதையும் நன்குணர்ந்தவன் திருவள்ளுவர் கண்ட இலட்சியக் குடிமகன்.

இத்தகைய ஒற்றுமை இயல்புகள் நம் கருத்தைக் கவருகின்றன. எனினும், அரிஸ்டாட்டிலின் அறவோனை, எதிர்காலஉலகம்போற்றத்தக்கஇலட்சியக்குடிமகனாக நம்மால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை! அவனிடத்தில் காணப்படும் அருள் உணர்வுப் பஞ்சமும், மனித நலப்பற்று இன்மையும் அவனை ஓர் அறவோனாக, சான்றோனாக, மனிதப் பண்புகளில் நிறைவுடையவனாக மதிப்பதற்குப் பெருந்தடையாக உள்ளன. அவன் அறிவுத் திறன்மிக்க மனிதனாகத் தோன்றுகிறான். ஆனால், அவனிடம் மனித உணர்வுகள் இல்லாத ஒருவகை வறுமையை வெறுமையைக் காணுகின்றோம். எனவே, அவனிடத்து எதிர்காலத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம் இல்லை. மற்றும், அரிஸ்டாட்டிலின் பெருந்தகையாளன் குறிக்கோள் இயல்புகளோடு கற்பனையாகப் படைத்துக் காட்டப்பட்ட அறவோனாவான். திருவள்ளுவரின் சான்றோன் கற்பனைப் படைப்பில் தோன்றியவன் அல்லன்![141]

> வள்ளுவரின் சான்றோன் 'இராபின்சன் குருசோ (Robinson Crusoe)அல்லன்;டான்குயிக்சாட்டும்(DonQuixote)அல்லன்: குருதியின் கொப்பளிப்புடைய தசையும், நாடி நரம்பும் கொண்டு படைக்கப் பட்ட மனிதன்! அவன் பண்டைத் தமிழகத்து, மக்களோடு மக்களாய் இந்த மண்ணில்

141 ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான்வாழும் ஊரே – புறநா.191

வாழ்ந்தவன்; அவன் அறவுரைகளை அறிவுறுத்திய அறவோனாக மட்டும் தோன்றவில்லை; அவ்வறநெறியில் வாழ்ந்து காட்டிய அறவோனாவான்! அவன் வாழ்ந்து காட்டிய நெறியைச் சான்றோர் சென்ற நெறி[142] என்று அக் காலத்திய மக்கள் போற்றியுள்ளனர். தன்னை மறந்து தனக்கென வாழாது– மன்னுயிரைத் தன்னுயிர்போல் போற்றி வாழ்ந்தவன்! ஆன்ம நேய ஒருமைப் பாட்டைப் போற்றி வாழ்ந்தவன்! 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' எனும் மனித குலத்தின் சகோதரத்துவ உணர்வை ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், உலகிற்கு உணர்த்திய அறவோன் திருவள்ளுவர் கண்ட சான்றோனாவான்!

5.மெய்ப்பொருளியல் கோட்பாடு

உலகில் உள்ள பொருள்கள் எல்லாவற்றிற்கும் மூலமான ஒன்றைப்பற்றி ஆராய்ந்து, அறிய முயலுவதே மெய்ப்பொருள் இயலாகும். உலகத்தில் தோன்றுகின்ற ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் இலட்சிய வடிவம் உண்டு. அதனுடைய நிழல்தான், இவ்வுலகில் காணப்படும் பொருள் என்று பிளேட்டோ கூறுகிறார். இதை அரிஸ்டாட்டில் கண்டிக்கிறார். 'சாக்ரடிசு ஓர் அறிவுள்ள விலங்கு' எனும் தொடரினை இவர் எடுத்துக் கொள்ளுகிறார். சாக்ரடிசுக்கு, ஓர் இலட்சிய சாக்ரடிசு இருக்க வேண்டும். இப்படி ஆராய்ந்து கொண்டே சென்றால், முடிவே காண இயலாத ஒரு நிலைக்கு நம்மை அழைத்துச் செல்லும் இந்த ஆய்வுமுறை என்று இவர் அறிவுறுத்துகிறார். 'ஒரு பொருளுக்கு ஓர் இலட்சியம் இருக்குமாயின், அந்த இலட்சியம்தான் உலகத்தில் தோன்றுகின்ற பொருளுக்குமூலம் எனச்சொல்ல இயலுமா? என அரிஸ்டாட்டில் கேட்கிறார். மேலும், 'மூலத்தின் நிழல்தான் இது என்றல்'அதனால் உண்டாகக் கூடிய தன்மை யாதொன்றும் இல்லை எனவும் குறிப்பிடுகிறார்.[143]

---

142 புறநா.134

143 Netaphysics. pp.560–566

வடிவங்களே மூல காரணம்

காரணம் என்பது ஒரு பொருளுக்குப் புறத்தே இல்லை. அப்பொருளிலேயே, அது மறைந்துநிற்கிறது. அப்படி மறைந்து நிற்கும் ஒன்றே. புறத்தோற்றத்தில் ஒருவகை வடிவமாக வெளிப்படுகின்றது. சான்றாக மரயானை ஒன்றை எடுத்துக் கொள்ளுவோம். 'யானைக்கு' மரம் தான் அடிப்படை, வடிவந் தான், உருவத்தை அமைக்கும் வடிவநிலைக் காரணமாகும் (Formal Cause): செதுக்குகின்ற உளியும் மரத்தோடு தொடர்பு கொள்ளுகின்ற நிலையுந்தான் நிமித்த காரணமாகும் (Efficient Cause), Final Cause) சிற்பியினுடைய இறுதி, நோக்கந்தான். இதையே மூலகாரணமாகக் கூறுவர். தான் அசையாமல் நின்று, யாவற்றையும் ஆட்டி வைப்பது யாதோ, அதுதான் மூலகாரணம் ஆகும்.

காணுகின்ற 'ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் இலட்சியம் இருக்கிறது. அதே இலட்சியத்தின் நிழல்தான் இந்த உலகப்பொருள் என்று பிளேட்டோ கூறியதைக் கண்டோம். இதனை ஒரு குறையாகக் கண்டார் அரிஸ்டாட்டில். ஆனால், அதேதவற்றைதான் இவரும் செய்கிறார் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர், பிளேட்டோ கண்ட தத்துவ உலகத்தில் இலட்சியங்கள் ஆட்சிபுரிகின்றன. அரிஸ்டாட்டிலின் தத்துவ உலகில், வடிவங்கள் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாய் விளங்குகின்றன.

இறைவனே மூலகாரணன்

திருவள்ளுவர், 'வடிவங்களே எல்லாவற்றிற்கும் மூலகாரணம்' என்பதை அறியாதவர். "ஐம்பூதங்களுக்கு மூலமாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் என்பனவற்றின் தோற்ற வாயிலே அறிய வல்லவனது அறிவின்கண் உலகத்தின் இயல்பு நிலைத்து உள்ளது என்பர்.[144]

---

144 குறள். 27

அதாவது ஐம்புலன்களின் தோற்றவாயிலை உணர்ந்தவனே உலகத்தின் உண்மை இயல்பை உணர்ந்தவன் ஆவான். உலகம் ஐம்பூதத்தின் அமைப்பு. ஐம்பூதத்தின் மூலங்களையும், அவற்றின் மூலகாரணத்தையும் அறிந்தவர் உலக அமைப்பின் உண்மையை உணர்ந்தவராவர். அந்த மூலகாரணம் யாது? வள்ளுவர், அதனை இறைவன் (ஆதிபகவன்) எனக் கூறுகிறார். [145]

ஆன்மா

அரிஸ்டாட்டில் ஆன்மாவைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களும் இங்குக் குறிப்பிடத்தக்கன. வடிவந்தான் முடிவு என்றால், உடலே ஆன்மாவாகிவிடும். அரிஸ்டாட்டில் 'ஆன்மா' (Anima)[146] வேறு; 'மனம்' (Mind)[147] வேறு என்பதை உடன்படுகிறார். மனத்திற்கு அப்பாற்பட்டது ஆன்மா. வள்ளுவர் 'உயிர்' எனும் சொல்லாலேயே ஆன்மாவைச் சுட்டுகிறார். ஆன்மாவின் இலக்கணத்தை இருவருமே வரையறுத்துக் கூறவில்லை. ஆன்மாவில் 'மனம்' அடங்கிவிடும் என்பதை இவ்விரு அறிஞர்களும் உடன்படுகின்றனர்.

திருக்குறளில் உள்ள அன்புடைமை (8), நிலையாமை (34) துறவு (35), மெய்யுணர்தல் (36), ஊழ் (38), தவம் (27), நீத்தார் பெருமை (3), கடவுள் வாழ்த்து (I) எனும் அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தொகைவகைப் படுத்துவோமானால், 'ஐம்பூதங்களால் ஆகியது உடல்; அதனுள் அறிவுமயமாகத் திகழ்வது ஆன்மா; மும்மலங்களால் மாசு அடைவது ஆன்மா. கடவுள் என்பது கலப்பற்ற செம்பொருள். அதுவே மெய்ப் பொருள். அந்த மெய்ப்பொருளுக்குத் தோற்றமும் அழிவும், மாற்றமும், திரிபும் கிடையாது. எல்லாப் பொருளுக்கும் மூலகாரணமாக விளங்குவது அது' என்பது முழு முதற்பொருளைப் பற்றிய வள்ளுவரின் கொள்கையாகும்.

---

145 குறள். 1

146 ஆங்கிலத்தில் 'Soul' என்பர்

147 குறள், 78, 80

அடிசேர்தல்

இதற்கு மேல், அந்த மெய்ப்பொருளை, உயர்திணை, ஆண்பால், ஒருமை நிலையில் இறைவனாக வள்ளுவர் உருவகித்துக் காட்டுகிறார். "ஆன்மாக்கள் 'காமம் வெகுளி மயக்கம்' அற்று, மாசறு காட்சியைப் பெறுமானால், 'பற்றற்றான் பற்றினைப் பற்றி, முழு முதற் கடவுளுடைய திருவடிகளை அடைக்கலமாக அடைந்து பேரா இயற்கைப் பெருவாழ்வினை எய்தி இன்புறும்" என்பது திருவள்ளுவரின் கடவுள் கொள்கையாகும். இதில் சித்தாந்த நெறியின் மூலத்தை அடிசேர்தலைக் காணுகிறோம்.

கலத்தல்

ஐந்து பூதங்களால் ஆகிய உடல் எனும் வடிவத்திற்குள், அறிவுமயமாக விளங்குவது ஆன்மா. அந்த ஆன்மா, பரமான்மாவோடு கலந்துவிடும் எனும் முடிவிற்கு அரிஸ்டாட்டில் வருவதைப் போலத் தோன்றுகிறது. 'ஆன்மாவிற்குத் தனிப்பட்ட இயல்புகள் இல்லை, ஆன்மகுணங்களை ஆராய்ந்து கொண்டே போனால், பேரின்பமயமாய் நிற்கின்ற இறைவனிடம் ஆன்மா கலந்துவிடும் எனும் கருத்தே அரிஸ்டாட்டிலின் மெய்ப்பொருள் ஆய்வின் முடிவாகத் தோன்றுகிறது[148] எனும் ரசலின் உய்த்துணர்வு இங்குக் கருதத்தக்கது. இதனால், அரிஸ்டாட்டிலிடம் 'அத்துவித நோக்கு' அமைந்துள்ளமை புலனாகிறது.

6.கவிதை இயல் கோட்பாடு

படைப்பாளி

திருவள்ளுவரை நினைக்கின்ற பொழுது, 'படைப்பாளி' எனும் உணர்வே, நம் மனத்தில் மேலோங்கி நிற்கிறது. அரிஸ்டாட்டிலை மாபெரும் 'படிப்பாளி'யாகவே உலகம் போற்றி வருகிறது. இவ்வாறுகூறுவதனால்,திருவள்ளுவரை 'மாபெரும்

---

148 Bertrand Russell, A History of Western Philo– sophy, p. 172

சிந்தனையாளர் அல்லர், பரந்துபட்ட நூலறிவோடு, நுண்ணறிவு படைத்தவர் அல்லர்' எனக் கூறுவதாக யாரும் தவறான முடிவிற்கு வந்துவிட வேண்டாமென வேண்டுகின்றேன். திருவள்ளுவர் இயற்றியுள்ள 'திருக்குறள்' சிறப்புமிக்கதொரு நீதி இலக்கியமாகும்[149] திருக்குறளின் மூன்றாவது பகுதியான 'காமத்துப்பால்', நாடகப் பாங்குமிக்கதொரு காதற் காப்பியமாகும்,[150] இதே சமயத்தில், திருவள்ளுவரை அறவியல் அறிஞராக, மெய்ப்பொருள் கண்ட வித்தகராக, அரசியல் அறிஞராக, ஆட்சிக்கலை வல்லுநராக, சமுதாய உணர்வுமிக்கச் சான்றோராகக் காணமுடிகிறது. ஆயினும் 'திருக்குறளை'ப் படித்து முடிக்கும் பொழுது, 'திருவள்ளுவர் ஒரு படைப்பாளி எனும் உணர்வு மேலோங்கி நிற்கிறது. இதற்கு அடுத்த நிலையிலேயே, அவரை மாட்சிமிகு அறவோராக, சிறப்புமிகு அரசியல் சிந்தனையாளராக நினைக்கத் தோன்றுகிறது.

படிப்பாளி

கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாட்டிலை நினைக்கின்ற பொழுது, 'பண்டை உலகின் ஒப்பாருமிக்காரும் இல்லாப் பேரறிஞர்" எனும் எண்ணமே எழுகின்றது. அரிஸ்டாட்டில் இயற்றியதாகக் கூறப்படும் 'சிதைந்த' கவிதைகள் சில கிடைத்து இருப்பது உண்மை. ஆயினும், இவருடைய பல்வேறு நூல்களின் பெயர்களைப்பார்த்தாலே, 'இவர் ஒரு சிறப்புமிகு சிந்தனையாளர்; அறவியல் அறிஞர்; அரசியல் மேதை; மாபெரும் தத்துவஞானி; தெளிவுமிக்கத் திறனாய்வாளர்' எனும் உண்மை எளிதிற் புலனாகும்.

---

149 இந்நூலாசிரியரின், 'திருக்குறள் நீதி இலக்கியம்'எனும் நூலினைக் (பக்.108–115) காண்க.

150 ஷெ. 'திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும்' எனும் நூலினைக் (பக். 137–190) காண்க.

சிந்தனைப் போக்கு

திருவள்ளுவரின் சிந்தனைப் போக்கு அகவுணர்வை (Intuition)யே பெரிதும் அடிப்படையாகக் கொண்டுள்ளதாகக் தோன்றுகிறது. மற்றும் தொகுப்புவழி அளவை முறையில், எதையும் காரணகாரியத் தொடர்புபடுத்தி, அலசி ஆராயும் முறையினை வள்ளுவர் பின்பற்றியுள்ளமை தெரிய வருகிறது. நடைமுறைக்கு உகந்த அறவொழுக்கங்களைக் கூறுவதில் பயன்வழிக் கொள்கையினராகத் தோன்றினாலும், உலகிற்குப் பொதுமையான அறங்களை வகுத்துரைக்கும் இடங்களில், அகநிலைக் கருத்தியல்வாதியாக (Subjective Idealist)த் திருவள்ளுவர் காட்சி அளிக்கின்றார்.

அரிஸ்டாட்டில் கூர்ந்து நோக்கி, ஆய்வு நடத்தி, ஒரு முடிவிற்கு வரமுயலும் அறிவியல் அறிஞராக விளங்குகிறார்; பகுப்பாய்வு முறையில் எதையும் ஆராய்ந்து, உண்மை காணும் நோக்குடையவராக காணப்படுகிறார். மேலும், அனுபவ வழிப்பட்ட (Emirpical) பயன் வழிக் கொள்கையாளராகவே தம் நூல்களின் மூலம் இவர் வெளிப்படுகிறார்.

எனவே, ஆராய்ச்சியாளராகிய அரிஸ்டாட்டில், திறனாய் வாளராகத் தோன்றுவதில் வியப்பு இல்லை! 'படைப்பாளியாக மலர்ச்சியுற இயலாதவர்களே ஆராய்ச்சியாளர்களாகச் சிறப்புறுகின்றனர்' எனும் திறனாய்வாளரின் நம்பிக்கைக்கு அரிஸ்டாட்டில் நல்லதோர் எடுத்துக் காட்டாவார்.

கவிதை

கவிதையைப் பற்றி அரிஸ்டாட்டில் செய்துள்ள ஆராய்ச்சி சிறப்புமிக்கதாகும். பிளேட்டோ, கவிஞர்கரைத் தம் 'இலட்சியக் குடியரசில்' இருந்து அடித்து வெளியேற்றிவிட்டார். கவிஞர் அல்லாத ஒருவர் கவிதையைப் போற்றி ஒரு நூலினை உரை நடையில் எழுதினால், அதனை உடன் இருந்து நட்புணர்வோடு கேட்டு மகிழ இயலும் ஆனால், அரசியல் குழுக்களுக்கும்

மக்களுக்கும் மகிழ்ச்சிஊட்டுவதோடு, வேறு எத்தகைய பயனையும் கவிதை அளிப்பது இல்லை[151] எனும் கருத்தையும் பிளேட்டோ தெரிவித்துள்ளார்.

இவற்றால், கவிஞனும், கவிதையும் பிளேட்டோவால் வெறுத்து ஒதுக்கப்பட்டமை வெளிப்படையாகிறது. இதற்கும் காரணமாக அமைவது அவருடைய மெய்ப்பொருள் நாட்டத்தின் அடிப்படைப் போக்கேயாகும் 'உலகம் ஒரு நிழல்; அந்த நிழலுக்கு ஒரு நிழலாய்த் திகழ்கிறது கவிஞனுடைய கருத்து. அந்தக் கருத்தின் நிழலாய் விளங்குகிறது அவன் படைப்பு. இதனால், அவன் படைப்பில் யாதோர் உண்மையும் இல்லை![152] எனும் முறையில் கவிஞரைக் கடிந்து ஒதுக்க பிளேட்டோ முயன்றுள்ளார்.

அரிஸ்டாட்டிலோ உலகத்தை ஒரு நிழலாகக் கருத வில்லை. படைப்பாளிகள் வழங்கும் 'படைப்புகளில் மிகவும் சிறந்தது கவிதை' என்று இவர் போற்றுகின்றார். கவிதையின் தோற்றத்தைப்பற்றி இவர் ஆராய்ந்துள்ளார். ஒன்றைப்பார்த்து ஒன்றைச் செய்யும் 'போன்மை' (Imitation) ஆற்றல் மனிதன் இடம், இயல்பாகவே இருக்கிறது. இவ்வாறு படைக்கப்படும் பொருள்களைக் கண்டும், நுகர்ந்தும் மகிழ்கின்ற இயல்பும் மனிதனிடம் வேரூன்றி நிற்கிறது. 'ஒன்றைப்பார்த்து ஒன்றைச் செய்தல்' என்பது அப்படியே காணுகின்ற ஒன்றைப் புகைப்படம் பிடிப்பது அன்று. கவிஞன் உலகத்தை ஒரு சிறந்த கற்பனைக் கண்ணோடு பார்க்கின்றான். அவன் உள்ளத்தில் ஆழ்ந்த கருத்து ஒன்று மின்னல்போல் தோன்றி மறைகிறது; அதற்கு ஏற்றதொரு வடிவத்தை அவன் கொடுக்கிறான். இப்படி வடிவம் கொடுப்பதையே, அரிஸ்டாட்டில் 'போன்மை' யாகக் கருதுகிறார். அதாவது கவிஞன் வெளிப்படுத்தும் இயல்புகளைக் கொண்டு, நாம் அந்தக் கவிதையை நோக்கினால், கவிஞனுக்கு எத்தகைய அனுபவம் உண்டாயிற்றோ அத்தகையை அனுபவம் நமக்கும்

---

151 Plato, Republic, Bk. I.

152 அ. அ. மணவாளன்: அரிஸ்டாட்டிலின் கவிதை இயல், பக். 27–30.

உண்டாகும். இத்தகைய உணர்வு நம் உள்ளத்து எழுவதே போன்மையின் விளைவாகும்.

பெருங்காப்பியத்திற்கும் அவல நாடகத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அரிஸ்டாட்டில் சுட்டுகிறார். மற்றும் கதைப்பின்னல், பாத்திரப்படைப்பு, நடைநலம் போன்ற பலவற்றை இவர் விரித்துரைக்கிறார். கவிதை நியதி (Poetic Justice), கவிதையில் மெய்ம்மையும் நிகழ்வியல் பாங்கும். திறனாய்வு நெறி எனும் கருத்துக்கள் குறித்தும் அரிஸ்டாட்டில் பயன்வழிக் கோட்பாட்டு உணர்வோடு விளக்கியுள்ளார்.

கலையும் வாழ்வும்

இவருடைய 'கவிதை இயல் ' நூலினையும், 'பேச்சுக்கலை" நூலினையும் ஒருமுறை ஆழ்ந்து நோக்கினால், 'கலைக்காகவே கலை' (கவிதைக்காகவே கவிதை) எனும் கொள்கை இவருக்கு உடன்பாடு இல்லை என்பது எளிதில் புலனாகும். 'கலை ஓர் இன்பத்தை அளிப்பதன் மூலமாக, அறவுரையும் கூறவேண்டும்' எனும் கருத்து உடையவராக இவர் தோன்றுகிறார்.'கதைப் பின்னலும் கதைப் பாத்திரங்களும்' பற்றி இவர் தெரிவித்துள்ள கருத்துக்களில் இருந்து, 'இன்புறுத்துவதும் அறிவுறுத்துவதும் ஒன்றாக இணைந்து இயங்குவதே இலக்கியம்' என்பதை உணரலாம்.

திருவள்ளுவர் அறவியல் அடிப்படையில் திருக்குறளை இயற்றியுள்ளார். பொருளும் இன்பமும், அரசியலும் சமூக வியலும், காதல் இயலும் வாழ்வியலும் அறத்தின் ஆட்சிக்கு உட்பட்டு எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பதை நன்கு தெளிவுறுத்தியுள்ளார். எனவே, கவிதையைப் பற்றிய தம் கருத்துகளை எடுத்துரைப்பதற்கு, அவருடைய நூலில் வாய்ப்பு இல்லை. சில இடங்களில் குறிப்பாக இலக்கியம் பற்றிய செய்திகளை வள்ளுவர் உணர்த்தியுள்ளார்.

பாடல் என்பது பண்ணோடு இயைந்தது எனும் கருத்தினை வள்ளுவர் ஓரிடத்தில் தெரிவித்துள்ளார்.[153] 'நூல்' எனும் சொல்லைப் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.[154] ஆயினும் ஒரேவோர் இடத்தில் மட்டும், 'இலக்கியம்' எனும் பொருளில், இச்சொல் வழங்கப்பட்டுள்ளதைக் காணுகின்றோம்.[155] 'வாய்ச்சொல்' எனும் தொடரினால், ஒழுக்கம் உடைய சான்றோர்களின் அறவுரைகளையும், அவ்வறவுரைகளைக் கொண்ட இலக்கியத்தையும், வள்ளுவர் சுட்டுவதாகத் தோன்றுகின்றது[156] இங்கு *இலக்கியம் வாழ்க்கைக்காக' எனும் கருத்து வெளிப்படுகிறது.

படைப்பாளிகளாகிய புலவரை ஓரிடத்தில் வள்ளுவர் சுட்டுகிறார்.[157] "யாவரும் புலவரோடு கலந்து மகிழவும்,'எப்பொழுது அவர்களைக் காண்போம்?' என நினைந்து வருந்திப் பிரிவதுமே புலவருடைய தொழிலாகும்" என அவர் தெரிவிக்கிறார். இந்தப் பண்புகளைப் புலவர்களின் படைப்பாகிய இலக்கியத்திற்குரியதாக புலவர்களின் (பாட்டியற்றும்) தொழிலால் உண்டாகும் இலக்கியத்திற்குரிய இயல்புகளாகக் கொள்ளலாம். புலவர்களின் படைப்பாகிய "இலக்கியம் மகிழ்வூட்டும்; இன்புறுத்தும்; மீண்டும் எப்பொழுது இத்தகைய சிறப்புமிகு நூலைக்கற்று மகிழ இயலும்? என எண்ணி ஏங்க வைக்கும்" எனக் கூறலாம். இதனை

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (783)

எனும் குறட்பாவும் வேறு வகையாக எடுத்துரைப்பதால் தெளியலாம்.

---

153 குறள் 583
154 ஷ322, 373, 401, 533, 543, 581, 636, 683, 726, 981
155 ஷ 783
156 ஷ 97
157 ஷ 394

திறனாய்வு நெறி

திறனாய்வாளர் கடைப்பிடிக்க வேண்டிய சிறப்புமிகு நெறி முறையை.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் (504)

எனும் குறட்பா அறிவுறுத்துகிறது. இவற்றைத் தவிர, வேறெந்நூலும் திருவள்ளுவரின் இலக்கியக் கொள்கையாகச் சுட்டிக் காட்ட இயலவில்லை.

திருவள்ளுவரின் சிறப்பு இயல்புகள்

திருவள்ளுவர் சிந்தனைச் சிற்பியாகத் தோன்றினாலும், அடிப்படையில் ஒரு கவிஞராகவே காட்சி அளிக்கிறார்; அறநெறியில் மக்கள் – உலக மக்கள் – தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுவதற்கு வழிகாட்டிய சான்றோராவர்; அறத்தொடு ஆன்மிகக் கருத்துக்களைக் குழைத்துக் கொடுத்த அறவோராவார். மக்களாகப் பிறந்தவருக்கு இடையே, பிறப்பாலோ, செய்கின்ற தொழிலாலோ வேறுபாடு பாராட்டுவதை வள்ளுவர் வன்மையாகக் கண்டித்துள்ளார். 'ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை சாதியில்' என்பது அவருடைய தலையாய கொள்கையாகும்.

அரசுக்காகவோ, நாட்டுக்காகவோ மனிதன் வாழவில்லை. மனிதனுடைய நல்வாழ்வுக்கு உதவி செய்வதற்காகவே நாடு, அரசு, சமுதாயம் போன்ற அமைப்புகள் தோன்றியுள்ளன என்னும் முனைப்பான எண்ணம் உடையவர் திருவள்ளுவர்.

பணிவுடைமை, பயன்கருதாது உதவும் அறச்செயல். குற்றம் செய்தோரை மன்னித்தல், அவர்களுக்கு நன்மை செய்தல் திருவள்ளுவரின் சிந்தனையில் காணப்பெறும் சிறப்பு: இயல்புகளாகும். கணவன் மனைவி, நண்பர், அரசன் குடிமக்கள் ஆகியோர் இடையே 'தியாக உணர்வு' இடம் பெற்றால்தான். ஒரு சமுதாயம் சிறப்புற்று விளங்க இயலும் என்பது வள்ளுவரின் துணிவாகும்.

திருவள்ளுவர் காட்டும் அறம், வழக்காற்று ஒழுக்கநெறி அன்று; மனச்சான்றினை மதித்துப் போற்றும் சிறப்புமிகு தனி மனித அறமாகும். அனைத்து உலக மனிதனையும், மனித குல சகோதரத்துவத்தையும் போற்றிப் பாடிய பாவலனாகத் திருவள்ளுவர் விளங்குகிறார். மனித நல நாட்டமே வள்ளுவரின் குறிக்கோளாகும்.

பல வகையான துன்பத்தில் சிக்கி, அல்லற்பட்டு, ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கும் மனிதனுக்கு, 'இந்த வழியே சென்றால் நல்லதோர் எதிர்காலம் – ஒளிமயமான எதிர்காலம் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது' எனும் நம்பிக்கையை ஊட்டுகிறார் திருவள்ளுவர்; கண்ணீரைத் துடைத்துக் கடமையை ஆர்வத்தோடு புரியுமாறு தூண்டுகிறார் திருவள்ளுவர்! 'வாழ்க்கை வாழ்வதற்கே! வளமாகவும், நலமாகவும், சிறப்பாகவும் வாழ்வதற்கே!' எனும் வாழ்க்கைத் தத்துவத்தைத் திருவள்ளுவர் அறிவுறுத்துகிறார்!

உதவிய நூல்கள்

தமிழ்

1. திருக்குறள் உரைவளம் 3 தொகுதிகள், தருமபுர ஆதீனம், 1950–52
2. அரிஸ்டாட்டிலின் அரசியல் (தமிழா.) ஸி. எஸ். சுப்பிரமணியன், நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை, 1974
3. அரிஸ்டாட்டிலின் கவிதை இயல் (தமிழா.) அ. அ.மணவாளன், திறனாய்வு நூலகம், சென்னை, 1976.

ENGLISH

1. The Nichomachean Ethics, (Tr.) W. D. Ross, Clarendon Press, Oxford, 1946.
2. Aristotle's Ethics (Ed. & Tr.) John Warrington, Dent, London, 1970.
3. Aristotle's Politics, (Tr.) B. Jowett, OUP, London, 1912.
4. Aristotle's Poetics (Tr.) Ingram Bywater, OUP, 1967.
5. Aristotle 'On the Art of Poetry' in Classical Lite– rary Criticism. (Tr.) T. S. Dorsch, Penguin, London, 1969.
6. Aristotle 1, II, Great Books of the Western World, Vol. 8. (Ed.) R. M. Hutchinss. Univ. of Chicago, 1971.
7. The Basic Works of Aristotle, (Ed.) Richard Me Keon, Random House. New York, 1959.
8. Great Dialogues of Plato, (Tr.) W. H. D. Rouse, Mentor Books, New York, 1956.
9. Plato's Republic. (Ed.) I. A. Richards, CUP. 1966.

10. Barker, Ernest, The Political Thought of Plato and Aristotle, Methuen, London, 1906.

11. Bambrough, R. (Ed.) New Essays on Plato and Aristotle, Routledge, London. 1967.

12. Guthrie, W. K. B. A History of Greek Philosophy, Vols. 3 & 4, CUP. 1971–73.

13. Jaegner, Werner, Aristotle: Fundamentals of the History of His Development, (Tr.) Richard Robinson, OUP, 1948.

14. Lloyd, G. E. R. Aristotle: The Growth and Structure of Thought, CUP, 1968.

15. Murry, Gilbert A History of Ancient Greek Literature. Heinemann, London, 1902.

16. Oakley, Hilda. D. Greek Ethical Thought, Dent., London. 1925.

17. Russell, Bertrand. A History of Western Philosophy. Simon & Schuster, New York, 1960.

18. Russell, Bertrand. Human Society in Ethics and Politics. George Allen, London, 1949.

19. Sabine. G. H. A History of Political Theory. CUP., New York, 1952.

20. Sinclair, T. A. A History of Classical Greek Literature, Collier Books, New York, 1962.

சான்றோர் கண்ட திருவள்ளுவர்

பிறர் உணர்த்திய பெருமை

தமிழகம் இன்று மறுமலர்ச்சியுற்று வருகிறது. தமிழருடைய எண்ணத்தில் எழுச்சியும், இதயத்தில் மலர்ச்சியும் உண்டாவற்கு உதவியஉந்துதல்சக்திகள்பல.அவற்றுள்தம்முடையமரபுவழிச் செல்வத்தின் மாட்சியை உணருமாறு தமிழரைத் தூண்டிய சக்தி முதன்மையானதாகும். ஐரோப்பிய அறிஞர்களின் நடுவுநிலை பிறழாத ஊக்குவிப்பே இத்தூண்டுதல் சக்தியாகும். "தங்களுடைய மொழியைப் பற்றியும் இலக்கிய மரபுவழியைப் பற்றியும் தமிழர்கள் வெட்கப்பட வேண்டியது இல்லை" என்பதை அவர்கள் அறிவுறுத்தினர். இதனால் ஒருவகை விழிப்புணர்ச்சி தமிழகத்தில் உண்டாயிற்று.

இந்நாட்டிற்குச் சமயப் பணியாற்ற வந்த ஐரோப்பியப் பாதிரிமார்கள், தமிழகத்தின் இலக்கியச் செல்வத்தையும், கலைக் கருவூலத்தையும் கண்டு வியந்தனர்; அவற்றின் அருமை பெருமைகளை உலகிற்கு உணர்த்தினர். இதனால், தமிழ் மக்கள் ஒருவகைப் புத்துணர்ச்சியையும் அகத்து எழுச்சியையும் பெற்றனர். முதன் முதல் இலக்கியத் துறையிலேயே மறுமலர்ச்சி இயக்கத்தின் அலைகள் மோதத் தொடங்கின.

அறிமுகம் செய்த அறவோர்

தங்கள் சமயப் பணிகளோடு, சிறப்புமிகு தமிழ் நூல்களைத் தங்கள் மொழிகளில், ஐரோப்பியப் பாதிரிமார்கள் மொழி பெயர்க்கத் தொடங்கினர். பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீரமாமுனிவர், திருக்குறளின் முதல் இருபால்களையும் இலத்தீன் மொழியில், மொழிபெயர்த்து ஐரோப்பிய நாடுகளுக்கு நம் தமிழ் மறையை அறிமுகப்படுத்தினார். இவருக்குப் பல நூற்றண்டுகளுக்கு முன்னரே, மேற்கு நாடுகளில் திருக்குறள் வழங்கியதாகக் கூறுவர்.

கி. பி. நான்காம் நூற்றாண்டில், திருக்குறளின் சிறப்புமிகு பகுதிகள் பல கிரேக்க மொழியில், மொழிபெயர்க்கப்பட்டிருந்ததாகக் கூறுவர்.[1] ஆனால், இதை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் இப்பொழுது கிடைக்கவில்லை. எனவே, இன்றைய நிலையில், வீரமாமுனிவரே முதன் முதல் (கிபி. 1730) மேற்கு நாடுகளில் திருக்குறளைத் தம் இலத்தீன் மொழிபெயர்ப்பு மூலம் அறிமுகப்படுத்தி வைத்தார் எனக் கருதலாம். கி.பி. 1747 அளவில், 'திருக்குறள் திரட்டு' ஒன்று பிரஞ்சு மொழியில் இருந்ததாக அறியப்படுகிறது.[2] ஆங்கிலத்தில், கிண்டர்சிலி என்பவரால் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் பாடல்கள் பலவற்றைக் கொண்ட நூல், கி.பி. 1794–ல் இங்கிலாந்தில் அறிவுக் கடல்' எனும் பெயரில் வெளியிடப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.[3] இம்மூன்று மொழிபெயர்ப்புகளுமே காலத்தால் மிகவும் முற்பட்டனவாகும். பதினெட்டாம் நூற்றாண்டில், ஐரோப்பிய மக்கள் திருக்குறளை அறிவதற்கு இவை உறுதுணையாக இருந்தன.

---

1 T. Lakshmana Pillai: 'Christ and Tiruvalluvar', Tamilian Antiquary, 1918, p. 57.

2 திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1974, பக். 80.

3 Xavier S. Thani Nayagam, Tamil Studies Abroad. P. 55.

வள்ளுவரைச் சான்றுகாட்டிய சான்றோர்

இலங்கையில், கோட்டே பகுதியைப் புவனேகபாகு எனும் அரசன் (கி.பி . 1521–1551) ஆண்ட காலத்தில், அவனுடைய அரசவையில், சமயவாதிகள் ' தத்தம் சமயமே உயர்ந்தது' என்பதை நிலை நாட்ட சொற்போரில் ஈடுபட்டனர். அந்த அவையில், பிரான்சிசிய சமயத் தொண்டரான பிரா ஜோம் டிவிலா கோந்தே (Fra Joam de Vila Conde) எனும் போர்ச்சு கீசியப் பாதிரியார் "நீங்கள் உங்களிடையே மறைத்து வைத்து இருக்கும் திருநூலை, மயிலாப்பூரைச்சேர்ந்த வாளுவரின் (வள்ளுவரின்) நூலைப் படித்துப் பாருங்கள்! என்னுடைய கருத்தின் உண்மையை அப்பொழுது உணர்வீர்கள்!"[4] என்று அறிவித்ததாகக் கூறுவர். இதனால் கி.பி. பதினாராம் நூற்றாண்டில் போச்சுகீசியப் பாதிரியார் திருக்குறளினைச் சிறப்புமிகு நூலாகப் போற்றியமை புலனாகின்றது.

இவ்வாறு, கடந்த நானூறு ஆண்டுகளாக வள்ளுவரின் சிறப்பினை, உலகம் உணர்ந்து போற்றி வருகிறது. முப்பது மொழிகளில் எண்பதுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகளையுடைய ஒரே தமிழ் இலக்கியம் திருக்குறள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இந்த நூலினைத் தமிழருடைய சிந்தனையின் பிழம்பாக உலகம் போற்றிவருகிறது. இந்நிலையில், உலகச் சான்றோர்கள், திருவள்ளுவரைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துகளையும், திருக்குறளைப் போற்றிப் பாராட்டுவதற்குரியகாரணங்களையும் முறையாக அறிவதற்கு முயன்றதன் பயனாக அரும்பியதே இச்சிந்தனை ஓட்டமாகும்.

உலகப் பேரிலக்கியம்

தத்தம் மொழிகளில் உள்ள இலக்கியங்களையே சிறப்புடையனவாகப் போற்றுவது மரபு. அவற்றுள்ளும், தங்கள்

---

4 K. K. Pillay: South India and Sri Lanka, Univ. of Madras, 1975; p. 142

இனப் பண்புகளையும், பண்பாட்டுச் சிறப்புகளையும் சிறப்பாக எடுத்துரைக்கும் இலக்கியங்களைத் தேசிய இலக்கியம்' எனப் பாராட்டுவது வழக்கம். நான்கு நூற்றாண்டுகளாக மேற்கு நாடுகளில் இவ்வழக்கம் இருந்து வருகிறது. நாட்டு விடுதலைக்காகப் போராடிய பொழுது, இந்தியர்களாகிய நாம் இராமாயணத்தையும், பாரதத்தையும் 'தேசிய இலக்கியம்' என்று போற்றத் தொடங்கினோம்; தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் உந்துதலால், திருக்குறளைத் தமிழருடைய 'தேசிய இலக்கியமாகக்' கடந்த ஐம்பது ஆண்டுகளாக நாம் போற்றிவருகிறோம்.

கெதே (Goethe) எனும் ஜெருமானியப் பெருங்கவிஞர், (கிபி. 1749 – 1832), கி.பி. 1827–ஆம் ஆண்டு, ஜனவரி, 31ஆம் நாள், தம்முடைய நண்பரான ஜெ. பி. எக்கர்மண் (J. p Eckermann) என்பவர் இடம், பின்வருமாறு கூறியுள்ள கருத்து, நம் சிந்தனையைக் கவருவதாகும்:

> தேசிய இலக்கியம் என்னும் தொடர் இப்பொழுது பொருளற்றுப் போய்விட்டது. உலக இலக்கியயுகம் பிறக்கத் தொடங்கிவிட்டது. அதன் வளர்ச்சியை விரைவுபடுத்த நாம் ஒவ்வொருவரும் முயலுவோமாக![5]

எனும் எண்ணம் பேராற்றல் பெற்று, அறிஞர்களுடைய உள்ளங்களை இயக்கத் தொடங்கிய நிலையிலேயே, மேற்கு நாடுகளின் அறிஞர் பெருமக்கள், திருக்குறளை உலகப் பேரிலக்கியமாகப் போற்றத் தொடங்கினர்.

கி. பி. 1848–ஆம் ஆண்டு, பிரஞ்சு நாட்டு நல்லறிஞர் எம். ஏரியல் (M. Ariel),

> திருக்குறள் தமிழ் இலக்கியத்துள் தலை சிறந்த படைப்பு: மனித இனத்தின் சிந்தனையில் முகிழ்த்த உயர்வும் தூய்மையும் வாய்ந்த இலக்கியப் பெட்டகம் அதனுடைய

---

5 Fritz Strich, Goethe and World Literature, Routledge Kegan Paul, London, 1945; p. 349

> ஆசிரியர் சாதி, சமய, இன வேறுபாடுகளையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், மனித இனம் முழுமைக்கும் பொருந்தக் கூடிய கட்டற்ற சிந்தையையும், பெருஞ் சிறப்பு வாய்ந்த அறங்களையும் அறிவுறுத்துவது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது"[6]

என்று குறிப்பிட்டுள்ளார்.

இவருக்குப் பிறகு, திருக்குறளை முழுமையாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, 1886 இல் டாக்டர் ஜி. யூ. போப்பு வெளியிட்டார். அந்நூலில், திருவள்ளுவரைப் போற்றிப்பாடும், ஆங்கிலக் கவிதையை அவர் அமைத்துள்ளார். அதில், "பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் குருவாகப் பேரறிஞர் திருவள்ளுர் விளங்குகிறார். உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் மாறுகின்றன; மறைகின்றன. ஆனால், அவருடைய புகழ் குன்றவில்லை; பெருகிக் கொண்டே போகிறது. அனைத்துலக மனிதனைப் பாடிய பாவலன் ஆயிற்றே வள்ளுவன்![7] எனப் பெருமிதத்தோடு அவர் கூறுகிறார். ஒருநாட்டைச் சேர்ந்த மக்களையோ, ஒரு காலத்தைச் சேர்ந்த மக்களையோ திருவள்ளுவர் பாடவில்லையாம்! 'உலகப்பனை'[8] அனைத்துலக மனிதனை, இவ்வுலகில் நேற்று வாழ்ந்த, இன்று வாழும், நாளைப் புதியதாக வரப்போகும் – மனிதனைப் பாடியுள்ள பெருமைக்கு உரியவர் திருவள்ளுவர் என்பது போப்பின் பாடலால் வெளிப்படுகிறது.

1925 அளவில் திருக்குறளின் ஜெருமானிய மொழி பெயர்ப்பைப் படித்து, வள்ளுரைப் புரிந்து கொண்டவர் ஆல்பர்ட் சுவைட்சர் எனும் ஜெருமானிய நாட்டுச் சான்றோராவார். 'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்.' எனும் நூலினை, 1935இல் அவர் ஜெகுமானிய மொழியில் வெளியிட்டுள்ளார்.

---

6 Journal of Asiatic Society. Calcutta, 1848, vel. VI, p. 172.

7 Rev. G. U. Pope, The 'Sacred Kurral,' Henry Frowde London, 1886; p. xvi

8 பாவேந்தர் பாரதிதாசனாரின் 'உலகப்பன் பாட்டினைக்' காண்க

அந்நூலில் வள்ளுவருடைய வாழ்வியல் தத்துவத்தையும், அறவியல் கொள்கையையும் கண்ணன், புத்தர், மனு போன்ற இந்தியச் சிந்தனையாளரின் கொள்கைகளோடு ஒப்பிட்டுக் காட்டி, திவருள்ளுவருடைய சிந்தனைப் போக்கின் சிறப்பைப் பின் வருமாறு அவர் நிலை நாட்டியுள்ளார்:

> 'ஒழுக்கமே மனிதனுடைய உயர்ந்த குறிக் கோளாக இருக்க வேண்டும்' என்பதை மிகுந்த உறுதிப்பாட்டோடு வள்ளுவர் அறிவிக்கிறார். 'ஒவ்வொருவரும் தனக்குத் தானே செய்துகொள்ள வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? என்பனவற்றை யெல்லாம் சிறந்த பண்பாட்டோடும், மதிநுட்பத்தோடும் வள்ளுவர் பேசுகிறார். உலக இலக்கியத்தில் இத்தகைய மாண்பு மிக்க மெய்யறிவு, வேறு எந்நூலிலும் இத்துணைச் சிறப்பாகப் பொலிவுறவில்லை[9]

சோவியத் ருஷியாவின் அறிஞர்களுடையகருத்தினையும் திருக்குறள் கவர்ந்துள்ளது. 1963 இல் பேராசிரியர் ஜே.ஜே. கிளசோவு (J.J. Glazov)ம், பேராசிரியர் ஏ. கிருஷ்ண மூர்த்தியும் இணைந்து, திருக்குறளின் ருஷிய மொழிபெயர்ப்பை வெளியிட்டனர். சைவ சித்தாந்தத்தில் வல்லுநரும், சோவியத் ருஷியாவின் மெய்ப் பொருள் இயல் அறிஞருமான டாக்டர் (Dr. Alexander M. Pyati. gorsky), இந்நூலிற்கு ஒரு முன்னுரை வழங்கிள்ளார். அதனுள்,

> திருவள்ளுவரின் குறள், இந்திய இலக்கியங்களில் மட்டுமன்றி, உலக இலக்கியங்களிலேயும் சிறந்தது எனக் கருதப்படுகிறது. இந்தக் கருத்து முற்றிலும் பொருத்தமானதேயாகும். ஏனெனில், குறளின் கலையழகு ஈடிணையற்றது ! அதைவிட முக்கியமானது, அந்நூலில் ஒளிரும் சிறப்புமிகு மனித இனத்தின் நலத்தை நாடும்

---

9 Albert Schweitzer, Indian Thought and Its Develop– ment, wilco, Bombay, 1960; P. 199.

கருத்துகளாகும். அவை எல்லா நாட்டுக்கும், எல்லா மக்களுக்கும் பயன்படத் தக்க விலை மதிப்பிடற்கரிய கருவூலமாக உள்ளன[10]

என்று திருக்குறளின் சிறப்பினை அவர் எடுத்துரைத்துள்ளார். இவற்றை எல்லாம் தொகுத்துக் காணுகின்றபொழுது,

வள்ளுவன் தன்னை உ லகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு!

என்று சுப்பிரமணிய பாரதியார் பாடியமை உண்மை; வெறும் புகிழ்ச்சி இல்லை என்பது உறுதியாகிறது.

வள்ளுவர் வரலாறு

வான்மறை தந்த வள்ளுவரின் வரலாற்றைத் தெளி' வாக நாம் அறிய இயலவில்லை. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தமிழர்கள் ஆட்சி உரிமையை இழந்தனர். அதனோடு சிந்திக்கும் பழக்கத்தையும் மறந்தனர். இதனால் பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுத் தமிழர்கள் இடையே, திருவள்ளுவரைப் பற்றிப் பலவகையான புராணக் கதைகள் வழங்கி வரலாயிற்று. அக்கதைகளுக்கு முழுமையான வடிவம் கொடுக்கும் பணியில் 'கபிலர் அகவல்' எனும் கற்பனையான நூலினை, யாரோ படைத்து விட்டனர். அந்நூலும் மக்களைச் சிந்திக்க வொட்டாமல், 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகளைப்* பேசிப்பேசி. அவற்றையே உண்மையென நம்புமாறு செய்து விட்டது. இவற்றோடு மரபுவழிச் செய்திகளையும் சேர்த்து அறிவிற்குப் பொருந்தாத, ஆராய்ச்சிக்கு உதவாத முறையில் 'வள்ளுவரின் வரலாற்றை'ச் சிலர், மக்களிடையே நன்கு பரப்பிவிட்டிருந்தனர். சிந்திக்கும் திறமை அற்றிருந்த மக்களும், அவற்றையெல்லாம் உண்மை யென்று நம்பினர்.

இத்தகைய காலகட்டத்தில், தமிழகத்தில் சமயப் பணி

---

10 Glazov, J.J. & Krishnamurti, A; Tirukkural, Moscow. 1963, preface.

புரிய ஐரோப்பியப் பாதிரிமார்கள் வந்தனர்; நாட்டு மக்கள் இடையே, திருவள்ளுவரைப் பற்றி வழங்கிவந்த கதைகளை எல்லாம் உண்மையென்று கருதினர்; வள்ளுவர் எனும் பெயர்,' தாழ்த்தப்பட்ட மக்களின் குருவிற்குரிய பெயர் என்றே நம்பினர். வள்ளுவச் சாதியினர் அக்காலத்தில் அரிசன மக்களின் குருவாகவும், சோதிடக் கலைஞர்களாகவும் இருந்து வந்ததை அவர்கள் நேரில் கண்டனர். எனவே, இவ்வாறே, திருவள்ளுவரும் இருந்திருக்க வேண்டும் என்னும் முடிவிற்கு அவர்கள் வந்தனர்.' அரசரின் உள்படு கருமத் தலைவருக்குரிய பதவிப்பெயரே வள்ளுவன் ' என்பது அவர்கள் அறியாத ஒன்று. எனவே, வள்ளுவரை த் 'தெய்விகப் பறையன்' என்றே அவர்கள் சுட்டியுள்ளனர்.[11] இதனை ஜி.யூ.போப்பு போன்றவர்களும் நம்பியுள்ளனர்.

திருவள்ளுவரின் பெற்றோரைப் பற்றிய ஆதி, பகவன் கதையே, இவர்களை இவ்வாறு எண்ணுமாறு செய்துள்ளது. வள்ளுவர் நெசவுத் தொழில் செய்து வாழ்ந்தார் என்பதும் மரபுவழிச் செய்தியின் பாற்பட்டதேயாகும்.

வள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்தவர் என்பதை அவர்கள் எல்லாரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இதற்குமேல், சாந் தோமில் கிறித்துவ சமயப் பணிபுரிந்த புனிதத் தாமசிடம் (St. Thomas) நெருங்கிப் பழகியும், ஞான உபதேசம் பெற்றும், இயேசு பெருமானின் கொள்கைகளை நன்கு உணர்ந்தும் இருந்ததினாலேயே, திருவள்ளுவர் இத்தகைய சிறப்புமிகு அற நூலை இயற்ற முடிந்தது என்றும் அவர்கள் கூறுகின்றனர். தாமசுடைய தொடர்பு இல்லாமல் இருந்தால், இத்தகைய அருளற நூலைத் திருவள்ளுவரால் இயற்றி இருக்க இயலாது எனும் கருத்தினைக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் அவர் களுள் பெரும்பாலோர் தெரிவித்துள்ளனர்.[12]

---

11 Edward Jewitt Robinson, Tamil Wisdom, Kazhagam, Madras, 1957; P. xvii
Louis Jacolliot, Le Pariah dans I humanite, Paris 1876.
Robert Coldwell, A Comparative Grammar of the Dravidian Languages, Univ. of Ma–dras, P. 1956

12 Edward Jewitt Robinson, op. cit; P. xviii

இதனை, அக்காலத்திலேயே ஆங்கிலேய அறிஞர் சிலர் மறுத்துள்ளனர்.'திராவிடரின் சிந்தனையில் இத்தகைய சீரிய கருத்துகள் தோன்ற இயலாது எனக் கூறுவது அறிவுடைமை யாகாது. தமிழ்ப் புலவர் ஒருவரைக் கிறித்தவராக்கிக் காட்டும் நேர்மையற்ற செயலை நான் எதிர்க்கிறேன்[13] என்று சார்லஸ் இ.கோவர் குறிப்பிட்டுள்ளமை இங்குநினைவு கூர்தற்கு உரியதாகும். இவ்வாறே ரெவரண்ட் ட்ரூ (H. Drew) வும் கண்டித்துள்ளார்.

திருவள்ளுவருடைய காலம் கி. பி. முதல் அல்லது இரண் டாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பதை, இராபர்ட்கால்டு வெலும், ஜி.யூ. போப்பும் தவிர, மற்றவர்கள் எல்லாரும் உடன்படுகின்றனர். ஆனால், ஜி யூ. போப்பும், டாக்டர் கால்டுவெலும் கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கும் பத்தாம் நூற் றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் திருக்குறள்[14] தோன்றி இருக்கவேண்டும் என்று கருதுகின்றனர்.

இத்தகைய கருத்துகளை எல்லாம், மறைமலையடிகளும், நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரும் நன்கு ஆராய்ந்து, அவற்றின், பொருத்தமற்றப் போக்குகளை, முறையே, 'திருக் குறள் ஆராய்ச்சி, 'திருவள்ளுவர்' எனும் நூல்களின் மூலம் உலகிற்கு உணர்த்தியுள்ளனர்.[15] திருவள்ளுவரின் காலத் தையும் கி.மு.முதல் நூற்றாண்டு எனவும், கி. மு. முதல் நூற் றாண்டிற்கும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டது எனவும் இவர்கள் நிறுவியுள்ளனர்.

G. U. Pope, The 'Sacred' Kurral, P. iii.

13 Charles E. Gover, The Folk Songs of Southern India, Kazhagam, Madras, 1959; pp xvi–vvii.

14 G. U. Pope, op. cit, p. iv.; R. Caldwell, op. cit; 2nd edn; Appx. No–2.

15 மறைமலையடிகள், திருக்குறள் ஆராய்ச்சி, பாரி, சென்னை, 1957. ச. சோமசுந்தரபாரதியார், திருவள்ளுவர், நாவலர் புத்தக நிலையம், மதுரை, 1971.

'திருவள்ளுவர் யார் என்பது தெரியவில்லை. மயிலாப்பூரைச் சேர்ந்த ஞானி எனக்குறிப்பதே பொருந்தும்' எனும் கருத்தினை விண்ட்டர் நீட்சு எனும் ஜெருமானிய அறிஞர் மறுக்கின்றார்.'தம் தாய்நாட்டு எல்லைகளுக்கு அப்பால், நெடுங்காலமாக நன்கு அறியப்பட்டவராக உலகப்புகழ் பெற்றுள்ள திருவள்ளுவரை, இவவாறு சுட்டக் கூடாது"[16] என்று அவர் தெரிவித்துள்ளார்.

இவையாவும் திருவள்ளுவரின் பெயர், குடி, வாழ்ந்த பகுதி, செய்த தொழில், வாழ்ந்த காலம் போன்றவற்றைப் பற்றிச் சென்ற சில நூற்றாண்டுகளில் தவறான கருத்துகள் நிலவியதையும், அவற்றிற்கு மாறாகத் தெளிவுமிக்க, நடுவுநிலை பிறழாத அறிஞர்கள் அறிவுறுத்தியுள்ள முடிவுகளையும் நம் சிந்தனைக்கு விட்டுவிடுவதைக் காணலாம்.

தொகை நூல் அன்று!

திருக்குறள் 'ஒரு தொகை நூல்' எனும் கருத்தினை எம். யூலே வின்சென் (M. Jules Vinson) என்பவர் தெரிவித்துள்ளார். பரந்துபட்ட பல்வேறு துறைகளுக்குரிய விழுமிய கருத்துகளை ஒரு புலவரால் எடுத்துரைக்க இயலுமா என இவர் ஐயுறுகிறார். மற்றும்,'நூலின் அமைப்பில்காமத்துப்பால், மற்ற இருபால்களின் அமைப்பில் இருந்து வேறுபட்டுள்ளமைக்குக் காரணம் யாது?' என இவர் வினவுகிறார். இக்காரணங்களால், நாலடியாரைப் போல, பல முனிவர்கள் ஒரு காலத்தில் இயற்றிய பாடல்களை, பிற்காலத்தில் யாரோ ஒருவர் தொகுத்து இருக்கலாம் என இவர் துணிகிறார்[17]

இவருடைய கருத்து, பொருத்தம் அற்றது என்பதை டாக்டர் ஜி.யூ. போப்பு முதலிய அறிஞர்கள் எடுத்துரைத்துள்ளனர்.''தம்முடைய நூலைத் தாம் திட்டமிட்ட

16 M. Winternitz, A History of Indian Literature, Univ. of Calcutta, 1963, Vol. ii; p. 128.

17 M. Jules Vinson, Me' Langes Orientaux Paris, Leroux, Sep. 1883, p. 12

வகையில் வள்ளுவர் அமைக்காமல் இருக்கலாம்[18] ஆனால், திருக்குறள் ஒரு தொகைநூல் அன்று என்று உறுதியாகக் கூறலாம். விரிவாகவும், செம்மையாகவும் ஒரேஆசிரியரால் இயற்றப்பட்டநூல்திருக்குறள் என்பதில்சிறிதும்ஐயம்இல்லை! மூன்றாவது பாலாகிய காமத்துப்பாலின் நோக்கும் போக்கும், மற்ற இருபால்களில் இருந்து வேறுபட்டு இருக்கலாம். ஆனால் அங்கும் அறம்பாட வந்த அறவோராகிய திருவள்ளுவரின் முத்திரையைக் காணுகின்றோம்"[19] என்பது போப்பு அவர்கள் கூறும் அமைதியாகும்.

காமத்துப்பால் வெறுக்கத் தக்கதா?

பண்டைத் தமிழரின் அகப்பொருள் மரபின் மாட்சியைப் புரிந்து கொள்ளத்தக்க வாய்ப்பு வசதிகள், சென்ற நூற்றாண்டின் இடைப் பகுதியிலோ, அதற்கு முன்போ தமிழறிஞர்களுக்குக் கிடைக்கவில்லை. சங்கத் தமிழ் நூல்கள் யாவுமே,சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி முதல்தான், ஓலைச்சுவடிகளில் இருந்து நூல்களாக அச்சிடப் பெற்றன.'திராவிட மொழிகளின் ஒப்பு இலக்கணத்தின்' ஆசிரியரான கால்டுவெலுக்கு (1856) பழைய தமிழ் இலக்கியங்களுள் திருக்குறளைத் தவிர, வேறொன்றும்தெரியாது.எனவே,அக்காலத்தியஐரோப்பியர்கள் 'அகப் பொருள் இலக்கியங்களை' அறியாதவர்களாவர்.

இதனால்தான், திருக்குறளின் மூன்றாவது பாலாகிய காமத்துப்பாலைக் கண்டவுடனே, அவர்கள் மருட்சி அடைந்துள்ளனர். இதனைச் சார்லஸ் இ. கோவர், '' கிறித்துவ உடையை அணிவதற்கு ஏற்றவகையில் மூன்றாவது (காமத்துப்) பால் அமையவில்லை"[20] என்று நகைச்சுவையுடன் மொழிந்துள்ளார்.

---

18 வீடுபேற்றினைக் கூறாமையால், போப்பு இவ்வாறு கருதுகிறார்.

19 G. U. Pope, op. cit. p. iv.

20 Charles E. Gover, op. cit. p. 211.

ஆங்கிலத்தில் திருக்குறளை மொழி பெயர்த்தவர்களுள் திருத்தந்தை ட்ரூ (Rev W. H. Drew)வும் ஒருவராவர். அவர் "கமத்துப்பாலை மொழி பெயர்த்தால், மொழி பெயர்ப்பவரைப் பற்றி உலகம் தவறாக நினைக்கும்; பழிக்கும்"[21] என்று அஞ்சினார். காமம் ' எனும் சொல்லைக் கண்டு, அதனைக் 'காமசாத்திரம்' என்று தவறாகப் புரிந்து கொண்டமையால் உண்டான குழப்பமாகும். அருவருக்கத் தக்க நிலையில் காமத்துப்பால் காணப்படவில்லை என்பதை மேற்கு நாட்டு மக்களுக்குப் போப்பு போன்றவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.[22]

மெய்யுணர்வுக் காதல் நெறி

காமத்துப்பாலில் பேசப்படுவது மானிடக் காதல் அன்று! ஆன்மாவாகிய தலைவி, அனைத்து ஆன்மாக்களுக்கும் தலைவனாக உள்ள இறைவனை அடையத் துடிப்பதையே, திருவள்ளுவர் உருவகமாக்கியுள்ளார் எனக் கூறும் கருத்து, சென்ற நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்றது. சைவ, வைணவ சமயங்களில் மானிடக் காதலை, தெய்விகக் காதலாக மாற்றி, இத்தகைய எண்ணப் போக்கினை வளர்த்து வந்துள்ளதைக் காணுகின்றோம். பண்டைத் திருக்குறள் உரையாசிரியர்கள் யாரும். திருக்குறள் காமத்துப்பாலிற்கு இத்தகைய நோக்கில் விளக்கம் கொடுக்கவில்லை,

கிறித்துவ சமயத்தில் இத்தகைய மரபு ஒன்று உண்டு. அதனை மணமகள் மெய்யுணர்வுக் காதல் நெறி ' (Bridal Mysticism) என்பர். திருக்குறளை அறிந்த ஐரோப்பியப் பாதிரிமார்களிடையே, இத்தகைய எண்ணம் எழலாயிற்று. பின்னர், இந்தியப் பாதிரிமார்களும் இந்த நோக்கத்தோடு திருக்குறளை அணுகலாயினர்.[23] வீரமாமுனிவர், கார்ல் கிரால்

---

21 W. H. Drew, The Cural of Tiruvalluvar, Madras, 1840, p. V.

22 G. U. Pope, op. cit. p. xiii.

23 Dr. R. Arulappa, God: the Bridegroom, Tirukkural Inbattuppal commentary, Meypporul pathippagam, Madras, 1976

(Karl– Graul), டாக்டர் ஜி. யூ. போப்பு முதலியோர் இக்கருத்து உடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

எனினும், பாதிரிமார்களாகப் பணிபுரியாத மற்ற ஐரோப்பிய அறிஞர்கள், இத்தகைய விளக்கத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்." காமத்துப்பாலில் வரும் 250 குறள்களில் உலகநிலைக் காதல் (வாழ்க்கை நிலைவேறு) போற்றப் பெறுகிறது. இவை கண்ணை உறுத்தியதால்,' இறைவன் மீது ஆன்மா கொள்ளும் காதல் ' என இவற்றிற்கு உட்பொருள் கூற முன்வந்தனர்[24] என்பது சுவைட்சரின் கருத்தாகும்.

அறிஞர்களைக் கவர்ந்த அருங்குறள் மணிகள்

திருக்குறளின் போதனைகள் பல, புத்துலகச் சிந்தனைப் போக்கு உடையனாக உள்ளன. அதனைக் கற்ற உலகச் சான்றோர்கள் பலர், சிறப்பாக அதனுடைய குறட்பாக்கள் சிலவற்றில் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்துள்ளனர்.

ஜெருமானிய அறிஞர் டாக்டர் கால் கிரால் என்பவரிடம் .
இருநோக்கு இவள் உண்க ண்உள்ளது; ஒருநோக்கு
நோய்நோக்கு;ஒன்று அந்நோய் மருந்து (1091)

எனும் திருக்குறளை ஆங்கிலத்தில் யாரோ எடுத்து உரைத்த பொழுது, அதைக் கேட்டு, இக்குறளின் பொருள் ஆழத்திலும், கலையழகிலும் தம் உள்ளத்தை இவர் பறிகொடுத்து விட்டார். பிறகு, தொடர்ந்து இவர் திருக்குறளைப் படித்து வந்தார். இதன் பயனாக, 1854இல் ஜெருமானிய மொழியிலும் 1856இல் இலத்தீன் மொழியிலும் டாக்டர் கிரால் திருக்குறளை மொழி பெயர்த்து ஐரோப்பியர் இடையே வள்ளுவத்தைப் பரப்பும் அரும் பணியைச் செய்துள்ளார்.[25]

---

24 Albert Schweitzer, op. cit: p. 197.

25 திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1974, . 80–81.

திருவள்ளுவரின் நகைச்சுவை உணர்வு கோபன்ஹவர்[26] (A. Scophenhauer) எனும் மற்றொரு ஜெருமானிய அறிஞரைக் கவர்ந்து உள்ளதைக் காணுகின்றோம்.

மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல் (1071)

இக்குறட்பாவில், 'கயவர்கள் யார்? அவர்களும் மனிதர்களைப் போன்றவர்களே' என்று வள்ளுவர் கயவர்களை எள்ளி நகையாடுகிறார். 'வடிவத்தால் மனிதர்களே ஒழிய, அறிவால், உணர்வால் அவர்கள் மனிதர்கள் அல்லர்' என்பதை வள்ளுவர் தெளிவுறுத்துவதில் நுட்பமாக நகைச்சுவை வெளிப்படுவதைக் காணலாம்.[27] இந்தக் குறள் இவரைப் பெரிதும் கவர்ந்ததாகத் தெரிகிறது.

இங்கர்சால் (Ingersol)[28] எனும் பகுத்தறிவாளர் திருக்குறளிடத்துப் பேரீடுபாடு கொண்டு இருந்தார். திருவள்ளுவருடைய கட்டற்ற சிந்தனைப் போக்கும், அறிவை முதன்மையாகப் போற்றும் பண்பும் இங்கர்சாலின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன.

அறிவு அற்றம் காக்கும் கருவி (421)

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (355)

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (423)

எனும் குறட்பாக்களை இங்கர்சால் அடிக்கடி மேற்கோளாகக் காட்டி எழுதியும், பேசியும் வந்துள்ளார்.[29]

---

26 ஜெருமானிய தத்துவஞானி (இ.பி. 1786–1860)யாகிய கோபன் ஹவர், இந்திய மெய்ப் பொருள் இயலில் பேரீபாடு கொண்டு இருந்தார்.

27 A. Schopenhauer, The Two Fundamental Problems of Ethics, Luzac & Co., Londan, 1878; P. 146

28 இராபர்ட் இங்கர்சால் (1833–99), அமெரிக்காவின் சிறப்பு மிகு வழக்கறிஞர்; எழுத்தாளர்; பேச்சாளர்; கிறித்துவ சமயத்தின் சீர்கேடுகளைக் கண்டித்த காரணத்தால், 'நாத்திகர்' எனும் பழிக்கு ஆளானவர்.

29 Collected Works of Robert Green Ingersol, Vol. 2, Ramblings on Rationalism' Thom–

காந்தியடிகளின் குருநாதர் தால்ஸ்தாய், அவரிடமிருந்தே அறப்போரின் (சத்தியாக் கிரகம்) அருமை பெருமைகளையும், நெறிமுறைகளையும் காந்தியடிகள் கற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.[30] தால்ஸ்தாய் 'இந்து ஒருவருக்கு எழுதப்படும் கடிதம்' என்பதை கி.பி. 1906 இல் எழுதியுள்ளார். அதில் "இந்துக்களின் குறள் காட்டும் வாழ்க்கை நெறியைத்" தால்ஸ்தாய் விளக்கியுள்ளார். அக்கடிதத்தில், பெரிதும் தம்முடைய உள்ளத்தை கவர்ந்த சிலகுறட்பாக்களை அவர் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.[31]

சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசு அற்றார் கோள் (311)

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும் (313)

சுறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசு அற்றார் கோள் (312)

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (314)

அறிவினான் ஆகுவது உண்டோ? பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை (315)

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும் (319)

எனும் இந்த ஆறு குறட்பாக்களும், திருக்குறளில் 'இன்னா செய்யாமை' எனும் அதிகாரத்தில் (32) இடம் பெற்றுள்ளனவாகும். இவை யாவும், கிறித்துவ சமயத்தின் அருட்கொள்கை'யை உணர்த்துவனவாகத் தால்ஸ்தாய் கருதுகிறார்.

---

as & Co., New York, 1886, pp. 274–75.

30 சத்திய சோதனை, தமிழ்நாடு காந்தி நினைவுநிதி, மதுரை, 1960; 1. 139.

31 Recollections and Essays of Leo Tolstoy, London, 1932, p. 421. இதன் விளக்கத்தை,இந்நூலின் பக்.60–67 இல் காண்க,

தால்ஸ்தாயின் கட்டுரையில் இருந்தே, நம் அண்ணல் சிறப்பைப் படிக்கத் தொடங்கினார் என்பதை அவருடைய எழுத்துகளில் இருந்து அறிகிறோம்.

இந்நூற்றாண்டின் இடைப் பகுதி வரை மிகு ஆங்கில நாடக ஆசிரியராகவும், உலகப் பேரறிஞராகவும் ஜார்ஜ் பெர்னார்ட்ஷா விளங்கினார். அவர் புலால் உணவை வெறுத்தவர்; 'காய்கறி உணவுமுறையே நல்லது; சிறந்தது! என்பதைத் தம் வாழ்க்கையின் மூலம் உலகிற்கு உணர்த்தியவர். அடிக்கடி,

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும் (260)

எனும் திருவள்ளுவரின் கருத்தினை, அறிஞர் ஷா எடுத்துரைப்பார்.

1948ஆம் ஆண்டு, கிறிஸ்மஸ் சமயத்தில் 'டைம்ஸ் ஆப் லண்டன்' (Times of London) எனும் பத்திரிகையில்,ஒரு கேலிச் சித்திரம் வெளியிடப்பட்டது. அறிஞர் பெர்னார்ட்ஷா நாற்காலியில் அமர்ந்து இருக்கும் காட்சி அது! அவருடைய கால் அடியில் ஆடு, மாடு, மான், பன்றி, கோழி, புறா போன்ற விலங்குகளும் பறவைகளும் நன்றியுணர்வோடு அவரை நோக்கிய வண்ணம் படுத்துக் கொண்டும், நின்று கொண்டும் உள்ளன. அவரைச் சுற்றி, கொடிய விலங்குகளான புலி, கரடி, சிங்கம் போன்றவை அமைதியாக நின்று கொண்டு, அவரை ஆர்வத்தோடு நோக்குகின்றன. இந்தக் கேலிச் சித்திரம் வள்ளுவருடைய 'கொல்லான் புலாலை மறுத்தானை' எனும் குறட்பாவிற்கு வரையப்பட்ட நல்லதொரு கருத்து விளக்கப் படமாகும்.

இந்தப்படத்தை, 1949 ஆம் ஆண்டு, சனவரி மூன்றாம் வார இதழில், தில்லியிலிருந்து வெளிவந்துகொண்டு இருந்த 'ஷங்கர்ஸ் வீக்கிலீ' (Shankar's Weekly) அப்படியே வெளியிட்டு, படத்தின் கீழே,மேற்கண்ட திருக்குறளைக் குறிப்பிட்டிருந்தது. "புலால் உணவை உண்பதை வாழ்க்கைப்போக்காகக்

கொண்டுள்ள மேற்குநாட்டு மக்கள் இடையே, 'புலால் உண்ணாமை'யே சிறந்த வாழ்க்கை நெறி என்பதனைப் பெர்னார்ட்ஷா, திருக்குறளைச் சான்று காட்டி விளக்கி வந்தார்" என்பதனை உணர்த்தவே இந்தக் கேலிச் சித்திரம் வெளியிடப்பட்டது.

நம் தேசத் தந்தை காந்தியடிகள் உள்ளத்தைத் திருக்குறள் எவ்வாறு கவர்ந்து இருந்தது என்பதை நாம் முன்னரே கண்டோம். 'இறப்பு[32] என்பது என்ன?" என்பதைப்பற்றி விளக்க ஓர் இடத்தில்,

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு (339)

என்னும் திருக்குறளை எடுத்துக் காட்டி, 'இதை விடத் தெளிவாக இறப்பைப்பற்றிக் கூற இயலுமா?" என்று அவர் அறிவித்துள்ளார். மேலும் இந்தக் குறட்பாவின் கருத்தினை,

உறக்கமும் மறதியும் அன்றி
இறப்பு என்பது வேறொன்றும் இல்லை

எனும் ஆங்கிலக்கவிஞர் வேர்ட்ஸ்வொர்த்தின் (Wordsworth) கவிதை அடியோடு, ஒப்பிட்டுப் பார்க்குமாறு அவர் வேண்டுகிறார்.[33] அகிம்சை நெறிக்கும், அறப்போருக்கும் திருக்குறளை, நம் காந்தியடிகள் பின்பற்றியதோடு, சிறப்புமிகு சிந்தனைத் தெளிவிற்கும் வள்ளுவத்தைப் பயன்படுத்தியுள்ளார் என்பது இதனால் புலனாகின்றது.

அரவிந்தரின் அருண்மொழி

இந்நூற்றாண்டின் சிறப்புமிகு இந்தியத் தத்துவஞானி தவத்திரு அரவிந்தராவர். அவர்,

திட்டமிட்ட நல்ல அமைப்பும், சிறப்புமிகு கருத்து வளமும், கவர்ச்சிமிகு உணர்த்தும் திறனும் வாய்ந்தது தமிழ்

---

32 இந்நூலின் 65 ஆம் பக்கத்தைக் காண்க.

33 Selected Writings from 'The Young India', Navajivan Trust, Ahmedabad, 1937, pp. 326.

முனிவரான திருவள்ளுவர் அருளிய திருக்குறளாகும். இதைப் போன்ற நீதிநூலினை இதுவரை யாரும் இயற்றியது இல்லை[34]

என்று அறிவித்துள்ளமை வள்ளுவருக்குச் சூட்டப்பட்டுள்ள சிறப்புமிகு புகழ்மாலையாகும்.

பொதுமை நெறி

இப்பொழுது ஹவாய்த் தீவில், கபா (Kapaa) எனும் ஊரில் சைவ சித்தாந்த திருச்சபை' (Saiva Siddhanta Church) எனும் நிறுவனத்தை 'மாஸ்டர்' சுப்பிரமுனியா(Master Subramuniya) எனும் அமெரிக்கர் நடத்தி வருகிறார். அவர் "புனிதக் குறள்: சைவ இந்து சமயத்தின் வேதம்" எனும் சிறுநூல் ஒன்றை எழுதியுள்ளார். அந்நூலில்,

எல்லாச் சமயங்களும் சந்திப்பதற்குரிய இடமாக, பொது இடமாகப் புனிதக் குறள் இன்று சிறப்புடன் விளங்குகிறது. திருவள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, இன்றைய புத்துலகிற்கு உரிய 'பொதுமை (அற) நெறி' எனத் துணிவுடன் கூறலாம்[35] என்று உலகிற்கு ஆசிரியர் சுப்பிரமுனியா அறிவிக்கின்றார்.

இவ்வாறு சான்றோர்கள் பலர் –உலகப் பேரறிஞர்கள் பலர் – திருவள்ளுவரைப் பல கோணங்களில் கண்டுள்ளனர்; இன்றும் திருக்குறளைப் படித்துப் பயன்பெறுவதோடு, உலகின் பல பகுதிகளில் அதைப் பரப்பியும் வருகின்றனர்.

---

34 Sri Aurobindo, The Foundations of Indian Culture: Sri Aurobindo Ashram, Pondicherry, 1954, p. 358.

35 Master Subramuniya, Holy Kural Scripture of Saivite Hinduism, Saiva Siddhanta Church, Hawaii, 1979, p. 6.

நூலாசிரியரின் நூல்கள்

தமிழ் இணையக் கல்விக்கழக மின்நூலகம் – தமிழிணையம் – இணையத் தளத்தில் [https://www.tamil/digitallibrary.in] புத்தகங்களைக் காணலாம்.

(அ) வரலாற்று நூல்கள்:

1. சிந்துவெளிதரும் ஒளி,வள்ளுவர் பதிப்பகம்,புதுக்கோட்டை, 1959.
2. வரலாறும் வாழ்வும், மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
3. தமிழர் நாகரிக வரலாறு முதல் பகுதி –"விடி வெள்ளி" தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962.
4. முதலாம் இராசராசன், தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
5. இனமரபு வரலாறு (தொல் பழங்கால வரலாறு) தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1975,
6. வரலாற்று வஞ்சி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1976.
7. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
8. சிந்துவெளி எழுத்து வடிவங்கள், மணியகம், சென்னை, 1981.
9. குறுநில மன்னர் வரலாறு – தமிழ்நாட்டு வரலாறு. சங்கக் காலம், பண்டைய அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1983.
10. Rajaraja, the Great, Madras Publications, 1984.

11. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.
12. Chieftains of the Sangam Age, 2001.
13. தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1994.
14. தமிழ்நாட்டு வரலாறு சங்கக்காலம்–வாழ்வியல் (நாகரிகமும், பண்பாடும்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.
15. History of Tamilnadu (A Birds Eye View) Authors Guild of India, 1986.

(ஆ) ஓரங்க நாடகம் :

16. அடிமை விலங்கு (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1979.
17. பொற்கொடி (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1981.

(இ) திறனாய்வும் ஆராய்ச்சியும்:

18. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக் கழகம், 1971 (சாகித்திய அகாதெமி பரிசினை 1974–இல் பெற்ற நூல்)
19. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.
20. வாழ்வும் இலக்கியமும், மணியகம், சென்னை, 1978.
21. திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.
22. அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.
23. சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979.
24. ஒளிவிளக்கு (திருக்குறள் ஆய்வு)) பாரி நிலையம், சென்னை, 1979.
25. தமிழ் நிலவு, மணியகம், சென்னை, 1981.
26. மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம், பாரி நிலையம்,1984.

27. தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம், தமிழ்க் கடல் பதிப்பகம், சென்னை, 1984.
28. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னை பல்கலைகழகம், 2001.
29. திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, மணியகம், சென்னை, 1982.

(ஈ) உரையும் பதிப்பும்:

30. தனிப்பாடல் திரட்டு (உரையுடன்), மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
31. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
32. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–3, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.
33. Historical Heritage of the Tamils, Vol. I. International Institute of Tamil Studies, Madras, 1983.
34. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–1 (பதினெண் கீழ்க்கணக்கு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
35. திறனாய்வு அணுகுமுறைகள் (கத.திருநாவுக்கரசு மற்றும் கு.பகவதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

(உ) தொகுப்பும் பதிப்பும்:

36. தொல்காப்பிய நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1971.
37. திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1972.
38. Tributes and Translations of Tirukkural, 1986.
39. Historical Heritag of the Tamils
Dr.S.V. Subramaniyan & Dr.K.D. Thirunavukkarasu IITS, Tharamani, 1985

(ஊ) தமிழாக்க நூல்கள்:

40. ஜி.எம். டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1965,
41. வின்செண்ட் ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு– 3, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.
42. இலட்சுமிநாத பெஸ்பரூவா, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
43. இராசாராம் மோகன்ராய், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
44. ஜீவனானந்த தாஸ், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.

(எ) இலக்கணம்

45. எட்டாம் வகுப்பு தமிழ் இலக்கணம், பாடநூல் நிறுவனம், 1978.

தமிழில் வெளியிட்ட கட்டுரைகள்

1950 – 51

1. பனைமர நிழலில், விவேகா, சென்னை, 1950.
2. பசிப்பிணி, விவேகா, சென்னை, 1951.

1952 – 53

இலக்கியம் காட்டும் எழிலோவியம்:–

3. முல்லை சிரித்தது
4. பெண்ணா? பேயா?
5. மின்னிகரிடையான்
6. கள்வன் மகன்
7. உயிரும் உடலும் கலைமன்றம், சென்னை, 1952–53.
8. ஆன்ம நேயம்
9. மருந்து
10. பெரும்பிணி
11. பொய்யும் மெய்யும்
12. வெண்ணிலவு

1953 – 1954

13. தமிழ்நெறி, விந்தியா, பூனா, 1953
14. வள்ளைப்பாட்டு, கலைக்கதிர், கோவை, 1954.
15. போரும் காதல் வாழ்வும், விந்தியா, 1954.
16. பாரதிகண்ட தமிழ்ச் சமுதாயம், விந்தியா, பம்பாய், 1954

17. ஓங்குக நல்லது எது? திருவள்ளுவர், திருச்சி, 1954.

18. வள்ளுவர் கண்ட மகளிர், திருவள்ளுவர், திருச்சி 1954

19. திருக்குறளின் ஆசிரியர் ஒருவரா? பலரா? திருவள்ளுவர், திருச்சி, 1954.

1955 – 56

20. தமிழக வரலாற்றில் சில புதிர்கள், குருகுலம், வாலாஜாபாத், 1955.

21. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவையும், குமரி மலர், சென்னை, 1955

22. புரட்சிக் கவிஞரின் "புரட்சிக் கவி" – ஒரு திறனாய்வு, குமரி மலர், 1956

23. தமிழ்த் தென்றல், விந்தியா, பூனா, 1956.

24. வீரகாப்பியமும் கலைக் காப்பியமும், கம்பன் மலர், காரைக்குடி, 1956

1957

25. முதியோர் கல்வியும் சோசலிச சமுதாயமும், ஆதாரக் கல்வி, 1957.

26. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் யவனரா? (மூன்றுக் கட்டுரைகள்), எழில், காரைக்குடி, 1957.

27. திருக்கோவையாரின் திறம், ஞானசம்பந்தம், தருமை, 1957.

28. தமிழ் நிலவு, தமிழ்நாடு, மதுரை, 1957.

1958

29. இசுலாமியர் வளர்த்த தமிழ், சீதக்காதி தமிழ்ச் சங்க மலர், கீழக்கரை, 1958.

30. தமிழகததில் ஒரு ஹோமர், கம்பன்மலர், காரைக்குடி, 1958.

31. ரோமானியர் கண்ட தமிழகம், எழில், காரைக்குடி, 1958 (5 கட்டுரைகள்)

32. மருதனாரின் காப்பியநெறி, எழில், காரைக்குடி, 1958.

1959

33. புதுக்கோட்டை தொண்டைமான்களின் தோற்றம், அரசர் கல்லூரி மலர், புதுக்கோட்டை, 1959.

34. மனிதனும், மனச்சான்றும், எழில், காரைக்குடி, 1959

35. அறம்பிறழ்ந்த ஆட்சியாளன், கலைக்கதிர், கோவை, 1959

36. கிரேக்க நாகரிகமும் தமிழ் நாகரிகமும் (6 கட்டுரைகள்), கலைஞன் 1959.

37. தமிழகத்தின் மண்ணியல் அமைப்பு, அண்ணல் சுப்பிரமணியனார் மணி மலர், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை 1959.

1960

38. மனிதன் – அன்றும் இன்றும், தருமச் சக்கரம், சென்னை, 1960.

39. சங்கக் காலத்தில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர், எழில், 1960.

40. சான்றோர் யார்?, நண்பன், திருச்சி, 1960.

41. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (10 கட்டுரைகள்) தமிழ்ச்செல்வி, புதுவை, 1960.

42. மனிதம், புதுமை, திருச்சி, 1960.

43. தமிழகத்தில் விடிவெள்ளி, குருகுலம், வாலாஜாபாத் 1960.

44. கவிஞனின் மூன்று குரல்கள், குருகுலம், வாலாஜாபாத், 1960.

1961

45. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், காளிதாசரின் குமார சம்பவமும், குமர குருபரன், சீவைகுண்டம், 1961

46. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, திருவள்ளுவர், திருச்சி, 1961.

47. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (1960 வரை) தமிழ்ச்செல்வி, சிலம்பு 1, முத்து 8 முதல் 12 வரை 1961.

1962

48. பிளேட்டோ கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

49. அரிஸ்டாட்டில் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

50. கன்பூசியசு கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை 1962.

51. தமிழன் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

1963

52. வள்ளலார் காட்டிய வழி, குருகுலம், வாலாஜாபாத், 1963.

53. இலக்கியமும் வாழ்க்கையும், முக்கனி, சென்னை 1963.

54. முருகனும், முத்தமிழும், முக்கனி, சென்னை, 1963.

55. அடிகளின் அறைகூவல், குருகுலம், வாலாஜாபாத், 1963.

56. பிள்ளைத்தமிழின் அமைப்பும் அழகும், குமரகுருபரன், சீவைகுண்டம், 1963.

57. தென்னிந்தியாவும் இலங்கையும், கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1963. (நான்கு கட்டுரைகள்)

1964

58. நாகரிகமும் பண்பாடும் (5 கட்டுரைகள்), புதுமை, திருச்சி, 1964.

59. தென்னிந்தியாவும் இலங்கையும் (தொடர்ச்சி –5 கட்டுரைகள்), கலைச்செல்வி, யாழ்ப்பானம், 1964.

60. உலக நாகரிகத்தில் தமிழ்ப்பண்பாடு, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964. (3 கட்டுரைகள்)

61. பொய்தீர் ஒழுக்கநெறி, சென்னை மாநகரத் தமிழாசிரியர் கழக மாநாட்டு மலர், சென்னை, 1964.

1965

62. தன்னுணர்ச்சிப் பாட்டு, அறுவடை, காஞ்சி, 1965.

63. நெடுநல்வாடை – திறனாய்வு: தமிழ்ச்செல்வி, புதுவை, 1965.

64. தாய்மொழியும் பிறமொழி ஆதிக்கமும், காஞ்சி, 1965.

65. சோழர் காலத்திய சமுதாயநிலை, கல்வெட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னை, 1965.

1966

66. திருநெறி, சுத்த சன்மார்க்கம், வேலூர், 1966.

67. மெய்யுணர்வுக்காதல் நெறி, சத்தியஞானசபை, நூற்றாண்டு விழா மலர், வேலூர், 1966.

68. இன்பம், கல்வி, சென்னை, 1966.

69. தமிழ்மொழியின் நெடுங்கணக்கு, நக்கீரர் கழக ஆண்டு மலர், சென்னை, 1966.

70. திருக்குறளின் மொழியியல்புகள், பச்சையப்பன் கல்லூரி 125 ஆவது விழா மலர், சென்னை, 1966.

1967

71. தமிழக வரலாற்றின் படிப்பினைகள், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

72. சிந்தாதிரிப்பேட்டை,கல்யாணம்மகளிர்உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

73. பரணியின் பல்சுவை – இன்பச்சுவை, கலைஞன், திருச்சி, 1967.

74. மும்மணிகள், கலைஞன், திருச்சி, 1967.

1968

75. அச்சுப்புத்தகத்தின் தோற்றம், ஆரம்பக்கல்வி, சென்னை, 1968.

76. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழக அரசின் வெளியீடு, சென்னை, 1968.

77. இளங்கோ கண்ட இயற்கை, தமிழகம், சென்னை, 1968.

78. வால்ட்விட்மனும் புதிய கவிமரபும், கவிதை, சென்னை, 1968.

79. இன்றைய தமிழ்க் கவிதைகளும், புதுமைப் போக்குகளும், கவிதை, சென்னை 1968.

80. கவிஞர் தமிழ் ஒளியின் புரட்சிப் படைப்பு, கவிதை, சென்னை, 1968.

81. ஆராய்ச்சி அறிஞர் சிவராசபிள்ளை, குமரிநாடு, நாகர்கோயில், 1968.

82. எல்லிஸ் கலைக்களஞ்சியம் தொகுதி 10, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, 1968

83. கல்வெட்டுகளால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு, கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை – 1, 1968.

1969

84. உலகில் தோன்றிய முதல் நாவல், குமுதம், சென்னை, 1969.

85. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் நாகரிகம், மதுரை வரலாற்றுப் பேரவை மலர், மதுரை, 1969.

86. தமிழகத்தின் இசைக் கருவிகள்,குழந்தை வீணை காயத்ரி பாராட்டுவிழா மலர், சென்னை, 1969.

87. வரலாற்று வஞ்சி, மறைமலையடிகள் நினைவுமலர், நாகப்பட்டினம், 1969.

88. திருக்குறளின் தனிச்சிறப்புகள், Annals of Oriental Research சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1969.

89. நிலமும், நீரும், தமிழ் உறவு மகளிர், சென்னை, 1969.

90. திருக்குறளின் மாட்சி, மன்றம், சென்னை, 1969.

91. மன்னரை அணுகும் முறை, குறள் மலர், திருச்சி, 1969.

92. அவையும் அறிஞனும், குறள்மலர், திருச்சி, 1969.

93. திருவள்ளுவர் ஆண்டு ஈராயிரம், திருவள்ளுவர் சபை, சிந்தாரிப்பேட்டை, 1969.

94. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழா மலர், சென்னை, 1969.

95. திருக்குறளும் சங்க இலக்கியங்களும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969 (மலர்)

96. குறளோவியம், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா மலர், புதுக்கோட்டை, 1969.

97. அடிகள் கண்ட அம்பலவாணர், அருட்பெருஞ் சோதி, சென்னை, 1969.

98. சீவகசிந்தாமணி கு. மதுரை முதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர், மாருதி பிரஸ், இராயப்பேட்டை, 1969.

1970

99. திருக்குறளும் சமண ஆகமங்களும், நல்லறம், சென்னை, 1970.

100. இந்திய நாடகக் கலையின் தந்தை டி.கே. சண்முகம் மணிவிழா மலர், சென்னை, 1970.

101. வள்ளுவர் காட்டும் பொருளியியல், இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற மலர் 1970.

102. சமணமும் தமிழும், தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தில்லி, 1970.

103. பண்டைத் தமிழ் மகளிரும் கச்சணிதலும், இரண்டாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருச்சி 1970.

104. நான்கு நாணல்கள் ஒரு மதிப்பீடு – திறனாய்வு, தமிழுறவு மலர், சென்னை, 1970.

105. தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, நண்பர் வட்ட மலர், சென்னை, 1970.

106. நெஞ்சுக்கு நீதி (குறள் விளக்கம்), நல்லறம், சென்னை, 1970.

107. திறந்த புத்தகம், காந்தியடிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970.

108. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா? (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

109. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள், (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

110. புண்ணும் வடுவும் (குறளாய்வு), ஆரம்பக் கல்வி, சென்னை, 1970.

111. சங்க இலக்கியங்களில் திருக்குறள், கழகப் பொன்விழா மலர், கழகம் சென்னை –1, 1970

112. நாவலர் நற்றமிழின் காவலர், நாவலர் நெடுஞ்செழியன் பொன்விழா மலர், சென்னை –7, 1970.

1971

113. பண்டைத் தமிழ்ச் சமுதாயமும், நல்லறமும், சென்னை

1971

114. தமிழகத்தின் ஆண்டுக் கணக்குமறை, மூன்றாவது இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1971.

115. வரலாற்றின் எச்சரிக்கை விசய்நகர பாமினி அரசுகள், தமிழரசு, சென்னை, 1971.

116. தாய்மொழிவழிக் கல்வியே தாயகத்திற்குத் தேவை, முரசொலி, சென்னை, 08.01.1971

117. தமிழறிஞர் வி. கனகசபை பிள்ளை, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1971.

118. பழமொழிகள் உணர்த்தும் கடவுட்கொள்கை, சிதம்பரம் சிவகாசி அம்மை கும்பாபிஷேக மலர், சிதம்பரம், 1971.

119. பழமொழிகள் காட்டும் மகளிர் இயல்பு, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சென்னை, 1971.

1972

120. வள்ளுவர் கண்ட மனிதன் – 1, தமிழியல்(JOTS) சென்னை, 1972.

121. திருக்குறளும் தம்மபதமும், தருமச்சக்கரம், சென்னை, 1972.

122. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருவனந்தபுரம், 1972.

123. முப்பாலுள் முதுமொழிகள், கி.ஆ.பெ.வி. மலர், கோவை, 1972.

124. இலக்கியம் உணர்த்தும் வரலாறு, தமிழுறவு, சென்னை, 1972.

125. அறங்கூறும் அவையம், தமிழ்ப்பணி, சென்னை 1972.

126. பழமொழிகளில் பழந்தொழில், நிலவளம், சென்னை, 1972.

127. பைந்தமிழ்ப் பாவலர்: கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், 1972.

128. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் கொள்கை, திருக்கும்பாபிஷேக மலர், சபாநாயகர் கோயில், சிதம்பரம் 1972.

129. தமிழர் திருநாள், சமயம், 1972.

1973

130. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு, தமிழ்ப்பணி, சென்னை, 1973.

131. மூவகை மனிதர், கனகசபைப்பிள்ளை மணிவிழாமலர், சிதம்பரம், 1973.

132. மனிதனாக வாழ வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி, 1973.

133. வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி 1973.

134. சீவகசிந்தாமணி ஒரு காப்பியமாகுமா? திருக்கோயில், சென்னை, 1973.

135. ஊன்றுகோல் (குறள் வழிக்கதை), கரும்பு, திருச்சி, 1973

136. அழுக்காறு வேண்டாம் (குறளமுதம்), சி.ப. மலர், சென்னை, 1973.

137. பெண்வழிச் சேறல், கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை, 1973.

138. வள்ளுவர் கண்ட மனிதன் –2, தமிழியல், சென்னை, 1973.

139. பாரதியாரின் இலக்கியக் கொள்கை, ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், சென்னை, 1973.

140. திராவிட இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு), தமிழாய்வு தொகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு – 1973.

141. பாரதியின் இலக்கியக் கொள்கை, ஆய்வுக்கோவை தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, 1973.

1974

142. சும்மா, மலைச்சாரல், சோளிங்க புரம், ஏப்ரல், 1974.

143. நூறாண்டு வாழ்க – திறனாய்வு, தமிழ்ப்பணி, 1974.

144. வாணிதாசரின் வளமார் தமிழ், தமிழ்ச்சாரல், 1974.

145. கணக்காயர், ஆசிரியர் நரசிம்மன் அவர்கள் நினைவுமலர், சென்னை, 1974.

146. தமிழ் வளர்த்த பெரியார்கள், மு.சு. பூரணலிங்கம் பிள்ளை, நூலகம், சென்னை, 1974.

147. தமிழ் வளர்த்த பெரியார்கள், திருமணம் செல்லக் கேசவராய முதலியார், நூலகம், சென்னை, 1974.

148. வரலாறும், பண்பாடும், பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்க மலர், சென்னை, 1974.

149. தாயா? தமக்கையா?, ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, புதுவை, 1974.

150. தமிழும் மலையாளமும், செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1974.

1975

151. எழிலோவியம் காணவாரீர்.

152. தமிழிற்கு ஓர் அறண்

153. அறிஞர் அறவாழி

154. சிலப்பதிகாரத்தின் மாண்பு

155. இராசராசன் கொலைகாரனா? புலமை தொகுதி 1 பகுதி 1, சென்னை – 18, 1975.

1977

156. டாக்டர் மு.வ.வின் புதிய உலகம் திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை –30, 1977.

1978

157. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 4, ஜனவரி 1978.

158. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 5, பிப்ரவரி 1978.

159. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 6, மார்ச் 1978.

160. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 7, ஏப்ரல்1978.

161. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 8, மே 1978

162. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 9, ஜூன் 1978

163. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 10, ஜூலை 1978

164. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 12, செப்டம்பா; 1978

165. கந்தபுராணம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 3, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 20,1978.

166. நூல்அறிமுகம்–காளிதாசன்உவமைகள்,புலமைதொகுதி –4, பகுதி 3,4, சென்னை –18, 1978.

167. முக்காவல் நாடு, ஆய்வுக்கோவை தொகுதி 10, பகுதி 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு அண்ணாமலை நகர், 1978.

1979

168. கடவுள் நெறி, திருக்கோயில் மாலை 21, மணி 11, ஆண்டு 1979.

169. கல்லாடம் தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 4, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை 20, 1979

170. திருவள்ளுவரும் சர்வக்ஞரும், திருவள்ளுவர் 2010–ஆம் ஆண்டு மலர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், பெங்களூர் 42, 1979.

1980

171. வாணிதாசன் கவிதைகளில் படிமக் காட்சி, ஆய்வுக்கோவை12, தொகுதி1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், 1980.

172. பண்பாடு சமஸ்கிருத மயமாக்கப்படுதல்

173. வரலாற்றியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை – 17.

174. மறுமலர்ச்சி

175. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் அரசியல் உறவு.

176. தமிழ் உரைநடை

177. உவமை

178. பொற்காலம்

179. பாவியலில் கற்பனை

180. கம்பனுக்கும் ஒரு தாசன் விக்ரமன் பொன்விழா மலர் 17.3.1978.

181. கல்லணையைக் கட்டியது யார்?

182. பசி

183. பகை பிறந்தெறிதல்

184. நான்கண்ட அடியாருக்கு நல்லார்–தி.க.நாராயணசாமிநாயுடு 80–ஆம் ஆண்டு நினைவு விழா மலர்.

185. நன்னூல் உரை ஆசிரியர்கள்

186. சிறுநெறி

187. அறிவு என்பது என்ன?

188. மணிமேகலை காட்டும் கடவுள் நெறி

189. சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

190. தமிழரின் கலைக்கோட்பாடு, உ.த.ஆ. நிறுவனம் 9.2.87

191. மறுமலர்ச்சிப் பாடல்களில் கவிதை இன்பம்

192. முடமோசியார் – யவனரா?

193. பழியும், பாவமும்

194. வினையின் பயன்

195. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் நெறி

196. இருட்டறை

197. மதுராந்தகம்

198. குறவஞ்சி

199. திருக்குறளை வேதமாகப் போற்றுவது பொருந்துமா?

200. வேளிர்

201. மனம்

202. திராவிட மொழிகளில் நீதி இலக்கியம்

203. தேசீயம்

204. வரலாற்றுக் காலம்

205. வள்ளலார் காட்டிய வழி

206. இலக்கியப் படிமங்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

207. வேதங்கள்

208. வீரயுகப் பாடல்கள்

1988

209. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, நவம்பர், 1988

210. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, டிசம்பர், 1988

211. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஜனவரி 1989

212. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, பிப்ரவரி 1989

213. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, மார்ச் 1989

214. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஏப்ரல் 1989

215. சீனாவில் சிறப்புற்ற காஞ்சி இளவரசர், தினமணி, 15.02.1989

216. மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிமுரசு

217. பதினெண் கீழ்கணக்கின் கற்பனைவளம்

218. பழந்தமிழ்க்குடிகள், "முதன்மொழி" உலகத் தமிழ்க் கழக மாதிகை சென்னை 16.

219. ஒன்றே தெய்வம் இராமலிங்க வள்ளலார் வானொலி, ஆல் இண்டியா ரேடியோ, சென்னை –4, நாள் 7.11.71

220. A Tamil Savant From the City of Madras (8.1.1901 to 27.8.1988)

221. மறுமலர்ச்சித் தமிழ் உரை நடை

222. சித்தர்களின் மெய்ஞ்ஞானம் – உ.த.க. நிறுவனம் 8.6.1977 83–ஆம் ஆய்வுமன்ற கருத்தரங்கு

223. குறவஞ்சி

224. சான்றோர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் மரபொழுங்கங்களும்

225. இந்திய நாடகக் கலையின் தந்தை

226. படிமங்கள்

.....

வாழ்க்கைக் குறிப்பு

1)	தோற்றம் – மறைவு	20.11.1931 - 05.05.1989
2)	பிறந்த ஊர்	கருங்குழி, மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்
3)	கல்வி	சிந்தாதரிப்பேட்டை ஆண்கள்
	பள்ளிக்கல்வி	உயர்நிலைப்பள்ளி, சென்னை
	புதுமுக வகுப்பு	விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர், சென்னை
	இளங்கலை	1951–1954
	(ஹானர்ஸ்)	பச்சையப்பன் கல்லூரி
	தமிழ்	சென்னைப் பல்கலைக்கழகம், முதல்
	பின்னர் முதுகலை	வகுப்பு, முதல்நிலை
	(தமிழ்)	
	முதுகலை வரலாறு	சென்னைப் பல்கலைக்கழகம் தனிநிலைப்படிப்பு (1956)
	முதுகலை இலக்கிய	"பழந்தமிழ் இலக்கியத்தில் அறம்"
	ஆராய்ச்சி	(ஆங்கிலத்தில்) அண்ணாமலை பல்லைக்கழகம் (1963)

மொழியியல்	அண்ணாமலை பல்கலைக்கழகம் (1963)
பெருஞ்சான்று முனைவர்பட்டம்	பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் 1979.
ஆசிரியர் பணி அரசர்	1. 6 ஆண்டுகள், பயிற்சி ஆசிரியர், கல்லூரி, புதுக்கோட்டை 1954 – 1959. 2. 7 ஆண்டுகள், துணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை 1962–1968 3. 2 ஆண்டுகள், முதல்வர், மணலித் தமிழ்க் கல்லூரி சென்னை 1968–1969 4. 3 ஆண்டுகள், திருக்குறள் ஆராய்ச்சித் துறைத் தலைவர் சென்னைப் பல்கலைக்கழகம்," 1962–1972. 5. 19 ஆண்டுகள், இணைப் பேராசிரியர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சியியல்), உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
தெரிந்த பிறமொழிகள்	சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம்
விருதுகள்	1. சாகித்திய அக்காதெமி விருது (1974) திருக்குறள் நீதி இலக்கியம் 2. தி.ரு.வி.க விருது 1985

.....

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

நூலாசிரியர், அவர் படைப்புகள் பற்றிய இணையதளம்

இ-புத்தகத்தை வாசிக்க / பதிவிறக்கம் செய்ய

நூலாசிரியர், அவர் படைப்புகள் பற்றிய யூடியூப்

ISBN 978-93-48345-07-3